# நாத வைணவம்



டாக்டர்

ட. குலசேகரன்

# நாத வைணவம்

(ஆசார்ய வைணவத்தின் முதல் பாகம். — நாதமுனிகள்)

கி பி 10ஆம் நூற். தமிழ் இலக்கியம் மற்றும் நாட்டு வரலாறுகளையும் உட்கொண்டது.)

ஆசிரியர்

டாக்டர் சு. குலசேகரன்

திருமகள் வெளியீடு

# அணிந்துரை

'நாத வைணவம்' - என்ற இந்த நூல் மூலம் ஆழ்வார்கள் கால வைணவத்தின் நிலையை முன்னம் சிறப்பாக ஆய்ந்து வெளியிட்ட ஆசிரியர் இப்போது நாதமுனிகள் தொடங்கி வைத்த ஆசார்ய வைணவப் புது யுகத்தில் அடியெடுத்து வைத்துள்ளார்.

இந்த நூலின் பெருஞ்சிறப்பு இது நாதமுனிகள் காலத்தைக் கணித்துக் கதையைத் தொடங்கியிருப்பது தான். நாதமுனியின் காலம் பொதுவாகக் கி பி. 10-ம் நூற்றாண்டு என்ற கருத்தை ஆசிரியர் நன்றாகத் துருவிப் பார்த்து இன்னமும் நுணுக்கமாக அது கி. பி. 913-978 எனக் கணித்திருக்கிறார். இவ் ஆசிரியர் கருத்துப்படி ஆழ்வார்களுள் எல்லாம் பிற்பட்ட நம்மாழ்வாரின் காலம் கி. பி 798-833-ம், இவரது சீடரான மதுரகவிகள் காலம் கி. பி 796-833-உம் ஆவதால் நாதமுனிகளுக்கு இவர் கொண்ட காலம் பொருத்தமானதே. ஆசார்யர் 330 ஆண்டுகள் யோகத்தில் எழுந்தருளியிருந்தார் என்பதை, பராங்குசதாசரிடம் அஷ்டாங்க யோகம் பயின்று வந்ததிலிருந்து 33 ஆண்டுகள் அதனைச் சாதனை செய்து கொண்டு வாழ்ந்திருந்தார் எனப் பொருள் செய்து, அந்த அடிப்படையில் ஆசார்யர் குருகூர் சென்றது கி. பி. 945-ல் எனக் கொள்ளப்பட்டிருப்பதும் மிக, மிகப் பொருத்தமே.

ஆசார்யரின் வரலாறு புராணப் போக்கில் இல்லாமல் வரலாற்று ஆசிரியன்மார் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருப்பது நூலின் இரண்டாவது முக்கிய அமிசமாகும். பவிஷ்யதாசார்யன், ஆழ்வார்களின் அவதாரிகை போன்றவற்றின் திறத்தில் இது பளிச்சிடுகின்றது. ஆசார்யர் வாழ்க்கையை அவலமாக ஆசிரியர் ஊகித்திருப்பது கி. பி. 10ஆம் நூற்றாண்டைய தமிழகத்தில் சைவ சமயப்பற்று மிக்க சோழர்கள் வலுப் பெற்றிருந்ததால் கூடுவதே. இந்த அடிப்படையில் மூன்று கட்டளைகள் கொண்ட ஆசார்யரின் மரண சாசனத்தை ஆசிரியர் தயாரித்திருப்பது நம்பத் தகுந்த வகையில் நயமிக்கதாயும் உள்ளது.

நியாய தத்துவம், யோக ரகஸ்யம், மகாபுருஷ நிர்ணயம் ஆகிய ஆசார்யரின் நூல்களை முன்னிட்டுக் கொண்டு ஆசிரியர் யோகம், தத்துவம் பற்றிய அக்கால நிலையை அறுதி (Review) இட்டிருக்கிறார். இங்ஙனமே இசையின் திறத்திலும் ஒரு நல்ல மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் இவை அறிஞர்களின் ஆய்வுக்குரியனவே என்றாலும், இவ்வாசிரியரின் முயற்சி ஒரு நல்ல தொடக்கம் என்பதற்கு மட்டும் ஐயம் இல்லை.

திருவாய்மொழியைத் திருவரங்கப் பெருங்கோயில் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளச் செய்யப்பட்ட முயற்சிகளைத் திருவாய்மொழியின் அரங்கேற்றமாகக் காட்டி மதுரைப் பண்டிதர்கள் அதற்குக் காட்டிய எதிர்ப்பை மதுரகவிகள் சமாளித்ததோடு ஒப்பிட்டிருப்பது மிகவும் ருசிகரமாக உள்ளது.

நாதமுனிகளை ஒரு தீவிரப் பிரச்சாரகராகக் குரு பரம்பரைகள் கூறாவிட்டாலும், ஆசிரியர் இங்ஙனம் காட்டியிருப்பது எதிர்பார்க்கக் கூடியதும் ஏற்கத் தகதும் ஆகும்.

பராங்குதாசர் நாதமுனிகளுக்கு நாலாயிரத்தை அருளியதாக ஒட்டு மொத்தமாகக் கூறப்படுகிறது. இவ் ஆசிரியர் முதலில் திருவாய்மொழியும், பிறகே இதர பிரபந்தங்களும் ஆக இரண்டு கட்டங்களில் அது வழங்கப் பட்டிருக்கலாம் என்று காட்டியிருப்பது இவர் சாத்தியக் கூறுகளை நுணுகநோக்கி வரன்முறைப் படுத்தியதன் விளைவேயாகக் கருத வேண்டும். நாதமுனிகளின் வட நாட்டு யாத்திரைகள் இரண்டு—என்ற கருத்தும், அவர் பத்ரிகாஸ்ரமம் செல்லவில்லை என்பதும் இத்தகையனவே. ஆசார்யரோடு தொடர்பு கொண்டிருந்தவனாக கூறப் படும் அரசன் கங்கை கொண்ட சோழபுரப் பக்கத்தியவன் அல்லன் என்பதும், அவன் வீரநாராயண சதுர்வேதி மங்லகலப் படைவீட்டிலேயே தளபதியாய்த் தங்கியிருந்த அரிஞ்சய சோழனே ஆகக் கூடும் என்பதும் இவ் வகையில் குறிப்பிடத் தக்கன.

சிஷ்யர்கள் நாதமுனிகளை ஆஸ்யரயித்ததும், அவர் களும் நாதமுனிகளும் செய்த தனியன்களின் பின்னணியும் பற்றிய பகுதிகளில் ஆசிரியரின் கற்பனைத் திறன் பளிச் சிடுகின்றது. நாச்கியார் திருமொழி தொடர்பான தனியன்களைப் பற்றிய பகுதி இத் திருமொழிக்கு அமைந்த வெகு சிறப்பான இலக்கிய விமர்சனமும் ஆகும்.

பெரும் பான்னையினரின் சமயமாகிய சைவம் புறப் பகைகளான ஜைன, பவுத்தங்களை வென்று கொண்ட பின், வைணவத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தச் செய்த முயற்சிகளின் உச்ச கட்டம் ராமானுஜர் காலம். அது நாதமுனிகள் காலத்தையே கால்கொண்டு விட்டதை ஆசிரியர் அழகுற எடுத்துக்காட்டியுள்ளார.

இந்த நூலின் வரலாற்றுப் பகுதிகளில் இவ்வாசிரியர் அறிஞர் N. சேதுராமனின் காலம்பற்றிய சமீப காலத்திய சிந்தனைகளைப் பின்பற்றியிருப்பதும், நுணுக்கக் காலக் கணிப்பில் இவர் கொண்டுள்ள ஆர்வத்திற்குச் சிறந்த

சான்று. சோழர் வரலாற்று ஆராய்ச்சியின் தற்கால நிலை இந்நூலிலேயே முதன் முதல் முழு உருவம் கொண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

முடிவாக, நாதமுனிகளைப் பற்றியும் ஒரு நல்ல தனி நூல் எழுத முடியுமா? என்று யாரும் ஐயப்படுகின்ற நிலையில், வரலாற்றுச் சுரங்கத்துள் புகுந்து அகழ்ந்து வளமான பல செய்திகளைத் துருவித் துப்பறிந்து எடுத்து பரம் பரைச்செய்திகள் 27-ஓடு இணைத்து காவிய வடிவில் ஒரு வரலாற்றுப் புரட்சியைச் செய்திருக்கிறார் ஆசிரியர், சேக்கிழார் சைவத்திற்குச் செய்தளித்த பெரிய புராணத்தினும் சிறந்த முறையில் வைணவப் பெரிய புராணம் ஆசிரியரால் உருப் பெற்று வருகின்றது என்றே சொல்லத் தோன்றுகிறது. அதனுள் இந்த 'நாத வைணவம்' ஆசார்ய காண்டத்தின் முதற் புராணம் என்றலே பொருந்தும்.

வைணவத்தின் ஆழ்வார்கள் கால நிலை, பழந் தமிழின் புதிய பரிமாணங்கள் மற்றும் 'சைவ சமய மறு மலர்ச்சி' ஆகிய அரிய நூற்களின் முத்திரை இந்த நூலிலும் காணப்படுகிறது. வரலாற்று ஆசிரியர் என்ற முறையில் இந்த நூலைத் தமிழுலகிற்கு மகிழ்ச்சியோடு பரிந்துரை செய்கிறேன்

சென்னைப் பல்கலைக்கழகம் — K. V. ராமன்
25-12-94 — பேராசிரியர்
தொல்லியல் வரலாற்றுத் துறை

# முன்னுரை

வைணவ வரலாறு பற்றி ஆசிரியரின் இரண்டாவது நூல் இது. 'வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை' - யை மிகவும் திருப்திகரமாக எழுதிமுடித்த பின், அடுத்த கட்டமாகிய 'ஆசார்ய வைணவம்' பற்றியும் எழுத வேண்டும் என்ற எண்ணம் இயற்கையாக எழுந்தது. நாதப்புதுயுகம், ஆளவந்தார், பேரரசு (இராமானுஜர் காலம்), பேருரைகள் (பட்டரிலிருந்து பிள்ளை லோகா சாரியார் வரை), வடகலை, தென்கலை – என ஆறு அதி காரங்களாக இயற்றத் திட்டம் செய்து கொண்ட பின்னர் நூலை முடிக்கும் வரை இருப்போமா என்ற ஐயமும் நெஞ்சின் ஒரு மூலையில் மெல்லத் துளிர்த்தது. ஒவ்வொரு அதிகாரத்தையும் தனித்தனி நூலாக வெளியிட்டு விடுவதே தமிழகம் இந்தச் செல்வங்களை இழக்காமல் செய்யச் சிறந்த வழி என அதற்கொரு தீர்வையும் அதே மனம் காட்டிக் கொடுத்தது. அந்தத் திட்டப்படி இது ஆசார்ய வைணவத் தின் முதல் பாகம் ஆகும்.

நாதமுனிகள் உறங்கிக் கிடந்த வைணவ சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் — என்று எல்லாக் குருபரம்பரைகளும் ஒத்து ஓதுகின்றன. அவரைப் 'பெரிய முதலியார்' – என்றும் வாய்விட்டுப் புகழ்கின்றன. ஆயினும் அவை இராமானுஜர் பற்றியே அதிகம் பேசுகின்றன. நாத முனிகள் பற்றித் தரும் விவரங்கள் மிகக் கொஞ்சமே. இந்த முரண்பாடு ஏன்? அவற்றிற்குப் போதிய தகவல்கள்

கிடைக்கவில்லை என்பதோடு ராமானுஜ பக்தியில் மூழ்கிக் கிடந்த அவை அது பற்றிக் கவலைப்படவும் இல்லை என்றே தோன்றுகிறது. ஆயினும், முடங்கிக்கிடந்த சமுதாயத்தை முடுக்கிவிட நாதமுனிகள் பட்டிருக்கக் கூடிய பாடு இராமானுஜர் பட்டதற்குக் கொஞ்சமும் சளைத்ததாக இருக்க முடியாது. நாதமுனிகளும் பிறரும் அமைத்திருந்த அடித்தளத்தின் மீதே இராமானுஜர் பின்னாளில் தமது விசிஷ்டாத்வைதத் கோட்டையைக் கட்டினார்! இந்த உண்மையை உணரச் செய்வது எப்படி? இதுவே இந்நூல் எழுதும் போது இமாலயப் பிரச்சனையாக நம்முன் நின்றது. நூலைக் கண்ணுறும் அன்பர்கள்தாம் 'நாதப் புதுயுகம்' தங்கள் கண்முன் நிறுத்தப்பட்டதா என்பதை அளவிட வேண்டும்.

கோயிலொழுகு ஆறாயிரப்படி மற்றும் மூவாயிரம்படி குருபரம்பரைகள், திவ்யசூரி சரிதம், வடிவழகிய நம்பி தாசர் குருபரைப் பிரபாவம், பிரபந்நாமிர்தம், பெரிய திருமுடி அடைவு, சரமோபாய நிர்ணயம், அரிசமய தீபம் வார்த்தா மாலை, குருபரம்பரைப் புராணம், சோழமண் டலப் புலவர் புராணம், வாழித் திருநாமங்கள், நாதமுனி களும் அவர் சிஷ்யர்களும் செய்த தமிழ், வடமொழித் தனி யன்கள் மற்றும் இக்கால அறிஞர்களின் ஆய்வுரைகள் ஆகியனவே நாதமுனிகள் வரலாற்றுக்கு உதவும் ஆதார நூல்கள். இங்ஙனம் நூல்கள் பலவாயினும், இவற்றின் செய்திகளில் அதிகம் வேற்றுமை இல்லை. மேலும், இவையெல்லாம் வெறும் துணுக்குகளே; அதுவும் சுமார் 27 மட்டுமே. இவற்றுட் சில உட்பொருத்தம் இல்லாதன வுங்கூட. காட்டாக, நாதமுனிகள் தம் தந்தை ஈஸ்வர பட்டாழ்வாருடனும், மகன் ஈஸ்வரமுனியுடனும் வட நாட்டுக்குச் சென்றதாகக் கூறப்படுவதற்கு மாறாக வட நாட்டு யாத்திரை தந்தையோடு ஒரு முறையும், மகனோடு ஒருமுறையும் செய்யப்பட்டிருக்கலாம் போலத் தோன்று கிறது. யாத்திரை சென்றது ஒரு முறையே ஆகில், இது

மகனோடு மட்டுமே சாத்தியமாயிருக்க முடியும். இவ் யாத்திரைகள் எத்தனையாயினும், இவர் பத்ரிக்குச் செல்லவில்லை என்றே சொல்ல வேண்டும். இங்ஙனமே சில செய்திகள் வரலாற்றுப் போக்குக்கு முரண்பட்டனவாயும் உள்ளன.

கி. பி 823 - 918 ஐ நாதமுனிகளின் காலமாகக் காட்டும் இவை கி. பி 1025 வாக்கில் எழுந்திருக்கக் கூடிய கங்கை கொண்டசோழபுரத்தை நாதமுனிகள் மறைந்த இடமாகக் குறித்தது ஒரு சிறந்த காட்டு. மேலும், ஆழ்வார்களுக்கும் ஆசார்யருக்கும் இடையே நெடிய கால இடையீடு இருந்ததாகக் கூறிப் பின் நாதமுனிகளுக்கு இவை கொண்ட காலம் பொருத்தமாயில்லை. எனவே, பரம்பரைச் செய்திகளில் நிரம்பக் குழப்பம் இருத்தல் காணலாம். தெளிவுக்குத் தேவைப்படும் ஆராய்ச்சியை இந்த நூல் மேற்கொண்டுள்ளது.

கம்பர் தமது ராமாவதாரப் பாரகாவியத்தை திருவரங்கத்தில் நாதமுனிகள் முன்னிலையில் அரங்கேற்ற வந்தார் என்றும், அப்போது ஆசார்யர் சடகோபரைப் பற்றி முன்னதாகப் பாடும்படி கேட்க, அதற்கிணங்கி அவர் 'சடகோபர் அந்தாதி' பாடினதாகவும் ஒரு பழஞ் செய்தி உண்டு. ஆனால், சடகோபரந்தாதிப் பாயிரத்தில் ராமாயணத் தொடர்பு கிஞ்சித்தும் இல்லை. நம்பெருமாளே கம்பரைப் பார்த்து 'நம் சடகோபனைப் பாடினையோ'' என்று கேட்டதாக மட்டுமே உள்ளது. சடகோபரந்தாதி பாடிய கம்பர் பெருமான் ராமாவதாரம் செய்த கம்பநாட்டாழ்வாரே என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. அஃதொரு புறம் இருக்க, கம்ப ராமாயணம் நாதமுனிகளால் அங்கீகரிக்கப்பட்டதாகில். அதனைப் பின்வந்த ஆசார்யர்கள் திவ்யப் பிரபந்தத்திற்கு இணையாக உச்சிமேல் வைத்துக் கொண்டாடியிருப்பார்கள், ஆனால், குருபரம்பரைகளில் இது தென்படவில்லை. மாறாக, வான்மீகி ராமாயணத்தையே ராமானுஜர்

பெரிய திருமலை நம்பிகளிடம் பாடம் கேட்டார். மற்ற வர்களும் கம்ப ராமாயணத்தை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. மேலும், 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்ற கம்பராமாயணக் கடவுள் வாழ்த்திலும்

'அகில புவன ஜன்ம ஸ்தேம-பங்காதிலீலே'

என்ற ஸ்ரீபாஷ்யச் சுலோகத்தின் வாடையே வீசுகின்றது. கம்ப ராமாயணத்தை முதன்முதல் எடுத்தாண்ட ஆசார்யர் பெரியவாச்சான் பிள்ளையே. கி. பி. 13ஆம் நூற்றாண்டில் நம்பிள்ளை ஆட்சியில் இவர் தமது திவ்யப் பிரபந்த உரையில் இவ்வாறு செய்தார். எனவே, கம்ப ராமாயணம் கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்கு முன் எழுந் திருக்க முடியாது என்பது திண்ணம். பேராசிரியர் ராகவையங்கார் வேறு பல காரணங்களைக் காட்டி கம்ப ராமாயணம் கி. பி. 1178—1185களுக்கிடையே செய்யப் பட்டிருக்க வேண்டுமென நிறுவியுள்ளார். மற்ற கொள் கைகளுள் எதுவும் ஆணித்தரமாக இல்லை. இவற்றால், நாதமுனிகள் கம்ப ராமாயணம் கேட்டதாகச் சொல்லப் படும் 28வது செய்தியை நாம் இந்த நூலில் இணைத்துக் கொள்ளவில்லை.

நாம் செய்யவிருப்பது வரலாற்று இலக்கியம். இலக் கியம் ஒரு காலக் கண்ணாடி. இப்படியே வரலாற்றுக்குக் காலம் ஒரு கண்ணும் ஆகும். நாதமுனிகளின் வரலாற்றை இலக்கியமாக்க அவர் வாழ்ந்த காலம் பற்றிய தெளிவு தேவை. வீராணதேரி பாசனத்தால் நாடு செழிப்பது பற்றிய நாதமுனியின் குறிப்பும், இவர் மறைந்த ஆண்டு தாது ஆவதும், இவர் சுமார் 60 - 65 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்திருக்க முடியாது என்ற நமது கண்டுபிடிப்பும் சுமார் கி. பி 915 அளவில் பிறந்து. கி. பி 978 - இல் மறைந்ததை உறுதியாகக் காட்டிவிட்டன. இவர் 330 ஆண்டு காலம் யோகத்தில் இருந்தார் என்பதன் பொருள் பராங்குசதாசரிடம் அஷ்டாங்க யோகம் பயின்று வந்ததி

லிருந்து அதனைச் சாதனை செய்து கொண்டு 33 ஆண்டு கள் வாழ்ந்தார் என்பதே ஆதலும் காட்டப்பட்டுள்ளது. இக் காலக் கணிப்பே இந்நூலின் தனிப்பெருஞ் சிறப்பு. ஆசார்ய யுகத்தின் தலைவாசல் இப்போது திறக்கப்பட்டு விட்டது. இனி ஆசார்ய வைணவ மாளிகையின் உட் புகுதல் எல்லோருக்கும் எளிதே.

காலம் உறுதியாகத் தெரிந்துவிட்டதால், நாதமுனி கள் வரலாற்றை நாட்டு வரலாற்றுப் பின்னணியில் நோக்கி அதனோடு பிணைப்பது இப்போது எளிதாகி விட்டது. இப்படி குருபரம்பரைகளின் நாதமுனிகளைப் பற்றிய அறியாமையை அகற்றி அவர் பற்றிய துணுக்குச் செய்திகளை முறைப்படுத்தி ஆராய்ச்சி மூலம் கிடைத்த பிறவற்றையும் இணைத்து ஓர் தொடர்புடைய வரலா றாகச் செய்து எழுதிய நூல்தான் இது. காலச் சூழலுக்கு ஆசார்யரின் வரலாற்றைக் கட்டுப்படுத்தியதன் முக்கிய விளைவுகள் இவரோடு தொடர்பு கொண்ட அரசன் குரு பரம்பரைகளிற் காணப்படுமாறு போல கங்கை கொண்ட சோழபுரப் பக்கததவன் அல்லன் என்பதும், அவன் வீர நாராயண சதுர்வேதி மங்கலப் படை வீட்டிலேயே தளபதியாய்த் தங்கியிருந்த அரிஞ்சய சோழனே ஆகக் கூடும் என்பதுமே. காலக் கட்டுப்பாட்டோடு நாதமுனிகள் பிராமணரும், சமயப்பற்று மிக்க ஆசார்யரும் ஆவதால் வடமொழி, வடசொல் மற்றும் சைவ - வைணவப் போட்டியில் அவர்மனம் இயங்கியிருக்கக் கூடும் விதம் பற்றி சில கருத்துக்கள் இந்நூலில் தவிர்க்க முடியாதன ஆகிவிட்டன. வாசகர்கள் இவற்றை வரலாற்றின் கண் ணோட்டத்திலேயே நோக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

"கவிக்கு நிறை பொருளை நேர்ப் பட்டேன்" என்றார் திருமருசைப்பிரான், இங்கே அவருக்குப் பாடு பொருளாய் இறைவன் அமைந்தது அவனிடம் 'அவர் விரும்பிய கல்யாண குணங்கள் இருந்ததாலேயே.' ஒருவர்

இலக்கியப் பொருளாய் அமைவது அவருடைய வாழ்க்கை நமக்கு முன்மாதிரியாகக் கூடிய அமிசங்கள் பல கொண்டதாவதாலேயே எனில், நாதமுனிகளின் இப்படிப்பட்ட சிறப்பியல்புகளும், சாதனைகளும் யாவை? தமிழ் வைணவத்தின் அடிப்படையான நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தைக் கண்டுபிடித்து, பாகுபாடு செய்து, பண் அமைத்து, திருப்பதிகள் மற்றும் ஆழ்வார்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி இவர் கொடுத்ததைவிடச் சிறந்த சேவை வேறு இருக்க முடியாது. வைணவத் திருமுறைகளின் கண்டுபிடிப்பே சைவத் திருமுறைகளைக் காணவும் வழிவகுத்தது என்பது இங்கே நினையத் தக்கது. அடுத்து, அவற்றைக் கொண்டு திருவரங்கம் பெரியகோயிலில் அத்யயன - அத்யாபக விழாக்களைத் தொடங்கியதும் ஒரு சாதனையே. இதுவே உபய வேதாத்தத்திற்கு வழிகோலியதை நாம் அறிவோம். மூன்றவதாக, ஆழ்வார்கள் காலத்துக்குப் பின்னர் புகுந்த பேரிருளை அகற்றும் ஒளி விளக்காக அவதரித்த இவர் இதற்காக (சேவடிகள் என்னைச் சிவக்கும்படிக்குக், கால்கடுக்க நடந்திருப்பார். இவர் வாழ்க்கையின் பெரும்பகுதி பிரச்சாரத்திலேயே செலவிடப்பட்டிருக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். ஆயினும் கி. பி. 10ஆம் நூற்றாண்டு சைவத்தின் திருவிசைப்பாக் காலம்; பரம்பரைச் சைவரான சோழர்கள் மேலுக்கு எழுந்துவிட்ட நாட்களும் ஆகும். அப்போது நாதமுனிகள் தம் உழைப்புக்கேற்ற பலனை நிச்சயம் பெற்றிருக்க முடியாது. எனவே, வைணவத்தின் வாழ்வுக்கு இவர் எதிர்காலத்தையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. நம்பிக்கையோடு நல்ல காலத்தை எதிர்நோக்கி சில முன்னேற்பாடுகளை இவர் செய்திருக்க வேண்டும். அவலமாக வாழ்க்கையை முடித்திருக்க வேண்டும் நாதமுனிகளைப் பிற்கால ஆசிரியர்கள் பெரிதெடுத்துப் பேசுவதால், இந்த முன்னேற்பாடுகளை இவர் செய்திருப்பது தெரிகின்றது. இம்மாதிரியான எண்ணங்களோடு கால ஆராய்ச்சியும் சேர்ந்து

1. திருமுறை கண்டார்
2. கோயில் கொண்டார்
3. உலகளந்த சேவடிகள்
4. எதிர்காலம் எடுத்தது
5. எந்தக் காலம்?

என்ற ஐந்து அற்புதமான அதிகாரங்களாக இந்நூலில் விரிந்தன. கால ஆராய்ச்சியைக் கடைசியில் தள்ளி விட்டிருப்பது அது ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே பயன்படக் கூடியதால்தான்.

நாதமுனிகள் சமயப் போதகராகவும், பிரசாரகரா கவுமே தம் வாழ்க்கையைக் கடத்தியிருக்க முடியும் என்று மேலே காட்டினோம் அல்லவா? இதனால், கருத்துக்களைக் கடித வடிவில் வடிப்பது போல, நாதமுனிகள் கொடை எனக் கண்டறியப்பட்டன சொற்பொழிவுகளாகவே இப்நூல் நெடுகவும் தரப்பட்டுள்ளன. பிரசங்க இலக்கியம்—என்ற அமைப்பு முறையாக இதனைக் கருதலாம். இந்தச் சொற்பொழிவுகளில் பல இவருடையவும், இவர் தம் சீடர்களுடையவும் தனியன்களுக்கான பின்னணி யாகவும் இருப்பது ஒரு இனிய அமிசம். ஏனெனில், இப்பொழுது இத்தனியன்களும் தமக்கென்ற தனித் தகுதி பெற்ற இலக்கியமாய் விடுகின்றன.

வரலாற்று நூல்களிலும் கதை வடிவங்களில் அமைந்த வற்றைப் பயில்வதன் மூலமே ஒரு பொருளைப் பற்றிய ஆழ்த்த அறிவும், மனநிறைவும் உண்டாகின்றன. தாய் மொழியில் படித்த செய்தியைப் போல. தனிச் செய்திகள் பொருத்தமான பின்னணியோடு கதையில் இடம் பெறுவ தால் அவற்றை முழுவதுமாக விளங்கிக்கோடல் இப்போது எளிதாய் விடுகின்றது. மேலும், கதை சாமான்யர் களுக்கும் பயன்படும் சாதனம். இதனாலேயே இந்த ஆராய்ச்சியைக் கதையாக அமைத்துள்ளோம். இது உண்மையான வரலாறு ஆகாவிட்டாலும், முழுக்கவும்

புனைந்துரையும் அன்று. காட்டாக, ஆழ்வார்கள் பிறப்புக்கு வைகுந்தத்தில் முடிவெடுக்கப்பட்டது போல சமய நூல்கள் செய்த கற்பனையை உதறித் தள்ளிவிட்டு தமிழ் நாட்டில் அப்போதிந்த சமுதாயச் சூழ்நிலையே வைணவ புரட்சிக்குக் காரணமாயதும், அப்புரட்சியில் ஆழ்வார்கள் வகித்த பங்கின் அடிப்படையில் இவர் இன்னதன் அம்சமாக கற்பிக்கப்பட்டிருப்பதும் ஆகிய இரண்டைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். அமைச்சர் அநிருத்தப் பிரமாதிராயரின் பரிந்துரையின் பேரிலேயே நாதமுனிகளை திருவரங்க ஸ்ரீகார்யம் அழைத்துப் பேசி உதவவும் முன் வந்தது என இந்நூலில் காட்டியுள்ளோம். ஒரு பெரிய மனிதரின் உதவியில்லாமல் வீரநாராயணபுரத்து ஏழைப் பிராம்மணர் திருவரங்கத்திலிருந்த பழம் பெருச்சாளிகளைப் பணிய வைத்திருக்க முடியாது என்பதனாலேயே இவ்வாறு செய்யப்பட்டது. வெற்றிடங்களை நிரப்பச் செய்த கற்பனைகள் அனைத்தும் அறிவாராய்ச்சிகளின் அடிப்படையில் செய்யப்பட்டனவே. எனவே, இவற்றை உண்மையாகக் காட்டும் சான்றுகள் எதிர்காலத்தில் கிடைக்கும் வாய்ப்பு உண்டு என்பதும் எண்ணத் தக்கது.

நாதமுனிகளைத் திருவரங்கத்தில் வாசம் செய்தவராக பெரிய திருமுடி அடைவு கூறுகிறது. இதை இந்த நூலில் நாம் அடியோடு நிராகரித்து விட்டோம். ஏனெனில் அவர் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள் பல அவரது ஊரிலேயே நிகழ்ந்தனவாகக் குரு பரம்பரைகளிற் காணப்படுகின்றன. அவர் மரணத்தின்போது கூட அவர்தம் சீடர்கள் வீரநாராயணபுரத்திலேயே இருந்திருக்கின்றனர். எனவே, நிச்சயமாக அவருடைய ஆசிரமம் சொந்த ஊரிலேயே இருந்திருக்க வேண்டும். விசேஷ காலங்களில் மட்டுமே அவர் திருவரங்கம் போனார். எனவே, குருகூருக்குப் பிறகு காட்டுமன்னார் கோயிலே சுமார் 33 ஆண்டுகள் (கி. பி. 945—978) வைணவத்தின் தலைநகராய் இருந்தது என நாம் நம்புகிறோம். இந்நூலின் மிகப்பெரிய கண்டு

பிடிப்புகளில் இதுவும் ஒன்று; காலக்கணிப்புக்கு அடுத்து இடம் வகுப்பது.

நாதமுனிகளுடையது பரம்பரைச் சைவரான சோழர்கள் காலம். இவர்களின் காலத்தேயே சைவம் கொடி கட்டிப் பறந்ததால், இதனைச் சைவத்தின் பொற்காலம் என்றுகூட ஆசிரியர் வேலுப்பிள்ளை வருணித்துள்ளார். சைவத்தின் வளர்ச்சி சமயப் பற்றுமிக்க மாற்றுச் சமயத்தினரிடையே நிச்சயமாக பொறாமைத் தீயை மூட்டிக் கொழுந்துவிட்டு எரியச் செய்திருக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். இந்த மாற்று மனம் வன்முறையில் ஈடுபட முடியாத அளவுக்குப் பண்பட்டதாகில், வெம்பி— வெதும்பி தன்னைததானே அழித்துக் கொண்டிருக்கவும் செய்யும் அல்லவா? நாதமுனிகள் இப்படிப்பட்டதொரு பாத்திரமே. இந்த அடிப்படையிலேயே செம்பியன் மாதேவி, வீமன்குந்தவை, ஆதித்தன் கோதைப்பிராட்டி ஆகிய அரசகுடும்பத்தினர் அனந்தீச்சுரரை மட்டுமே வழிபட்டது, நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்த தேவாரம் மக்களிடையே காட்டுத்தீ போலப் பரவியது முதலியன நாதமுனிகளை வருத்தினவென்று நாம் கொண்டுள்ளோம். வைணவத்தைச் சைவம் தரக்குறைவாக நடத்தியதற்கான சான்றுகளை இதற்காகவென்று இயன்ற மட்டில் திரட்டியும் தந்துள்ளோம். வரலாற்றை அடியாகக் கொண்ட நூல்களில் கசப்பான உண்மைகள் சில இருக்கவே செய்யும். இதனை இக்கலைத் துறையின் சிறப்பியல்பாகக் கருதித் தள்ளிவிட வேண்டுமேயன்றி, சமயப் பூசல்களுக்கான தொடக்கமாகக் கொள்ளக் கூடாது. குறிப்பாக, சைவ - வைணவங்களின் திறத்தில் உட்பகை நிச்சயமாக விரும்பத் தக்கதல்ல. ஏனெனில், ஒரு காலத்தே வலுவான புறப்பகைகளாக இருந்த ஜைன, பவுத்தங்களின் இடத்தில் இப்போது விரும்பத் தகாத வேறு சக்திகள் பலம் பெற்றிருக்கின்றன.

இது கி. பி. 10 ஆம் நூற்றாண்டைய தமிழகத்தின் சமயம், இலக்கியம் மற்றும் அரசியல் வரலாறு என்பதும் குறிப்பிடத் தக்கது. நம்பியாண்டார் நம்பிகளின் தேவாரத் தொகுப்பு சுமார் கி. பி. 970 அளவில் நாதமுனிகளின் பாணியில், அரசின் பங்கு எள்ளளவும் இல்லாத ஒரு மனிதனின் அரும்பணியே என முதன்முதலாக இந்நூல் நிறுவியுள்ளது. இது தமிழ்ச் சமய வரலாற்றைச் சிறப்புற விவரிக்கும் ஒரு நல்ல செய்தியே அல்லவா? காட்டுமன்னார் கோயில் அனந்தீச்சுரக் கல்வெட்டுகளே கூறும் கண்டராதித்தர் மேற்கெழுந்தருளியது. அரிஞ்சய சோழர் ஆற்றூரில் துஞ்சியது, ஆதித்த கரிகாலன் பாண்டிய நாட்டு கைக்கூலிகளால் உடையார்குடியில் கொலை செய்யப்பட்டது ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகள் இந்நூலில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

இந்நூல் காட்டுமன்னார் கோயிலின் மன்னனார் கோயில் அனந்தீச்சுரத்திலும் பழமையான தாதல், அனந்தீச்சுரம் கி. பி. 935 அளவில் கட்டப்பட்டது. வீராணத்தேரி கி. பி. 925—935களுக்கிடையே கட்டப்படடிருக்கக் கூடுதல், வைணவத்தின் தலைநகரமாக சுமார் 33 ஆண்டுகள் காட்டுமன்னார்கோவில் இருந்தது. கி. பி. 950லிருந்து இது சோழர் படைவீடும் ஆனது ஆகியன சில வரலாற்றுச் சிறப்புடைய, இவ்வூர் பற்றிய விவரங்கள். ஆதித்த கரிகாலன் உடையார்குடியில் கொலை செய்யப்பட்டது, செம்பியன்மாதேவி, ஸ்ரீமன் குந்தவை, ஆதித்தன் கோதைப்பிராட்டி ஆகிய அரசியர்கள் இங்கே கைதொழுதது ஆகியவற்றிலிருந்து அரசிளங் குமாரர்கள் படைத் தலைவராய் உடையார்குடிப் பகுதியில் வாழ்ந்தது முதலாகிய பல செய்திகளை இந் நூல் எடுத்துக்காட்டியுள்ளது. இந்தத் தலபுராணம் இவ்வூரிலேயே பிறந்த இன்னொரு பெரியவராகிய ஆள்வந்தார் பற்றிய வேறொரு நூலில் தொடரவிருப்பதை வாசகர்களுக்கு அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். ஆயினும் இந்நூலிலேயே இயன்றமட்டில் இவ்வூரின் பிடாகைகள், சேரிகள், வதிகள் (சாலைகள்), வாய்க்கால்கள் பற்றிக் கல்வெட்டுக்களிற் கண்ட விவரமெல்லாம் பிற்சேர்க்கையில் காட்டப்பட்டுள்ளன.

கடைசியாக, சில வார்த்தைகள். முதலாயிரத்தின் இசைகளாக பக் 15 இல் கொடுக்கப்பட்டுள்ள ராகங்கள் அப்பாவு முதலியாரைப் பின்பற்றி மயிலை மாதவதாசன் தமது நாலாயிரப் பிரபந்தப் பதிப்பில் கொடுத்துள்ளனவே. இவை தேவகான ராகங்களேயாகக் கூடுமெனினும் நாதமுனிகளின் மருமக்களால் கொடுக்கப்பட்டன அல்ல. திவ்யப் பிரபந்தம் முழுவதும் தேவகானத்திலேயே திருவரங்கத்தில் நாதமுனி கோஷ்டியினரால் அத்யயனம் செய்யப்பட்டதாகவே கோயிலொழுகு கூறினாலும் முன்னோர் பால் நாதமுனிகள் பெருமதிப்புடையவராதலால், முதலாயிரம் மட்டும் தேவகானத்தில் பாடப்பட்டிருக்கலாம் என்பது தம் நம்பிக்கை. மூன்றாவதாக நாங்கூர்க் கோயில்கள் நாதமுனிகள் காலத்தில் கல்தாழிகளாக மாற்றப்பட்டதாகக் கூறப்பட்டிருப்பதும் பிழைபட்டதாகத் தெரிகிறன்து. திருவேங்கடத்தின் மேல் நாதமுனிகள் காலத்திலேயே சைவர்கள் உரிமை கொண்டாடியதாக இந்நூலில் (பக்.166) கதை புனைந்துள்ளோம். அடிக்குறிப்பில் இக்கதையைச் சில சான்றுகளின் அடிப்படையில் செய்ததாகவும் குறித்தோம். அன்று நினைவில் இல்லாத இச்சான்றுகளை ஆசிரியர் கமலக்கண்ணன் தமது 'தொண்டை நாடும் வைணவமும்' என்ற நூலின் பக். 811இல் எடுத்துக்காட்டியுள்ளனர். ஆண்டுக் காண்க.

இந்நூலுக்கு நல்லதொரு அணிந்துரையைத் தந்தருளிய சென்னைப் பல்கலைக்கழகத்து, தொல்லியல் வரலாற்றுத் துறைப் பேராசிரியரான உயர்திரு முனைவர் K. V. ராமன் அவர்களுக்கு நமது பணிவன்புடன் கூடிய நன்றி.

சுந்தர நிலையம் சு. குலசேகரன்
10—12—94

# பொருள் அடக்கம்


அணிந்துரை. 3-6

முன்னுரை. 7-16

1. திருமுறை கண்டார் 17-63
2. கோயில் கொண்டார். 64-117
3. உலகளந்த சேவடிகள். 118-168
4. எதிர்காலம் எடுத்தது. 169-202
5. நாதப் புதுயுகம் எது? 203-221


## பிற்சேர்க்கை


1. வீர நாராயண சதுர்வேதி மங்கலம் பற்றி கல்வெட்டுகளிற் கண்ட விவரங்கள். 222-224
2. நாதமுனிகளின் வரலாற்று செய்திகள் 225-226
3. சோழர் குடிவழி. 227-228
4. பாண்டியர் குடிவழி 228
5. ராஷ்டிரர்கூடர்குடிவழி 229
6 கீழைச் சாளுக்கியர் குடிவழி 230-231
7. கால மாலை 232-237
8. மேற்கோள் நூல்கள். (தமிழ்) 238-239
9. மேற்கோள் நூல்கள். (ஆங்கிலம்) 240

# 1. திருமுறை கண்டார்

## கா(ர் நா)ட்டு மன்(ன)னார் கோயில்
## நாடும், நகரமும்

வள்ளலார் மாவட்டத்தின் தென் கோடியில், கொள்ளிடத்தின் வடக்கே இருப்பது காட்டுமன்னார் கோயில் வட்டம். இந்தப் பெயரில் 'காட்டு' என்ற தொடரின் உண்மையான வடிவம் 'கானாட்டு' என்பதே. இப் பகுதியிலுள்ள 'கானாட்டாம் புலியூர்' என்ற ஊரின் பெயரில் 'கான்நாடு' என்ற பழைய வடிவம் இன்னமும் வழக்கில் உள்ளது. 'வடகரை கானாட்டுப் பிரமதேயம் முள்ளூரான சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம்' - என்பது கல்வெட்டு[1] வாசகம். இவ்வூர், காவிரியின் வடகரைப் பக்கத்தே அமைந்த ஒரு பிரமதேயம் ஆதலையும், பல்லவ சிம்மவிஷ்ணுவால் தானம் செய்யப்பட்டதையும் இக் கல்வெட்டிற் காணலாம். 'கானாடு' - என்பது சில பட்டயங்களில்[2,3] 'கார்நாடு' என்றும் காணப்படுகிறது. பெருநிலக்கிழார்களான கார்காத்தார் இங்கே மிகுதியாக் வாழ்வதால், இதனைக் குறிக்கும் 'கார்நாடு' – என்பதே

1. S.I.I. Vol. 13, no. 352 & ARE 617 of 1920 (கானாட்டு முள்ளூர்)
2. ARE 140 of 1925 (திருவாவடுதுறை, பராந்தகனின் 39ஆம் ஆண்டு)
3. E.I. Vol. II no. 34 (ராஜராஜனின் லீடன் செப்)

கானாட்டின் உண்மை வடிவம் ஆகக்கூடும். இவ்வட்டத்தில் மேலே குறித்த கானாட்டாம் புலியூரான முன்னூரோடு நாரையூர், ஓமாம்புலியூர் மற்றும் (மேலக்) கடம்பூர் என்னும் மூன்றும் தேவாரப் பாடல்பெற்ற திருப்பதிகள். ஓமாம்புலியூருக்கு மேற்கே அண்மையில் உள்ள ஆதனூர் நந்தனார் பிறந்த இடம்.

கார்நாட்டின் மிகப்பெரிய உடைமையும் தமிழகத்து ஏரிகளுள் மிகப் பெரியதுமான வீராணத் தேரிக்குத் தெற்கே ஒரு கி.மீ தொலைவில், வீராணத்திற்கு கொள்ளிடத்திலிருந்து நீர் கொணரும் (மதுராந்தக) வடாற்றின் கிழக்கே உள்ளதும், கல்வெட்டுகளில வீர நாராயண சதுர்வேதி மங்கலம் என்றே சொல்லப்படுவதுமான காட்டுமன்னார் கோயிலே இவ் வட்டத்தின் தலைநகர். காட்டு மன்னார் கோயில் நகரின் வடபகுதியான உடையார்குடியிலுள்ள அனந்தீச்சுரம் என்ற சிவன் கோயில் பெரும் புகழ்பெற்றது. அனந்தீச்சுரர் முதலாம் இராசேந்திரனால்[4] 'நம் மூலதெய்வம்' என அன்புடன் அழைக்கப்பட்டவர். சிவஞான கண்டராதித்தர் மேற்கெழுந்தருளியது[5] 'அரிஞ்சயடே சாழர் ஆற்றூரில் துஞ்சியது[6]' ஆதித்த கரிகாலனைத் துரோகிகள் ஐவர் கொலை செய்தது[7] — ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று கல்வெட்டுகள் இங்கிருந்தே கிடைத்தன. ஊரின்

4. ARE 624 of 1920 (உடையார்குடி, இராஜேந்திரனின் 8ஆம் ஆண்டு)
5. S.I.I. Vol. 19, no. 19 (உடையார்குடி, பர. அரிஞ்சயனின் 2ஆம் ஆண்டு)
6. S.I.I. Vol. 13, no. 225 (உடையார்குடி, சுந்தர சோழனின் 12ஆம் ஆண்டு)
7. E.I. XXI. no. 27, (உடையார்குடி, முதலாம் இராஜராஜனின் 2ஆம் ஆண்டு)

தென்பகுதியிலுள்ளது மட்டுமே இவ்வட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரே திருமால் கோயில். மூன்று கல்வெட்டுகளில்[8,9,10] இக் கோயில் துவராபதி எனப்படுகிறது. கண்டராதித்த சோழனின் 4ஆம் ஆண்டைய கல்வெட்டில்[11] இக் கோயில் வீரநாராயண விண்ணகர் எனவும், பெருமாளின் பெயர் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் 10ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில்[9] மன்னனார் எனவும் கிருஷ்ணதேவராயர் கல்வெட்டொன்றில்[9] அழகிய மன்னர் எனவும் பட்டுள்ளன. கோயிலுள்ள இடம் வீரநாராயணச்சேரி என ஒரு கல்வெட்டில்[11] குறிக்கப்படுவதே ஆகலாம் போலத் தெரிகிறது. இந்த வீரநாராயணச் சேரியே முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வீரநாராயணபுரம் ஆகி[12,13] இப்படியே பின் வந்த குருபரம்பரைகளிலும் இடம்பெற்றது.

## வீரநாராயணன் (கி.பி. 907 — 954)

தம்மோடு போட்டியிட்ட தமது மாற்றாந்தாய் மகனும், இராஷ்டிரகூடப் பேரரசன் இரண்டாம்

---

8. S.I.I. Vol. 19. no. 400 (உடையார்குடி, உத்தம சோழனின் 16ஆம் ஆண்டு)
9. ARE no. 535 of 1920 & 20 p. II para 40 via. TLI Vol. II pSA-274
10. ARE 349, of 1958-59 (கா. ம. கோயில், கிருஷ்ண தேவராயர் காலம்)
11. S.I.I. Vol. 13 no. 9 (உடையார்குடி, கண்டராதித்தனின் 4ஆம் ஆண்டு)
12. S.I.I. Vol. II no. 990 p 925 (கா. ம. கோயில் குலோத்துங்கனின் 6ஆம் ஆண்டு)
13. S.I.I. Vol. XII no. 179, ARE 530 of 1920 (கா. ம. கோயில், கோப்பெருஞ்சிங்கன் II 13ஆம் ஆண்டு கி.பி. 1255)

கிருஷ்ணனின் (கி.பி. 880 — 915) பேரனுமான கன்னர தேவனை முறியடித்துவிட்டு கி. பி. 907-ல் பராந்தகர் அரியணை ஏறினார். கன்னரதேவன் சார்பாக இராஷ்டிர கூட கிருஷ்ணன் தொடுத்த வல்லத்துப் போரில் வாகை சூடி வீரசோழன் என்றொரு விருதும் பராந்தகர் புனைந்து கொண்டார் என வீரராஜேந்திரனின் கன்னியாகுமரி கல்வெட்டு கூறுகின்றது. பராந்தகருக்கு மதுரை கொண்ட கோப்பரகேசரி என்ற பெயரும் மூன்றாம் ஆட்சி ஆண்டிலிருந்தே காணப்படுவதால், கி. பி. 910 அளவில் இவர் பாண்டியனையும் தோற்கடித் திருக்கவேண்டும். பராந்தாகருக்கு வீரநாராயணன் என்ற விருதுப் பெயர் 14-ஆம் ஆட்சி ஆண்டிற்குச் சமமான கி. பி. 920 — 21லேயே உத்திரமேரூர் கல்வெட்டு[14] ஒன்றில் காணப்படுகிறது. இது இவர் ஆட்சித் தொடக்க காலத்தில் அரசனாக இருந்திருக்கக்கூடிய பாண்டிய பராந்தகனுடைய விருதுவும் ஆதல் குறிப்பிடத்தக்கது.

## வீரநாராயணப் பெருமாளும், மன்னனாரும்

வீராணத்தேரி என்பது வீரநாரயணன் ஏரி என்பதின் மரூஉ. ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆக்கிரமித்த பகுதியில் ஏரி குளம் முதலியன அமைத்து நிரந்தரமான பாசன முதலிய வசதிகள் செய்வதில் மனம் செல்வதில்லை. எனவே, வீர நாராயணப் பெயர் சோணாட்டுப் பகுதிகளை ஆக்கிரமித் திருந்த பாண்டிய பராந்தகனுக்கும் (கி. பி. 862-911) இருந்தாலும், இவ்வேரியை அமைத்தவர் இவ்விருதுப் பெயரே கொண்ட பரகேசரி முதலாம் பராந்தக சோழரே (கி. பி. 907 – 954) ஆகற்பாலர். இது இவ்வேரிக்கு நீர் கொணரும் மதுராந்தக வடவாறு[15], மற்றும் இவ்வேரி

14. E. I. Vol. XVIII p. 21. (கன்னியாகுமரிக் கல்வெட்டு)
15. S.I.I. Vol. 13, no. 352 (உத்திரமேரூர் பரந்தகனின் 14ஆம் ஆண்டு)

யிலிருந்து கிளம்புவதாகத் தெரியப்படும் வீரநாராயண வாய்க்கால் [16], இருமுடிச் சோழ வாய்க்கால் [17] ஆகிய வற்றின் பெயர்களால் உறுதிப்படுகிறது. இந்தப்பின்னணி யில் பார்க்கும்போது காட்டுமன்னார் கோயிலின் அனந் தீச்சுரக் கல்வெட்டுகளில் இவ்வூர்ப் பெயராகச் சொல்லப் படும் வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்பது பராந் தக சோழராலேயே கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்றே சொல்லத் தோற்றுகிறது. வீரநாரயண சதுர்வேதி மங்கலத்தில் வீரநாராயண விண்ணகரைக்[10] குறிப்பிடும் கண்டராதித்தனின் 4 - ஆம் ஆண்டிற்குச் சமமான கி. பி, 952 - ல் வீரநாராயணனான பரகேசரி பராந்தகர் அரச ராகவே இருந்தார். புதுச்சேரி மாநிலத்தில் திரிபுவனை என இந்நாள் வழங்கும் (பராந்தகரின் மனைவியான திரி புவனமாதேவியின் பெயரால் அமைந்த) திருபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்திலுள்ளதும் பராந்தகரால் அமைக்கப் பட்டதுமான வீரநாராயண விண்ணகரமும்[16] இக் கருத்தையே அரண் செய்கிறது. ஆயினும், வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து வீரநாராயண விண்ணகராகிய துவராபதி மன்னனார் கோயிலை இவர் செங்கற் பணியா கவே புதுப்பித்திருக்க வேண்டும். ஏனெனில், இக்கோயி லுக்கு கி. பி, 985 – ல் செய்யப்பட்ட தானமும்[8] தொடக் கத்திலேயே கற்றளியாகச் சமைக்கப்பட்ட அனந்தீச்சுரத் திலேயே காணப்படுகிறது. மேலும், பெருமாளுக்கு மன்ன னார் என்ற பெயரே குருபரம்பரைகளிலும் கிருஷ்ணதேவ

---

16. S I I Vol. 13 no. 146 (உடையார்குடி, கண்டராதித் தனின் 6ஆம் ஆண்டு வீர. நாரா. வாய்க்கால்)

17. S.I.I. Vol. 13, no. 224 (உடையார்குடி, சுந்தர சோழனின் 12ஆம் ஆண்டு இருமு. சோ. வாய்க்கால்)

18. புதுவைச் செய்திகள் ஜூலை 1970 பக். 16 (வழி) புதுவை வரலாறு (1991) பக். 15

ராயர் கல்வெட்டுகளிலும்[9] காணப்படுவதால் மன்னனாரும், கோயிலும் பராந்தகருக்கும் முற்பட்ட நாளிலேயே இருந்தனவே ஆகக்கூடும். இங்குள்ளவற்றுள் முதலாம் குலோத்துங்கனின் ஆறாம் ஆண்டைய (கி. பி. 1076) கல்வெட்டே[12] பழமையான தாவதால், இப்போதைய கற்றளி கி· பி. 1075 வாக்கில் செய்யப்பட்டிருக்கலாம். ஆலயத்தில் இன்றுள்ள மரத்தாலான நின்ற கோலத்து நெடிய வீரநாராயணப் பெருமாளின் சிலை கி. பி. 13 – ஆம் நூற்றாண்டில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனால்(கி.பி. 1250-74)[19] நிறுவப்பட்டதாம்.[20] இவன் இக்கோயிலைப் புதுப்பித்த நாளில் இப்படி செய்திருக்கலாம். கிருஷ்ணதேவராயர் காலத்திலும்[21] அழகிய மன்னனார் என்றே பெயர் பெற்றிருந்த பெருமாளுக்கு வீரநாராயண-பெருமாள் என்ற தற்காலப் பெயர் கி. பி 1758 (சகம் 1679)[22] லிருந்தே வழங்கி வருகின்றது.

## சொட்டைக் குலத்து நாதன் (கி. பி. 915)

வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தின் ஒரு பகுதி ஸ்ரீதர நாராயணச்சேரி, இங்கே வாழ்ந்த சொட்டைக் குலத்து ஐயநம்பி பட்டன் திருவனந்தீச்சுரம் உடையாருக்குச் செய்த தானம் ஒன்று அனந்தீச்சுரக் கல்வெட்டில்[23] குறிக்கப்பட்டுள்ளது. இதே சொட்டைக்

19. ARE 523 of 1920 (கா. ம. கோயில் ஜட. சுந்தரன் I 12ஆம் ஆண்டு)
20. சோழர் கலைப்பணி, பாலசுப்பிரமணியன், S.R. (1956) பக். 115
21 ARE 342 of 1958 - 59 (சகம் 1144 கிருஷ்ண தேவராயர் காலம்)
22. S.I.T.I. Vol. I.no 9 1913—1914(சகம் 1679-1758 கி.பி)
23. S.I.I. Vol. 13. no. 119 (உடையார்குடி, ராசகேசரி 5ஆம் ஆண்டு)

குலத்தில், ஆனால் வைணவ சமயத்தினராய் ஈஸ்வரபட்டாழ்வார் என்று ஒரு பெரியவரை நாதமுனிகளின் தந்தையாகக் குரு பரம்பரைகள் குறிப்பிடுகின்றன. இவரும் ஸ்ரீதர நாராயணச் சேரியினரே ஆகலாம். காட்டு மன்னார் குடியின் தென்கிழக்கே 'குப்பங்குழி' என்ற பகுதியே நாதமுனிகளின் பிறப்பிடமாகக் கருதப்படுவதால், இதுவே பண்டைய ஸ்ரீதர நாராயணச்சேரி ஆகக் கூடும். நாதமுனிகளிக்கு இங்கே ஒரு கோயிலும் உண்டு.

ஈஸ்வரபட்டர் மன்னனார் கோயிலில் ஒரு மகா பண்டிதர். இவருக்கு முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தது; அடுத்து, ஆனி மாதத்து அனுஷ பவுர்ணமி கூடிய புதன்கிழமையில் பிறந்த நாதமுனி இவருடைய ஒரே மகன். நாதமுனி என்பதை ஸ்ரீரங்க நாதமுனி எனச் சில பெரியார்கள்[24] கருதுவதுண்டு. ஆயினும், நாதப் பெயர் அக்காலத்தே அப்படியே வழங்கியதற்கு அன்பிற் செப்பேடுகள்[25] சான்று பகர்கின்றன. பெருமை எய்தப் பிறந்தவர் நாதமுனி என்பது அவர் கல்வியில் பளிச்செனத் தெரிந்தது. வடமொழி இவருக்கு எளிதில் வந்தது. இதன் வாயிலாக வேத, வேதாந்தங்களை கசடறக் கற்றார். இசையும், சோதிடமும் இவர் தேர்ச்சி பெற்றிருந்த ஏனைய இரு கலைகள். இசைத் துறையில் 'தேவ கானம்' என்ற வடக்கத்திய வேத கானத்தையும்[26] 'மனுஷ்ய கானம்' என்ற பழந்தமிழ் முறையையும் இவர் நன்கு அறிந்தவர். வேத கானம் பற்றிய மதங்கரின்

24. ஆசார்ய வைபவ மஞ்சரி (1992) பக்.

25. E.I. Vol. XV no. 5 (அன்பில், செப், சுந்தரசோழனின் 4ஆம் ஆண்டு)

26. தமிழ்நாட்டு வரலாறு—சுப்பிரமணியன், N., பக். 392

ப்ருகத்தேசியில் இவருக்கு நிரம்பப் பயிற்சி உண்டு. பாடல்களைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு தமிழறிவும் சிறிது பெற்றிருந்தார். அந்த இளமைக் காலத்தில், அப்போது கட்டப்பட்டுக்கொண்டிருந்த வீரநாராயண ஏரிப் பக்கமும், தமது சகாக்களுடன் உல்லாசப் பயணமாகச் சென்றிருக்கவும் வேண்டும்.

## வலியற்ற வடவெல்லை

நாதமுனியின் கல்விப்பணி தொடர்ந்து கொண்டிருந்த நாளில் தெற்கே பாண்டியன் பராந்தக வீரநாராயணனை அடுத்து அரியணை ஏறிய அவன் மகன் மூன்றாம் இராஜசிம்மன் தொடக்கத்தில் சில, பல ஆண்டுகள் சோழ பராந்தகனுக்கு நண்பனாகவே இருந்ததை இவனுடைய அதிகாரியான தேசப் புகழ் சோணாட்டுத் தலங்களுக்குச் செய்துள்ள தானங்களால் அறிகிறோம். ஆயினும், இந்த நட்பு நீடிக்கவில்லை. இலங்கை அரசன் தப்புலனின் துணையோடும் பராந்தகரை எதிர்த்து அவன் பின்னாளில் போரிட்டதை இலங்கை வரலாறும், சின்னமனூர் பெரிய செப்பேடுகளும் கூறுகின்றன. முடிவில் பராந்தகரே வெற்றி பெற்று பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதை இவருடைய 20-ஆம் ஆட்சி ஆண்டிலிருந்து இவர் கல்வெட்டுகள் பாண்டி மண்டலத்தில் கிடைப்பதாலும்[27] 22-ஆம் ஆண்டில் 'மதுரையும், ஈழமும் கொண்ட' எனக் காணப் படும் விருதுவாலும் அறியப்படுகிறது. மதுரையில் பராந்தகரின் 4-ஆம் மகனான உத்தமசீலி சுமார் கி. பி. 935-ல் இருந்து சோழப் பிரதிநிதியாக ஆண்டு வந்தான்.

---

27. S.I.I. Vol, 19 no. 410 (குற்றாலம், பராந்தகனின் 20ஆம் ஆண்டு).

பராந்தகனின் 6-ஆம் ஆண்டைய (கி. பி. 912) புள்ள மங்கைக் கல்வெட்டில்[28] கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதி அவ்விடத்திய கோயிலுக்கு நிலம் வழங்கியிருப்பதாலும், இதே கல்வெட்டில் கங்கனுக்கு மாவலி வாணாதிராயன் என்ற பட்டம் காணப்படுவதாலும் கங்க-வாணர் போர் கி.பி. 912-ன் முற்பகுதியில் நடந்ததாகக் கொள்ளலாம். இந்தப் போரில் வாண அரசன் இரண்டாம் விஜயாதித்தன் இறந்துபட்டான். இங்ஙனமே வைதும்பரும் சோழர்களிடம் கி. பி. 915 அளவில் தங்கள் நாட்டை இழக்க நேர்ந்தது.[29] வடக்கே இருந்த இராஷ்டரகூடப் பேரரசை சோழன் மகள் வீரமாதேவியை மணந்த நான்காம் கோவிந்தனே ஆட்சி செய்து வந்தான்.

ஆனால், இந்தப் பெருநிலை கி. பி. 935-ல் மூன்றாம் கிருஷ்ணன் நான்காம் கோவிந்தனைத் துரத்திவிட்டு தன் தகப்பனாகிய மூன்றாம் அமோகவர்ஷனைப் பதவியில் அமர்த்தியபோது சீர்குலையத் தொடங்கிவிட்டது. கோவிந்தனும் தன் மனைவியோடு தஞ்சையில் தன் மாமனார் பராந்தகரிடம் சரண் புகுந்தான். சோழர்களிடம் நாட்டை இழந்துவிட்ட வாணர் ராஷ்டிரகூடர் பக்கம் சேர்ந்துகொண்டனர். வைதும்பர் மகள் கல்யாணியை மூன்றாம் மகனான அரிஞ்சயனுக்கு மணமுடித்து அவர்களை மட்டும் தன் பக்கலில் தக்க வைத்துக் கொண்டார் சக்கரவர்த்தி பராந்தகர்.

வடபகுதி இங்ஙனம் வலியற்று இருப்பதைக் கண்ட பராந்தகர் கி. பி. 936-ல் திருமுனைப்பாடி நாட்டு

---

28. S.I.I Vol. 19, no. 168 (புள்ளமங்கை, பரகேசரியின் 6ஆம் ஆண்டு)

29 சோழர் வரலாறு, ராசமாணிக்கனார், மா (1947) பக். 36

நாவலூரில் ஒரு படைவீட்டை அமைத்து அங்கே தம் மூத்த மகன் ராசாதித்தனையும், மூன்றாம் மகன் அரிகுலகேசரி என்ற அரிஞ்சயனையும், சேரநாட்டு நந்திக்கரைப் புத்தூரைச் சேர்ந்த வெள்ளங்குமரன் என்ற படைத்தலைவனோடு இருத்தி வைத்தார்.

கி. பி. 939-ல் அமோகவர்ஷன் காலமான போது பராந்தகர் தம் மருமகன் சார்பாக ஒரு பெரும் படையை இராஷ்ரகூடப் பெருநாட்டின் மேல் ஏவினார். ஆனால், அந்தப் படை தோல்வியே கண்டது. தம்மிடம் தோல்வியுற்று இராஷ்ரகூடர் பக்கம் சேர்ந்து கொள்ளவிருந்த கீழைச் சாளுக்கிய வீமனை அவன் மகள் குந்தவையை மீண்டும் அரிஞ்சயனுக்கே மணமுடித்ததன் மூலம் தடுத்துவிட்டார் பராந்தகர்.

## நாதமுனியின் வடநாட்டு யாத்திரை

சோணாடு இங்ஙனம் வளர்ந்தும் தேய்ந்தும் கொண்டிருந்த நாளில், ஈஸ்வரபட்டாழ்வாரின் பெண் பருவமடைந்தாள்; திருக்கண்ணமங்கையில் ஒரு வரனுக்கு மணமுடித்தார் பட்டார். இப்பெண் வயிற்றுப் பேரர்கள் இருவர். கீழையகத் தாழ்வான், மேலையகத் தாழ்வான் என்பன நாதமுனியின் ஆசிரமத்தில் இவர்களுக்குப் பின்னாளில் வழங்கிய பெயர்கள். இவர்களின் இயற்பெயர் முறையே கிருஷ்ணமாச்சாரியர், வரதாச்சார்யர் என்பனவாம்.[30] இவர்கள் நாதமுனிக்கு மருமக்கள் முறையினர்.

பெரிதாகப் பிரச்சினை ஒன்றும் இல்லை. பெருமாள் அவதாரம் செய்து, திருவிளையாடல்கள் புரிந்த வடநாட்டுத் தலங்களுக்கு எல்லாம் யாத்திரை

30. தத்துவசாரக் கிரந்த வியாக்கியானம், வேங்கடசேஷாசார்யம் (1900) முகவுரை

போய்வந்துவிட வேண்டும் என்று கடைசியாக ஒரு ஆசை. நாதமுனியைக் கூட்டிக்கொண்டு வடக்கே போனார் பட்டர்.

காசியிலும், கங்கையிலும், பிரயாகையில் திரிவேணி சங்கமத்திலும் நீராடிவிட்டு அயோத்தி போனார். அங்கே இராமபிரானை வணங்கிவிட்டு ஹரித்துவாரம் சென்றார். ஆனால், மேலே நாராயணர் பஞ்சராத்திர ஆகமங்களைப் போதித்த பதரிகாஸ்ரமம் மட்டும் போககூடியவில்லை. அங்கிருந்து புறப்பட்டு கீதை போதிக்கப் பட்ட குருக்ஷேத்ரம் போய், கடைசியாகக் கண்ணன் ஓடி விளையாடிய யமுனைக்கரையில் மதுரை, பிருந்தாவனம், கோகுலம், கோவர்த்தனம் ஆகிய இடங்களில் திரிந்தார். கோவர்த்தனத்தில் கொஞ்ச காலம் தங்கி கண்ணனையே நினைத்திருந்தார். மன்னனார் நினைப்பெடுத்தபோது, துவாரகை வழியாகப் பல தலங்களையும் சேவித்துக் கொண்டு ஊர் திரும்பினார்.

பதரிகாஸ்ரமம் பேகும் வழியில் அதற்குச் சற்றே முந்தியிருப்பது சங்கர மடம் இருக்கும் 'ஜோஷிமட்' என்னும் இடம். இதற்கே பிரீத பத்ரி என்ற பெயரும் உண்டு. திருமங்கை ஆழ்வாரால் பாடப்பட்ட திருப் பிரிதி இதுவே ஆகல் வேண்டும். இருந்தும், பெரிய திரு மொழியில் பிரிதியைப் பற்றிய பதிகத்தை வதரிப்பதிகங் களுக்கும் முன்பாக நாதமுனிகள் வைத்திருப்பதால், இவர் வதரிப் பக்கம் செல்லவில்லை என்பது தெளிவு. சிலர் பிரிதியை வதரிக்கும் வடக்கே இருப்பதாகக் கொள்வது நம்பத் தக்கதாய் இல்லை.

## தில்லையில் கோலாகலமும் [கி. பி. 940 - 49], நாதமுனிகளின் தமிழ்ப் பயிற்சியும்

தில்லைச் சிற்றம்பலத்தை முதன் முதல் பொன்னம் பலம் ஆக்கியவன் பல்லவ மூன்றாம் சிம்மவர்மன். அப்

படிச் செய்து அப்போது 380 ஆண்டுகளுக்கு மேல் ஆய் விட்டிருந்தன. அந்தப் பொன்னும் நிறம் மங்கிவிட்டதால் அப்போது அது பொன்னம்பலம் என்ற சிறப்பையே இழந்துவிடும் நிலையில் இருந்தது. சக்கரவர்த்தி பரகேசரி பராந்தகர் தமது தந்தையான ஆதித்த சோழர் கொங்குநாட்டைக் கொள்ளையிட்டுக் கொணர்ந்த பொன்னைக் கொண்டு அம்பலவாணரின் சிற்சபையை மீண்டும் பொற்சபையாக்க ஆணையிட்டார். இந்தப் பணிக்கு தம்முடைய இரண்டாம் மகனான கண்டராதித்தரை நியமனம் செய்தார். பணி நிறைவேறி குடமுழுக்கும் நாதமுனிகள் இல்லாத சமயம் இனிதே நடந்தேறியது.

விழா முடிந்த பிறகும் கண்டராதித்தர் தஞ்சைக்குப் போகவில்லை. தில்லையிலேயே தங்கி வழிபாடு செய்து கொண்டிருந்தார். அவர் பாடிய கோயில் திருப்பதிகம் ஒன்று திருவிசைப்பாவில் உண்டு. வேறு அடியார்களும் அவரால் அழைக்கப்பட்டு, தில்லையில் பதிகம் ஓதி வழிபட்டனர். பூந்துருத்தி காடநம்பி (கி. பி. 910 - 970), வேணாட்டடிகள் (920 – 980), திருவாலி அமுதனார் (910 - 989), புருடோத்தமநம்பி (920 - 1000), சேதிராயர் (920 - 1000), கருவூர்த் தேவர் (930 - 1040) ஆகியோரெல்லாம் கண்டராதித்தரால் ஆற்றுப்படுத்தப்பட்டே கோயில் பதிகம் பாடினர் என்பது அறிஞர் மு. அருணாசலம்[31] அவர்கள் கருத்து. இவ்வனைத்திற்கும் மேலாக மூவர் அருளிச் செயல்களும் தெரிந்திருந்த அளவில் பல கோயில்களில் ஓதப்படத் தொடங்கி விட்டன.

தில்லையம்பதியை வளங்கொழிக்கச் செய்யவென்றே வீரநாராயணத்தேரியைச் கி. பி. 935இல் கட்டினார்

31. இலக்கிய வரலாறு — 10ஆம் நூற். அருணாசலம், மு. (1972) பக்4 94

பரந்தகர் அதை முடித்த கையுடனே அவ் ஏரியின் தென்கரைப் பக்கம் கி. ப. 910–க்குச் சற்று முன்பாக அனந்தீச்சுரம் என்று ஒரு சிவன் கோயிலையும் கட்டியிருந்தார். இதற்கு அடையாளமாக அவருடைய 33, 37 மற்றும் 38-ஆம் ஆண்டு கல்வெட்டுகள்[32–34] அக்கோயிலில் உண்டு. இப்பகுதியில் பிராமணர்கள் பலர் குடியேற்றப்பட்டனர். அவர்கள் உய்வுக்காக இறையிலி பிரமதேயங்களும் அளிக்கப்பட்டன. இதனால் அவ்வூர் வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்ற பெயரும் புனைந்தது. அருகில் இருந்த மன்னனார் கோயில் 'வீரநாராயணச் சேரி' என்ற புதுப்பெயருடன் இச்சதுர்வேதி மங்கலத்தில் இணைந்தது. இவ்வூரில் தேவாரப் பதிகங்களும், திருவிசைப்பாப் பதிகங்களும் பாடி அடியார்கள் வீதிகளில் வலம் வந்தனர். இவற்றையெல்லாம் கண்ணுற்ற நாதமுனிக்கு தமிழில் ஆர்வம் பிறந்தது. பாடல்களைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு திவாகர நிகண்டையும், யாப்பு மற்றும் பாட்டியல் இலக்கணங்களையும் பிறவற்றையும் பயின்று தேர்ந்தார்.

## நாதமுனி திருமணமும், ஈஸ்வர பட்டர் மறைவும்.

சில நாட்களுக்குப் பின், வங்கிபுரத் தாச்சியின் மகள் அரவிந்தப் பாவையோடு [35] நாதமுனிக்குத் திருமணம் இனிதே நடந்தேறியது. இதன் பிறகு, சின்னாட்கெல்லாம் ஈஸ்வரபட்டர் கண்ணை மூடிவிட்டார். அப்பாவின் கோயிற் பணிகளையெல்லாம் இப்போது நாதமுனி ஏற்க வேண்டியதாயிற்று

32. ARE 539 of 1920 (உடையார்குடி பராந்தகனின் 33ஆம் ஆண்டு)
33. ARE 5532597 fo 1920 (உடையார்குடி பராந்தகனின் 37ஆம் ஆண்டு)
34. ARE 547 of 1920 (உடையார்குடி பராந்தகனின் 38ஆம் ஆண்டு)
35. அபிதான சிந்தாமணி (1981) பக். 961

## ஆராவமுதே! (கி. பி. 944)

சில்லிட்ட காலை. அமைதியான நேரம். மன்னனார் கோயிலில் அலங்காரம் முடிந்ததும் திரையை விலக்கி, தீப ஆராதனை செய்தனர். பாடல்கள் பாடி அடியார்கள் மன்னனாரைத் தொழுதனர். அந்தச் சமயத்தில் அவசரமாக உள்ளே நுழைந்த இருவர் பூசையில் கலந்து கொண்டு தாமும் தங்களுக்குத் தெரிந்ததைப் பாடினர்.

ஆராவமுதே! அடியேன் உடலம் நின்பால் அன்பாயே!
நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார்கோலம் திகழக்கிடந்தாய்! கண்டேன், எம்மனே!

எம்மானே! என்வெள்ளை மூர்த்தி! என்னை ஆள்வானே!
எம்மாஉருவும் வேண்டுமாற்றால் ஆவாய் எழிலேறே!
செம்மா கமலம் செழுநீர் மிசைக்கண் மலரும் திருக்குடந்தை
அம்மா மலர்க்கண் வளர்கின்றானே! என்நான் செய்கேனே?

என்நான் செய்கேன்? யாரேகளைகண்? என்னைஎன் செய்கின்றாய்?
உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்
மின்னார் மதிள்சூழ் குடந்தைக் கிடந்தாய்! அடியேன் அருவாணாள்
சென்னாள் எந்நாள்? அந்நாள் உனதாள் பிடித்தே செலக்காணே.

செலக்காண் கிற்பார் காணுமளவும் செல்லும் கீர்த்தியாய்!
உலப்பிலானே! எல்லா உலகும் உடைய ஒரு மூர்த்தி!
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்! உன்னைக் காண்பான்நான்
அலப்பாய் ஆகாசத்தை நோக்கி அழுவன் தொழுவனே.

அழுவன்; தொழுவன் ஆடிக்காண்பன்; பாடிஅரற்றுவன்;
தழுவல் வினையால் பக்கம் நோக்கி நாணிக்
கவிழ்ந்திருப்பன்;
செழுஒண் பழனக் குடந்தைக் கிடந்தாய்!
செந்தாமரைக் கண்ணா!
தொழுவேனை உனதாள் சேரும் வகையே சூழ்கண்டாய்!

சூழ்கண்டாய் என்தொல்லை வினையை அறுத்துன்
அடிசேரும்
ஊழ்கண்டிருந்தே தூராக் குழிதூர்த்து எனைநாள்
அகன்றிருப்பன்;
வாழ்தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்! வானோர்
கோமானே!
யாழின் இசையே! அமுதே! அறிவின் பயனே! அரியேறே!

அரியேறே! என் அம்பொற்சுடரே! செங்கண் கருமுகிலே!
எரியே! பவளக் குன்றே! நால்தோள் எந்தாய்!
உனதருளே
பிரியா அடிமைஎன்னைக் கொண்டாய்! குடந்தைத்
திருமாலே!
தரியேன்; இனிஉன் சரணம் தந்துஎன் சன்மம்
களையாயே.

களைவாய்; துன்பம் களையாதொழிவாய்; களைகண்
மற்றிலேன்;
வளைவாய் நேமிப் படையாய்! குடந்தைக் கிடந்த
மாமாயா!
தளரா உடலம் எனதாவி சரிந்து போம்போது
இளையா (து) உனதாள் ஒருங்கப் பிடித்துப் போத
இசைநீயே.

இசைவித் (து) என்னையுன் தாளிணைக்கீழ் இருத்தும்
அம்மானே!
அசைவில் அமரர் தலைவர் தலைவா! ஆதிப்பெரு
மூர்த்தி!
திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்! காண வாராயே.

வாராவருவாய் வருமென் மாயா! மாயா மூர்த்தியாய்
ஆராவமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்!
தீராவினைகள் தீர என்னை ஆண்டாய்! திருக்குடந்தை
ஊரா! உனக்காட்பட்டும் அடியேன் இன்னம்
உழல்வேனோ?

உழலை என்பின் பேய்ச்சி முலைஉண்டு அவளை
கழல்கள் அவையே சரணாக் கொண்ட குருகூர்ச்
சடகோபன்
குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்
மழலை தீரவல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே.

கான வெள்ளத்தில் நாதமுனி சொக்கிப் போயிருந்தார்; இசைமேதை அல்லவா? பாட்டு நின்ற பிறகுதான் அவர் உணர்வு திரும்பிற்று. '' 'ஆயிரத்துள் இப்பத்தும்' என்று கடைசியாகப் பாடினீர்களே, அந்த ஆயிரம் பாட்டும் உங்களுக்கு வருமோ?'' ஆர்வமுடன் திருமண் பளிச்சிட்ட முகத்தால் பொலிந்த அந்த மேலை நாட்டுப் (திருக்குடந்தைப்) பாகவதர்களிடம் கேட்டார்.

''இல்லை எங்களுக்கு இவ்வளவே வரும்''

சொல்லிவிட்டுத் தீர்த்தமும், திருத்துழாயும் பெற்றுக் கொண்டு அவர்கள் போய்விட்டனர்.

தமிழ் சிறப்பிழந்திருந்த அந்த நாளில் தமிழால் பாடித் தொழுத இவர்கள் பிராமணர் அல்லாதாராகவே

இருத்தல் வேண்டும். குடந்தையைச் சேர்ந்தவரும் ஆகவேண்டும் இவர்களை யாதவர்களாகக் கோடலே பொருத்தம். ஏனெனில், யாதவர்களே முல்லை நாகரிகத் தொடக்க காலத்திலிருந்தே மாயோனைத் தொழுது வந்த ஆதி வைணவர்கள்.

அவ் வைணவர்கள் நிம்மதியாகப் போய்விட்டாலும் நாதமுனிக்கு மட்டும் அந்த அமைதி இல்லை. 'ஆராவமுதே! அதாவது, தெவிட்டாத தேனே!' என்று எவ்வளவு அழகாக இறைவன் அழைக்கப்பட்டிருக் கிறான்! —அவர் வியந்தார். முன்னம் கூறியபடி தமிழும் கற்றிருந்ததால், பொருளும் உணர்ந்து கொண்ட அவரது ரசனை இசை மட்டும் அறிந்தவர்களுடையதை விடச் சற்று அதிகமாகவே இருந்தது.

ஆராவமுதப் பதிகம் அவரை அரித்துக்கொண்டே இருந்தது. அதனை உட்கொண்ட ஆயிரத்தையும் எங்கே சென்று தேடுவது? பதிகம் திருக்குடந்தை எம்பெருமானைப் பற்றியதாக இருப்பதால், குடந்தைக்கே போகலாம் என்று புறப்பட்டுப் போனார். திருமுன்பில் பதிகம் பாடித் தொழுதுவிட்டு, பக்கத்தில் இருந்தவர் களை விசாரித்தார். ஆனால், அவர்கள் நம்மாழ்வார் சாரங்கபாணியைப் பாடிய அது திருவாய்மொழியில் அடங்குமென்று மட்டுமே கூறினர். திருவாய்மொழியை திருமங்கை மன்னர் மார்கழித் திருவிழாவின் போது அத்யயனம் செய்ய ஏற்பாடு செய்திருந்ததாய்ப் பெரி யோர் சொல்லக் கேட்ட துண்டு—என்பதொன்றே அவ்விடத்திய பட்டர்களிடமிருந்து அதிகப்படியாகக் கிடைத்த செய்தி. நேரே திருவரங்கத்திற்கு விரைந்தார்.

அங்கும் அவருக்கு உதவ வல்லார் ஒருவரும் இல்லை. திருமங்கை மன்னர் மறைந்த சில காலத்திற் குள்ளாகவே அங்கே திருவாய்மொழி அத்யயனம் நிறுத்தப்பட்டு விட்டது. வழக்கம் போல வேதங்கள் மட்டுமே

—3

ஓதப்பட்டன. அங்கிருந்த பெரியவர்கள் சிலர் நம்மாழ்வாரின் குருகூர் பாண்டி நாட்டுத் தாமிரபரணிக் கரையில் இருப்பதென்றும், அங்கே சென்று விசாரித்தால் அவர் நோக்கம் கைகூடலாம் என்றும் யோசனை கூறினர். நாதமுனி தெற்கு நோக்கி ஓடினார்.

## குருகூர் யாத்திரை [கி. பி. 944 - சோபகிருது]

பாலைவனமாய்க் காட்சியளித்த வட பாண்டியின் வறட்சி அவரை வாட்டி வருத்திற்று. கயத்தாறு வரையிலும் கூட அவர் வருத்தம் குறையவே இல்லை. ஆனால், கொஞ்ச தூரம் சென்றதுமே சாலை நெடுகவும் மரங்கள் அவருக்குக் குடை பிடிப்பதுபோல நெருக்கமாக நின்றன. பக்கத்தில் ஓடிய ஆற்றின் தெளிந்த நீர் அவர் களைப்பை வழிநெடுக ஆற்றி வந்தது. 'காவிரியோ!'-என அவரை அதிசயிக்கச் செய்த அது தென்பாண்டியின் உயிரோட்டமான தாமிரபரணிதான். பராங்குச நல்லூருக்குத் தெற்கே ஆற்றைக் கடந்ததுமே அவர் தேடிச் சென்ற குருகூரும் குறுகிற்று. அங்கே ஆதிப்பிரானைச் சேவித்துவிட்டு, ஆலயத்தில் எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் சடகோபரையும், அவர் அருளிய ஆயிரம் பாடல்களையும் பற்றிக் கேட்டார் நாதமுனி.

''ஆமாம். சடகோபராகிய நம்மாழ்வார் இதோ காணப்படும் திருப்புளியின் கீழ்த் தவமிருந்து அருமறையின் பொருளாக அருளிச் செய்த ஆயிரம் பாடல்கள் உண்டு. 'திருவாய்மொழி'-என்ற பிரபந்தமாக அவை வழங்கிவருகின்றன. ஆனால், அத்தனையும் எங்களுக்கு வராது. நம்மாழ்வாரின் சிஷ்ய பரம்பரையினரான பராங்குசதாசரே அவற்றை ஆலயத்தில் சேவிப்பதோடு மட்டுமின்றி, உபன்யாசமும் செய்து வருகிறார். அவரிடமே சென்று மேற்கொண்டு வேண்டியதைக் கேளுங்கள்''

சொல்லிவிட்டு அவர்கள் போய்விட்டனர். திருப்புளி ஆழ்வாரை வலம் வந்து, கீழிருந்த நம்மாழ்வாரையும் சேவித்துவிட்டு பராங்குசதாசர் மடத்தைத் தேடி கோளூருக்கு ஓடினார்.

பராங்குசதாசர்

பாணாழ்வாரைப் போல பராங்குச மடத்து வாயிலில் வினயமோடு காத்துக் கிடந்தவர் முன் பரமாசார்யர் போலத் தோற்றமளித்த ஒரு பெரியவர் கண்ணில் பட்டார். அவர்தான் ஆசார்ய பராங்குசதாசராக இருக்க வேண்டுமென்று எண்ணி நாதமுனி சடக்கென அவர் திருவடிகளில் வீழ்ந்து விட்டார்.

''என்ன வேண்டும்? நான் ஒரு சந்நியாசி தானே! உனக்குத் தெரியவில்லையா?' காலடியில் கிடந்த நாதமுனியைத் தூக்கி நிறுத்தி ஆசார்யர் கேட்டார். ''அடியேன் சொட்டைக் குடியிற் பிறந்த பிராமணன். சோணாட்டில் வடகரைக் கானாட்டு வீரநாராயண சதுர்வேதி மங்கலம் எங்கள் ஊர். அங்கே குடிகொண்ட மன்னனார் கோயிலில் திருப்பணி செய்து வருகிறேன். நாதமுனி என்று சொல்லுவார்கள். 'ஆராவமுதே'— என்று தொடங்கி பதினோரு பாடல்களை எங்கள் கோயிலுக்கு வந்த சிலர் பாடக் கேட்டேன். அந்தப் பதிகத்தில் சொல்லப்பட்ட ஆயிரத்தையும் தேடி, பலரையும் கேட்டு, சடகோபர் பிறந்த குருகூர் வந்தேன். அங்கே விசாரித்ததில் அவை தங்கள் ஒருவருக்கே தெரியும் என்று சொன்னார்கள். அந்த ஆயிரத்தையும் அடியேனுக்குப் பிட்சையாக அருள வேண்டும்!

ஆசாரியர்முன் நாதமுனி தாழ்ந்து பணிந்து, வேண்டி நின்றார்.

நாதமுனியின் உடம்பில் காணப்பட்ட நெளிவு-சுளிவுகளும், சொற்களில் இருந்த நய-விநயமும் பராங்குச

தாசரைக் கொள்ளை கொண்டன. "யார் கொலாம் இச் சொல்லின் செல்வன்? விரிஞ்சனோ! விடை வலானோ!"— என்று அனுமனைக் கண்ட இராம பிரானைப் போல அவர் அதிசயித்தார். நம்மாழ்வார் என்று ஞாயிறு மறைந்ததற்பின், ஐம்பது ஆண்டு காலம் நிர்வகித்து வந்த பெரிய பொறுப்பை மதுரகவிகள் அவரிடம் சுமத்திச் சென்றது போல, இப்போது பராங்குச தாசர் தாமும் இப்பணிக்கு இன்னொரு வாரிசைத் தேடிக் கொண்டிருந்தார். தகுந்த ஆள் கிடைக்காமல் அவர் மனம் நொடித்துப் போயிருந்தது. வாடிய பயிருக்கு வான மழை போல இன்று நாதமுனி எதிர்ப்பட்டார். ஆனால், தோற்றம் மட்டும் போதாதே! நாதமுனியின் தகுதிக்கு என்ன ருசு? சோதித்துத்தான் பார்க்க வேண்டும். அவர் மனம் அவரைப் பிடர்பிடித்து உந்திற்று.

"அப்பனே! உனது ஆர்வத்தை மெச்சினேன் ஆனால், இதில் என் செயல் ஆவது ஒன்றுமில்லை. நீயே முயற்சித்துத்தான் உன் எண்ணத்தை முடித்துக்கொள்ள வேண்டும். எங்கள் ஆசார்யர் ஆகிய மதுரகவிகள் எனக்கு உபதேசித்த மந்திரங்கள் பதினொன்று உண்டு. அவற்றைப் பன்னீராயிரம் முறை நீ உருச் செய்தால், நம்மாழ்வாரே தோன்றி திருவாய் மொழியை உனக்கு அருள்வார்".

இப்படிச் சொல்லி முடிப்பதற்குள் "அந்த மந்திரங் களையாவது அடியேனுக்கு அருள வேண்டும்" —நாத முனிகள் ஆவலுடன் கேட்டார்.

'சொல்கிறேன் கேள்" — ஆசார்யர் உடன் பாடத் தொடங்கினார்.

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுணப்
பண்ணி யப்பெரு மாயன்என் அப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக் கும்அமு தூறும்என் நாவுக்கே.

நாவி னால்நவிற்(று) இன்பம் எய்தினேன்;
மேவி னேன்அவன் பொன்னடி மெய்ம்மையே;
தேவுமற்(று) அறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே.

திரிதந் தாகிலும் தேவபி ரானுடை
கரிய கோலத் திருவுருக் காண்பெனான்;
பெரிய வண்குரு கூர்நகர் நம்பிக்காள்
உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே.

நன்மையால் மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவர் ஆதலின்,
அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான் சடகோ பன்என் நம்பியே.

நம்பி னேன்பிறர் நன்பொருள் தன்னையும்;
நம்பி னேன்மட வாரையும் முன்னெலாம்;
செம்பொன் மாடத் திருக்குருகூர் நம்பிக்கு
அன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே.

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் ஏத்த அருளினான்;
குன்ற மாடத் திருக்குரு கூர்நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே.

கண்டுகொண்டு என்னைக் காரிமா றப்பிறான்;
பண்டை வல்வினை பாற்றி அருளினான்;
எண்டி சையும்அறிய இயம்புகேன்,
ஒண்ட மிழ்ச்சட கோபன் அருளையே.

அருள்கொண் டாடும் அடியவர் இன்புற
அருளி னான்அவ் அருமறை யின்பொருள்;
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்
அருள்கண் டீர்இவ் உலகினில் மிக்கதே.

மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடியென் நெஞ்சுள் நிறுத்தினான்;
தக்கசீர்ச்சட கோபன்என் நம்பிக்காள்
புக்க காதல் அடிமைப்பயன் அன்றே.

பயனன் றாகிலும், பாங்கலர் ஆகிலும்,
செயல்நன் றாகத் திருத்திப் பணிகொள்வான்
குயில்நின்(று) ஆல்பொழில் சூழ்க்குரு கூர்நம்பி;
முயல்கின் றேனவன் மொய்கழற்(கு) அன்பையே.

அன்பன் தன்னை அடைந்தவர்கட் கெல்லாம்
அன்பன் தென்குரு கூர்நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்பு வார்பதி வைகுந்தம் காண்மினே.

கேட்டுக் கொண்டேயிருந்த நாதமுனிக்கு உடனே அவை பாடமாகிவிட்டன.

## கடுந்தவமும், பெரும்பயனும் (கி. பி. 945)

ஆம். அவற்றை ஒரு முறை உச்சரிக்கவே குறைந்தது ஐந்து நிமிடங்கள் ஆகலாம். பன்னீராயிரம் முறை உருச் செய்ய சுமார் அறுபதினாயிரம் நிமிடங்கள் அல்லது 1000 மணிகள் பிடிக்கும். இது சுமார் 40 நாட்களுக்குச் சமம். ஆனால், இதுவும் உண்டியும் நீரும் துறந்து, சிறுநீர்—மலம் கழிக்காமல், ஓய்வு—உறக்கம் என எதுவும் இன்றி தொடர்ச்சியாகச் செய்தால்தான்! இவற்றுள் எதையும் நாதமுனி எண்ணவே இல்லை பாடல்களை மட்டும் இரண்டொருமுறை எண்ணிப்

பார்த்தார்; விட்டுப் போன இடங்களை மாத்திரம் ஆசார்யரிடம் மீண்டும் கேட்டு உறுதி செய்துகொண்டார். உடனே திருப்புளியின் அடியில் நம்மாழ்வார் சன்னதிக்கு எதிரிலேயே பத்மாசனத்தில் அமர்ந்தார்

அவிதித விஷயாந் தரஸ் ஸடாரே
ருப நிஷதா முபகாந மாத்ர போகஹ
அபிச குணவசாத் ததேக சேஷீ
மதுரகவிர் ஹ்ருதயே மமாவி ரஸ்து.

ஆசார்ய மதுரகவிகளைத் துதித்துவிட்டு தம் வேள்வியைத் தொடங்கிவிட்டார். பதினோரு மந்திரங்களையும் அவர் திருவாய் உச்சரித்துக் கொண்டிருந்தது. அன்று முழுவதும் அத்தவத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்த பராங்குசதாசர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது. அவர் தேடிக் கொண்டிருந்தது கிடைக்க விருப்பது தொலைநோக்கு மிகுந்த அவர் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

இடைவிடாத சைக்கிள் ஓட்டம் என்றெல்லாம் இன்று கூறப்படுகிறதல்லவா? அதுபோல, இதுவும் ஒரு பந்தயம்தான். இரண்டொருநாட்கள் கழிந்துவிட்டன. நாதமுனியின் உடல் மெலிந்தாலும் உள்ளம் தளரவில்லை. இனி, இத்தவம் நீடித்தால் அவர் வைகுந்த பதவி அடைந்துவிடுவார். இப்படிக் கடுந்தவம் செய்த புத்தர் தமது தவத்தைக் கைவிட்டது உலகறிந்தது. இங்கே நாதமுனியைக் காப்பாற்றுவது எப்படி? இந்தப் பிரச்சினையில் பராங்குசதாசர் தவித்தார். நம்மாழ்வரே வந்து அழைத்தாலன்றி அவர் கண் திறக்கமாட்டார். ஓடி. அதற்கான ஏற்பாடுகளில் போர்க்கால அடிப்படையில் மும்முரமாக ஈடுபட்டார் ஆசார்யர்.

ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரமும் மதுரகவிகளின் நாட்களில் அவரால் நாடெங்கும் உபன்யசிக்கப் பட்டு வந்தவை. ஆனால், மதுரகவிகளுக்குப் பிறகு

குருகூரிலேயே பிரபந்த ஞானம் வற்றிப் போயிருக்க வேண்டும். இவை எழுத்திலிடப்பட்ட ஓலைகளை மட்டுமே பராங்குசதாசர் ஒரு பொக்கிஷம் போலப் பாதுகாத்து வந்தார். அவர் ஓதியும், உபன்யசித்தும் வந்தது திருவாய்மொழியை மட்டுந்தான். நம்மாழ்வாரின் மற்றைப் பிரபந்தங்கள் கூட சீந்துவாரற்றுக் கிடந்தன. திருவாசிரியத்தில் ஏழு பாடல்களும் (நம்மாழ்வார் பதிகங்களில் வழக்கமாகக் காணப்படும் பாடல்களின் எண்ணிக்கையான 11க்குக் குறைவானது), பெரிய திருவந்தாதியில் 87 பாடல்களும் (நூற்றுக்குக் குறைவான எண்) இருப்பது கொண்டு இவை சுவடிகளில் மட்டுமே வாழ்ந்ததையும், இந்தச் சுவடிகளில் சில செல்லரித்துப் போனதையும் ஊகிக்கிறோம் அது கிடக்க, இப்போது அந்த ஓலைகளைப் பிரித்துப் பார்த்து படியெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஆயினும், திருவாய்மொழிக்கு மட்டும் அவசரம், அவசரமாக ஒரு படியைத் தயாரித்துக்கொண்டு குருகூருக்கு ஓடிவந்தார் ஆசார்யர்.

''நாதமுனி! கண்ணைத் திறந்துபார். உனது கடுந்தவம் கண்டு அகமகிழ்ந்து உன் எதிரே வந்து நிற்கும் ஆழ்வாரைப் பார். அவரிடம் நீ தேடி வந்ததைக் கேள்''.

திருப்புளி வாகனத்தில் நம்மாழ்வாரை இருத்தி, ஆட்கள் சுமக்க, மேளதாளங்களோடு ஊர்வலமாக வந்து அவ்விடம் சேர்ந்த பராங்குசதாசர் அறைகூவி அழைத்தார்.

ஆரவாரத்தில் தவம் கலைந்தது. கண்விழித்தார் நாதமுனி. நம்மாழ்வாரை திருப்புளி வாகனத்திற் கண்டதுமே ஆழ்வாரை உயிரோடு கண்டதாகவே உணர்ச்சி பொங்கினார். விருட்டென்று எழுந்து தண்டனிட்டுக் கிடந்தார். பராங்குசதாசர் அவரைத் தூக்கி நிறுத்தி அவர் தவம் தொடங்கியதும் தாம் தயாரித்த

திருவாய் மொழியின் ஆயிரம் பாடல்களைத் தாங்கிய ஏடுகளை வழங்கி ஆசி கூறினார்.

''இன்று முதல் மதுரகவிகளையும், நம்மையும் போல, நம்மாழ்வாருக்கு நீயும் ஒரு ஞானப் புதல்வன். இந்த ஆயிரம் திவ்யப் பிரபந்தங்களும் உனக்கு ஆழ்வார் சார்பாக நாம் அளிக்கும் செல்வம். இவற்றைத் துய்த்து நீ நீர்நிறை ஊருணி (ஊர்க் கிணறு) போல உலகவர்க்கும் உதவுவாய். வேதாந்தத்தில் வைணவ வழியாகிய கடகச் சுருதியை இந்தத் திவ்வியப் பிரபந்தங்களின் உதவியோடு நாடெங்கும் பரப்புவதே நாம் விரும்பும் தட்சிணை. திருவரங்கமே இப்பணிக்கு ஏற்ற இடம்.''

பராங்குசதாசர் திருவாய் மலர்ந்தார்.

என்னதான் தமிழறிவும், வேதாந்த ஞானமும் நிரம்பியவராய் இருந்தாலும், நாலாயிரத்தை வேதாந்தத்தோடு இணைத்துக் காட்டுவதற்கு நாதமுனி அதிகம் ஆராய்ச்சி செய்தே ஆக வேண்டும். இதில் அவர் வாழ்க்கை முழுவதுமே கழிந்து விடலாம். ஆனால், நம்மாழ்வாரிடம் நேர்முகமாக அறிந்தது மட்டுமேயன்றி அதற்குப் பிறகும் 50 ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து அதைப் போதித்தும் வந்தவர் மதுரகவிகள். அவர்பால் அறிந்தவற்றோடு தாமே தம் சொந்த முயற்சியால் ஆராய்ந்து பராங்குசதாசர் மேம்படுத்தியிருந்தார். அந்த விரிவான விளக்கங்களை எல்லாம் பராங்குசதாசர் நாதமுனிக்கு பஞ்ச சம்ஸ்காரமும் செய்து வைத்து உணர்த்தினார். கூடவே, நம்மாழ்வார் வரலாற்றோடு மற்றைய ஆழ்வார்கள் வரலாற்றையும், நம்மாழ்வார் காலத்திலிருந்து வைணவத்தில் இடம் பெற்ற அஷ்டாங்க யோகத்தையும் பயிற்றுவித்தார். பராங்குசதாசரே நாத முனிக்கு யோக ரகஸ்ய ஞானம் அருளியதாக பெரிய திருமுடி அடைவு கூறுகின்றது. நாதமுனியின் இந்தப் பயிற்சிக்கு சுமார் ஆறு மாத காலமாவது பிடித்திருக்கலாம். கடைசியாக, ஏனைய ஆழ்வார்களின் அருளிச்

செயல்களையும், நம்மாழ்வாரின் மற்றைப் பிரபந்தங்களையுங் கூடத் தயாரித்து வேறு மூவாயிரம் பாடல்கள் கொண்ட ஏடுகளையும் ஆசார்ய பராங்குசதாசர் நாதமுனிக்கு அளித்தார். ஆயிரம் பாடல்களை மட்டுமே தேடி வந்தவருக்கு நாலாயிரம் பாடல்களும், உபய வேதாந்த ஞானமும், அஷ்டாங்க யோகமும் கிடைத்தன! கிடைத்தது எதிர்பார்த்ததை விடப் பல மடங்கு! எந்த யாத்திரையிலும் யாரும் இவ்வளவு பயன் பெற்றதாகத் தெரியவில்லை.

நாதமுனி ஆசார்ய பராங்குசதாசரிடம் பிரியா விடை பெற்று ஊருக்குப் புறப்பட்டார். தெற்கே வந்தபோது உலகப் பிரசித்தமான திருவரங்கம், திருமாலிருஞ்சோலை போன்ற இரண்டொரு தலங்களை மட்டுமே சேவித்துக் கொண்டு வந்தவர் இவர். ஆனால், இப்போதோ ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருப்பதிகள் அத்தனையும் தெரிந்திருந்தன. அவற்றுள் எல்லாம் இயன்றவற்றைச் சேவித்துச் செல்ல மனம் அவாவிற்று. தாமிரபரணிக் கரையிலிருந்த அட்ட திருப்பதிகள், சிரீவரமங்கல் நகர் (நாங்குனேரி) திருக்குறுங்குடி, மலைநாட்டு வண்பரிசாரம், திருவாட்டாறு (திருவட்டார்) அனந்தை ஆகிய திவ்விய தேசங்களுக்கெல்லாம் போய் திரும்பும் வழியில் தங்கால் (சிவகாசி) வில்லிபுத்தூர், கோட்டியூர், மெய்யம், அரங்கம் வழியாக மன்னனார் கோயிலுக்கு மீண்டார்.

## பாண்டி மண்டலத்தில் புரட்சி (கி. பி. 945)

நாதமுனிகள் குருகூருக்குச் சென்ற போது பாண்டி மண்டலம் சோழர் ஆட்சியின் கீழேயே இருந்தது. பராந்தகரின் நான்காம் மகனான உத்தமசீலி மதுரையில் சோழப் பரதிநிதியாக இருந்தான்.

நாதமுனிகள் குருகூரிலிருந்து திரும்பியதுமே பூகம்பம் வெடித்தது. பராந்தகரால் துரத்தப்பட்ட பாண்டியன் மூன்றாம் ராஜசிம்மனின் இளைய மைந்தனாகிய வீர பாண்டியன் எங்கோ ஒரு மறைவிடத்தில் கி. பி. 938-இல் முடி சூடிக்கொண்டு, அங்கிருந்து கி. பி. 945-ல் [36] கொரில்லாப்படை ஒன்றோடும் வெளிப்பட்டு, யாரும் எதிர்பாராத சமயத்தில் உத்தமசீலியைக்கொன்று, மதுரையையும் பிடித்துக் கொண்டான். அந்த நாட்டு மக்களெல்லாம் பாண்டியன் பக்கம் இருந்ததாலும், வடக்கே கி. பி. 943-லிருந்தே நிலவிய இராஷ்ரகூடர் தொல்லையாலும் [37] சோழர்களால் ஒன்றும் செய்யக்கூடவில்லை; சோணாடு துயரத்தில் ஆழ்ந்தது.

## நாலாயிரப் பாகுபாடு

ஆயினும், இவை வொன்றும் நாதமுனியைப் பாதிக்கவில்லை. நாலாயிரத்தை முறைப்படுத்துவதே அவருக்கு முதல் வேலையாகிவிட்டது. பழநாளில் வியாசர் வேதங்களின் திறத்தே இப்படிச் செய்ததுண்டு. அவரை முன்னிட்டுக் கொண்டு திவ்வியப்பிரபந்தத்தைத் திட்டம் செய்ய முனைந்தார்.

வேதங்களிற் சிறந்தது ரிக் வேதம். இதில் 'ரிக்' என்ற மந்திரங்கள் முதலில் சூக்திகளாகவும், இந்த சூக்திகள் பிறகு அனுவாகங்களாகவும், கடைசியாக அனுவாகங்கள் பத்து மண்டலங்களாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஒவ்வொரு பாடலையும் ஒரு மந்திரமாகக் கருதலாம். பெரும்பான்மைப் பாடல்கள் பப்பத்துப் பாடல்கள் கொண்ட தொகுதிகளாக இருப்பதோடல்லாமல், அவற்றிற்கு பதிகம் என்ற பெயரும் தமிழ்நாட்டில் வழக்குற்றுவிட்டது. இந்த பதிகங்கள் சூக்திகளுக்கு இணையானவை. சூக்திகள்

36. பாண்டியயர் வரலாறு, சேதுராமன், N., (1989) பக். 17

37. Early Cholas, Sethuraman, N p.

அனுவாகங்களாகத் தொகுக்கப்பட்டிருப்பது போல பதிகங்களையும் பப்பத்தாகத் தொகுக்கலாம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் திறத்தே ஒவ்வொவருவரும் செய்த பதிகங்களை தனித்தனித் தொகுதிகளாகக் கொள்வதே சிறந்தது. அனுவாகங்களுக்கு இணையான இத் தொகுதிகளை அந்தந்த ஆழ்வாரின் திருமொழியாகவும் நாதமுனி முடிவு செய்தார். இப்படியாக, பெரியாழ்வார் திருமொழி, நாச்சியார் (ஆண்டாள்) திருமொழி, பெருமாள் திருமொழி, பெரிய திருமொழி என்பன உருவாக்கப்பட்டன. நம்மாழ்வாரின் கட்டுக்கோப்பான 1102 பாடல்களுக்குத் திருவாய்மொழி என முன்பே பெயர் ஏற்பட்டிருந்தது.

பிரபந்தம் என்ற சொல் வடமொழியிற் போலவே தமிழிலும் தனி நூலை குறிக்கத் தலைப்பட்டுவிட்டிருந்தது. பாட்டியல்கள் சில இவ்வாறு வழங்கி இருந்தன. நாதமுனிக்குக் கிடைத்தவற்றுள் பிரபந்தங்களாகவே இருந்தவை பதினேழு (பார்க்கவும் அட்டவணை-1). ஒவ்வொருவரும் செய்த பதிகங்களின் தொகுதியை ஒரு பிரபந்தமாகக் கொள்ளலாம். காட்டாக, பெரியாழ்வாரின் பதிகங்கள் பெரியாழ்வார் திருமொழி என்ற பிரபந்தமாகும். இங்ஙனமாக ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் எல்லாம் திவ்வியப் பிரபந்த மாகின்றன. அடுத்து, மொத்தப்பாடல்களின் தொகை 3776-ஏ என்றாலும், இதைப் பேரெண்ணாகிய நாலாயிரமாகக் கருதலாயிற்று. இரண்டு திருமடல்களிலும் வரும் கண்ணிகளை தனிப் பாடல்களாகக் கொண்டால் தொகை சரியாக நாலாயிரம் —ஏ கூட ஆகிவிடுகின்றது. பாடல் தொகை நூலின் பெயரில் இடம்பெறுவது தமிழ் வழக்கு. பரிபாடல் எழுபது, புறநானூறு. கார் நாற்பது, களவழி நாற்பது, முத்தொள்ளாயிரம்... முதலியவற்றில் இவ். வழக்கைக் காணலாம். எனவே, ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கு நாலாயிர திவ்வியப்பிரபந்தம் எனப் பெயரிட்டார் நாதமுனி.

அடுத்தபடியாக, இவற்றை எப்படி முறைப் படுத்துவது? மீண்டும் வியாசரையே நினைந்தார். ஏனெனில், வேதங்களின் திறத்து அவருக்கும் இப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அவர் வேதங்களை நான்காய் வகுத்தார் அல்லவா? நாதமுனியிடம் இருந்த பாடல்களின் தொகையும் சுமார் நாலாயிரம். திவ்வியப் பிரபந்தத் தையும் ஆயிரம், ஆயிரம் கொண்ட நான்கு கூறுகளாக வகுக்க வேண்டும் என்று ஒரு எண்ணம் அவர் உள்ளத்தில் பளிச்சிட்டது.

கட்டுக்கோப்பான திருவாய்மொழி (1102) முன்பே ஒரு ஆயிரமாக இருந்தது. எனவே, இது ஒரு தனித் திருமுறை. திருமங்கை மன்னரின் அருளிச் செயல் களான ஆறு பிரபந்தங்களுள் ஆசுவகைத் திருமொழி ஓர் ஆயிரம் (1084). எனவே, இவையும் ஒரு திருமுறையாகத் தக்கன. நாலாயிரத்தில் பெரும்பாலன இசைப்பாக்களே யானாலும், இவற்றுள் இயல் தமிழ் வகை வெண்பாக் களும், ஆசிரியமும், பிறவுங்கூட உண்டு. இவை முதல் ஆழ்வார்கள் மூவரும் ஆளுக்கு ஒரு நூறாகச் செய்த- மூன்று அந்தாதிகளும், திருமிழிசைப்பிரானின் நான்முகன் திருவந்தாதியின் 96 வெண்பாக்களும், நம்மாழ்வார் அந்தாதியாகச்செய்த 87 வெண்பாக்களும்,திருவிருத்ததின் 100 கட்டளைக் கலித்துறைகளும், திருவாசிரியத்து ஏழு ஆசிரியப்பாக்களும், திருமங்கை மன்னரின் திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற மூன்று பிரபந்தங்களாக உள்ள மூன்று பாடல்களும் ஆக- உள்ள மொத்தம் 593 பாடல்களின் தொகுதி. திருமடல் களின் கண்ணிகளைத் தனிப் பாடல்களாகக் கொண்டால் 817 பாடல்களாகவும் கொள்ளலாம். இவை எல்லாம் ஆயிரம் ஆகாவிட்டாலும், ஒரு தனித் தொகுதியாகவே வைக்கப்படவேண்டும். எஞ்சியுள்ள (தொள்ளாயிரத்து தொண்ணூற்றேழு) பாடல்களில் திருமங்கை மன்னரின் 50 பாடல்கள் கொண்ட இரண்டு தாண்டகங்களும் இதே

இசைப்பா வகையினதாகிய பெரிய திருமொழியோடு வைக்கப்படுவதே நல்லது. ஏனைய தொள்ளாயிரத்து நாற்பத்தேழும் தாமே ஒரு திருமுறை ஆகின்றன. இவை அட்டவணை 1—இல் காட்டப்பட்டுள்ளன.

## அட்டவணை—1

## நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் அடங்கும் 24 பிரபந்தங்கள்

### முதல் ஆயிரம் (947)

1. திருப்பல்லாண்டு (12)
2. பெரியாழ்வார் திருமொழி (461)
3. திருப்பாவை (30)*
4. நாச்சியார் திருமொழி (143)
5. பெருமாள் திருமொழி (105)
6. திருச்சந்த விருத்தம் (120)*
7. திருமாலை (45)*
8. திருப்பள்ளியெழுச்சி (10)*
9. அமலனாதி பிரான் (10)
10. கண்ணினுள் சிறுத்தாம்பு (11)

### 2-ஆம் ஆயிரம் (1134)

11. பெரிய திருமொழி (1084)
12. திருக்குறுந்தாண்டவம் (20)*
13. திருநெடுந் தாண்டவம் (30)*

### இயற்பா (3-ஆம் ஆயிரம்-593)

14. முதல் திருவந்தாதி (100)*
15. இரண்டாம் திருவந்தாதி (100)*
16. மூன்றாம் திருவந்தாதி (100)*
17. நான்காம் (நான்முகன்)* திருவந்தாதி (96)
18. திருவிருத்தம் (100)*
19. திருவாசிரியம் (7)*
20. பெரிய திருவந்தாதி (87)*
21. திருவெழுக் கூற்றிருக்கை (1)*
22. சிறிய திருமடல் (1)*
23. பெரிய திருமடல் (1)*

### நான்காம் ஆயிரம் (1102)

24. திருவாய்மொழி (1102)*

குறிப்பு : உடுக்குறியிட்ட 17-உம் நாதமுனிகளுக்கு முன்பிருந்தே தனிப்பிரபந்தமாக வழங்கி வந்தன. திருப்பல்லாண்டு நாதமுனிகள் காலம் வரை ஒரு தனிப் பிரபந்தமாகக் கருதப்படவில்லை.

ஒரு வழியாக நான்காகத் தொகுப்பது எப்படி?— என்ற பிரச்னைக்குத் தீர்வு கிடைத்துவிட்டது. ஆனால் இவற்றை ஆசார்யர் முறைப்படுத்திய வரலாறு என்ன? திருவாய்மொழி உபநிஷத் சமாகமம் அல்லவா? உபநிஷதங்கள் வேதாந்தம் (அதாவது, வேதங்களின் கடைசிப் பகுதி) ஆகும். நம்மாழ்வாரும் ஆழ்வார்களுள் கடைசியாக வாழ்ந்தவர். அதுவேயுமன்றி, திருவாய்மொழியை ஆழ்வார் கடைசியிலேயே செய்தார். எனவே, இதனைச் சரம (= கடைசி)ப் பிரபந்தமாகக் கொள்வதே தக்கது. அடுத்து, நான்கு வேதங்களில் ஒவ்வொன்றிலும் மூன்று அடுக்குகள் உண்டு. மந்திரங்களின் தொகுதி முதல் பாகம். வசனங்களாய் அமைந்த ஏனையவற்றுள்

பிராமணம் மற்றும் ஆரண்யகங்கள் நடுப்பகுதி. உபநிஷதங்கள் இறுதியில் இருப்பது முன்பே கூறப்பட்டது இயற்பா வசன பாகமாகிய பிராமண ஆரண்யகங்களுக்கு இணையானதாக இவருக்குத் தோன்றிற்று. எனவே, இயற்பாவை மூன்றாம் திருமுறையாக அமைத்தார் ஆசார்யர்*

ஏனைய இசைப்பாடல்களுள் திருமங்கை மன்னருடையவே பிற்பட்டவை. மூன்று தொகுதிகளாக உள்ள இவற்றுள் இரண்டு தாண்டகங்களை ஒழிந்த பிற 1084 பாடல்களை ஒரு திருமொழியாகக் கொண்டு ஏனைத் திருமொழிகளினும் இது மிகப் பெரிதாகவும் இருப்பதால் இதற்கு பெரிய திருமொழி என்ற பெயரும் சூட்டினார். எஞ்சி நிற்கும் 947 பாடல்களும் பத்து பிரபந்தங்களாய்த் தாமே முன்னிடம் பெறுகின்றன.

அடுத்தது ஒவ்வொரு திருமுறையிலும் உள்ளே பிரபந்தங்கள் அமைய வேண்டும் முறை. இயற்பா தொகுதியில் முதலாழ்வார்கள் மற்றும் இவர்களின் சீடராகிய திருமழிசைப் பிரானும் அருளிய அந்தாதிகள் முன்னிடம் பெற வேண்டுதலைக் கூறத் தேவையில்லை. பெரும் புகழ் படைத்த பொய்கையாரின் அந்தாதி முதல்

---

* நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை முதன் முதல் 1856-இல் பதிப்பித்த முன்னூர் கூர்மாசாரியர் இயற்பாவை நான்காவது பகுதியாகவே வைத்திருந்தாராம். பிறகு இதனை 1908-இல் பதிப்பித்த காரப்பங்காடு கோபாலாசார்யரும் இங்ஙனமே செய்தார். இயற்பா மூன்றாவது பாகமாகவும், திருவாய்மொழி கடைசியிலும் வைக்கப்பட்டது B. ரத்தின நாயகர் அண்டு சன்ஸ் 1959-இல் வெளியிட்ட பதிப்பிலேயேயாம். திருவேங்கடத்தான் திருமன்றம் வெளியிட்ட நாலாயிரத் திவ்வியப் பிரபந்த முகவுரை பக். 28ல் இவ்வரலாறு கூறப்பட்டுள்ளது.

திருவந்தாதியாகத் தானே அமைந்து விட்டது. 'வையம் தகளியா' — எனத் தொடங்கும் இந்த முதல் திருவந்தாதியைப் போலவே, பூதத்தாழ்வாரின் அந்தாதி 'அன்பே தகளியா' எனத் தொடங்குவதாலும் இது இரண்டாம் திருவந்தாதி ஆயிற்று. பேயாரும், திருமழிசைப் பிரானும் ஆசார்ய சிஷ்ய முறையினர் ஆவதால் இவர்களின் அருளிச் செயல்கள் முறையே மூன்றாம் திருவந்தாதியும், நான்காம் திருவந்தாதியும் ஆக அமைக்கப்பட்டன. ஏனைய இயற்பாக்களில் நம்மாழ்வாரின் திருவிருத்தமே அளவில் பெரிதாய், 100 கட்டளைக் கலித்துறைகளால் அமைந்திருந்ததால், அதனை நுந்நூறு பாக்கள் கொண்ட முதல் நான்கு பிரபந்தங்களை அடுத்து வைத்தார் ஆசார்யர். நம்மாழ்வாரின் திருவிருத்தத்தை அடுத்து அவருடைய ஏனைய இயற்பா வகைப்பிரபந்தங்கள் ஆகிய திருவாசிரியம், வெண்பா வகைத் திருவந்தாதி ஆகியவற்றுள் ஆசிரியப்பாவே பழையதாவதால், திருவாசிரியம் முன் வைக்கப்பட்டது. வெண்பா வகை அந்தாதியில் 87 வெண்பாக்களே இருந்தாலும், அது ஆழ்வார்களுள் சிறந்தவரான நம்மாழ்வாரால் செய்யப்பட்டதால், பெரிய திருவந்தாதி எனப் பெயரிடப்பட்டது. திருமழிசைப் பிரானின் நான்காம் திருவந்தாதியை அடுத்தே வெண்பா வகையினதாகிய பெரிய திருவந்தாதியை வைத்துமிருக்கலாம். ஆயினும், ஆசார்யருக்கு ஏனோ அப்படிச் செய்யத் தோன்றவில்லை. எஞ்சியுள்ள திருமங்கை மன்னரின் திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய மூன்றும் பாடல் அளவாலும், வகையாலும் இதே முறையில் அமைந்து விடுகின்றன. ஆசிரிய வகை திருவெழுக்கூற்றிருக்கைக்கு முன் திருவாசிரியத்தை வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இங்கேயும் நாதமுனிகள் வேறுவழி சென்று விட்டார்.

முதலாயிரத்தில்தான் சிக்கல் அதிகம். ஆழ்வார்கள் அனைவருக்கும் பிற்பட்ட மதுரகவிகளின் பிரபந்தம் கடைசி இடம் பெற வேண்டும் என்று மட்டும் நாத முனிக்கு ஒரு எண்ணம் முற்கூட்டியே இருந்தது. வாத்சல்ய பக்தி செய்ததால் பெரியவராகிவிட்ட விஷ்ணு சித்தரை பெரியாழ்வார் எனவும், அவரின் அருளிச் செயல்களை 'பெரியாழ்வார் திருமொழி' எனவும் பெயரிட்டார். இவருடைய அருமைத் திருமகளாரான கோதை நாச்சியாரின் திருப்பாவையும், திருமொழியும் பெரியாழ்வார் திருமொழியுடன் சேர்த்தே வைக்கப்பட வேண்டும். பெருமாள் பட்டம் தரித்த சேரருள் ஒருவரான குலசேகரரின் திருமொழி 'பெருமாள் திருமொழி' என்ற பெயரோடு, அது ஒரு தொகைப் பிரபந்தமுமாவதால், இவ்வகைப் பெரியாழ்வார் மற்றும் நாச்சியார் திருமொழி களை அடுத்து வைக்கப்படவேண்டும். தனிப் பிரபந்த வகையினவாகிய திருச்சந்தவிருத்தம், திருப்பள்ளியெழுச்சி, திருமாலை ஆகிய மூன்றும் இவற்றின் பின் தாமே இடம் பெறுகின்றன. இவற்றுள் திருமழிசைப்பிரானின் திருச் சந்தவிருத்தம் காலம் பற்றியும், அளவு (120 பாடல்கள்) பற்றியும் முன்னிடம் பெறுகிறது. தொண்டரடிப்பொடி களின் இரண்டு பிரபந்தங்களும் அளவு பற்றி முறை செய்யப்பட்டன. திருப்பாணாழ்வாரின் பிரபந்தத்துக்கு தனிப் பெயர் இல்லை. பெயரில்லாதபோது தொடக்கத் தொடரையே பெயராகக் கொள்ளவதே சிறந்தது, அதனால்,பாணரின் பாதாதிகேசப் பதிகம் 'அமலனாதி பிரான்' என்ற தொடக்கத் தொடரால் பெயரிடப் பட்டது. இங்ஙனமே கடைசிப் பிரபந்தமாகிய மதுரகவி களின் பதிகம் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' எனப்பட்டது.

இனி, ஒவ்வொரு நூலும் மங்கல மொழியில் தொடங்க வேண்டும். பெரிய திருமந்திரத்திற்குப் பிரணவம் தொடக்கமாக இருப்பது போல. பெரியாழ் வாரின் திருப்பல்லாண்டு இத்தகையதே. ஏனெனில்,

பரத்வ நிரூபணம் செய்து அந்த ஆனந்தத்தில் அவர் இறைவனை மங்களாசாசனம் செய்தார். வைணவத்தின் வெற்றிச் சின்னமாகிய இதற்கே முதலிடம் கொடுத்தார் நாதமுனி. ஆயினும், இதை இவர் தனிப் பிரபந்தமாகக் கருதாமல், பெரியாழ்வார் திருமொழி முதல் பத்தின் முதல் பதிகமாகவே அமைத்தார். கோயிலொழுகுவில் நாலாயிர திவ்யபிரபந்த முறைமைக்கு கூறுப்படும் தத்துவத் தொடர்பான விளக்கங்கள் பிற்காலத்திய கற்பனையே என்பதற்கு ஐயமில்லை.

## பிரபந்தங்களின் இசையமைப்பு

பாடல்களின் அமைப்பு முறையை அடுத்து, தீர்மானிக்கப்பட வேண்டியது பண் அமைப்பு. நாலாயிரத்தில் இயற்பாவைத் தவிர ஏனையவெல்லாம் இசைப்பாடல்களே அல்லவா? திருவாய்மொழிக்கும், பெரிய திருமொழிக்கும்* முன்பே இசை அமைக்கப்பட்டிருந்தது. திருவாய்மொழி ஈட்டுரை (1-5-11)இல் மதுரகவிகள் இசைகாரராக சொல்லப்படுவதால் அவரே திருவாய்மொழிக்கு இசை வகுத்திருக்க வேண்டும் என்பது தெளிவு. பெரிய திருமொழிக்கு திருமங்கை மன்னரே கூட இசை அமைத்திருக்கலாம். எஞ்சிய பாடல்களுக்கு தேவகான முறையில் இசை அமைக்க வேண்டும் என்பது நாதமுனிகளின் ஆசை. மற்றவர்களையும் நாலாயிரத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்காக இசை ஞானம் மிக்க தம் மருமக்களை இதற்காகவென்று அழைத்துப் பேசினார்:

எனது அருமை மருமக்களே!

உங்களிடம் ஒரு முக்கிய வேலையை ஒப்படைக்க விரும்புகிறேன். அதற்காகவே இன்று உங்களை இங்கே அழைத்தேன்.

---

* மதுரைத் தமிழ்ச் சங்கம் பதிப்பித்த பெரிய திருமொழியில் பழைய தமிழ்ப் பண்கள் காணப்பட்டனவென மர்ரே அண்டு கம்பெனி பெரிய திருமொழிப் பதிப்பின் முகவுரையில் காணப்படுகிறது.

எம்பெருமான் யாருமோர் நிலையினன் என அறிவரி யவன். அவனுக்குப் பேரும் ஓர் உருவமும் உளதில்லை. அதாவது, அவன் பரப் பிரம்மம். இப்படிப் பட்ட வனுக்கு அல்லது பொருளுக்கு உருவம் சொல்ல வேண்டு மானால் பொதுவாக ஜோதி ரூபமானவன் என்று சொல் கிறோம். அவனுக்கு ஒலியில் வடிவமைக்க பிரணவ மந்திரத்தை உபயோகிக்கிறோம். ப்ரணவமான ஓங்கார சப்தம் வேதங்களிலேயே காணப்படுவது.

ஆனால், சாமான்யர்களுக்குப் பயன்படும் அர்ச்சாவ தார வழிபாட்டிற்கு வார்த்தைகளை ராகத்தில் சேர்க்க வேண்டும். இது நாதோபாசனை ஆவதை நீங்கள் அறிவீர்கள். ஆழ்வார்களின் பாடல்கள் எல்லாம் நாதோபாசனைக்காக அருளப்பட்டனவே. அவர்கள் தங்கள் அருளிச் செயல்களை இசை மாலை என்றே கூறி யுள்ளனர்.

'புதுவைப் பட்டன் உரைத்த தமிழ், இன்னிசை
மாலை' (1-5,11)
ஏரார் இன்னிசை மாலை பண்ணின்பம் (3-1,11)
வரப்பாடும் பத்தருள்ளார் (3-4,10)
எனப் பெரியாழ்வாரும்,
இன்னிசையால் சொன்ன மாலை (3,10)
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை
என ஆண்டாளும், (12, 10)
நல்லிசைத் தமிழ் மாலை (7,11)
எனக் குலசேகரப் பெருமாளும்,
பண்ணார் பாடல் (பெரிய திரு. 1-9,10)
பன்னிய பனுவல் பாடுவார் (2-7,10)
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை (2-8,10)
நல்ல இன்னிசை மாலை (3-5,10)
நல்லிசை மாலைகள் நாலிரண்டும், இரண்டும் (5-4,10)
பண்களகம் பயின்ற சீர்ப் பாடல் (6-9,10)

தமிழ் இன்னிசை மாலைகள் (8-9,10)
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை(9–2,10)
இன்னிசை மாலைகள் ஈரேழும் (10-7,14)

எனத் திருமங்கை மன்னரும்,

பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும்
ஆயிரம் (திருவாய்-1-5,11)
எண்ணில் சோர்வில் அந்தாதி ஆயிரத்துள்
இவையுமோர் பத்து இசையொடும்
பண்ணிற்பாட வல்லார் (திருவாய் 2-6,11)
பண்ணிற் பன்னிருநாமப் பாட்டு '' 2-7,11)
பண் தலையில் சொன்ன தமிழ் (திருவாய் 2-8,11)
செயிரில்சொல் இசைமாலை ,, 3–2,11
& 4-8,11)
பண்கொள் ஆயிரத் திப்பத்து (3-6,11)
ஆயிரத்துள் இவையுமோர் பத்து இசையொடும்(10–211)
(8-2,11)
பண்ணார் தமிழும் (9-8,11)
பண்ணார் பாடல் இன்கவிகள் (10-7,5)

என நம்மாழ்வாரும் பாடியுள்ளனர். 'பாசுரம்' என்ற சொல்லே சுரமோடு கூடிய பா எனப் பொருள்படுதலின் பாசுரம் இசைப்பாவே என்பதற்கு ஐயமில்லை.

இனி, இப்படி இவர்கள் அருளிச் செய்த பாடல்களுக்குத் தகுந்த ராகம் அமைக்க வேண்டுமல்லவா? திருவாய்மொழிக்கு மட்டும் ஆசார்ய மதுரகவிகள் முன்னமே ராகம் அமைத்துவிட்டிருக்கிறார். இவை இருபத்தொன்று. இப்படியே திருமங்கை ஆழ்வாரின் அருளிச் செயல்களில் பலவற்றிற்குங்கூட ராகங்கள் அனேகமாக ஆழ்வாராலேயே அமைக்கப்பட்டிருக்கலாம் போலத் தெரிகிறது. * மற்றவற்றுள் இயற்பாவை ஒழிந்த

* திருமங்கை மன்னர் திருவரங்கப் பெருங்கோயிலில் தாமே பாடியதாக/ கோயிலொழுவில் கூறப்படுவது நம்மை இப்படிக் கருதத் தூண்டுகிறது.

பிறவற்றிற்கு ராகங்கள் இல்லை. இந்தப் பணியை நாம் முடிக்கவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

உங்களுக்கு இன்னொரு முக்கிய விஷயத்தையும் இங்கே சொல்லியே ஆக வேண்டும். திருவாய்மொழிக்கும், திருமங்கை ஆழ்வாரின் பாடல்கள் பலவற்றிற்கும் அமைக்கப்பட்டிருக்கும் இராகங்கள் நீங்கள் அறிந்துள்ளவை அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. அவை தமிழ் நாட்டிற்கேஉரிய ஒரு பழைய முறையின. தென்னாட்டு மக்கள் இசைக் கருவிகளை உபயோகிப்பதிலும், பலவித நாட்டியங்களிலும் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் என்று இற்றைக்குச் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் (கி.பி.-4ஆம் நூற்றாண்டு) நாட்டிய சாஸ்திரம் செய்த பரத முனிவரே (14-வது அத்யாயம், 37-ஆம்சூத்திரம்) கூறியிருக்கிறார்.[37] பெருநாரை. பெருங்குருகு, சிற்றிசை, பேரிசை என்று எத்துணையோ சங்கீத கிரந்தங்களும் தமிழில் இருந்ததாகக் கேள்வி. கோவலன் கதையைக் கூறும் சிலப்பதிகாரத்தில் அக்காலத்திய சங்கீத நாட்டியங்கள் பற்றிய விவரங்கள் நிரம்ப உள்ளனவாம். இவற்றில் சொல்லப்படாத பழைய மரபுகள் 'வாய்ப்பியம்' என்பதொரு கிரந்தத்தில் உண்டு என்றும் சொல்கிறார்கள். சமீபத்தில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபப் பாண்டியர் காலத்தில் பாண்டிய நாட்டுச் சேறையைச் (சேற்றூர்) சேர்ந்த அறிவனார் என்பவர் 'பஞ்ச மரபு' என்று தமிழிசை பற்றிய ஒரு அரிய நூல் செய்துள்ளார். இவர் ஒரு வைணவரும் ஆவது பெரிதும் குறிப்பிடத்தக்கது. தமிழிசையில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்— என்று ஏழு ஸ்வரங்கள் சொல்லப்படுகின்றன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இந்த சப்த ஸ்வரங்களும் தமிழ் ஏழு நெட்டுயிர்களின் ஒலியே என்பதுதான்.

---

37. தென்னக இசையியல் (1984 பக் 221)

''ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும்இவ்
ஏழ் எழுத்தும் ஏழிசைக் குரிய''

என்பது திவாகரம். சங்கீதம் என்பது பெரும்பாலும் உயிரொலிகளை நீட்டுவதே அல்லவா? இந்த நுட்பம் இதே காலத்திய[38] மதங்க மகரிஷியால் செய்யப் பட்ட'பிருகத்தேசி'யில்கூட இல்லை.[39] ஆகவே, மனுஷ்ய கானம் என நாம் வழங்கும் தமிழ்ச் சங்கீத முறையை நீங்கள் அலட்சியம் செய்யக்கூடாது.

தமிழ் இராகங்கள் 103 என்று சொல்லப்படுகின்றன. ஆயினும், திருவாய்மொழியிலும், பெரிய திருமொழி யிலும் காணப்படுவன 28 மட்டுமே. இவற்றுள் 18 இரண்டிற்கும் பொது; திருவாய் மொழிக்குச் சிறப்பாக உரியன மூன்று.இங்ஙனமே பெரிய திருமொழியில் மட்டும் காணப்படுவன ஏழு. தமிழ் ராகங்களில் அடிப்படை யானது முல்லை யாழ். யாழ் என்பது ராகத்திற்குத் தமிழில் வழங்கிய பழம் பெயர்.[40] இவ் அடிப்படையான முல்லையாழ் வடமுறை அரிகாம்போதியே ஆகும்.[41] தமிழ், வடமுறை இரண்டினுடையவும் அடிப்படை ராகத்தில் முல்லைக் கடவுளான மாயோன் என்னும் நம் அரியே சம்பந்தப்பட்டிருப்பது ஒரு இனிய அம்சம். நாட்டியம் சைவத்திற்குச் சிறப்புடைமை ஆயினாற் போல, கானம் வைணவத்தின் உடைமை ஆகும். வேணு கானமே முதல் கானம். கருந்தெய்வமான கண்ணன் என்றும் குழலுடனேயே திரியும் முரளீதரன் அல்லவா?

---

38. History of South Indian Music, Ranga Ramanuja Iyengar. p—60
39. தென்னக இசையியல் (1984) பக். 226.
40. பஞ்ச மரபு, சுந்தரம், வீ. ப. க. உரை (1991) பக்.
41. பஞ்ச மரபு, சுந்தரம், வீ. ப. க.உரை (1991) பக் 125.

அரிகாம்போதியே அன்றி வேறு இராகங்களுக்கும் தமிழில் இணையான இராகங்கள் உண்டு. படுமலைப் பாலையைச் சங்கராபரணத்திற்கும், குறிஞ்சியை நடபைரவிக்கும் ஒப்பிடலாம்.[42]

இனி, நான் உங்களிடம் கேட்டுக் கொள்ளவிரும்புவது என்னவென்றால், முதலாயிரமாக நான் வகுத்துள்ளவற்றிற்கும், திருமங்கையாழ்வார் அருளிச் செயல்களில் இராகங்கள் நிர்ணயிக்கப்படாதவற்றிற்கும் நீங்கள் தேவகானத்தில் ஜாதி நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதுதான். க்ஷமிக்கவும்; ராகம் அமைக்க வேண்டும் என்பதுதான். 'ஜாதி' என்றாலும், 'ராகம்' என்றாலும் ஒன்றே.[43] 'ஜாதி' பரத முனிவர் காலத்தில் வழங்கிய பழைய பெயர். 'இராகம்' மதங்க ரிஷி காலத்திலிருந்து வழங்கி வருகின்றது. தமிழ் முறையிலும் முதலில் 'யாழ்' என்று வழங்கியதே பின்னாளில் 'பண்' என மாறிவிட்டதென்று சொல்லப்படுகிறது.[44] தேவகானம் ஆகிய தோடி பெரிய திருமொழியில் ஒரு பதிகத்திற்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், ராகக் கலப்பு முன்பே தோன்றிவிட்டது தெரிகின்றது. மதங்கரும் தக்க ராகம், நட்டராகம், காந்தார பஞ்சமம், சாதாரி, தேவார வர்த்தனி ஆகிய தமிழ்ப் பண்களைக் குறித்துள்ளார்.[45] ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற ஸ்வரப் பெயர்கள் பல்லவர் காலத்திலேயே வழக்குற்றுவிட்டன. குடுமியாமலைக் கல்வெட்டில்[46] இப்பெயர்கள் உண்டெனக் கேளவி ஸ்வரப் பெயர்களின் முதல் எழுத்துக்

42. பஞ்ச மரபு. சுந்தரம், வி. ப. கா., (1991) பக் 10
43. தென்னக இசையியல் (1984), பக். 225.
44 பஞ்ச மரபு, சுந்தரம், வீ. ப. கா. (1991) பக்.
45. கருநாடக சங்கீதம் -ஆதி மும்மூர்த்திகள், அருணாசலம். மு. பக் 35.
46. S I.I.vol. 12. no. 16 (குடுமியாமலை கல்வெட்டு).

களான ச, ரி, க, ம, ப, த, நி என்பவற்றை இச் ஸ்வரங்களை சாகித்யம் செய்ய இப்போது நாம் பயன்படுத்தி வருகிறோம் அல்லவா? இவ்வடமுறை தமிழிசையிலும் புகுந்துவிட்டதை பஞ்சமரபின் 30-ஆம் சூத்திரத்தில் காண்கிறோம்.

குரலே, துத்தம், கைக்கிளை, உழையே,
இளியே, விளரி, தாரம் — என்றிவ்
எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே,
சவ்வும், ரிவ்வும், கவ்வும், மவ்வும்
பவ்வும், தவ்வும், நிவ்வும்—என்றிவை
ஏழும் அவற்றின் எழுத்தும் ஆகும்

என்று திவாகர நிகண்டும் அடுத்து இதனை இயம்பிற்று. எவையெல்லாம் சிறந்தனவோ அவற்றை எல்லாம் ஏற்றுக் கொள்வதே அறிவுடைமை ஆகும். தமிழ் நூல்களான பஞ்சமரபும், திவாகரமும் புதிதாய் ஒரு நிருபதுங்க ராகம் பற்றியும் பேசுகின்றன.

வண்ணம் (colour) போல ஓசைக்கும் மூன்று பரிமாணங்கள் உண்டு. 'உரக்கப் பேசு' — என்னும் தொடரிற் போந்த உரப்பு ஆகிய சத்தம் ஒன்று. ஆனால், அது பேச்சுக்கே முக்கியமானது. இசையில் 'ஸ்ருதி' என்பதே உயிர்நாடி. ஆண் குரலும், பெண் குரலும் வேறுபடுவது ஸ்ருதியிலேயே என்பதை நீங்கள் அறிவீர்கள். இனி, பல ஸ்ருதிகள் தொடரும்போது ஒவ்வொன்றையும் எவ்வளவு நேரம் ஒலிக்க வேண்டும் — என்பதும் முக்கியமே அல்லவா? இந்த அளவுக் கட்டுப்பாட்டைத்தான் 'லயம்' என்கிறோம். தாளத்தால் இந்தக் கட்டுப்பாடு செய்யப் படுவதால், இதற்கு தாளக் கட்டு என்றும் பெயர் உண்டு. எனவே, ஸ்ருதி அலகியலும், 'லயம்' அளவியலும் பற்றியன. 'ஸ்ருதி மாதா, லய பிதா' என்ற தொடரில் ஸ்ருதி லயங்களின் சிறப்பு ரத்தினைச் சுருக்கமாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

சங்கீதத்தில் ஜாதிகளைப் போல தாளத்திலும் ஜாதிகள் உண்டு. தொடக்கத்தில் நான்கு தாள ஜாதிகளே இருந்தன — திஸ்ரம், சதுஸ்ரம், மிஸ்ரம், கண்டம் என பிறகு, பல்லவச் சக்கரவர்த்தி மகேந்திரவர்மர் சங்கீரண ஜாதி என ஐந்தாவதாக ஒன்றைக் கண்டுபிடித்தார். இந்தப் புதுவகைத் தாள ஜாதி தொண்டை நாட்டுத் திருநீர்மலையை அடுத்த பல்லவபுரக் குகைக் கோயிலில் மகேந்திரன் செய்த கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதாம். துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏக தாளம் என இன்னொரு ஏழு வகையாகவும் தாளம் பகுக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். பதிற்றுப் பத்தில் தூக்கு எனவும், சிலம்பில் பாணி, தூக்கு என இரண்டு விதமாகவும், திருவாய்மொழியில் ஒத்து எனவும் தாளம் தமிழில் பெயரிடப்பட்டுள்ளது. உதாரணமாக, செந்தூக்கு, வஞ்சித்தூக்கு என்பன பதிற்றுப் பத்தில் சில பாடல்களின் தாளப் பெயர்கள். தூக்குகள் ஏழு வகை என ஒரு சூத்திரம் சொல்லுகின்றது. பரிபாடலில் தாளம் காணப்படாததன் பொருள் விளங்கவில்லை. திருவாய் மொழியிலும், பெரிய திருமொழியிலுமாக மொத்தம் ஏழு தாள வகைகள் உண்டு—ஒன்பது ஒத்து, ஏழொத்து, நடையொத்து, இடையொத்து, முடுகின இடையொத்து, மிடை ஒத்து, மழு முடித்தல் என. நடை ஒத்துக்கும், மிடை ஒத்துக்கும் இடைப்பட்டது இடையொத்து. மிடையொத்து என்பது முன்னம் சொன்ன சங்கீரண ஜாதியேதான்[47]. இவற்றுள் ஏழொத்தே ஆதிதாளம் போல மிகுதியாய் வழங்குவது. தமிழர் தாள வகைகள் 108 எனப்படுகின்றன.

நீங்கள் ராகங்களை (தேவ கான முறையில்) நிர்ணயிக்கும் போது, கூடவே தாளங்களையும் முடிவு செய்ய வேண்டும் அல்லவா? அதை நினைவூட்டவே, தாளங்களை

---

47. வாத்திய மரபு (1987) பக் 384

யும் பற்றிச் சிறிது சொன்னேன், அவை உங்களுக்குத் தெரிந்தே இருந்தாலும்.

இனி, நீங்கள் திவ்வியப் பிரபந்தப் பாடல்களுக்கு ராக, தாளங்களை மிகுந்த கவனத்தோடு, ஆனால், எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக, அறுதி செய்து தரவேண்டும்.'' அவர் வேண்டிக் கொண்டார், அவர்களும் அரும்பாடுபட்டு அந்தப் பணியை விரைவில் முடித்துத் தந்தனர்.

பின்னாளில் தேவாரப் பாடல்களை முறைப்படுத்திய தம்பியாண்டார் நம்பிகள் ஒவ்வொரு நாயனாருடைய அருளிச் செயல்களையும் பண் முறையில் முறைப்படுத்தினார். பழந்தமிழ்ப் பரிபாடலிலும் இம்முறையே பின் பற்றப்பட்டிருப்பது இங்கே எண்ணத் தக்கது. ஆனால், ஆழ்வார்களில் பெரும்பான்மையினர் அப்பர், சம்பந்தர், சுந்தரர்களைப் போல பாடல்களை ஆயிரக்கணக்கில் செய்து குவிக்கவில்லை. மேலும், இவர்களின் அருளிச் செயல்களில் செம்பாகம் தனிப் பிரபந்தங்களாகவும் உள்ளன. தனிப் பதிகங்களின் தொகுதியாகக் கருதிக் கொள்ளவும் ஏற்ற திருவாய்மொழியுங்கூட ஒரு அந்தாதி யாகப் போய் விட்டதால் பிரபந்தமாய் விட்டது! நாத முனிகள் பண் முறையைப் பின்பற்றாமல் போனதற்கு இவை உண்மையான காரணம் ஆகாமற் போனாலும், பண்முறைக்கு திவ்வியப் பிரபந்தம் ஏற்றதாய் இல்லை என்பதை மட்டுமே இங்கு நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

## அட்டவணை—2

# நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திலுள்ள தமிழ்ப் பண்கள்

### பொதுப் பண்கள்—18

| | |
|---|---|
| 1. இந்தளம் | 10. நாட்டம் |
| 2. காந்தாரம் | 11. பஞ்சமம் |
| 3. (சீ)காமரம் | 12. பழஞ்சுரம் |
| 4. குறிஞ்சி | 13. பழந்தக்கராகம் |
| 5. கொல்லி | 14. பழம் பஞ்சுரம் |
| 6. தக்கராகம் | 15. பாலை யாழ் |
| 7. தக்கேசி | 16. புறநீர்மை |
| 8. நட்டபாடை | 17. முதிர்ந்த குறிஞ்சி |
| 9. நட்டராகம் | 18. வியந்தம் |

### பெரிய திருமொழியில் மட்டும்—7

| | |
|---|---|
| 19. அந்தாளி | 23. பஞ்சுரம் |
| 20. கவ்வாணம் | 24. பியந்தை |
| 21. குறண்டி | 25. வியாழக் குறிஞ்சி |
| 22. நைவளம் | |

### திருவாய்மொழியில் மட்டும்—3

| | |
|---|---|
| 26. கவுசிகம் | 28. முதிர்ந்த இந்தளம் |
| 27. செருந்தி | |

குறிப்பு:—

1. 1–25 பெரிய திருமொழிப் பண்கள்.

2. 1-18 & 26-28 ஆகிய 21-உம் திருவாய்மொழியின.

3. தேவாரத்தின் 23 பண்களுள் காந்தார பஞ்சமம், கொல்லிக் கவ்வாணம்; சாதாரி, செந்துருத்தி. செவ்வழி, பியந்தைக் காந்தாரம், மேகராகக் குறிஞ்சி-என்ற ஏழும் பிரபந்தத்தில் இல்லை.

4. திருவாய்மொழிப் பண்களுக்கு இடையொத்து, நடையொத்து, ஏழொத்து, ஒன்பதொத்து என நான்கு வகைத் தாளங்கள் கொள்ளப்பட்டன.

## அட்டவணை 3—நாதமுனியின் மருமக்கள் அமைத்த தேவகானப் பண்கள்

1. அசாவேரி
2. அடாணா
3. அபரூப
4. அரிகாம்போதி
5. ஆனந்தபைரவி
6. ஆரபி
7. உசேனி
8. கண்ட
9. கல்யாணி
10. காநடா
11. காபி
12. காம்போதி
13. குண்டக்ரியா
14. கேதாரகவுளம்
15. கேதாரம்
16. கவுளிபந்து
17. சங்கராபரணம்
18. சகானா
19. சவுராஷ்ட்ரா
20. சாரங்கா
21. சாவேரி
22. சுருட்டி
23. செஞ்சுருட்டி
24. சைந்தவி
25. சோகவராளி
26. தர்பார்
27. தன்யாசி
28. துவிஜாவந்தி
29. தேசிய
30. தோடி
31. நாட்டை
32. நாதநாமக்கிரியா
33. நீலாம்பரி
34. பந்துவராளி
35. பரசு
36. பியாகடை
37. பில்கரி
38. புன்னக வராளி
39. பூபாளம்
40. பைரவி
41. மத்யமாவதி
42. மாஞ்சி
43. முகாரி
44. மோகனா
45. யதுகுல காம்போதி
46. யமுனா கல்யாணி
47. வசந்தா
48. வராளி
49. ஶ்ரீராகம்.

குறிப்பு : தர்பார் பழமையானதாகத் தோன்றவில்லை.

தாளங்கள் :

1. அடதாளம். 2 ஆதிதாளம், 3. ரூபக தாளம்,
4. திரிபுடை தாளம் 5. ஜம்பை தாள்ம்.

## திவ்ய தேசங்கள்

நாலாயிரத்தை இங்ஙனம் செம்மையாகப் பாகுபாடு செய்து கொண்டபின், அதன் பொருளிலும் நாதமுனி களின் நாட்டம் சென்றது. தெய்வங்களுள் விநாயகரும், பக்தி வரலாறுகளில் துருவனுடையதும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் காணப்படாததைக் கண்டு அவர் வியந்தார். ஆழ்வார்களால் வாழ்த்தி வணங்கப்பட்ட திருப்பதிகளை 'திவ்ய தேசங்கள்' எனவும், இப்படிப் பாடி வாழ்த்துவதை 'மங்களாசாசனம்' எனவும் அவர் ஆசிரமம் குறிப்பிட்டது. நூற்றெட்டு திவ்ய தேசங் களைக் கணக்கிட்டார்கள். இவற்றுள் பரமபதமும், பாற்கடலும் மண்ணுலகிற்கு அப்பாற்பட்டன. இவ்வுலக திவ்ய தேசங்கள் 106-ல் வதரி, பிரிதி, கண்டங்கடிநகர், சாளக்கிராமம், நைமிசாரண்யம், அயோத்தி, ஆய்ப்பாடி (கோகுலம்), வடதுமதுரை, துவாரகை, சிங்கவேள்குன்றம் (அகோபிலம்) என்ற பத்தும் வடநாட்டின. தமிழ்நாட்டு 96 திவ்ய தேசங்களுள் மலைநாட்டின 13-ம், பாண்டி நாட்டின 18-ம், சோணாட்டின 40-ம், நடுநாட்டின 2-ம், தொண்டை நாட்டின 23-ம் ஆகும். தொண்டை நாட்டின வற்றுள் திருவேங்கடமும் அடங்கும். இவற்றுள் நம்மாழ் வாரையே தெய்வமாகக் கொண்டிருந்த மதுரகவிகளைத் தவிர ஏனைப் பதினொருவரால் பாடப்பட்ட திவ்ய தேசம் திருவரங்கம் ஒன்றே. திருவேங்கடத்தைப் பாடா தவர் அரங்கனை மட்டுமே பாடிய தொண்டரடிப் பொடிகள் ஒருவரே. திருக்குடந்தை எழுவரால் பாடப் பெற்றது. திருமாலிருஞ்சோலையை அறுவர் பாடியுள் ளனர். ஐவரால் பாடப்பட்டன திருக்கண்ணபுரமும், திருக்கோட்டியூரும். இவையேயன்றி நாங்கூர்நாடு 11 திவ்ய தேசங்களைக் கொண்டது. தாமிரபரணிக் கரையில் திருவழுதி வளநாட்டின 8 திவ்ய தேசங்கள். பாண்டி நாட்டுப் பதினெண் பதிகளுள் ஒன்பது நம்மாழ்வாரால் புதிதாகப் பாடப்பட்டன. அது பற்றி, அவை நவ

திருப்பதிகள் எனப்பட்டன. இங்ஙனமே இன்னொரு எட்டு மலை நாட்டினவற்றுள்ளும் உண்டு. காஞ்சியில் 14 திவ்ய தேசங்கள். இவ்விதமான ஆராய்ச்சிகளை எல்லாம் திவ்ய தேச யாத்திரைக்காக அவர்கள் முற் கூட்டிச் செய்துகொண்டனர்.

# 2. கோயில் கொண்டார்

## அரங்கத்தில் தொடக்க விழா (கி. பி. 946)

கீழையகத்தாழ்வானும், மேலையகத்தாழ்வானும் இசை அமைக்க மட்டுமே நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் இறங்கினர். ஆயினும் அந்த முயற்சியில் போகப் போக இவர்கள் பிரபந்தங்களிலேயே மூழ்கி விட்டனர். நாத முனிகள் இவர்களுக்கு இவற்றைப் பொருளோடு முறையாகப் பாடம் சொன்னார். இப்போது நாதமுனியின் குடும்பம் முழுவதுமே 'நாலாயிரக் குடும்பம்' ஆக மாறி விட்டது. இவற்றை நாடெங்கிலும் பரப்ப வேண்டும், என்ன வழி? எப்படி, எங்கே தொடங்குவது?

நாலாயிரம் மக்கள் மத்தியில் மறைந்து விட்டாலும், திருவரங்கம் மட்டும் நிலவுலக வைகுந்தமாக அவர்கள் நினைவில் நீங்காதிருந்தது. ஆசார்ய பராங்குசதாசர் வேறே திருவரங்கத்தில் அது நிலைபெற வேண்டும் என்று ஆணையிட்டிருந்தார். திவ்வியப் பிரபந்தப் பாகுபாடும், பண் அமைப்பும் நிறைவு பெற்றதுமே மார்கழி அத்யயன விழாக் காலம் வந்தது. கோஷ்டியுடன் நேரே திருவரங்கத்திற்கு நடையைக் கட்டினார் நாதமுனி.

ஒவ்வொரு நாளும் திருவரங்கப் பெருங்கோயிலில் நடைபெற்ற வேத அத்யயனங்களில் நாதமுனி கோஷ்டியினர் கலந்து கொண்டனர். வேத அத்யயனம் முடிந்ததும், இந்தக் கோஷ்டி தனியாக திருவாய்மொழி பாடிற்று. கோயிலில் பாடியது மட்டுமேயன்றி,

பெருமாள் ஊர்வலம் வந்த போதும் இவர்கள் பஜனை செய்த வண்ணம் பின் தொடர்ந்தனர். ஊர்ப் பெரியவர்களின் கவனத்தை அலங்காரமாகச் சென்ற பெருமாளை விடவும் பன்னிரண்டு நாமங்களோடும் பளிச்சிட்ட பஜனை கோஷ்டியே கவர்ந்தது. அநேகர் முன்வந்து அவர்களின் காலில் விழுந்து வணங்கி காணிக்கை செலுத்தினர்.

## பாணரோடு அரங்கத்தில் (கி. பி. 946)

ஏகாதசி இரவில் கண் விழித்திருக்க வேண்டும் அல்லவா? அதற்குப் பல பொழுது போக்குச் சாதனங்கள் அன்று இயங்கின. நாதமுனிகளும் ஒரு உபன்யாசம் செய்யத் தொடங்கினார். அவர் பேச்சைக் கேட்போம்.

பிராம்ம ணோத்தமர்களே! பாகவதோத்தமர்களே! மற்றும் உள்ள ஆஸ்திகப் பெருமக்களே!

இந்தப் புண்ணிய காலத்தில் நாம் ஹரிவம்சம் பற்றியே பேச வேண்டும்.

''பரித்ராணய ஸாதுநாம்; விநாஸாய ச துஷ்கிருதாம்
தர்மஸம் ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுக யுக''

என்ற சுலோகத்தில் துஷ்ட நிக்கிரஹ, சிஷ்ட பரிபாலனார்த்தமாகப் பல பிறப்புக்கள் எடுப்பேன் என்றான் கீதாசார்யன். இப்படி அவன் எடுத்த அவதாரங்கள் பத்தைப் பற்றியும் பல முறையும் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஸ்ரீயப்பதியான பகவான் உலக நன்மைக்காக வேறு வகையிலுங் கூட திருவிளையாடல் புரிந்துள்ளான். இங்குள்ள சிலருக்கு இது தெரிந்திருக்கலாம்; ஆனால், சரியாகப் புரிநதிருக்காது. ஸ்ரீவைஷ்ணவ

சரிதத்தில் இந்த இரண்டாம் கட்ட அவதாரிகை ஆழ்வார்கள் அவதாரம் பற்றியது. இவர்களும் பதின்மர். உலக இன்பங்களின் ஆகர்ஷண சக்தி நம்மை எல்லாம் மேலும், மேலும் லவுகீகப் பக்கமே இழுப்பதாயிருக்க, இந்தப் பத்து பேர் மட்டும் பணம், பட்டம், பதவி, புகழ், புண்ணியம் என்று பித்தம் பிடித்துத் திரியாமல்,

''உண்ணுஞ்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலை-
எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள்
நீர்மல்கி''

எப்போதும் ஈஸ்வர சிந்தனையாகவே இருந்தனர். ஏன், இந்த வக்கிர புத்தி இவர்களுக்கு மட்டும்? மற்றவர்களுக்கெல்லாம் இப்படி வாழ்ந்து காட்டவே இவர்கள் பிறப்பெடுத்திருக்க வேண்டும்! எனில், இந்த அவதாரிகைக்குக் காரணம் என்ன? நாம் சிந்திக்க வேண்டும்.

நம்முடையது வைதீக மதம். வேதங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இப்படிச் சொல்கிறோம். வேதங்கள் அனாதியானவை. அனாதி என்றால் ஆதி, அதாவது தொடக்கம், இல்லாதது என்பதாம். ஒருவரால் படைக்கப்படாதது என்பது பொருள். இப்படி ஒருவரால் படைக்கப்படாததால் இவற்றைச் 'ஸ்ருதி'— என்று வடமொழியிற் கூறுவர்.

சிருஷ்டிக்கப்படாவிட்டாலும், இவற்றிற்கு அடிக்கடி ஆபத்துக்கள் நேர்ந்ததுண்டு. ஒரு சமயம் எதனாலோ நாடெங்கும் வேதப் பயிற்சி குன்றி, இறுதியில் வேதமறிந்த பிராம்மணர்களே இல்லாமல் போயினர். அப்போது பகவானே ஹம்ச ரூபமாய் வந்து தோன்றி வேதங்களை மீண்டும் கற்றுக் கொடுத்தாராம். இப்படி மகாபாரதம் சாந்தி பர்வத்துள் கூறப்பட்டுள்ளது. இதனையே,

''புள்ள தாகி வேத நான்கும் ஓதினாய்!''
(திருச்சந்த விருத்தம்-49) எனத் திருமிழிசைப் பிரானும்,

''துன்னிய பேரிருள் சூழ்ந்து உலகை மூட
மன்னிய நான்மறை முற்றும் மறைந்திட
பின்இவ் உலகினில் பேரிருள் நீங்க அவன்
அன்னம் அதானான் — அச்சோ! அச்சோ!!''

(பெரியா. தி.106) என விஷ்ணுசித்தப் பெருமானும்,

''துன்னி மண்ணும் விண்ணாடும் தோன்றா(து)
இருளாய் மூடியநாள்
அன்னமாகி அருமறைகள் அருளிச் செய்த அமலன்''
(பெரிய. தி. 5–1,9) எனவும்,

''முன்னிவ் ஏழுலகு உணர்வின்றி இருள்மிக உம்பர்கள்
தொழுது ஏத்த
அன்னம் அதாகி அன்(று) அருமறை பயந்தவன்''
(பெரிய. தி 5-3,8) எனவும்,

''மன்னுமா நிலனும், மலைகளும், கடலும், வானமும்,
தானவர் உலகும்
துன்னுமா இருளாய்த் துளங்கொளி சுருங்கித்
தொல்லைநான் மறைகளும் மறைய
பின்னும் வானவர்க்கும், முனிவர்க்கும் நல்கிப்
பிறங்கிருள் நிறங்கெட ஒருநாள்
அன்னமாய் அன்றங்கு அருமறை பயந்தான்
அரங்கமாநகர் அமர்ந்தானே.

(பெரிய. திரு. 5–7, 3) எனவும்,

''முன் உலகங்கள் ஏழும் இருள்மண்டி உண்ண
முதலோடு வீடும் அறியாது,
என்இது வந்தது? என இமையோர் திகைப்ப
எழில்வேதம் இன்றி மறைய,
பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி
இருள் தீர்ந்(து) இவ்வையம் மகிழ
அன்னம் அதாய் இருந்(து) அங்கு அறநூல் உரைத்த
அதுநம்மை ஆளும் அரசே.

எனவும் (பெரிய. தி.11-4, 8) திருமங்கை மன்னரும் ஹம்ஸாவதாரத்தைப் பரவியுள்ளனர். ஹம்ஸவதாரத்தைப் பழைய தமிழ்க் கிரந்தமாகிய பரிபாடலில் கடுவன் இளவெயினனார் என்ற புலவர்கூடக் குறிப்பிட்டுள்ளாராம்.

இன்னொரு சமயம், மது கைடவர்கள் வேதங்களை மறைத்தபோது பகவான் மத்ஸ்யாவதாரம் எடுத்து அவர்களை அழித்து வேதங்களை வெளிப்படுத்தினார்.

காய்ந்திருளை மாற்றிக் கதிரிலகு மாமணிகள்
ஏய்ந்த பணக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப—வாய்ந்த
மதுகை டவரும் வயிறுருகி மாண்டார்;
அதுகே டவர்க்கு இறுதி யாங்கு.

(முன்.திரு. 66)என மச்சாவதாரத்தைப் பேயாழ்வார் குறித்தனர்.இவரே மச்சாவதாரத்தை குறிப்பிட்ட முதல் தமிழர்.

வேதங்களை வெளிப்படுத்தியதைச் சிலர் ஹயக்ரீவ அவதாரமாகவும் கூறுவதுண்டு.

''வசையில் நான்மறை கெடுத்தவம் மலரயற் கருளிமுன்
பரிமுகமாய்
இசைகொள் வேதநூல் என்றிவை பயந்தவனே!''

(பெரிய. தி. 5-3, 2) எனவும்,

''முன்னிவ் உலகேழும் இருள்மண்டி யுண்ண
முனிவரோடு தானவர்கள் திகைப்ப வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளை எல்லாம்
பரிமுகமாய் அருளியஎம் பரமன் காண்மின்''

(பெரிய தி. 7-8, 2) எனவும் திருமங்கை மன்னரும் இதனைக் குறிப்பிட்டார். வேதங்கள் எழுதப்படாதவை ஆதலால், வேதங்களை மறைத்த கதையில் நாம் பிராமணர்கள் சிறைப்படுத்தப்பட்டதையே ஊகிக்க வேண்டும்.

மூன்றாவதாகவும் ஒரு விபத்து ஏற்பட்டது. இந்தத் தடவை வன்முறைகளில் நாட்டம் கொண்ட அசுர, ராட்சதர்களால் ஆகாமல் அகிம்சையையும் நல்லொழுக்கத்தையுமே வற்புறுத்திய சாமான்யர்களாலேயே இது உண்டாயிற்று. இவர்கள் ஜைன, பவுத்தர்கள். சத்தியம், அகிம்சை முதலானவற்றை இவர்கள் வற்புறுத்தியது வரவேற்கத் தக்கதே யானாலும், வேதங்களையும், வேத வித்தாகிய ஈஸ்வரனையும் இவர்கள் மறுத்ததுதான் விரும்பத் தக்கதா யில்லை. இவர்களால் வைதீக வழக்கு, வடக்கில் போலவே, தெற்கேயும் தேயத் தலைப்பட்டது. இப்படித் தேய்ந்த தெய்வ நம்பிக்கையை மீட்டுக் கொடுத்தவர்களே அடியேன் முன்னம் குறிப்பிட்ட ஆழ்வார்கள் எல்லாம். இதற்கு முன்பெல்லாம் தானே பிறந்து அறத்தை நிலை நிறுத்திய எம்பெருமான் இப்போது ஆயுதம் தரிக்காத இந்தச் சாமான்யரை ஏவியதிலிருந்து இவ்யுத்தத்தின் தன்மை அடியேன் குறிப்பிட்டதே என்பது விளங்குகிற தல்லவா? ஆழ்வார்களில் சிலர் தீவிரவாதிகளாகவும், சிலர் சமயப் பிரச்சாரகர்களாகவும் காண்கின்றனர். இவர்கள் எம்பருமானுக்கு துணையான பொருட்களே ஆக வேண்டும். தீவிரவாதிகள் எம்பெருமான் தரித்துள்ள பஞ்சாயுதங்களும்,

பிரச்சாரகர்கள் அவர் திருமேனிக்கு அணி செய்யும் ஆபரணங்களுமாம் என்பதற்கு ஐயமில்லை. இதை நான் பல தடவைகள் கனவிற் கண்டிருக்கிறேன். சமயம் வாய்க்கும் போது யார் எதனுடைய அம்சம் என்று விரிவாகச் சொல்வேன். இப்போதைக்கு இத் திருவரங்க பூமியிலேயே தோன்றி, ஈஸ்வரத் தியானம் செய்து, தம் இழிபிறப்பையும் கடந்து, அப்பால் பரமபதம் சேர்ந்த பாணாழ்வாரே திருவரங்கத்தில் முதன் முதல் பெருமை பெற்றதால், இவர் வரலாற்றைச் சிந்தித்துப் பயன் பெறுவோம்:

காவிரியின் தென்கரையில் பஞ்சம குலத்துப் பாணர் திருவரங்க நாதனை நினைந்து கண்மூடி நின்றது, அவ் வழி வந்த லோகசாரங்க முனிவரின் சீடர்கள் இவரை விலகிப் போகச் சொல்லி அது முடியாமல் போனபோது கல்லால் அடித்தது, கசிந்த ரத்தத்தோடு கண் விழித்த பாணர் தூரத்திலிருந்தே தண்டனிட்டு பிழை பொறுக்க மன்றாடியது, லோகசாரங்கர் மனச்சாட்சியால் குத்தப் பட்டு படுக்கையிற் புரண்டு விடியலில் கண்மூடியதுமே அரங்கன் (கனவில்) தோன்றி பாணரைச் சுமந்து கோயிலுட் கொணரப் பணித்தது, முனிவாகனராய் பாணாழ்வார் கோயிலுட்புக்கு அரங்கன் திருமுன்பில் நின்றது - முதலியனவெல்லாம் கூறிப் பின் ஆழ்வார் இறைவனின் பேரழகைக் கண்ணாற் பருகி, வாயால் பாடத் தொடங்கியதைக் கூறப் புக்கு நாதமுனி பாடினார். அவரது மருமக்களும், பிற சீடரும் உடன் பாடினர்.

அமலன், ஆதிபிரான், அடியார்க் கென்னை ஆட்படுத்த
விமலன், விண்ணவர்கோன், விரையார்பொழில்
வேங்கடவன்,
நிமலன், நின்மலன், நீண்மதில் அரங்கத் தம்மான் திருக்
கமல பாதம் வந்தென் கண்ணி னுள்ளன ஒக்கின்றதே.

உவந்த உள்ளத்தனாய் உலகம் அளந்(து) அண்டமுற
நிவந்த நீண்முடியன்; அன்றுநேர்ந்த நிசாசாரை
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்; கடியார்பொழில்
அரங்கத்தம்மான் அரைச்
சிவந்த ஆடையின்மேல் சென்றதாம்என் சிந்தனையே.

மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றான்; அரங்கத்(து) அரவின் அணையான்;
அந்திபோல் நிறத் தாடையும் அதன்மேல் அயனைப்
படைத்ததோர் எழில்
உந்தி மேலதன்றோ! அடியேன் உள்ளத்தின் உயிரே.

சதுரமா மதிள்சூழ் இலங்கைக் கிறைவன் தலைபத்தும்
உதிர வோட்டிஓர் வெங்கணை உய்த்தவன்; ஓதவண்ணன்;
மதுரமா வண்டுபாட மாமயிலாடு அரங்கத்தான்
திருவயிற்று
உதர பந்தனம் என்னுள்ளத்துள் நின்று உலாகின்றதே.

பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான்; வைத்ததன்றி, என்னுள்
புகுந்தான்;
கோர மாதவம் செய்தனன்கொல்? அறியேன்;
அரங்கத்தம்மான் திரு
ஆரமார்ப தன்றோ! அடியேனை ஆட்கொண்டதே.

துண்ட வெண்பிறையன் துயர் தீர்த்தவன்; அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில்சூழ் அரங்குநகர் மேய அப்பன்;
அண்ட ரண்ட பகிரண்டத் தொருமாநிலம்
எழுமால்வரை முற்றும்
உண்ட கண்டம், கண்டீர்! அடியேனை உய்யக்
கொண்டதே.

கையினார் சுரிசங்(கு) அனல் ஆழியர்; நீள்வரைபோல்
மெய்யினார்; துளப விரையார்; கமழ்நீண் முடியெம்
ஐயனார்; அணி அரங்கனார்; அரவின் அணைமிசை
மேய மாயனார்
செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே.

பரியன்ஆகி வந்த அவுணன் உடல்கீண்ட, அமரர்க்கு
அரியஆதிப்பிரான்; அரங்கத்து அமலன் முகத்துக்
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி
நீண்டவப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே.

ஆலமா மரத்தின் இலைமேல் ஒருபா லகனாய்
ஞால மேழும் உண்டான்; அரங்கத்து அரவின்
அணையான்;
கோல மாமணி ஆரமும், முத்துத் தாமமும்
முடிவில்லதோர் எழில்
நீல மேனி ஐயோ! நிறை கொண்டதென் நெஞ்சினையே.

கொண்டல் வண்ணனைக், கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை,
அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''

''அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.''

என்று உச்சரித்ததுமே நாதமுனிகள் மூர்ச்சித்து மேடைமேல் சாய்ந்தார். பக்கத்தில் இருந்தவர்கள் விரைந்து போந்து அவர் முடியைத் தம் மடிமேல் இருத்தி, சாமரம் வீசி, முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்தனர். ஆசார்யரின் உதடுகள் அசைந்தன;

"திருபாணாழ்வார் திருவடிகளே சரணம்"
"திருவரங்கன் திருவடிகளே சரணம்" —என்று முனகின.

## உய்யக்கொண்டார் (கி. பி. 946)

கண்ணைத் திறந்து மெல்லப் பார்த்தார். கால்களை மட்டும் அசைக்க முடியவில்லை. அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அங்கே இன்னொருவர் கிடந்தார். ஆனால், அவருக்கு நினைவு தடுமாறவில்லை, குளிரநோக்கி,

"அன்பரே! யார். நீர்?" — ஆசார்யர் கேட்டார்.

"அடியேனுக்கு திருவெள்ளறை திவ்யதேசம்; புண்டரீகாட்சன் என்பது திருநாமம்; பரம்பரை வைஷ்ணவர் குலத்தில் பிறந்தவன். ஒவ்வொரு ஆண்டும் இல்லாவிட்டாலும், மார்கழிப் பெருவிழாவில் கலந்து கொள்ள அடிக்கடி திருவரங்கம் வருவதுண்டு. இந்தத் தடவைதான் எனது யாத்திரைகளின் பலன் அத்தனையும் தப்பாமல் எனக்கு மொத்தமாய்க் கிட்டிற்று. நெடுங்காலமாக நான் தேடிக் கொண்டிருந்த ஞான பிதாவைத் தங்கள் உருவிற் கண்டேன். தன்யனானேன். எளியேனையும் தங்களின் கோஷ்டியில் அடியார்க்கு அடியனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்"

புண்டரீகாட்சர் மன்றாடினார்.

பராங்குசதாசரிடம் தாம் இப்படிப் பேசியது நாதமுனியின் காதுகளில் மீண்டும் ஒலித்தது. அவர் அந்தப் புதிய சீடரை முடிபிடித்து எடுத்து அணைத்துக் கொண்டார். "நாளை சந்நிதிக்கு வாரும்" — புண்டரீகாட்சருக்கு ஆணையிட்டுவிட்டு நாதமுனிகள் போனார்.

மறுநாள் காலை ஆலயத்தில் இறைவர் திருமுன்பில் சம்ஸ்காரச் சடங்குகளெல்லாம் முடித்து ''உய்யக் கொண்டார்'' — என்று தாஸ்ய நாமமும் அருளி, அவர் முடிமேல் அடி வைத்து முதற்பெருஞ் சீடராக ஏற்றுக் கொண்டார்.

உய்யக்கொண்டார் ஆசார்யரை / தம் ஊராகிய திருவெள்ளறைக்கு அழைத்துச் சென்று உபசரித்தார். அங்கே இருந்த கோலத்து இறைவனான புண்டரீகாட்சப் பெருமாளைச் சேவித்து, பிறகு அனைவருமாக (காட்டு) மன்னனார் கோயிலுக்குத் திரும்பினர். உய்யக் கொண்டாரின் துணைவியான ஆண்டாள் அம்மையாரும் உடன் வந்தார்.

உய்யக்கொண்டார் மன்னனார்கோயில் மக்களிடமெல்லாம் ஆசார்யரால் தாமடைந்த ஆன்ம லாபத்தை வாய்விட்டுச் சொன்னார். நாதமுனியின் புகழ் இந்தத் திக்விஜயத்தால் திருவரங்கத்திலும், கார்நாட்டிலும் குன்றின் மேல் இட்ட விளக்காய் ஒளிர்ந்தது.

## திருமாளிகைத் தேவரும் (910-1000), திருவாலி அமுதனாரும் (920-1000)

சைவத் திருமுறைகள் பனிரெண்டில் ஒன்பதாவதான திருவிசைப்பாத் தொகுதியில் பாதாதிகேசப் பதிகங்கள் பாடிய சிவனடியார்கள் திருமாளிகைத் தேவரும், திருவாலி அமுதனாரும். தமிழின் முதல் பாதாதிகேசப் பதிகம் ஆகிய ''அமலனாதி பிரான்'' — ஐப் பின்பற்றியே இவர்கள் இவ்வாறு செய்திருக்க வேண்டும். எப்போது எனக் கூறமுடியாவிட்டாலும், இவர்கள் இப்படிச் செய்தது நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் நாதமுனிகளால் நாடெங்கிலும் பரப்பப்பட்ட பின்னரே என்பது மட்டும் உறுதி. இதனாலேயே பாணர் வரலாற்றை அடுத்தே

இவ்விருபெரும் சிவனடியார்களும் பாதாதிகேசப் பதிகம் பாடிய வரலாற்றை இங்கே குறிப்பிட வேண்டியதாயிற்று. இவர்கள் காலம் வேறிடத்தில் காட்டப்பெறும்.

## திருக்குடந்தை (கி. பி. 947)

திருவரங்கத்தில் தம் பணிக்குத் தொடக்க விழா செய்ததுமே ஆசார்யர் நினைவுக்கு வந்தது திருக்குடந்தை தான். அவரைக் கவர்ந்து வலிய ஆட்கொண்ட பதிகத்திற்கு அதிபர் குடந்தைக் கிடந்த ஆராவமுதனே அல்லவா? அங்கே போய் ஆராவமுதப் பெருமாளைச் சேவித்து தம் நன்றிக் கடனை தீர்த்ததுமே, அவருக்குத் திருமழிசையின் நினைப்பெடுத்துவிட்டது. திருமழிசைப் பிரான் பரமபதித்த இடமல்லவா அது?

ஆழ்வார்களுள் போராடி வைணவத்தை உயிர்ப்பித்தவர்களுள் திருமழிசையே முதலிடம் பெறுபவர், சைவத்திலிருந்து விடுபட்டுத் தனிச் சமயமாய்த் தலையெடுக்க வைணவம் புரட்சி செய்ய வேண்டியிருந்தது. பூதத்தாரே இதற்கு வித்திட்டிருந்தாலும், போரை முன் நின்று நடத்தியது திருமழிசைப் பிரானே அதனால் அவர் குணபரப்பல்லவனோடே கூட மோத வேண்டியிருந்தது. நாடுகடத்தப்பட்டு அவரே வைணவத் தீயைக் குடந்தைக்குக் கொண்டு வந்து மூட்டினார். அதில் முளைத்த ஒரு பொறிதான் குடந்தைக் கடுத்த மண்டங்குடியில் தோன்றிய தொண்டரடிப்பொடிகள். அடிகள் நிச்சயமாக இளமைப் பருவத்தில் திருமழிசைப் பிரானின் வீரப் பிரதாபங்களைக் கேட்டிருக்கவே வேண்டும்.

நாக்கொண்டு மானிடம் பாடேன்

(நான். திரு. 75) என்ற உறுதியோடு,

'கவிக்கு நிறைபொருளாய்' (நான். திரு. 69)

திருமாலைத் தேர்ந்து கொண்ட பின்,

அறியார் சமணர்; அயர்த்தார் ப்வுத்தர்;
சிறியார் சிவப்பட்டார்; செப்பில் — வெறியாய
மாயவனை, மாலவனை, மாதவனை ஏத்தாதார்
ஈனவரே ஆதலால் இன்று

(நான். திரு. 6) எனத் தெளிந்து,

நாராயணன் என்னை ஆளி நரகத்துச்
சேராமல் காக்கும் திருமால்தன்— பேரான
பேசப்பெறாத பிணச்சமயர் பேசக் கேட்டு
ஆசைப்பட் டாழ்வார் பலர்

(நான். திரு. 14) என்று இரங்கி,

மறந்தும் புறந் தொழாஅ மாந்தராய் (நான். திரு. 68)

சிறந்த வைணவப் பேரடியாராகி, அந்த எக்களிப்பில்,

நானுன்னை அன்றியிலேன் கண்டாய், நாரணனே!
நீ என்னை அன்றி இலை'.

என்று இறுமாந்து ஒரு பார்க்கவ வீரர் போலவே இருந்த அந்தத் திருமேனியைக் கண்டு தொழுதார். அப்போது கடந்த கால வரலாறெல்லாம் அவர் மனக் கண் முன் சுழன்றன. தொண்டரடிப் பொடிகளோ தமது மானசீகக் குருநாதரான திருமழிசைப்பிரானையும் மிஞ்சிப் போய் திருமால் மூர்த்தங்களுள்ளும் திருவரங்க நாதனைத் தவிர வேறு தெய்வம் அறியாத மகா பதிவிரதராகிவிட்டதுவும் அப்போது அவருக்குப் பளிச்சென்று பட்டது. ''தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி''— என்பது எவ்வளவு உண்மையாகிவிட்டது, இவர்கள் திறத்தில்! -அவர் எண்ணி வியந்தார். அன்றிரவு மழிசைப் பிரானின் வீர வைணவம் பற்றி கூடியிருந்த மக்களுக்

கெல்லாம் நெஞ்சில் ஏறும் வண்ணம் எடுத்து உரைத்தார்.

## மண்டங்குடி தொண்டரடிப் பொடிகள் (கி. பி. 948)

மார்கழியில் கேட்டை தொண்டரடிப் பொடிகள் பிறந்த நாள். அது இந்த ஆண்டு வளர்பிறைப் பக்கத்திலேயே (சுக்கில பட்சம்) வந்தது. திருவரங்கத்து மார்கழிப் பெருவிழாவில் கலந்து கொள்ளக் கிளம்பிய நாதமுனி கோஷ்டி மண்டங்குடிக்குப் போய் தொண்டரடிப் பொடிகள் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு அங்கிருந்து திருவரங்கம் போகத் திட்டமிட்டது. அவர்கள் குடந்தை நோக்கி நடந்தனர். குடந்தை என்றதுமே அது ஆலயங்களின் கொத்து (complex) ஆதல் அவர்கள் நினைவிற்கு எட்டிற்று. வெள்ளியங்குடி, விண்ணகர், நறையூர், சேறை, நாதன் கோயிலான நந்திபுர விண்ணகர மெல்லாம் சேவித்துக் கொண்டு குடந்தையில் ஆராவமுதப் பெருமாளைக் கண்டு கை தொழுதனர். பிறகு அங்கிருந்து காவிரியைக் கடந்து மேற்கே ஆதனூரிலும் புள்ளம் பூதங்குடியிலும் வழிபட்டு விட்டு கடைசியாக மண்டங்குடி சென்று அடைந்தனர். அங்கே ஆழ்வார் பிறந்த இடத்தில் கட்டப்பட்டிருந்த சிறிய கோயிலில் ஆழ்வார் பிறந்த நாள் விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழா முடிவில் கவித்தலம், கூடலூர், கண்டியூர், திருப்பேர்நகர் (கோயிலடி) மற்றும் அன்பில் வழியாகத் திருவரங்கம் சேர்ந்தனர்.

வழக்கம் போல் ஏகாதசி அன்று இரவு உபன்யாசம் தொடங்கிற்று. பெருமாள் அவதரித்துச் செய்த அருஞ்

செயல்களில் ஒன்றைக் கூடப் பேச ஆசார்யருக்கு மனமில்லை. அவர் நெஞ்சில் ஆழ்வார் பக்தியே நிலைத்திருந்தது. ஆழ்வார்கள் அவதாரிகையுள்ளும் திருவரங்க மான்மியம் பற்றிய வரலாறுகளையே அவர் தேர்ந்து கொண்டார். மண்டங்குடியில் தொண்டரடிப் பொடிகள் விழாவில் கலந்து கொண்டு வந்ததால், அந்த நினைப்பே இப்போது அவர் நெஞ்சில் நிறைந்திருந்தது. அவர் பேசினார்...

திருவரங்கனைச் சேவிக்க வந்து குவிந்திருக்கும் பக்த கோடிகளே!

உங்களுக்கெல்லாம் தண்டனிட்டு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதுதான் திருப்பாணாழ்வாரைப் பாடிப் பரவிய தொண்டரடிப் பொடிகளின் வரலாறு. பூர்வாசிரமத்தில் இவர் பெயர் விப்பிரநாராயணர் என்பது.

விப்பிர நாராயணர் மண்டங்குடியில் மூங்கிற் குடியைச் சேர்ந்த சோழியப் பிராம்மணரான விசாரதரின் அருந்தவப் புதல்வர். இளமையிலேயே துறவு பூண்டு இந்தப் புண்ய பூமிக்கு வந்து திருவரங்கனுக்குப் பூமாலைத் தொடுத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது ஒருநாள் நளனைச் சனி பிடித்தது போல, தேவதேவி என்ற ராஜசபை நர்த்தகியின் பார்வை இவர் மீது பட்டது. இவருடைய நந்தவனப் பக்கமாகவே ஒய்வு கொண்டிருந்த தேவதேவியை இவர் கொஞ்சமும் ஏறெடுத்துப் பாராமலேயே சென்றுவிட்டார். சினம் கொண்ட தேவதேவி பழி வாங்கும் மனத்தினளாய் ஒரு மகா பக்தையைப் போல வேடம்பூண்டு அடிகளை அடிபணிந்து, புகலிடம் வேண்டிக் காலப் போக்கில் அவரது உள்ளத்திலேயே இடம்பிடித்தும் விட்டாள்.

காலத்தை எதிர் நோக்கிக் காத்திருந்த அவளுக்கு அந்தக் காலதேவனும் கை கொடுத்தான். ஒருநாள் திடீரெனப் பெய்த பெருமழையில் அகப்பட்டுக் கொண்டாள் தேவ தேவி; ஓடி வந்து ஆசிரமப் பக்கம் ஒதுங்கினாள். அவள் நிலைக்கு இரங்கி குடிலுக்குள் அனுமதித்தார் அடிகள். அந்த நெருக்கடியில் அவளின் சூழ்ச்சிகள் பலிக்கும் சமயமும் வந்தது. அந்த மாயாவியின் கண் வீச்சில் அடிபட்டு, மனம் தடுமாறி அடிகள் தம் பவித்திரத்தை இழந்தார். அவளோ தான் எண்ணியதை முடித்து விட்ட எக்களிப்போடு ஆசிரமத்தை விட்டு அகன்றாள்.

உணர்ச்சி வெள்ளத்தில் தத்தளித்த ஆழ்வார் எல்லோரையும் போல பொருள் கொடுத்தே அந்த வேசியை அடைய வேண்டியதாயிற்று. அதற்கு வழியில்லாமல் போன போது, வெளியில் தள்ளப்பட்டு வாசலிலேயே மயங்கிக் கிடந்தார். கருணைக் கடலான மகாலட்சுமி தமது பிள்ளையான ஆழ்வார் சார்பாக இறைவனிடம் முறையிட்டாள். அந்த பரிந்துரையை ஏற்றுக் கொண்டு ஸ்ரீமந் நாராயணனும் வேசியின் வீட்டுக்கு நடந்தான்; நடந்து வந்து, ஆழ்வாரின் காணிக்கையாக ஒரு பாத்திரத்தை கொடுத்து விட்டுப் போனான். பெற்றுக் கொண்ட வேசியின் தாய் ஆழ்வாரை உள்ளே கொண்டு போய், மயக்கம் தெளிவித்து, தேவியோடு கூட்டி வைத்தாள்.

மறுநாள் அழகிய மணவாளர் கோயிலில் ஒரு பொற்கிண்ணத்தைக் காணவில்லை. பூசனைக்காரனைப் பிடித்து மிரட்டினர். அது காணப் பெறாத அவன் காதலி அப்படி ஒரு கிண்ணத்தை தேவியின் வீட்டில் கண்டதாகக் கூறினாள். வேசியோ அந்தக் கிண்ணத்தை விப்பிர நாராயணரின் சீடரே தன்னிடம் கொடுத்ததாகக் கூறினாள். விப்பிரநாராயணர் காவலில் வைக்கப் பட்டார். அரசன் கனவில் அழகிய மணவாளன் தோன்றி

தானே திருடன் என்றும், ஆழ்வாரை உடன் விடுதலை செய்யுமாறும் அரசனுக்கு ஆணையிட்டான். இறைவனால் உய்வு பெற்ற ஆழ்வார் நந்தவனத் திருப்பணியை நன்றியறிவோடு தொடர்ந்தார்; திருப்பள்ளி எழுச்சி, திருமாலை என வேறு இரண்டு பாமாலைகளையும் பெருமாளுக்குச் சேர்த்து மகிழ்ந்தார்.

அப்பர்-சம்பந்தர்கள் செல்வாக்கினால் ஓய்ந்து கிடந்த வைணவத்திற்குத் தொண்டரடிப் பொடிகளே புத்துயிர் கொடுத்தார் என்றால், அது மிகையாகாது. அவர் பாடிய பள்ளியெழுச்சி வைணவ சமுதாயத்தையே தட்டி எழுப்பியதாகும்.

''கதிரவன் குணதிசைச் சிகரம்வந்(து) அணைந்தான்;
கனையிருள் அகன்றது, காலையம் பொழுதாய்;
மதுவிரிந் தொழுதின மாமலர் எல்லாம்;
வானவர் அரசர்கள் வந்துவந்(து) ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர்; இவரொடும் புகுந்த
இருங்களிற்(று) ஈட்டமும், பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள(து) எங்கும்;
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே.

என்ற முதற் பாடல் போலவே எல்லாப் பாடல்களும் இனிப்பாய் அமைந்த பதிகம் இது. எளிமையும், தெளிவும், இயற்கையான ஓட்டத்தினால் அமைந்த இனிமையும், பள்ளிகொண்ட பெருமாளுக்கே பாடப்பட்டதில் உள்ள பொருத்தமும் மாணிக்கவாசகர் ஆடவல்லானுக்குப் பாடிய பள்ளியெழுச்சியில் இல்லை. சில நல்ல தமிழ்ச் சொற்களை மணிவாசப் பெருமான் கையாண்டவராயினும், ஆழ்வாரைப் பின்பற்றி அவர் செய்த முயற்சி அவ்வளவாகக் கைகூடவில்லை என்றே சொல்ல வேண்டும். இனிமையில் அமலனாதி பிரானுக்கு இணையானது இது, இன்னும், இன்னொரு பிரபந்தமாகிய திருமாலையில் பஞ்சம குலத்துப் பாணாழ்வாரை இரண்டு

பாடல்களில் (எண். 42, 43) பரவிச் சென்றது இவரது பாகவத பக்தியையும், இவர் உண்மையிலேயே தொண்டரடிப்பொடிகள்தாம் என்பதையும் தெளியக் காட்டுகின்றன.

தொடையொத்த துளவமும், கூடையும் பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப் பொடிஎன்னும்
அடியேனை அளியன்என்(று) அருளியுன்
அடியார்க்கு ஆட்படுத்தாய்

என்ற இவர் வேண்டுகோளில் தாஸ்ய பக்தி அப்படியே மணக்கின்றது பாருங்கள்! எல்லோருமாகச் சேர்ந்து ''தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்று கோஷமிட்டு ஆழ்வார் நினைவு அகலாமல் பத்திர மாக இல்லம் போய்ச் சேருங்கோள்'' சொல்லிவிட்டு நாதமுனி ஆசிரமம் சேர்ந்தார்.

## புருஷ நிர்ணயம்

வைணவத்தை மக்களிடையே பரப்பும் பணியில் ஒரு சமயம் மதுரை சென்றிருந்தார் நாதமுனி. அங்கே பெரியாழ்வார் பரத்வ நிரூபணம் செய்த நினைவு விழா அப்போது கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. ஆசார்யரும் அன்றிரவு கூட்டத்தில் அதுபற்றிப் பேசினார்:

## மதுராபுரி மகாஜனங்களே!

சங்கம் வைத்து தமிழ் வளர்த்தது இந்த மாநகரம். பிராமணன் என்ற வகையில் வடமொழிப் பயிற்சி மிக்க எனக்கு உங்களில் பலருக்கு இருக்கக் கூடிய அளவுக்கு தமிழ் ஞானம் இருக்க முடியாது என்பது உண்மைதான். ஆயினும், என் சொந்த முயற்சியால் கொஞ்சம் தமிழும்

படித்திருக்கிறேன். ''ஆராவமுதே'' என்ற அழகு தமிழ்ப் பாட்டு ஒன்று வேத, வேதாந்தங்களின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சியும் தராத ஒரு திருப்பத்தை என் வாழ்வில் ஏற்படுத்தியது. எங்கெல்லாமோ அலைந்து திரிந்து கடைசியாக இதே மதுரை வழியாகவே குருகூருக்குப் போய் ஆயிரம் தேடிய இடத்தில் நாலாயிரம் பெற்று மீண்டும் இங்கே கூடலழகரைச் சேவித்து விட்டு மட்டற்ற மகிழ்ச்சியோடு ஊர் திரும்பினேன் நாலாயிரத்தைப் படித்துப் படித்தே காலப்போக்கில் நானும் போதிய அளவுக்குத் தமிழ்ப் புலமை பெற்றிருக்கிறேன். எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என்றெல்லாம் பெரிய, பெரிய கிரந்தங்களை இந்த மதுரையம்பதி தொகுத்து உதவிய தாகக் கேள்வி. பாரதம் பாடிய பெருந்தேவனார் இப்படிச் செய்தாராம். அடியேனும் ஆழ்வார்கள் அருளிச் செயல் களைச் சேகரித்து செம்மைப்படுத்தியுள்ளேன். அடியே னுக்கும், மதுரைக்கும் இப்படி ஒரு சின்ன சம்பந்தம் உண்டு என்பதைஉங்களிடம் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

மதுரை மாநகர் மற்றொரு விதத்திலும் சிறப் புடையது. சைவத்தின் மூன்று கோட்டைகளுள் இதுவும் ஒன்று. சோழ தேசத்தின் பழைய சிவஸ்தலமான திருவாரூரும், எங்கள் ஊருக்கு அருகே பள்ளிகொண்ட கோலத்தில் கோவிந்தராஜப் பெருமாள் கண்டுகளிக்க நடராஜா ஆனந்தத் தாண்டவம் புரியும் தில்லைத் திருச் சித்திரக் கூடமும் ஆகிய மற்றைய இரண்டு இடங்களுக்கு இல்லாத சிறப்பு ஒன்று இந்த மதுரைக்கு உண்டு. சிவபெருமானும், நாராயணனின் அருமைத் தங்கை யாகிய பார்வதி தேவியும் சுந்தரபாண்டியரும், 'மீனாட்சி அம்மையுமாகத் தோன்றி இங்கே ஆட்சி செய்ததாகப் பெரியோர்கள் சொல்லக் கேள்வி. மதுரைக் காஞ்சி என்ற பழைய தமிழ்க் கிரந்தத்திலேயே கூட இதைப் பற்றி ஒரு சிறு குறிப்பு உண்டாம். நெடுஞ்செழியன் என்ற

பாண்டியனை "பாண்டியப் பெயர் தரித்த பழம்பெருங் கடவுளின் வழிவந்தவனே!" —என்று மாங்குடி மருதனார் என்ற புலவர் பாடியுள்ளாராம். பிறகு, இங்கே எங்கள் சோழ நாட்டுச் சீர்காழியில் தோன்றிய சம்பந்தப்பிள்ளை யார் சமணர்களை வென்ற வரலாறும் நீங்கள் அறிவீர் கள். ஆனால், வைணவ சரித்திலும் மதுரைக்கு ஒரு முக்கிய இடமுண்டு என்பதை நினைவூட்டத்தான் அடியேன் இன்று உங்களிடம் வந்திருக்கிறேன். அதை இப்போது உங்களுக்குச் சொல்கிறேன்.

பரம்பரைச் சைவர் குலத்திலேயே பாண்டியன் ஒருவன் பரம வைஷ்ணவனாக இருந்தான். ஸ்ரீவல்லப தேவன் என்பது அவன் பெயர். அவன் எப்படிப் பரம வைஷ்ணவன் ஆனான்? — என்ற புதிரில் தான் நான் சொன்ன வைஷ்ணவத்தின் ரகசியமே அடங்கிக் கிடக் கிறது. மரணத்தின் பின், மனிதனின் நிலை என்ன? அந்த மறுமையிலும் நிலையான பேரின்பத்தைக் கொடுக்கக் கூடியவன் யார்? அவனைப் பிடிப்பது எப்படி?—இப்படிச் சில கேள்விகள் அவனை அரித்துக் கொண்டிருந்தன. வெற்றி மேல் வெற்றி பெற்ற வீர ப்ரதாபன் — சகல சுக போகங்களையும் தெவிட்டுப் போகும் அளவுக்கு அனுப வித்துத் தீர்த்தவன் — அறிவாளியாக இருந்ததால், ஆணவம் கொள்ளாமல் ஆன்மீகத் துறையின் பக்கம் பார்த்தான் — என்றால் நீங்கள் நம்பாமற் போகலாம். அவன் மனம் பக்குவப்படும் அளவுக்கு அவன் குணம் இருந்தது என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். ஆன்ம விசாரணைக்கு நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு ஒரு நல்ல சம்பவமும் வாய்த்தது.

ஒரு சமயம் நகர் சோதனையின்போது ஒரு வீட்டுத் திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு பிராமணனை ஸ்ரீவல்லபதேவன் தட்டி எழுப்பி விசாரிக்க நேர்ந்தது. காசியாத்திரை போய் வந்து, இப்போது இராமேஸ்வரம்

போகும் வழியில், பாண்டியர் ஆட்சி நடைபெறும் மதுரையில் பயமில்லாமல் இரவைக் கழிக்க எண்ணி அங்கே உறக்கம் கொண்டதாக அவன் கூறினான். அவனிடம் சில அறிவுரைகளைக் கேட்டான், மாறு வேடத்தில் இருந்த மன்னவன்.

''வர்ஷார்த்த மஷ்டவ் ப்ரயதேத மாஸாந்
நிஸார்த்த மர்த்தம் திவஸம் யதேத
வார்த்தத்ய ஹேதோர் வயசா நவே ந
பரத்ர ஹேதோரிக ஜன்ம நாச''

என்று ஒரு சுலோகத்தைக் கூறி, ''ஒருவர் மழைக் காலத்துக்கு வேண்டியதை ஏனை எட்டு மாதங்களிலும், இரவுக்கு வேண்டியதை பகற்போதிலும், முதுமைக் காலத் தேவைகளை இளமைப் பருவத்திலும், மறுமைக்கு வேண்டியதை இம்மையிலும் முயன்று தேட வேண்டும்''– என அதற்கும் பொருள் என்றும், அந்த முயற்சியில்தான் இப்படி அலைந்து திரிவதாகவும், மற்றைய விஷயங்களை வல்லார்வாய்க் கேட்டு அறிந்து கொள்ளும்படியும் சொல்லிப் போனான். அந்தச் சம்பவம்தான் அரசனின் ஆன்ம விசாரணையின் தொடக்கத்துக்குக் காரணமாயிற்று. இப்போதாவது உங்களால் நான் சொன்னதை நம்ப முடியும் என எண்ணுகிறேன்.

சரி, அவனை அரித்துக் கொண்டிருந்த அந்தக் கேள்விகளுக்குப் பதில் என்ன? மந்திரிமார்களையும், புரோகிதரையும் கலந்து ஆலோசித்தான். அருகிலுள்ள திருக்ரோட்டியூரைச் சேர்ந்த செல்வநம்பிகள் அப்போது அரச புரோகிதராக இருந்தார். ஒரு ''வித்வத் சதஸ்''—ஐ நடத்தி அதிலிருந்து அரசனேதான் தன் கேள்விக்கான பதிலைத் தேர்ந்து கொள்ள வேண்டுமென்று அந்தப் புரோகிதர் சொன்னார். ஒவ்வொரு சமயமும் தன்னுடையதே சிறந்தது என ஆர்ப்பரிப்பதால், எது சிறந்தது

என்பதில் சுயம்வரம் ஒன்றே நல்ல வழியென புரோகிதர் சொன்னதை அமைச்சர்கள் ஆதரித்தனர். பழனாளில் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி இப்படிச் செய்ததையும், இதன் காரணமாக சொக்கநாதப் பெருமானே 'கற்பரசி களின் கூந்தலுக்கு இயற்கையான மணம் உண்டு'—என்று குறிப்பாகக் கூறிய ''கொங்குதேர் வாழ்க்கை''— என்ற செய்யுளைச் செய்து அடியவனாகிய தருமிக்கு அளித்து பரிசில் பெறச் செய்ததாகவும் ஒரு வரலாறு வழங்கு வதையும் காட்டி அவ்வாறே நாமும் செய்யலாம் என்று ஒரு வழியும் கூறினர். மார்கழி அமாவாசை யன்று மதாச்சாரியர்களின் மாநாடு ஒன்று மதுரையில் நடைபெறுமென்றும், அங்கே அரசனின் அய்யப்பாடு களைத் தீர்த்து வைக்கும் ஆசார்ய சிரேஷ்டருக்கு பொற் கிழி ஒன்று பரிசாக அளிக்கப்படுமென்றும் நாடெங்கும் பறைசாற்றப்பட்டது.

செல்வநம்பி அருகிலேயே இருந்த திருமாலிருஞ்சோலை மலைக்கு ஓடினார். மகளைப் பிரிந்த துயரம் தாளாமல் வில்லிபுத்தூரை விட்டு நீங்கி அங்கே அழகரைச் சேவித்துக் கொண்டு தம் வாழ்க்கையின் எஞ்சிய பகுதியைக் கடத்திக் கொண்டிருந்த தம் அருமை நண்பர் விஷ்ணுசித்தரைக் சந்தித்து விஷயங்களை எடுத்துச் சொன்னார்; பாண்டியன் ஏற்பாடு செய்யும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

''எனக்கு போட்டி கீட்டி எதிலும் இஷ்டம் இல்லை. நிம்மதியாகப் போய்ச் சேர்ந்தாலே போதுமானது''— அலுத்துக் கொண்டார் ஆழ்வார்.

'இல்லை, தாங்கள் கலந்து கொள்ளத்தான் வேண்டும்'' — கட்டாயப்படுத்தினார் நம்பி.

'எனக்கு என்ன தெரியும் சாஸ்திரங்கள் பற்றி? நான் அவற்றை முறையாக வேதபாடசாலையில் பயின்றதில்லை

நினைவு தெரிந்த நாள் தொட்டு வடபத்திரசாயிக்கு கைங்கர்யம் செய்து வந்தேன்; அவ்வளவுதான். பிராம்மணன் என்ற வகையில் உபன்யாசங்களிலும், சம்பாஷணைகளிலும் கேட்டது மட்டுமே நான் அறிந் தவை' — இன்னமும் பின்வாங்கினார் விஷ்ணு சித்தர்.

'ஸ்வாமி! உங்களுக்குத் தெரியாது உங்கள் மகிமை. முறைப்படி பாடங்கேட்டுப் பயின்ற எனக்குத் தெரிந் துள்ளவற்றுள் சாரமான எல்லாமும் தாங்கள் கேள்வி மூலமே அறிந்திருப்பதை நான் அறிவேன். மேலும், போட்டிகளில் வெறும் சாஸ்திர ஞானமே யல்ல வெற்றி தருவது. வாக்கு வன்மை என்பது ஒன்றும் உண்டு. அனைத்துக்கும் மேலாக ஆண்டவன் கருணை இருக் கிறது. அது உங்களுக்கு நிரம்ப உண்டு. கடல் தாண்டத் தயங்கிய அனுமனைப் போன்றவர் தாங்கள். ஜாம்ப வானும், சம்பாதியும் போன்ற ஏனைய வீரர்கள் போல நானும் என்னைச் சார்ந்தவர்களும் உள்ளோம். ஆகவே, உங்களைக் கொண்டு அந்த போட்டிக் கடலைத் தாண்டவே போகிறோம்'' —
உறுதியாகக் கூறிய நம்பி அழகர் மீதும், அவர் பெறாமல் பெற்று இழந்து விட்ட அருந்தவச் செல்வியாகிய கோதையின் மீதும் ஆணையிட்டார்.

கோதை பேர் சொல்லக் கேட்டதுமே துணுக்குற்றது விஷ்ண சித்தர் மனம். ராம நாமம் கேட்ட அனுமனைப் போல அவர் உள்ளத்தில் ஒரு புதிய ஊக்கம் பிறந்தது.

'ஆகட்டும் பார்ப்போம். எல்லாம் அவன் செயல்' —முடிவில் ஒரு வழியாக ஒப்புக் கொண்டார்.

அமாவாசையன்று, குறித்த நல்ல நேரத்தில், போட்டி தொடங்கி விட்டது. ஜைனர்கள், (இலங்கைப்) பவுத்தர்கள், மலைநாட்டிலிருந்து யூதர்கள், சிரியன் கிறித்தவர்கள்,

தென்பாண்டியிலிருந்து சில முகமதியர்கள், சைவர்கள் ஸ்மார்த்த பிராமண அத்வைதிகள் — எல்லோரும் அங்கிருந்தனர். வைணவர்களுக்கு நடுவே விஷ்ணுசித்தரும் வீற்றிருந்தார். இவர்கள் என்ன பேசினார்கள் என்று நமக்குத் தெரியாது. நடந்தது 'பரத்வம்' பற்றிய பரிசீலனை என்பது மட்டுமே நமக்குக் கிடைக்கும் செய்தி. 'தெய்வம் ஒன்று உண்டு; அந்த முழுமுதற் பொருள் நாராயணனே' — என்று வாதித்துத்தான் ஆழ்வார் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதி. ஆனால், இந்த புருஷ நிர்ணயத்தை இவர் எப்படிச் செய்தார்? — சிந்தித்தேன். சில விஷயங்கள் புலப்பட்டன. அவற்றையே இப்போது நான் உங்களுக்குச் சொல்கின்றேன்.

காலம் — அதுதான் தப்பாமல் எவ்வளவு ஒழுங்காக ஓடிக்கொண்டு இருக்கிறது! சூரிய சந்திரர்கள் தோன்றி மறைவதும், பருவ காலங்கள் சீராகச் சுழன்று வருவதும் எப்போதும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. யுகாந்திரக் கணக்குகள் செல்வதைப் பார்த்தால் காலத்தின் தொடக்கமோ, முடிவோ நமது அறிவுக்குத் தென்படவே இல்லை. அது ஒரு பிரம்ம ரகசியம்.

இடம் — அதுவுந்தான் எல்லையில்லாமல் போய்க் கொண்டே இருக்கிறது! ஒருக்கால் வளைந்த தாகலாமோ? யாருக்குத் தெரியும்?

பொருள் — தேய்த்துக் கொண்டே போனால், அது எங்கே போகிறது? அது இறுதியில் என்ன ஆகிறது? இல்லாமலேயே போய்விடுகிறதா? அப்படியானால், சூன்யத்திலிருந்தும் பொருட்கள் உண்டாகின்றனவா? வைசேஷிகம் பொருளின் உடைபாட்டுக்கு அணுவை எல்லையாகக் கொள்வது உண்மையா?

ஜீவராசிகளை எடுத்துக் கொள்வோம். அவற்றுள் ஜீவனின் அளவு என்ன? அதாவது, அது எவ்வளவு சிறியது அல்லது எவ்வளவு பெரியது ?

இடம், காலம், பொருள், ஜீவன்—இந்த நான்கு ராசி வகைகளுக்கும் தாய் எது ? இவற்றையெல்லாம் உறுப்பு களாகத் தனக்குள் அடக்கிக் கொண்டிருப்பது எது ? அதுவே பரவஸ்து அல்லது பரம்பொருள். அதாவது, பரம்பொருள் விஸ்வரூபமானது. அது நிற்க.

நாம் அன்றாடம் சந்திப்பது மனச்சாட்சி. முன்னம் காட்டிய ஆராய்ச்சிகளின் அகலமும், ஆழமும் எவ்வளவு இருந்தாலும், நமது அன்றாடத் தேவைகளுக்கும், பாதுகாப்புக்கும் நாம் என்ன செய்கிறோம் ? ஆசை, அச்சம் என்ற இரண்டுக்குமே நாம் ஒரு தெய்வத்தை (பேசுவது எப்படியிருந்தாலும்) நெஞ்சுக்குள்ளேயாவது நித்தம் நினைக்கின்றோமல்லவா இரட்டை வேடம் போடாமல் இருந்தால், தெய்வத்தின் உண்மை தானே விளங்கும். நமக்குள் அது அந்தர்யாமியாய் மறைந்து கிடக்கிறது. இப்படியே அது மற்றைப் பொருட்களிலும் மறைந்திருக்க வேண்டும்.

ஆனால், எது தெய்வம் ? எங்கும் நிறைந்தது மட்டும் அல்ல; அனைத்தும் அறிவதும் ஆகாது; அப்படியே எல்லாம் வல்லதும் தெய்வம் என்று சொல்வதற்கில்லை. தேஜஸ், ஞானம், பலம் மட்டும் அல்ல பகவத் குணாதிசயங்கள். ஜைன, பவுத்தங்களும், உலோகாயதமும் இப்படிப்பட்ட இயற்கையை மட்டுமே காண்கின்றன- ஆனால், இந்த ரூபத்தில் ஜீவன் இல்லை. அஞ்ஞானத்தில் உழல்கின்ற நமக்கு அது உதவி செய்வதாய் இருக்க வேண்டும். குறைந்தது, நாம் கோரும்போதாவது உதவ வேண்டாமா? பரம காருண்யமே பகவத் குணம் ஆகும். கருணாமூர்த்தியாகக் கடவுளைக் கண்டு கைதொழுது,

மற்றவர்களுக்கும் காட்டிக் கொடுத்ததாலேயே ஆழ்வார்கள் இன்றும் மக்கள் மத்தியில் வாழ்கின்றனர். கோடானு கோடி உள்ளங்கள் ஜைன, பவுத்த, உலோகாயதங்களை நிராகரித்துவிட்டன. பெருமையில் அடக்கமும், செல்வமோ அதிகாரமோபெற்று இன்புறும் போது இரக்கமும் கொண்டவர்களையே தெய்வ சமானர்களாக வணங்கி வழிபடுவது நமது பழக்கம் அல்லவா? துஷ்ட நிக்ரஹ, சிஷ்ட பரிபாலனமே ஈஸ்வர சாம்ராஜ்யத்தின் தலையாய தர்மம் ஆகும். படைப்பும், துடைப்பும் காப்பின் இரண்டு பகுதிகளே. காப்பவனே கடவுள் என்று நாம் உணர வேண்டும்.

போகட்டும், பிரம்மத்தின் காருண்யம் உலகில் எப்படிக் காட்சி அளிக்கிறது? உலகில் பலகோடிப் பொருட்களாய், பலகோடி காரணங்களுக்காக உள்ள அந்தப் பரம்பொருள் பல்லாயிரம் வகைகளில் உதவ பல்லாயிரம் சக்திகளாகப் பரிணமித்தது. இவையே ருத்ர பிரம்மேந்திராதி தெய்வங்கள். இவை எல்லாம் பரிணாமத்தில் அதன் வியூக வடிவங்களாம்.

சில சமயங்களில் இந்த வியூகங்களின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டு இராம, கிருஷ்ணா வதாரங்களாகத் தோன்றி மக்களோடு கலந்து பழகி அது வழிகாட்டியுள்ளது. நம்மில் பலர் 'கடவுள் மனிதனாய்ப் பிறக்க வேண்டும்' என ஆசைப்பட்டதில்லையா? இவை பெரிய அளவில் தேவைப்படும் போது உண்டாகும் விபத்துக்கள்.

நாம் நமது பெரியவர்களின் மறைவுக்குப் பின் அவர்களின் உருவங்களை வழிபடுவதே போல, தெய்வத்தோடு உறவாட ஏழை எளியவர்களின் தேவைக்காக வேண்டிச் சில சடங்குகள், சில சங்கேதங்கள், சில சிலை உருவங்களை அமைத்து இருக்கிறோம் சொல்லுக்கு எப்படி பொருள் உணர்த்தும் சக்தி உண்டோ அப்படியே சிலைகள், சடங்குகளுக்கும் கூட நமது உள்ளத்தை நடத்தும் சக்தி உண்டு. நம்பிக்கையும், காலம் செல்லச் செல்ல

சேர்ந்து விடும் வரலாற்றுச் சிறப்புடைமையும் அந்தச் சக்தியைத் தருகின்றன. இந்த ரூபம் அர்ச்சையாகும்.

இதுவரை அடியேன் தெய்வத்தின் ஐந்து வடிவங்களைப் பற்றிச் சொன்னேன். மீண்டும் நீங்கள் நினைவில் இருத்திக் கொள்வதற்காக சொல்கிறேன்— அர்ச்சா வதார வியூக பாராந்தர்யாமி என ரூபங்கள் ஐந்தாய் உதவுவதே பூரணமான அமைதிக்கு மனிதன் வேண்டும் தெய்வம். இந்தக் கொள்கையே கொண்ட வைணவம் இப்படிப்பட்ட தெய்வத்தைத்தான் ஸ்ரீமந் நாராயணன் என்று பெயரிட்டு வழிபடுகிறது. ஆகவே, உயிர்கள் தேடும் தெய்வம் ஸ்ரீமந் நாராயணனே என்று காட்டித்தான் விஷ்ணு சித்தப் பெருமான் பாண்டியன் பரிசைத் தட்டிச் சென்றிருக்க வேண்டும். இனி, உங்களுக்குப் பிடித்தமானதை நீங்கள்தான் தேர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல ஆசிரியனை அடுத்து முறையாகப் பாடம் கேட்காமலேயே வேத வேதாந்நங்களின் இந்த சாரத்தை அவனே காட்டக் கண்டு அவனருளாலேயே வாதப் போரில் வாகையும் சூடிய இந்த மகா புருஷரை,

குருமுக அனதீத்ய ப்ராக வேதான் அசேஷாம்
நரபதி பரிக்லுப்தம் சுல்கம் ஆத்தாது காமஹ
ஸ்வசுரம் அமரவந்த்யம் ரங்கநாதஸ்ய சாட்சாத்
த்விஜகுல திலகந்தம் விஷ்ணுசித்தம் நமாமி.

என்று பாடி அடியேன் நமஸ்கரிக்கிறேன். தமிழ் வளர்த்த மதுரையில் வடமொழியில் பாடினேன் என்று வருத்தப் படாதீர்கள்; தமிழிலும் பாட முயற்சிப்பேன். நீங்கள் மட்டும் ஆழ்வாரை முன்னிட்டுக் கொண்டு பரத்வ நிர்ணயம் செய்யப்பட்ட இம்மாநகர் மதுரையில், இந்த

நன்னாளில், பரம காருண்யனாகிய கூடலழகரைச் சேவித்து உய்யத் தவறாதேயுங்கோள்''.

இந்த வேண்டுகோளுடன் தமது உரையை முடித்துக் கொண்டு பெருமாளைச் சேவித்துவிட்டு தாம் தங்கியிருந்த நண்பர் வீட்டுக்குத் திரும்பினார் நாதமுனிகள். மறுநாள் காலை மார்கழி அத்யயன விழாவில் கலந்து கொள்வதற்காகத் திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டார். வழக்கம்போல மார்கழிப் பெருவிழாவில் கலந்து கொண்டு பின் தம் சீடர்களுடன் ஊர் திரும்பினார்.

திரும்பியதுமே தமது உபன்யாசப் பொருளையே பொருளாகக் கொண்ட நூல் ஒன்று படைப்பதில் மும்முரமாக ஈடுபட்டார். ''மகா புருஷ நிர்ணயம்'' என்று நாதமுனிகள் செய்ததாக பெரிய திருமுடி அடைவில் கேட்கப்படும் நூலுக்கும், ''குருமுக மனதீத்ய'' என்று தொடங்கும் இவர் செய்த தனியனுக்கும் நாம் அமைத்த பின்னணியே இந்த மதுரா விஜய வரலாறு.

## சேந்தனாரின் திருப்பல்லாண்டு (கி. பி 960)

நாதமுனியின் பிரச்சாரம் பலன் தரத் தொடங்கி விட்டதற்கு இப்போது ஒரு புது ருசு தோன்றிற்று. செப்புறைச் சேந்தனார் — நந்தனார் குலத்தவர் — பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டைப் பார்த்து தாமும் ஒன்றைச் செய்து, தில்லையில் தேரோட்டத்தை ஒரு சமயம் தொடங்கி வைத்தார். பின்னாளில் அது ஒரு அற்புதமாக மாற்றப்பட்டுவிட்டது. இதன் காலம் சரியாகத் தெரியாததால் பெரியாழ்வார் வரலாற்றை அடுத்தே இங்கு நாம் இதனைச் சுட்டிக்காட்ட வேண்டியதாயிற்று.

## வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தில் சோழர் படைவீடு (கி. பி. 950)

சோழப் பெருநாட்டின் வடவெல்லைப் பக்கத்தில் ஆட்சி செய்து வந்த சோழர் துணைவன் கங்க இரண்டாம் பிருதிவிபதி கி. பி 940-ல் இறந்து போனான். கங்க நாடு ராஷ்டிரகூடக் கிருஷ்ணனின் மைத்துனக் கங்கனாகிய பூதுகன் வசப்பட்டு விட்டது. கங்கர், வாணர் துணையோடும் ராஷ்டிரகூட மூன்றாம் கிருஷ்ணன் கி. பி 949-ல் சோழப் பேரரசைத் தாக்கினான். தக்கோலப் போரில் ஆனைமேலிருந்த சோழ ராசாதித்தனை குறி வைத்துத் தாக்கி கங்க பூதுகன் கொன்று விட்டான். தென் பெண்ணை வரை இருந்த சோழப் பேரரசின் தொண்டை மண்டலப் பகுதி முழுவதும் ராஷ்டிரகூடர் வசப்பட்டது. உத்தமசீலியை முன்பே இழந்து விட்டிருந்த சக்கரவர்த்தி பராந்தகருக்கு இது இரண்டாவது பேரிடியாயிற்று.

சோணாட்டைப் பாதுகாக்க இப்போது ஒரு புதிய வசதியான படைவீடு தேவைப்பட்டது. படைகளின் தேவைக்கேற்ற உணவு, நீர் வசதி, அரண் வசதி ஆகிய அனைத்தும் நிரம்பிய ஒரு புதிய இடத்தைத் தேடினர். வீரநாராயண சதுர்வேதி மங்கலம் ஒன்று மட்டுமே வட சோணாட்டில் தேவைப்பட்ட வசதிகள் எல்லாம் நிரம்பி நின்ற இடம். வடக்கே இருந்த வீராணத்தேரி ஒரு பெரிய நீர் அரணமாக உதவிற்று. மதுராந்தக வடவாறு படைஞர்கள் குளிக்கவும், குடிநீருக்கும் நன்கு உதவ வல்லது. சுற்றிலும் இருந்த நஞ்சை நிலங்களின் விளைச்சலும் உணவுத் தேவைக்குப் போதியதே. இவற்றால் அனந்தீச் சுரத்திற்கு வடக்கே இருந்த மேட்டுப் பகுதியில் ஒரு பெரிய கோட்டை கட்டப்பட்டது. அங்கே படைகளுடன் கண்டராதித்தரும், அரிகுலகேசரியும் நிறுத்தப்பட்டிருந்தனர். அதனால், வீரநாராயண

சதுர்வேதி மங்கலத்தின் இப்பகுதி 'உடையார்குடி' என்று ஒரு புதுப்பெயரும் புனைந்தது. இங்கே பராந்தகரின் 33–ஆம் ஆண்டிற்கு (கி.பி. 940)முன்பே கட்டப்பட்டிருந்த அனந்தீச்சுரமும் வழிபாட்டிற்கு வசதியாக இருந்தது.

## விரைந்து தொடர்ந்த அரசியல் மாற்றங்கள்

மூத்த மகன் ராசாதித்தன் கொலையால் மனம் இடிந்திருந்த பராந்தகர் வடவெல்லைப் பக்கத்து வைதும்பர் மகள் கல்யாணியையும், கீழைச் சாளுக்கிய இளவரசி வீமன் குந்தவையையும் மணந்திருந்த மூன்றாம் மகன் அரிஞ்சயருக்கு கி. பி. 953-இல் இளவரசுப் பட்டங்கட்டி விட்டு, தாம் அரசியலிலிருந்து அடியோடு விலகிக் கொண்டார். சின்னாட்கெல்லாம் அவரின் 48–ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 954) [1] அவர் ஆவி பிரிந்தது. உடன் ராசகேசரி கண்டராதித்தர் சிங்காதனம் ஏறினார். வடக்கே வலுப் பெற்றிருந்த ராஷ்டிரகூடரோடு நட்பு கொண்டு தமது அரசைக் காப்பாற்றினார். ஆயினும், சமயத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த சிவஞான கண்டராதித்தருக்கு [2] அரசியலில் நாட்டம் செல்லவில்லை, சுமார் நான்கு ஆண்டுகளுக்குள் சலித்துவிட்ட அவர் அரசியலுக்கே முழுக்க முழுக்குப் போட்டு விட எண்ணி, தம்பி அரிஞ்சயரின் மகனான இரண்டாம் பராந்தகருக்கு கி.பி.957-இல் இளவரசுப் பட்டம் கட்டி விட்டு கி. பி. 958.இல் எங்கோ மேற்கே போய் விட்டார். அதனால் அவருக்கு 'மேற்கெழுந்தருளிய தேவர் [3] என்றும் பெயராயிற்று.

---

1. ARE *1931*-32 p 49 para 11 *(வனமலி தின்னே, புங்கனூர் வட்டம், சித்தூர் மாவட்டம்)*
2. E. C. Vol. 9. Chennapatnam no. 2.
3. S. I. I. Vol 19, no. 11 (உடையார்குடி,பர. அரிஞ்சயனின் 2–ஆம் ஆண்டு)
4. ARE no 478/*1902* & E. I. Vol VII p 194 *(சோழபுரம்.)*

இளவரசர் இரண்டாம் பராந்தகர் மிக அழகாய் இருந்தபடியால், சோழப் பெருநாடு முழுவதும் அவரைச் 'சுந்தர சோழர்' என்று கொண்டாடிற்று.

தக்கோலப்போரில் (கி.பி. 949) வெற்றி பெற்றாலும் இரண்டு ஆண்டுகள் கழித்தே அதாவது கி. பி. 950 இல் தான் ராஷ்டிரகூடப் படைகள் தொண்டை மண்டலத்தில் நிலைபெற முடிந்ததை சோழபுரம் கல்வெட்டால் அறிகிறோம். இந்தப் படைகள் கி. பி. 953 வரை மட்டுமே அங்கே இருந்திருக்கலாம் போலத் தெரிகிறது, ஏனெனில், கி.பி. 954-லிருந்து ராஷ்டிரகூடர் கல்வெட்டுக் களோடு சோழர் கல்வெட்டுகளுங்கூட தொண்டை மண்டலப் பகுதியில் காணப்படுகின்றன. சோழர்களின் நன்னடக்கையால் திருப்தி பெற்ற ராஷ்டிரகூட மூன்றாம் கிருஷ்ணன் தொண்டை மண்டலச் சிற்றரசர்களுக்குத் தன்னுரிமை அளித்து விட்டு தன் படைகளை விலக்கிக் கொண்டான் என்னலாம். விடுதலை பெற்ற இச் சிற்றரசர்களும் ராஷ்டிரகூடரோடு மட்டுமேயன்றி சோழர்களுடனும் நல்லுறவு கொண்டு வந்ததை இரு மரபினர் கல்வெட்டுகளும் அனேக இடங்களில் கலந்தே காணப்படுவதிலிருந்து ஊகிக்கலாம்.[5]

## இசை ஞான நடுவராக (கி. பி. 955)

நாதமுனிகளிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த அப் போதைய அரசன் ஒருவன் கலைகளில் நல்ல ரசனை உள்ளவனாக இருந்தான். அவன்முன் இரண்டு பாடகிகள் தோன்றினர், தானே சிறந்தவள்-என முரண்டு பிடித்துக் கொண்டு. அரசன் அவர்கள் பிரச்சனையைத் தீர்க்க

5. Eanly Cholas Sethuraman, N., (1980) p.

இணங்கினான். போட்டி தொடங்கிற்று. முடிவில் அவை தேர்ந்தவளைப் பாராட்டி பரிசளித்துச் சிறப்பித்தான் அவன். ஒதுக்கப்பட்டவள் தன்னுடையது தேவகானம் என்றும், அதுவே சிறந்தது என்றும் வாதித்தாள். ஆனால், அந்த ஏழையின் குரல் அம்பலம் ஏறவில்லை.

உடைந்த மனத்தினளாய் ஊர், ஊராகப் போய் ஆலயங்களில் பாடி அவள் இறைவனிடம் முறையிட்டாள். அந்தப் பயணத்தில் மன்னனார் கோயிலுக்கும் வந்தாள். ஆலயத்தில் அவள் பாட்டைக்/கேட்டு பூரித்துப் போனார் நாதமுனி. தேவகான இலக்கணமான 'ப்ருகத்தேசி'யைச் செய்த மதங்கமுனிவரையே தெய்வமாக வழிபட்டு வந்தவரல்லவா அவர்? *அந்தப் பாடகிக்குக் கோயில் பிரசாதங்களை வழங்கி ஆசி கூறினார். தன் கானத்தையும் ரசிக்கத் தெரிந்த ஆத்மா அங்கிருந்தது அவளுக்குப் பெரிய அதிசயமாய் இருந்தது. அது மாபெரும் பண்டிதர் எனப் புகழ் பெற்ற நாதமுனியாய் இருந்ததைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினாள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டுமல்லவா? தன் சோகக் கதையைச் சொல்லி, தனக்கு உதவ வேண்டுமாய் அந்த முனிவரை கேட்டுக் கொண்டாள். தம் முன்னிலையில் மீண்டும் போட்டியிட்டால் தாம் கவனிப்பதாக அவரும் வாக்களித்தார்.

ஒரு கணமும் தாழ்க்காமல் அரசனிடம் ஓடினாள்; மன்னனார்கோயிலில் நாதமுனி தேவகானமும் அறிந்தவர் என்றும், அவரை நடுவராக வைத்து மீண்டும் போட்டி நடத்த வேண்டுமென்றும் மன்றாடினாள். நாதமுனியைப் பார்க்க முன்னமே ஆவல் கொண்டிருந்த அரசனும்

* காட்டு மன்னார் கோயில் பெருமாள் கோயில் கருவறையின் வடபக்கலில் மதங்கர் கோயில் ஒன்று இருப்பது இவர் நாதமுனிகளால் வழிபடப் பட்டதானாலேயே ஆகக் கூடும்.

அதற்கு உடனே ஒருப்பட்டான். அழைப் போலை பல்லக்குடன் மன்னனார் கோயிலுக்குப் பறந்தது. அரண்மனை வந்த நாதமுனியின் முன் போட்டி தொடங்கிற்று. இருவர் கானங்களையும் அவர் உன்னிப்பாகக் கேட்டார்; ஒவ்வொரு அமிசமாக ஒன்றையும் விடாமல் ஒப்பிட்டார்; முடிவில், தேவகானமே சிறப்பாகச் சாகித்யம் செய்யப்பட்டது எனத் தம் தேர்ந்த தீர்ப்பை வழங்கினார். 'எப்படி?' — அரசன் விளக்கம் கேட்டான். தேவகான நுண்மை அப்பக்கத்தவர்களுக்குத் தெரியாது —என்று அவர் விடையிறுத்தார். ''எனில், தங்களுக்கு அது தெரியும் என நம்புவது எப்படி?'' — அரசன் இன்னொரு கணையைத் தொடுத்தான். அதற்கு நாற்பது (நூறு) * தாளங்களை ஒரே சமயத்தில் ஒலிக்கச் செய்து, அவற்றுள் ஒவ்வொன்றின் எடையையும் கூறி, பிறகு தனித் தனியாக நிறுத்து, சோதித்துக் கொள்ளும்படி சொன்னார். சோதனையில் எடைகள் அவர் சொன்ன வண்ணமே இருந்தன. அரசனின் வியப்பு அளவிறந்தது. நாதமுனியின் பால் அவன் கொண்டிருந்த மதிப்பு முன்னிலும் பன்மடங்கு உயர்ந்தது. அவன் பரிசில்கள் பல நல்கிச் சிறப்பித்தான். ஆனால், அவற்றையெல்லாம் தம்மை ஆளுடைய மன்னனாருக்கே அவர் அர்ப்பணித்தார்.

மன்னனார் கோயிலை உட்கொண்ட கார் நாட்டின் தலைநகர் இப்போது கங்கை கொண்ட சோழபுரம் உள்ள இடத்திலேயே இருந்தது போல குருபரம்பரைகளின் போக்கு காட்டுகின்றது. ஆயினும் கி. பி. 950-லிருந்து வீரநாராயண சதுர்வேதி மங்கலம் — பெருமாள் கோயில் பகுதியையும் உட்கொண்டது — சோழர் படைவீடாக மாறிவிட்டதால், அது வேறொரு இடத்தின்

---

* நாற்பது தாளங்களையே பிற்காலத்தார் நாற்பது நூறு எனப் பன்மடங்கு பெருக்கி உரைத்திருக்கக் கூடும்.

ஆட்சிக்கு உட்பட்டிருக்க முடியாது இந்த நிலையில், நாதமுனிகள் குருகூர் சென்று வந்தது கி. பி. 944-45லேயே ஆகில், அவர் உடையார்குடியிலிருந்த சோழ அரசிளங் குமரனுடனேயேகூட தொடர்பு கொண்டிருக்க முடியும். இவரோடு தொடர்பு கொண்டிருந்தவனை சோழனாகவே குருபரம்பரைகளும் கூறுதல் நமது கருத்துக்குத் துணை யாகின்றது. இஃது உறுதிப்பட்டால், நாதமுனிகள் இசைப் போட்டியில் நடுவராக பணியாற்றிய வரலாற்றை வீரநாராயண சதுர்வேதி மங்கலம் கி. பி. 950ல் படை வீடாக ஆயின பின்னர் நிகழ்ந்ததாகக் கொள்ள வேண்டும். எனில், இந்தச் சோழரைப் பரமசைவரான கண்டராதித்த தராகக் கொள்வதினும், அரிஞ்சயராகக் கோடலே பொருத்தம்,

## செம்பியன் மாதேவியார் வருகை (கி. பி. 958)

மழவர் மகளாரும், மேற்கெழுந்தருளிய கண்டராதித்த சோழரின் துணைவியாருமான செம்பியன் மாதேவியார் கணவரைப் போலவே சிறந்த சிவனடியார். வீரநாராயண சதுர்வேதி மங்கலப் படைவீட்டில் இருந்த போது தாங்கள் நித்தமும் வழிபட்டு வந்த அனந்தீச்சுரரை கணவரின் நலத்துக்காக வேண்டிக்கொள்ள வென்று பரகேசரியின் 2–ஆம் ஆண்டில் மீண்டும் உடையார்குடிக்கு வருகை தந்தார். இந்தப் பரகேசரி அரிஞ்சய சோழரே என்பது பெருமபாலோர் நம்பிக்கை. எனில், இந்த ஆண்டு கி. பி. 958 ஆகற்பாற்று. ஆயினும், இப்பரகேசரியை உத்தம சோழனாகவும், இவ் ஆண்டை கி, பி. 972–ஆகவும் அறிஞர் சேதுராமன் கருதுவர் [6].

செம்பியன் மாதேவியார் வருவது பற்றிய செய்தி கிடைத்ததும் ஊரே அமளி, துமளிப்பட்டது. சிறப்பு வழி

6. Early Cholas, Sethuraman, N, 1980) p. 39

பாட்டின் பின் அரச மாதேவியார் அனந்தீச்சுரத்தில் நந்தா விளக்கு எரிக்க சாவா, மூவாப் பேராடுகள் 96-ஐத் தானமாக அளித்துச் [7] சென்றார்.

நாதமுனிகளின் மனம் மட்டும் நொந்திருந்தது. அண்மையிலேயே இருந்தும் மன்னனார் கோயிலை அரசியார் எட்டிப் பார்க்கவே இல்லை! அவருக்கு அஃதொரு பெரிய ஏமாற்றமாய் இருந்தது.

## மூன்றாம் கிருஷ்ணனின் இரண்டாம் படையெடுப்பு (கி. பி. 959)

ராஷ்டிரகூடக் கிருஷ்ணன் பாண்டி மண்டலத்தையும் (ஸ்ரீராமனைப் போல) இலங்கையையும்வென்று தன்னைத் தென்திசை முழுவதற்கும் பேரரசனாக ஆக்கிக் கொள்ள விரும்பினான் போலும்! அவன் படைகள் கி.பி. 959-இல் மீண்டும் தெற்கே விரைந்தன. தொண்டை நாட்டுக் குறுநில மன்னர்களும், ஏன், சோழர்களுங்கூட இவனுக்கு உதவினர் என்றே சொல்ல வேண்டும். பாண்டியன் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டான். இலங்கை வரலாற்று நூல்கள் மட்டும் இலங்கை அரசன் நான்காம் மகிந்தனே (கி.பி 956-962) வெற்றி பெற்றதாகக் கூறுவதால்,[8] கிருஷ்ணனின் இலங்கைப் படையெடுப்பு வெற்றி பெற வில்லை என்றே சொல்லத் தோற்றுகின்றது. இராமேச் சுரத்தில் ஒரு வெற்றித்தூணை மட்டுமே நட்டுவிட்டு மீண்டான். இந்தச் செய்தி இவனுடைய கரஹாட் செப்பேடுகளில் (9-3-கி,பி, 959) காணப்படுகிறது.[9] திரும்பும் வழியில், மேற்பாடியில் தங்கியிருந்த போது இவன் பல்லவகுல பார்த்திபேந்திர வர்மனுக்கு முடி

7. S. I. I. Vol 19, no 11 (உடையார்குடி, பரகேசரியின் 2-ஆம் ஆண்டு.)

8. The Cholas K. A. N., (1975) p. 154.

9. E. I. Vol IV p. 278 & E.I. xxxvi p. 56 & 58.

சூட்டினான் என்று எண்ண இடம் உண்டு. பார்த்திபேந்திர வர்மனின் கல்வெட்டுக்கள் பல 'மகாராஜா' எனவும், 'மகாராயர்' எனவும் இவனைக் கூறுவதால், இவன் ஒரு தனி அரசனே என்னலாம். ஆயினும், இவன்சோழர்களுடன் நட்புறவே கொண்டிருக்க வேண்டும், ஏனெனில், இவனும் சோழ இளவரசன் ஆதித்த கரிகாலனும் கூட்டாகப் பாண்டி நாட்டின்மேல் படை கொடு சென்று வீரபாண்டியனைச் சிறை பிடித்து சிரச்சேதம் செய்துள்ளனர். இவர்களின் கல்வெட்டுக்களில் ''வீரபாண்டியன் தலை கொண்ட'' என்ற விருது இவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதிலிருந்து இஃது ஊகிக்கப்படுகின்றது. இவ்விருது பார்த்திபேந்திரனின் இரண்டாம் ஆட்சியாண்டிலிருந்தே காணப்படுகிறது, பாண்டி நாட்டுப் படையெடுப்பின் காலம் கி, பி, 960[10]

## ஆற்றூரில் அரிஞ்சயரின் மறைவு (கி. பி. 960)

சுந்தர சோழரின் 12-ஆம் ஆண்டைய உடையார்குடிக் கல்வெட்டு[11] ஒன்று அரிஞ்சய சோழரை 'ஆற்றூர்த் துஞ்சிய அரிஞ்சிகை பன்மர்' — என்று குறிப்பிடுகிறது. ராஷ்டிரகூடரோடு ஆற்றூரில் இழைத்த போரில் அரிஞ்சயர் இறந்துபட்டிருக்க வேண்டும் என்பது பலரின் நம்பிக்கை. அக் காலத்திய கல்வெட்டுக்களை நுணுக நோக்கிய அறிஞர் சேதுராமன் இதற்கு ஆதாரமே இல்லை என்று எடுத்துக் காட்டியிருக்கிறார். எனவே, தமது உறவினரான வைதும்பர் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்ள ஆற்றூர் சென்றிருந்த போது அரிஞ்சய

---

10. Early Cholas (1980) p. 98-118 & 119-121

11. S. I. I. Vol 13 no 225 (உடையார்குடி ராசகேசரி 12ஆம் ஆண்டு, சுந்தர சோழர் காலம்)

சோழர் துஞ்சிவிட்டார் கி. பி. 960) என்று நாம் கொள்ளலாம்.

அடுத்து, சுந்தர சோழர் தஞ்சையில் சோழப் பேரரசராக முடி சூடிக் கொண்டார். அதே மூச்சில் தமது வீரத் திருமகன் 'வீர பாண்டியன் தலை கொண்ட' ஆதித்த கரிகாலனுக்கும் இளவரசுப் பட்டம் கட்டி வைத்தார்.

## அநிருத்தப் பிரமாதிராஜரும், மாதவ பட்டரும் (கி. பி. 961)

ஜைமினி சூத்திரம், அவேணிய (காஸ்யப) கோத்திரத்து அநிருத்தர் சுந்தர சோழரின் அன்பைப் பெற்ற முக்கிய அமைச்சர். கொள்ளிடக் கரையில் திருமழிசைப் பிரானால் பாடப்பட்ட அன்பில் அவரது சொந்த ஊர். மேலும், கொள்ளுப் பாட்டனார் அனந்தர், பாட்டனார் அநிருத்தர், தந்தை நாராயணர் ஆகிய இவரது முன்னோரெல்லாம் திருவரங்க நாதரிடம் ஈடுபாடு கொண்டவர்கள். பாட்டனார் அநிருத்தர் திருவரங்கத்தில் அர்த்த ஜாம பூசைக்கும், தாயார் ஒரு வெள்ளித் தட்டும், கிண்ணமும் அளித்து நித்தம் விளக்கிடவும் ஒரு பிராமணருக்கு உணவிடவும் ஏற்பாடு செய்திருந்தனர். அநிருத்த பிரம்மாதிராஜரே பங்குனி உத்திர விழாவின் போது பிராமணர்களுக்கு உணவு படைக்க மானியம் அளித்திருந்தார். ஏராளமான அலுவல்களுக்கிடையேயும் இவர் திருவரங்கத்திற்கு தமது நண்பர் மாதவ பட்டரோடும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார்.[12] இப்படி வரும்போதெல்லாம் நாதமுனி கோஷ்டியின் பாடல்களையும், இசைப் பொழிவுகளையும் தப்பாமல் இவர்கள் கேட்டு வந்தனர். இவருள்

12. E.I. Vol XX no. 27 (அன்பில் செப். சுந்தர சோழனின் 4ஆம் ஆண்டு)

மாதவ பட்டர் நாதமுனியின் சிஷ்யரும் ஆனார். நாதமுனி பிரம்மாதிராஜரைச் சந்திக்கவும் இவர் ஏற்பாடு செய்தார். இச்சந்திப்பின்போது நாலாயிர திவ்யப் பிரபந்தத்தின் மேன்மையையும், அதில் திருவாய்மொழி திருமங்கையின் காலத்தே திருவரங்கத்தில் வேதங்களோடு ஒப்ப அத்யயனம் செய்யப்பட்டதையும் நாதமுனி அமைச்சருக்கு எடுத்துக் கூறி, அதைத் தாம் உயிர்ப்பிக்க தமது ஆசார்யராகிய பராங்குசதாசருக்கு அளித்த உறுதி மொழியைப் பற்றியும் சொன்னார். நாதமுனியின் தன்னலமற்ற நோக்கத்திற்குத் தாமும் ஏதாவதொரு விதத்தில் உதவ வேண்டுமென்று அநிருத்தருக்குத் தோன்றிற்று. நம்பெருமாள் ஸ்ரீகார்யத்தில் சில முக்கிய புள்ளிகளை அழைத்து நாதமுனிகளைக் கூப்பிட்டு பேசச் சொல்லி விட்டு தாம் தஞ்சைக்குப் போய்விட்டார்.

## உபய வேதாந்தம் (கி.பி. 956)

ஸ்ரீ கார்யம் நாதமுனியை வரவழைத்தது. அதன் தலைவர் நாதமுனியைப் பார்த்துப் பேசினார்.

''ஐயா, நாதமுனி! பெரிய பெருமாள் ஸ்ரீகார்யம் முதலில் உங்களைப் பாராட்ட விரும்புகிறது. எங்கள் உற்சவங்கள், அத்யயனங்களைக் காட்டிலும், உங்களின் அத்யயனங்களிலும், உபன்யாசங்களிலும் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அதனால் திருவரங்கமே ஒரு புதிய கலகலப்போடு காணப்படுகிறது. முன் எப்போதும் இல்லாமல் மக்கள் கூட்டம் அத்யயனத் திருவிழாவின் போது அலை மோதுகிறது. ஏதோவொரு புதிய சகாப்தத்தின் தலைவாசலில் இருப்பது போன்ற பிரமை எங்களுக்கே தட்டுகின்றது.

ஆனால், எங்களில் சிலர் கோயிலின் அதிகார பூர்வமான நடைமுறையிலேயே உமது அத்யயனத்தையும்

சேர்க்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறார்கள். இது உமது சேவையின் விரும்பத்தகாத எதிரொலி. தமிழ்ப் பாடல்களை நீர் தனிப்பட்ட முறையில் பாடுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதைக் கோயில் வேதாத் யயனத்தோடேயே இணைத்துவிட வேண்டு மென்பது என்ன நியாயம்? அனாதியான வேதங்களோடு சமீப காலத்தில் வாழ்ந்து கழிந்த ஆழ்வார்களின் தமிழ்ப் பாடல்களை இணைப்பது பிராமணர் என்று கூறிக் கொள்ளும் உமக்கு அடுக்குமா? சொல்லும்''. —கேட்டார்.

''சொல்கிறேன்'' என்ற நாதமுனி உடன் பாடினார்:

> ''வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த
> மாறன் சடகோபன் வண்குருகூர் —ஏறு எங்கள்
> வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் எம்மை
> ஆள்வார் அவரே சரண்''

அவர் மனம் அப்போது சடகோபரையும், மதுரகவிகளை யும் நினைந்தது. ஆசார்யத் துதியை முடித்ததுமே ''கேளுங்கள்''—என்று உரையைத் தொடங்கினார்.

''உங்கள் மனத்தில் மூன்றுவித ஆட்சேபங்கள் ஒன்றோடொன்று உரசிக் கிடக்கின்றன. ஸம்ஸ்கிருதம், திராவிடம்—என்றபாஷைப் பிரச்சினையை நாம் முதலில் அறுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அதுவே பலரின் அடிமனத்தில் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை சம்பாஷணைகளில் நான் கவனித்திருக்கிறேன். ஸம்ஸ் கிருத மோகம் பிராமணர்களின் கண்ணை மறைக்கும் ஒரு மாயை. அது விலகினால் அன்றி உண்மை புலப் படாது. ஸம்ஸ்கிருதம் ஒரு தேவ பாஷை என்பதை நான் மறுப்பதாக யாரும் தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. பூ மண்டலத்திலேயே அதற்கிணையாக இன் னொரு பழைமையான பாஷை இல்லை. வேதங் களைப் போல் அனாதியான, அதாவது இன்ன

காலத்தியது என்று அறியக் கூடாத அளவுக்குப் பழமையான, கிரந்தங்கள் வேறெங்கு மில்லை,

ஆனால், பரத கண்டத்திலேயே ஸம்ஸ்கிருதத்திற்கு அடுத்தாற்போலச் சிறந்த பாஷை எது? சம்ஸ்கிருதம் சிவபெருமான் ஏந்திய டமருகத்தின் வலப்பக்கத்திலிருந்தும், திராவிடம் அதன் இடப்பக்கத்திலிருந்தும் தோன்றியதாகச் சொல்லப்படுவதை நீங்கள் கேட்ட தில்லையா? நாம் வேண்டுமானால் நாராயணனே இரண்டு மொழிகளையும் படைத்தான் என்று கொள்ளலாம். திராவிடத்தின் வியாகரணத்தை அகஸ்தியரே செய்தார் என்கிறார்கள். இவர் வேதகால ரிஷி அல்லவா? இன்றுள்ள தமிழ் வியாகரணங்களுள் எல்லாம் பழமையான தொல்காப்பியத்தைச் செய்தவர் அகஸ்தியரின் பிரதம சிஷ்யர் என்று தானே சொல்கிறார்கள்? இந்தத் தொல்காப்பியமும் பாணினியின் அஷ்டாத்தியாயிக்கும் முற்பட்ட இந்திர வியாகரணமான ஐந்திரத்திற்கு இணை யானதாம். பாரதப் போரில் உணவளித்த சேரமான் ஒருவனைப் பற்றிய பாடல் ஒன்று புறனானூறு என்ற கிரந்தத்தில் உண்டென்றும், அதில் தொல்காப்பிய விதிகளை மீறிய இடங்களும் இருப்பதால், இவ் ஆதி வியாகரணம் குறைந்தது துவாபர யுகத்துக்காகிலும் பிற்படாதென்றும் நான் பல வித்துவான்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

திராவிட சங்கத்தார் முன் திராவிட பாஷையைக் குறைத்து சம்ஸ்கிருதத்தை மட்டுமே பாராட்டி வேட்கோ குயக்கொண்டான் பேசியதாகவும், அது கேட்கப் பொறாத வேளாப் பார்ப்பனரான நக்கீரர்,

''முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி!
பரண கபிலரும் வாழி! — அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக்
குயக்கொண்டான்
ஆனந்தம் சேர்க சுவாகா''

எனப் பாடவே அவன் இறந்துபட்டானாம். பின் அவனைச் சேர்ந்தோர் பிழை பொறுக்க வேண்டினராக அவர்க்கிரங்கி அப்புலவர் பெருந்தகை

''ஆரியம் நன்று, தமிழ் தீதென உரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானை— சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்க சுவாகா''

எனவும் பாடி உயிர்ப்பித்ததாகவும் சொல்லப்படுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். சோழியப் பிராமணராய் மூங்கிற் குடியிற் பிறந்து விஷ்ணு தருமோத்தர முதலாகிய கிரந்தங்களை எல்லாம் கற்றுத் துறை போகிய தொண்டரடிப் பொடிகள் தாம்இறைவனைப் பாடப் புக்க போது தமிழாலேயே பாடினார். அது மட்டுமா? அவர் செய்த சம்ஸ்கிருத கிரந்தம் ஒன்றுகூட இல்லை. அபயக்குரல் எழுப்பிய போது கஜேந்திராழ்வார் ஆதிமூலத்தை சம்ஸ் கிருதத்திலா அழைத்தார்?''

''ஓய்! நாதமுனி! போதும் நிறுத்தும். இது சம்ஸ்கிருத சமிதி அல்ல, நீர் திராவிட பாஷா மான்மியம் பற்றி வழக்காட. வேதங்களுக்கு ஆழ்வார்களின் பாடல்கள் எப்படிச் சமமாகு மென்பதே நம் முன் உள்ள பிரச்சனை'' — ஸ்ரீகார்யத் தலைவர் சுட்டிக் காட்டினார்.

''நான் மூன்று பிரச்சனைகள் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா அவற்றுள் இது இரண்டாவது. முதல் பிரச்சனையைப் பற்றி நான் முடிக்கு முன்பே பாஷை வெறும் வாகனம் மட்டும் தான்; விஷயமே முக்கியமானது — என்பதை நீங்கள் உணர்ந்து விட்டதை இப்போது நீங்கள் இரண்டாவது பிரச்சனைக்கு தாவி விட்டது காட்டுகின்றது. சந்தோஷம். உங்கள் விருப்பப் படி இந்த இரண்டாம் பிரச்சனைக்கே வருவோம்.

வேதப் பாடல்கள் இந்திரன், அக்னி, யமன் போன்ற பல தெய்வங்களைப் பற்றியன. புருஷ சூக்தமும், ஸ்ரீசூக்தமும் மட்டுமே ஸ்ரீமந் நாராயணனையும் ஜகன் மாதாவான மகாலட்சுமியையும் பற்றியன. ஆழ்வார் களின் பாடல்களிலோ ஸ்ரீமந் நாராயணன் மட்டுமே பர தெய்வம். அடுத்து, வேதக்கிரந்தங்களில் மந்திர ஸம்கிதை (பாடல் தொகுப்பு)களுக்கு அடுத்த இடம் வகிக்கும் பிராமணங்கள் கர்ம காண்ட மாகும். அவை யாக முறை களை விரித்துரைக்கின்றன. யாகங்களில் தெய்வங்கள் இரண்டாம் இடமே வகிக்கின்றனர்: யாகங்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களே அல்லவா? ஆனால், ஆழ்வார்களின் பாடல்களில் இந்த மீமாம்சகப் போக்கு மருந்திற்குக் கூட இல்லை; பக்தியே மணக்கிறது. அதுவும் பல வண்ணங்களில்! திருமழிசைப் பிரான் சஹரதியாய்ப் பக்தி செய்தவர். தொண்டரடிப் பொடி களுடையது தாஸ்ய மார்க்கம். கோதை நாச்சியாரின் பிரேம பக்தி உலகறிந்தது. விஷ்ணு சித்தருடையதோ வாத்சல்ய பக்தி. திருமங்கையிடம் நாம் காண்பது புத்திர பாவம். இப்படி ரூபம் எதுவானாலும் இவை அனைத்தும் பக்தியே என்பதற்கு ஐயமில்லை. நமக்கெல்லாம் தாரக மான கீதை மூன்று யோகங்களில் பக்தி மார்க்கத்தையே சிலாகித்துப் பேசுகின்றது. அது கூறும் கர்ம யோகம் பிராம்மண மதமாகிய மீமாம்சை அல்ல — என்பது நிச்சயம். 'நிஷ்காம்ய கன்மம்' என்று கீதை கூறுவது யாகம் செய்வதை அல்ல; சம்சார நடப் பிற்கான ஒருவனின் கடமைகளையே (வர்ண தர்மம்) என்று நாம் உணர வேண்டும்.

இனி, வேதாந்தமாகிய உபநிஷத்துகளுக்கே வருவோம். இவை வைதிகத்தில் ஞான காண்ட பாக மாகும். இவைகளே 'ஒரு தெய்வம்' என்ற கோட்பாட்டை வற்புறுத்தி, அதனைப் 'பிரம்மம்' என்று பேசுபவை. ஆனால், இந்தப் பேச்சு பொதுப் படையானதாகவே உள்ளது. சித், அசித், ஈஸ்வர சம்பந்தம் பற்றி இங்கேயும்

பேத, அபேத, கடக ஸ்ருதிகள் என மூன்று விளக்கங்கள் உண்டு. சில காலத்திற்கு முன்பு சங்கராச்சாரியார் தோன்றி அபேத சுருதியை 'அத்வைதம்' என்ற பெயரில் பிரபலம் செய்தார். ஆனால், நம் ஆழ்வார் பாடல்களோ பிரம்மம் ஸ்ரீமந் நாராயணனே என்று அடித்துக் கூறி, அவனைக் கடக ஸ்ருதியின் மூலமாகக் கண்டு, ஐந்து ரூபங்களில், பக்தி மார்க்கத்தில் பரவுகின்றன. ஆழ்வார்கள் எதையும் அருளிச் செய்யாமலே கூட நற்கதி பெற்றிருக்க முடியும். அவர்கள் அருளிச் செயல்களைக் குறிப்பாகத் தமிழிற் செய்தது சாமான்யர்களின் உய்வுக்காகவே. தாம் பெற்ற பேறு இவ்வுலகமும் பெற வேண்டுமென அவர்கள் ஆசைப்பட்டனர்.

கடைசியாக, மகரிஷிகள் — ஆழ்வார்கள் இடையேயுள்ள தார, தம்மியங்கள் பற்றியும் சில வார்த்தைகள், நீங்கள் கேட்காவிட்டாலும், நான் சொல்லியே ஆக வேண்டும். மகரிஷிகள் எல்லாம் பிராம்மண மதம் தழுவிய மீமாம்சகர்கள்; அருந்தவ மூலம் தாம் பெற்ற அற்புத சக்தியால் மமதை கொண்டவர்கள்; தெய்வங்களையே கூட மதிக்காதவர்கள்! பிருகு மகாரிஷி சத்திய லோகம், கைலாச மெல்லாம் கலக்கி விட்டு வைகுண்டம் வந்து ஜகன்மாதாவான மகாலட்சுமி குடிகொண்ட திருமார்பில் எட்டி உதைத்ததை நீங்களோ, நானோ எப்படி அனுமதிக்க முடியும்? துர்வாசர் கோபமே உருவானவர். விஸ்வாமித்திர ரிஷியும் புதியதோர் உலகமே சிருஷ்டிக்கத் துணிந்தவர். பொதுவாக எல்லா ரிஷிகளுமே ''பிடி சாபம்'' கொடுப்பதில் முன்னின்றவர்கள் தாம். ஆனால், ஆழ்வார்களில் இப்படி அகம்பாவி யார்? கொஞ்சம் முரடராக இருந்த திருமழிசைப்பிரான், திருடராக மாறிய திருமங்கை மன்னர் ஆகியவர்களின் சற்றே மாறுபாடான நடத்தைகளிலும் ஈஸ்வர பக்தியே ஜ்வலிக்கின்றது. மாந்திரிகர்கள், பில்லி சூன்யக்காரர்கள் போல தேவாதி தேவர்களையே ஆட்டிப் படைத்த-

ரிஷிகளுக்கு ஆழ்வார்கள் எந்த விதத்தில் மட்டமான வர்கள்? அம்பரீஷன் என்ற தனது பக்தனுக்காக மகரிஷி துர்வாசரை மகாவிஷ்ணு சக்ககரப் பிரயோகம் செய்து துரத்தியடிக்கவில்லையா? தாருகாவனத்து மீமாம்சக ரிஷிகளை எல்லாம் சம்ஹாரம் செய்ய சிவபெருமான் கடுங்கோபம் கொண்டார் அல்லவா?

ஆழ்வார்களுள் பெரும்பான்மையினர் பிரம்ம குலத்தவர் அல்லர் என்பது சிலரின் மூன்றாவது ஆட்சேபம். ஆனால், ரிஷிகள் எல்லோருமே பிராம்மணர் கள் என்றும் சொல்ல முடியாது. உதாரணமாக, ரிஸ்ய சிருங்கர் மான் வயிற்றில் பிறந்தவர். மேலும் பிறப்பு நிலை, கல்வி, தோற்றம், குடிப்பெருமை, செல்வம், மதச் சடங்குகள் போலும் செயற்கை வேறுபாடுகள் எல்லாம் கற்பனைகளே என்றும், இறைவனுக்கு பக்தர்கள் அனைவரும் சமானர்களே என்றும் நாரத பக்தி சூத்திரம் (12, 73) கூறுகின்றது. பக்தி நெறியில் எல்லோரும் சமானர்களே எனச் சாண்டில்ய சூத்திரமும் (சூ. 78) இங்ஙனமே சாற்றுகின்றது. பொதுவாக, சாதி லவுகீகத்திற்கு மட்டுந்தானே தவிர, பரமார்த்த நிலைக்கு அல்ல. உயர்வு தாழ்வுகள் பூர்வ கர்மத்திற்கேற்ப மாறி வரவே செய்யும். ஆயினும், இழிபிறப்பிலும் கஜேந்திர ஆழ்வாரைப் போல முயற்சித்தால் மோட்சம் பெறலாம். சமீபத்தில் திருப்பாணாழ்வாரைச் சுமந்து ஆலயப் பிரவேசம் செய்து வைக்க லோகசாரங்க முனிவருக்கு அரங்கப் பெருமாள் அருளப்பாடு செய்யவில்லையா? கருடன், ஹனுமான், சடாயு முதலியவர்கள் மனிதர்களே அல்ல; பிரகலாதாழ்வார் ராட்சத குலத்தினர்; துருவன் ஏதுமறியாச் சிறு பிள்ளை''.

''ஓய்? அதிகப் பிரசங்கம் செய்யாதேயும். நீர் சகல சாஸ்திரமும் பயின்ற மகா பண்டிதர் என்பதை நாங்கள் அறிவோம். அது நீர் பிராமணராவதால்தான் என்பதை மட்டும் மறந்து விடாதேயும். மீண்டும் நினைவூட்டு

கிறோம். திருவாய்மொழியில் வேதாந்தக் கருத்துக்கள் அப்படி என்ன இருக்கின்றன?'' — மறுபடியும் நாதமுனியின் கவனத்தை பிரச்சனையின் பக்கம் ஸ்ரீ காரியத் தலைவர் இழுத்தார்.

''ஆம். ஏராளமாக இருக்கின்றன. எல்லாவற்றையும் சொல்ல இன்றொரு நாள் போதாது. அதை உங்களைப் போன்ற அதிகாரிகளுக்குச் சொல்லவும் கூடாது. இருந்தாலும், திருவாய்மொழி பெரிய கோயினுள் ஆட்சி பெற வேண்டும் என்பதில் உள்ள ஆசையில் இரண்டொன்று மட்டும் சொல்வேன்'' —நாதமுனி தொடர்ந்தார்.

''ஈஸ்வரன் தனக்கு மேலே ஒரு பொருள் இல்லாதவன் எல்லாப் பொருளும் அவன் படைப்புக்களே. எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தியுள்ள அமரர்களுக்கும் அதிபதி அவனே. மனிதர்களுள்ளும் அறிவாளிகளுக்கு அந்த நுண்ணறிவை அவனே கொடுத்தான். அம்மகத்தான அறிவையும், செல்வத்தையும் அவனைக் கைதொழுதாற் பெறலாம். நமக்கு அவற்றைத் தந்தருளிய நாதனை நன்றி அறிவோடு வணங்குவாய் மனமே! — என்ற கடவுள் வாழ்த்துடன் ஸ்வாபதேசமும் கலந்த பாடலோடு தமது பிரபந்தத்தைத் தொடங்குகிறார் ஆழ்வார். இந்த முதல் பாசுரமே உயர்வற உயர்ந்த பெரும் புகழ் பேசும் பாடல்தான். பாடுகிறேன் கேளுங்கள்.

உயர்வற உயர்நலம் உடையவன் யவன்? அவன்—
மயர்வற மதிநலம் அருளினன் யவன்? அவன்—
அயர்வறு அமரர்க் (கு) அதிபதி யவன்? அவன்
துயர்அறு சுடர்அடி தொழுதெ(ழு)என் மனனே.

அவசரம் ஒன்றுமில்லை. வீட்டிற்குப் போய், சாவதானமாய்த் திரும்பத் திரும்பப் பாடிப் பாருங்கள். பாடப் பாட பொருள் தானே விளங்கத் தொடங்கும்; பிறகு விரியவும் செய்யும்.

உயிர், உலகம், ஈஸ்வரன் என்ற மூன்றிற்கும் இடையே உள்ள உறவுகளைக் காண்பது தத்துவம். வேதாந்தப் பகுதியிலேயே இதற்கு மூன்று வழிகள் இருப்பதையும், இவற்றுள் கடகச் கருதியே வைணவ வழி என்பதையும் முன்னமே குறிப்பிட்டேன். உடலுக்குள் உயிரே போல், ஈஸ்வரன் உயிர்கள் மற்றும் உலகின் பல்வகைப் பொருட் களுக்குள்ளேயும் அந்தர்யாமியாக இருக்கின்றான் என்ற தத்துவமே கடக ஸ்ருதி. விஸ்வரூபத்தில் இந்த உலகம் அவனுக்கு உடலாகின்றது என்பது பொருள்.

திடவிசம்(பு), எரி,வளி, நீர்,நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதும் ஆய் அவை அவைதொறும்
'உடல்மிசை உயிர்எனக் கரந்தெங்கும் பரந்துளன்'
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே

திருவாய்மொழியின் இவ்வேழாம் பாசுரம் இதே கருத்தைத் தான் சொல்கிறது. ஓர் உருவம், ஒரு நாமம் — ஏதுமில்லாத பரம்பொருளை வியூக, விபவ, அர்ச்சா ரூபங்களில் உருவமும் பெயரும் கொண்ட வழிபாட்டை அங்கீகரிக்கும் வகையில்,

பேருமோர் ஆயிரம் பிறபல உடைய
எம்பெருமான்;
பேருமோர் உருவமும் உளதில்லை; இலதில்லை;
பிணக்கே

என்று ஆழ்வார் அருளிச் செய்தது ஏழை எளியவர்களின் பால் கொண்ட இரக்கத்தினாலேயே அல்லவா? ஆயினும், ஓதி, ஓதி உணருந்தொரும் உணர்ச்சி உதவும் வேத, வேதியர் விரிஞசன் முதலோர் தெரிகிலா ஆதி ஆயவன் அந்தப் பரவாசுதேவன் என்பதை

''உணர்ந்துணர்ந்து இழிந்தகன்று உயர்ந்துரு
வியந்த இந்நிலைமை
உணர்ந்துணர்ந்து உணரிலும் இறைநிலை
உணர்வரிது, உயிர்காள்!

என நம்மையெல்லாம் அறை கூவி ஆழ்வார் உண்மையும் சொன்னார். இனி, இப்படி அறிவாராய்ச்சிக்கு அப்பாற் பட்டு இருந்தாலும், பரம காருண்யனான அவன் பக்தி செய்தவர்களுக்கு எளிதில் வசப்படக் கூடியவனே. அவனைப் பற்ற இந்த உபாயத்தையும்,

> *பத்துடை அடியவர்க் கெளியவன்;*
> *பிறர்களுக்கு அரிய*
> *வித்தகன் — மலர்மகள் விரும்பும்நம்*
> *அரும்பெறல் அடிகள்*

என்ற அடிகளில் அவரே நமக்கு அறிவிக்கத் தவறவும் இல்லை.

'அரும்பெறல் அடிகள்'— என்ற தொடரில் 'அடிகள்' என்றது நம் சுவாமியை. 'மலர்மகள் விரும்பும் அடிகள்' என்பதன் பொருள் மகாலட்சுமியால் காதலிக்கப்பட்டு அவன் கைவசப்பட்ட நம் சுவாமி என்பதாம். இப்படி இவளுக்குக் கைவசம் ஆனாற்போலே, நமக்கும் பக்தி செய்தபோது எளிதாக அகப்படுவான் என்பது பொருள். ''பிறர்கள்'' என்று சுட்டப்பட்டோர் ஆராய்ச்சியாளர் களான பண்டிதர்களும், தவமேற்கொண்ட ரிஷிகளுமாம். காதல் அல்லது அன்பே அவனைப் பற்றச் சிறந்த வழி என்று சொல்லினார் ஆயிற்று. இங்கே சாஸ்திர ஞான மிக்க பண்டிதர்களும், கடுந்தவம் செய்கின்ற மகாரிஷி களும் விலக்கப்பட்டிருப்பது கருதத் தக்கது. பக்தி யோகமே மோட்ச சாதனம் என்கிறது திருவாய்மொழி வேதம். கீதையின் கருத்தும் இதுவே அல்லவா?

போகட்டும். வேதங்களுக்கும் திருவாய்மொழிக்கும் நேர் உறவு உண்டா என்ற உங்கள் கேள்விக்கே இப்போது வருவோம். ஆழ்வார் வேளாண் குலத்தினர் ஆவதால் அவருக்கு சம்ஸ்கிருத ஞானம் இருக்க முடியா தென நீங்கள் நினைப்பது நியாயமே. இனி, அந்தச் சந்தேகத்தை அகற்றி விடுங்கள். இதோ ஒரு பாசுரம்:

அவனே அகல்ஞாலம் படைத்து இடந்தான்;
அவனே அஃதுண்டு உமிழ்ந்தான்; அளந்தான்;
அவனே அவனும், அவனும், அவனும்;
அவனே மற்றெல் லாமும் அறிந்தனமே.

இதில் மூன்றாம் அடியில் மூன்று முறை 'அவனும்' என்ற சொல் பயில்வதை திராவிட பாஷா பண்டிதர்கள் யாரும் விளக்க முடியாது. ஆனால், நாராயணானுவாகத்தில்

'ஸ பிரம்மா; ஸசிவஸ் ஸேந்திரஸ்
ஸோக்ஷ்ரஹ பரமஸ் ஸ்வராட்'

என்ற சுலோகத்தில் பயிலும் வாசகத்தோடு ஒப்பிட்டால். மூன்று முறை இங்கே பயின்ற 'ஸ' என்ற வாசகத்தையே ஆழ்வார் 'அவனும்' என மொழி பெயர்த்தார் என்பது இனிது விளங்கும். பின்னிட்ட சடையானும், பிரமனும், இந்திரனுமே 'அவனும், அவனும், அவனும்' — என்ற தொடர்களால் குறிக்கப்பட்டவர்கள். ஆகவே, ஆழ்வார் வேதம் தமிழ் செய்தார் என்பதற்கு ஐயமே இல்லை. இப்படிப்பட்ட வேறு பல இடங்களை முறையாகப் பாடங் கேட்டு உணர்ந்து கொள்ளுங்கள்.

தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா;
இன்று தோன்றியன எனும் எவையும் தீதாகா*

என ரகு வம்சத்தில் காளிதாசன் குறிப்பிட்டதை நாம் இங்கே நினையத்தகும்.

முடிவாக ஒன்று மட்டும் கூறி முடித்துக் கொள்ள விரும்புகிறேன். வேத வேதாந்தங்களைக் கற்றுத் துறை போகிய மதுரகவிகள் உங்களைப் போலவே முதலில் ஆழ்வாரின் ஞானத்தில் ஐயமே கொண்டார். ''செத்த தின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'' என்று ஆழ்வாரிடம் வேதாந்த

---

* இந்தப் பாடல் உமாபதி சிவத்தின் தமிழ் வாக்கு. இது ரகு வம்சச் சுலோகத்தையே எதிரொலிப்பது தெளிவு.

விசாரணையை வேண்டுமென்ற ஒரு பரிபாஷையில் செய்தார். ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என அதே பாஷையிலேயே ஆழ்வாரின் பதில் பிறந்தது. அவர் என்ன செய்தார்? பிறப்பால் பெற்ற சாதிச் செருக்கையும் பாடுபட்டுக் கற்றதனால் அடைந்திருக்கக்கூடிய கல்விச் செருக்கையும் உதறித் தள்ளிவிட்டு,

> கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுணப்
> பண்ணி யப்பெரு மாயன்என் அப்பனில்
> நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால்
> அண்ணிக் கும்அமு தூறும்என் நாவுக்கே.

என்று தமிழ்பாடி ஆழ்வாரைத் தஞ்சமே புகுந்தார். இதே மந்திரத்தைப் பல ஆயிரம் முறை உச்சரித்தே அடியேனும் இந்தத் திருக்கோஷ்டியில் கலந்தேன்.

இன்னமும் கேளுங்கள். ஏதும் அறியாமலா இக்கோயில் நிர்வாகத்தை அன்றொரு நாள் தம் கையிற் கொண்டிருந்த திருமங்கைமன்னர் தம்மிலும் இளையவரான சடகோபரின் அருளிச் செயலை இதே இடததில் வேதங்களோடொப்ப அத்யயனம் செய்ய ஏற்பாடு செய்தார்?''

''ஒப்புக் கொள்கிறோம். ஆனால், பிறகு அது ஏன் தடைபட்டு விட்டது? நிறுத்திவிட்டவர்கள் ஏதும் அறியாதவர்களா?''—ஸ்ரீகார்யம் அவரை மடக்கிற்று.

''திருமங்கை மன்னர் காலத்தில் இதனை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டும் தற்குறிகளா? இந்த என் எதிர்க் கேள்வியே உங்கள் கேள்விக்கு ஏற்ற பதிலாகும்'',— நாதமுனி உடன் பதிலளித்தார்,

''திருமங்கை மன்னரின் அதிகாரத்திற்கு அஞ்சி அவர்கள் பணிந்திருக்கக் கூடாதோ?'' ஸ்ரீகார்யம் மீண்டும் தன் ஐயப்பாட்டை அறிவித்தது.

''எட்டெழுத்து மந்திரத்தை ஈஸ்வரனிடமிருந்தே பெற்றவர்கள் இவர்களில் யாரும் இல்லையே! இவர்கள் சாஸ்திர ஞானம் வயிற்றுப் பிழைப்புக்குத் தானே தவிர வேறு என்ன தகுதியை இவர்களுக்குக் கொடுத்தது? சோற்றுக்காக அத்யயனத் தொழில் செய்த இவர்களிடம் ஈஸ்வர சிந்தனை இருந்ததே யில்லை. திருவாய்மொழி அத்யயனத்தை நிறுத்திவிட்டவர்களும் இவர்களைப் போன்றவர்களேதான். தட்டிக் கேட்க ஆளில்லாத பிற் காலத்தில் இவர்கள் இப்படிச் செய்து விட்டனர். மெய்ப் பொருளை விளங்கிக் கொள்ளாமல் மனப்பாடம் செய் ததை ஒப்பித்து வயிறு வளர்த்த இந்த எந்திரங்களுக்கு கல்விச் செருக்கு இருக்க வழியில்லை எனில், இவர்களை நின்று நடத்தியது சாதிச் செருக்காக மட்டுமே இருக்க முடியும்.

நம்மைப் பொறுத்தவரையில் மகாபண்டிதரான மதுரகவிகளால்,

''மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடியென் நெஞ்சில் நிறுத்தினான்
தக்க சீர்ச்சட கோபன் என் நம்பியே''

எனக் கைதொழப்பட்ட சடகோபரே ஆன்ற மறைகளை ஆயிரம் தமிழால் செய்தளித்த ஞானத் தாய். மற்றைய ஆழ்வார்கள் பாடல்களிலும ஆம்மாதிரியான கருத்துக்கள் உண்டு. ஆகவே, ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் வேத சூக்திகளையும் கூட மிஞ்சி விடுகின்றன என்பதே என் தேர்ந்த கருத்து. ஆழ்வார்களும் இறைவனருளே பெற்றுப் பாடியவர்கள் ஆதலால், மகரிஷிகள் பழமையில் மட்டுமே ஆழ்வார்களை மிஞ்சிவிடுகின்றனர்.

மாணிக்கவாசகர் தூண்டுதலால் திருவாய்மொழியை வேதங்களுக்கு இணையாகக் கொள்ள மறுத்த சைவர்

களை எதிர்த்து மதுரையில் வாதித்தார் மதுரகவிகள். அதே பரம்பரையில் வந்த அடியேன் இப்போது அதே காரணத்திற்காக வழக்காடியது தக்கதே ஆனால், அதனை அரங்கமாநகரில் அரங்கப்பிரான் ஸ்ரீகார்யத்தோடேயே செய்ய நேரிட்டது என் துரதிர்ஷ்டமே. மன்னிக்க வேண்டும். இதற்குமேல் நான் ஏதும் கூற விரும்ப வில்லை.

*பக்தாம்ருதம் விஸ்வ ஜனானு மோதநம்*
*ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோப வாங்மயம்*
*சகஸ்ர சாகோ பநிஷத் சமாகமம்*
*நமாம்யஹம் த்ராவிட வேத சாகரம்.*

என்று எனது ஆசார்யர்களை வணங்கி, இங்கே அடியேனை வரவழைத்துக் கேட்ட மகாத்மாக்களுக்கு எல்லாம் நன்றி கூறி, நமஸ்கரித்து விடைபெறுகிறேன்''. நாதமுனிகள் தம் வாதத்தை முடித்தார்.

''ஆசார்யரே! வக்த்ரு வைலட்சண்யம் (நுவல்வோர்ச் சிறப்பு), பிரபந்த வைலட்சண்யம் (நூற்சிறப்பு), விஷய வைலட்சண்யம் (நுவல்பொருட் சிறப்பு) ஆகியன பற்றி தாங்கள் இட்ட வழக்கு எங்கள் அஞ்ஞானத்தை அகற்றி விட்டது. ஆழ்வார்களுக்குப் பின் புகுந்த இருளகற்றி புதிய சகாப்தம் தொடர ஸ்ரீகார்யம் முழுமனதோடு ஒப்புக் கொள்கிறது. அதற்கான திட்டங்களை வகுக்கும் பொறுப்பைத் தங்களிடமே ஒப்படைக்கிறோம்''

ஸ்ரீகார்யத் தலைவர் நாதமுனிகளை வேண்டிக் கொண்டார். ஆயினும், அங்கே இரண்டொருவர் இன்னமும் முணுமுணுத்துக்கொண்டுதான் இருந்தனர்!

தடைப்பட்டுவிட்ட அத்யயன விழாவை நாத முனியே தொடங்கி வைத்தார் என்று கோயிலொழுகு கூறுகிறது. அதற்கு அவர் எவ்வளவு எதிர்ப்புகளைச் சமாளித்திருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்த்து நாம் எழுதியதே இந்த வரலாறு. வக்த்ரு வைலட்சண்யம்,

பிரபந்த வைலட்சண்யம், விஷய வைலட்சண்யம் பற்றிய பேச்சு முப்பத்தாறாயிரப்படி பிரவேசத்தில் காணப்படுவ தெல்லாம் நாதமுனிகள் திருவாய்மொழியை ஸ்ரீகார்யத் தின்முன் அரங்கேற்றியபோது விடுக்கப்பட்ட சவால்களே. அது ஒரு பாரம்பரியமாக நம்பிள்ளை காலம்வரை தொடர்ந்து முப்பத்தாறாயிரப் படியில் புகுந்திருக்க வேண்டும்.

## திருவாய்மொழி அத்யயன விழா (கி. பி. 961)

திருமங்கையாழ்வார் தொடங்கி வைத்த திருவாய் மொழி அத்யயன விழாவை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமென நாதமுனிகள் விடுத்த வேண்டுகோளை ஸ்ரீகார்யம் ஏற்றுக்கொண்டு அதற்கான நடைமுறைகளை வகுக்கும்படியும் நாதமுனியையே கேட்டுக் கொண்டது ஒரு நல்ல திருப்பம். அவரும் நம்மாழ்வார் படிமத்தை குருகூரிலிருந்து அதற்காகக் கொண்டு வந்து விழாவை நடத்தி, பின் கோயில் மரியாதைகளோடு அனுப்பவும், விழாவின் போது நம்மாழ்வார் சார்பாக திருவாய் மொழியை அத்யயனம் செய்ய 'அரையர்' என்ற பெயரிற் சிலரை நியமிக்கவும் முடிவு செய்தார். முதலாவதாக, ஆழ்வாருக்கு அரங்கப்பிரான் அழைப்பைக் கொண்டி ருந்த திருமுகப் பட்டயத்தை உய்யக்கொண்டாரிடம் கொடுத்து குருகூருக்கு அனுப்பி விட்டு, மற்றைய ஏற்பாடு களை முடிப்பதில் மும்முரமாக இருந்தார். நாதமுனியே அத்யயன விழாவினைத் தொடங்கி வைத்தார் என்று கோயிலொழுகு கூறுவதால் நாம் இவ்வாறு கருதுகிறோம்.

குருகூரில் அப்போது பராங்குசதாசர் இல்லை. குருகைகாவல் அப்பன் என்ற இன்னொரு பெரியவர் திருவாய்மொழியை ஓதிக்கொண்டு வாழ்ந்து வந்தார். நாதமுனிகளை அவருக்கு நன்றாகத் தெரியும். திருவரங் கத்தில் நாதமுனிகள் செய்து வந்த திருப்பணிகளைப்

பற்றியும் நிரம்பக் கேள்விப்பட்டிருந்தார். நேரிற்சென்று அவற்றில் பங்கு கொள்ள வேண்டுமென்று அவருக்கு நிரம்ப ஆசையும் உண்டு. அந்த நல்ல சமயத்தில் உய்யக் கொண்டார் குருகூருக்கு வந்தார். அவரிடம் நாதமுனி களின் ஏற்பாடுகளைப் பற்றிக் கேள்விப்பட்ட குருகை காவல் அப்பன் தம்மையும் முனிகளிடம் சேர்ப்பிக்க வேண்டினார். வேண்டியதோடல்லாமல் ஆழ்வாரின் சிலையை அரங்கம் அனுப்பி வைப்பதற்காக குருகூர் கோயில் நிர்வாகத்திடமும் போரிட்டார். முடிவில் நிர்வாகம் ஒப்புக் கொண்டது. உய்யக்கொண்டாரும் குருகைகாவல் அப்பனோடும் ஆழ்வாரோடும் திருவரங்கம் திரும்பினார். குருகைகாவல் அப்பனைக் குருகூரினராக வும், உய்யக்கொண்டாரை இவரின் புருஷகாரராகவும் பெரிய திருமுடி அடைவு கூறுவதால் நாம் இவ்வாறு கற்பனை செய்தோம்.

நம்மாழ்வாரை அழைத்து வர உய்யக் கொண்டார் சென்றதுமே செய்தி ஊர், ஊராகக் காட்டுத் தீ போலப் பரவிவிட்டது. அந்த ஆண்டு மார்கழி அத்யயன விழா ஒரு உலகப் பெரும் விழாவாக அமையப் போவதை மக்கள் மனக் கண்ணால் கண்டனர்; திரள், திரளாகத் திருவரங்கம் நோக்கி நடந்தனர். ஆழ்வார் திருவரங்கம் அணுகியதுமே ஒரு பெருங்கூட்டம் எதிரேறி வந்து அவரை அழைத்துச் சென்றது. காவேரியின் வடகரையில் சந்தியா மண்டபமாகப் பயன்பட்டு வந்த திருக்குறளப்பன் சந்நிதியில் முன்னம் மதுரகவிகள் தங்கி இருந்த இடத் திலேயே ஆழ்வாரை இறக்கினர்.

மறுநாள் ஏகாதசி அன்று இரவு அழகிய மணவாளன் திருமண்டபத்தில் அத்யயனப் பெருவிழா. முன்பொரு கால் மதுரகவி செய்ததே போல, நாதமுனியின் நியமனத் தின்பேரில், கீழையகத்தாழ்வானும், மேலையகத்தாழ் வானும் திருவாய்மொழியை அபிநயத்துடன் சேவிக்கத் தொடங்கினர். பத்தாம் நாள் இரவில் 10-ஆம் பத்தை

ஓதத் தொடங்கி ஒன்பது பதிகங்களை முடித்து, ''முனியே! நான்முகனே!! முக்கண்ணப்பா!!!— என்ற இறுதிப் பதிகத்தில் பத்து பாசுரங்களும் ஓதி, கடைசியாக

''அவாவறச் சூழ் அரியை, அயனை, அரனை அரற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவில் அந்தாதிகளில் இவைஆயிரமும் முடிந்த
அவாவில் அந்தாதி இப்பத் தறிந்தார் பிறந்தார்
உயர்ந்தே''

என்று கடைசிப் பாசுரம் பாடிப் போய் அழகிய மணவாளன் திருவடியில் விழுந்தனர். அவர்களில் ஒருவருக்கு 'மதியாத தெய்வங்கள் மணவாளப் பெருமாள் அரையர்' — எனவும் இன்னொருவருக்கு ''நாதவினோத அரையர்' — எனவும் விருதுகள் அளித்து சிறப்புகள் செய்யப்பட்டன. அவர்கள் கோயில் மரியாதைகளோடு இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# 3. உலகளந்த சேவடிகள்

## ஆண்டானும், ஆண்டாளும், ஏறுதிருவுடையானும்

நாகை வட்டத்தில் திருவாரூருக்கு அணித்தான திருக்கண்ணமங்கை திருமங்கை மன்னரால் பாடப்பெற்ற திருப்பதி; நாதமுனிகளின் மருமக்கள் பிறந்த ஊர். இங்கிருந்து ஓரடியார் நாதமுனிகளைச் சரணடைந்தார். இவருக்கு திருக்கண்ணமங்கை ஆண்டான் என்பதே தாஸ்ய நாமம் ஆயிற்று. இவர் தமிழில் வல்லுநராய் இருந்திருக்கலாம் போலும். ஏனெனில், இவருக்கு தமிழ் மரபிற்கேற்ப காதல் இலக்கியங்களில் நல்ல ரசனை இருந்ததாக எண்ண இடமுண்டு. அவருடைய ஊரைப் பாடிச் சிறப்பித்த திருமங்கையும் காதல் பாட்டுக்கள் பல செய்தவரே ஆனாலும், தெய்வீகக் காதலே உருக் கொண்டு வந்த நாச்சியார் அருளிய திருமொழியே அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்ததிலிருந்து இதனை ஊகிக்கலாம். நாதமுனிகளிடம் நாலாயிரமும் பயின்றி ருந்தும் நாச்சியாரிடமே இவர் அதிகம் ஈடுபாடு உடைய வராய் இருந்தார்! அதனால், நாதமுனிகள் நாலாயிரப் பிரச்சார நிமித்தமாக வில்லிபுத்தூருக்கு ஆடிப்பூர விழாச் சமயம் வந்திருந்தபோது, ஆண்டானைப் பார்த்து நாச்சியாரைப் பற்றி உபந்யாசம் செய்ய அழைத்தார். அப்பணியை சிரமேற் கொண்டுற் ஆண்டானும் தமது சொற்பொழிவைத் தொடங்கினார். நாமும் கேட்போம் :

வண்புதுவை அருட்பெருஞ் செல்வர்களே!

உலக உய்வுக்காக வேண்டி, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தமது கீதோபதேசத்தில் பல வழிகளைக் காட்டினார்.

ஆயினும், ஏழை எளிய மக்களுக்கு அவர் எடுத்துக் காட்டியவை பக்தியும், பிரபத்தியுமே. சரம ஸ்லோகம் பிரபத்தித் தத்துவத்தின் பொருள் முழுக்கப் பொதிந்து காணும் மந்திரம் ஆகும். பிரபத்தி என்ற கடைசி வழிக்கு முன்னதாக பக்தியும் இயன்ற மட்டில் முயலத் தக்கதே.

என்னதான் பக்தி யோகம் பகவத் கீதையில் வற்புறுத்தப்பட்டிருந்தாலும், அது செழித்து வளர்ந்த தென்னமோ தமிழ் மண்ணில் தான். அமிழ்தினும் இனிய தோத்திரப் பாடல்கள் தமிழிற் போல உலகில் வேறு எங்குண்டு? பக்தி என்பது ஈஸ்வரனிடம் கொள்ளும் அன்பையே ஆகும். இதில் பல வகைகள் உண்டு. தொண்டன் போலவும், பிள்ளை போலவும், தோழன் போலவும் பல வகைகளில் இந்த அன்பு மலர்வதுண்டு. விஷ்ணு சித்தப் பெருமான் பெருமாளைப் பிள்ளையாக்கிப் பல்லாண்டு பாடி பெற்றோரைப் போல நடந்து கொண்டதால், அவர் நமது ஆசார்யரால் பெரியாழ்வார் எனப் பெருமை செய்யப்பட்டதை இங்கே உங்களுக்கு நினைவூட்டுகிறேன் குலசேகரப் பெருமாளுடையதும் ஒருவகையில் வாத்ஸல்ய பக்தியே. இந்த வாத்ஸல்ய பக்திக்கு இணையாக சைவ உலகல் ஏதுமில்லை என்பதையும் உடன் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால், உறவுகளுள் எல்லாம் நெருக்கமானது நாயகன்-நாயகிகளின் சேர்க்கையே அல்லவா? பண்டைத் தமிழ் நூல்களில் தலைவன் — தலைவி என்று இவர்கள் கூறப்படுவர். காதலும், இதற்கு இணையான வீரமும் உலகெங்கிலுமே பாடு-பொருள்தான் என்றாலும் இவை தமிழிலேயே ''அகம்'' , ''புறம்'' எனத் தனிச் சிறப்பெய்தி யிருந்தன. இந்தச் சங்கத் தமிழ் பாரம்பர்யமே சமயத் தமிழின் காலத்தில் பக்திக் காதலாக உருவெடுத்தது, அப்பர், சம்பந்தர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் அருளிச் செயல்களில்கூட அகப்பெருட் சுவைமிக்க பாடல்கள் இருந்தாலும், காந்தபாவம் ஆகிய மதுர

பக்தியை திருமழிசைப்பிரானே தொடங்கி வைத்தார். இதுவேயுமின்றி, மதுர பக்திக்கு முக்கிய களமாயும் வைணவமே அமைந்தது குறிப்பிடத் தக்கது. திருமங்கை ஆழ்வாரைப் 'பரகால நாயகி' என்றும், நம்மாழ்வாரைப் 'பராங்குச நாயகி' என்றும் கூட அழைக்கலாம். உதாரணத்திற்கு சில கிளிப் பாடல்களைப் பார்ப்போம்.

கல்லெடுத்துக் கன்மாரி காத்தாய்!என்றும்,
காமரு பூங்கச்சி ஊரகத்தாய்! என்றும்,
வில்லிறுத்து மெல்லியல் தோள் தோய்ந்தாய்! என்றும்,
வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே! என்றும்,
மல்லடர்த்து மல்லரையன்(று) அட்டாய்! என்றும்,
மாகீண்ட கைத்தலத்(து) என் மைந்தா! என்றும்,
சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லே — என்று
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றா'

—ளாம் (திருநெடுந், 13) பரகால நாயகி. அந்தக் கிளியும் அவள் வேண்டுகோட் கிணங்கி சொன்ன வண்ணமே செய்தது. அவ்வளவுதான் அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை, மூவா
மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை, அரங்கமேய
அந்தணனை, அந்தணர்தம் சிந்தையானை,
விளக்கொளியை, மரகதத்தை, திருத்தண்காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனால்பயன்பெற்றேன் வருகவென்று [அம்]
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினா—'ளாம்

(திருநெடுந். 14) அவள், பரகாலர் நாயகி வேடம் பூண்டு பாடுகின்றார்!

ஆனால், பராங்குச நாயகி இவ்வளவு அதிர்ஷ்டசாலி யாக இல்லை.

என்/இழை கோர்ப்பது போலப் பனிவாடை ஈர்கின்றது;
என்பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு
என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு என்னொரு
வாய்ச்சொல்
என்பிழைக்கும்? இளங்கிளியே! யான் வளர்த்த நீயலையே?

(திருவாய் 1–4, 7) என்று தான் வளர்த்த கிளியைக் கெஞ்சுகிறாள் அவள். ஆனால், அந்தப் பொல்லாத கிளி, பரகால நாயகி வளர்த்ததைப் போன்று, நன்றி அறிவுடையதாக இல்லை; கொஞ்சமும் சட்டை செய்யாமல் அலட்சியமாக இருந்துவிட்டது!

நீயலையே, சிறுபூவாய்! நெடுமாலார்க்குஎன் தூதாய்
நோய்எனதே நுவல்என்ன நுவலாதே இருந்தொழிந்தாய்?
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான்; இனியுன்
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே

(திருவாய் 1-4, 8) என்று அதனை அடித்து விரட்டி விடுகின்றாள்—அந்த வகுளாபரண நாயகி. இப்படி இன்னும் எத்துணையோ உண்டு.

ஆயினும், இந்தத் தெய்வீகக் காதல், பாவனை நிலையிலிருந்து நீங்கி, உண்மை வாழ்க்கையாகி வருத்தியது ஆண்டாளின் திறத்தில்தான்.

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன்துணைவி
மல்லிநா (டு) ஆண்ட மடமயில்—மெல்லியலாள்
ஆயர்குல வேந்தன் ஆகத்தாள், தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு

என்று இந்த அன்னையை அடியேன் பாராட்ட விரும்புகிறேன். ஏனெனில், காதல் பக்தியில் மட்டுமே யன்றி, காதல் இலக்கிய வானிலுங்கூட முழுமதியமாகத் திகழ்பவர் இவர். கடலன்ன காமம் உழந்தும் வெட்கத்தை விட்டு வெளிவந்து மடலேறத் துணியாதவள் நம்நாட்டுப் பெண். ஆழம் காணமாட்டாத அவள் அடிமனத்தை ஒரு ஆண் மனம், அது காதலின்பக் கரைகண்ட திருமங்கை மன்னருடையதே ஆகிலுங்கூட, முழுக்கப் பிரதிபலிக்க முடியுமா? — என்பது ஐயப்பாட்டிற்கு உரியதே. மாறாக, ஆண்டாளோ பெண்ணாகவே பிறந்தார்; இளமைப் பருவத்தில் இருந்தார்; காதலிக்கவும் செய்தார்; ஆனால், அவரால் காதலிக்கப்பட்டது மாற்ற, மனங் கடந்த முழு முதற் பொருளாய்ப் போனதால், அந்தக் காதல் ஒருதலை ராகமாகி கைகூடாமலேயே போய்விட்டது, என்னதான் வடபெருங்கோயிலுடையன் அவர் புனைந்த பூமாலை களை விருப்பமோடு கேட்டுப் புனைந்துகொண்டிருந் தாலும். இதனால், இறுக்கம் அதிகமாகி உள்ளத்தை உடைத்துக் கொண்டு பீறிட்ட உணர்ச்சி வெள்ளம் அவர் கவிதைக்கே கட்டுண்டது, சிவபெருமானின் சடாமுடியில் சிறைப்பட்ட கங்கைப் பேரியாறு போல. மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! (நா ,தி. 1,5) என்று காமக் கடவுளை விளித்து,

''பெண்மையைத் தலைமையுடைத் தாக்கும் வண்ணம்
கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள்

என்னுமிப் பேறெனக் கருள் கண்டாய்!

(நா,தி. 1,8) என்று இவர் மண்டியிட்டு வேண்டிக் கொள் கிறார். 'அன்பே சிவம்' என்ற திருமந்திரத்தை விடவும் 'மாதவன் என்பதோர் அன்பு' — என்று இவர் உணர்ச்சி பொங்க உச்சரித்ததே நம் உள்ளத்தைந் தொடுவதாக இல்லையா? அனுபவத்தால் மட்டுமே உணரப்படக்

கூடியதாய் இருப்பதால், நமக்கெல்லாம் தெரிய நியாய மில்லை என்று எண்ணிப் போலும் தாம் கண்ட அந்த அன்பை

''மற்றிருந் தீர்கட்(கு) அறியலாகா
மாதவன் என்பதோர் அன்பு''

(நா, தி. 12,1) என்று இவர் உரைத்ததெல்லாம்! இம் மாதிரியான இவர் அனுபவங்களை இவரின் சொந்தக் குரலில்தான் கேட்க வேண்டும். இதோ சில:

'பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர் பாசவலைப்
பட்டிருந்தேன்

(நா. தி. 5, 9) தாம் சிறைப்பட்டு வருந்துவதை எடுத் தோதுகின்றார்.

'கண்ணன் என்னும் கருந்தெய்வக்
காட்சிப் பழகிக் கிடக்கின்றேன்'

(நா. தி. 13–1) தாம் நனவிலே கனவு கண்டு கொண் டிருப்பதைக் கூறிக் கொள்கின்றார்.

'துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்த்
தோணி பெறாஅது உழல்கின்றேன்'

(நா. தி. 5-4) தாம் ஆசைக் கடலிடைக் கிடந்து தவிக்கும் தவிப்பை சொல்லோவியம் செய்து காட்டுகின்றார்.

'சிந்துரச் செம்பொடித் தூவினாற்போல் திருமாலிருஞ்
சோலை எங்கும்

இந்திர கோபங்களே எழுந்தும் பரந்திட் டனவால்;

மந்தர(ம்) நாட்டியன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட
சுந்தரத் தோளுடையான்* சுழலையில்நின்று
உய்துங்கொலோ!

(நா.தி. 9.1) உய்யமாட்டாமல் இவர் தவிப்பதைப் பாருங்கள். இங்ஙனமே,

'கோங்கலரும் பொழில் மாலிருஞ்சோலை பூங்கொன்றைகள்மேல்
தூங்குபொன் மாலைகளோடு உடனாய்த் தூங்குகின்றேன்;
பூங்கொள் திருமுகத்தின் வாய்மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வ (து) எஞ்ஞான்று கொல்?

(நா. தி. 9) தான் ஒருத்தியே சங்கொலி கேட்ட ருக்மணியும், நாணொலி கேட்ட சீதைப் பிராட்டியும் ஆய்விட இவர் துடிப்பதைப் பாருங்கள்!

'கார்க்கோடல் பூக்காள்! கார்க்கடல் வண்ணன் என்மேல் உம்மைப்
போர்க்கோலம் செய்து போரவிடுத்தவன் எங்குற்றான்?
ஆர்க்கோ, இனிநாம் பூசலிடுவது? அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப் படைக்க வல்லேன்; அந்தோ!

---

* சுந்தரத் தோளுடையான் என்ற பெயரை திருக்கோட்டியூர் நம்பிகளின் திருக்குமாரரும், திருமாலிருஞ்சோலையைத் தலைநகரக் கொண்டு பின்னாளில் ஆட்சி செய்த வாணாதி ராயர்கள் இருவரும் ஏற்றிருந்தனர்.

நா. தி. 10–1) என்று தாம் படைத்த காதல் நெஞ்சத்தை நொந்து கொள்கின்றார்,

'கணமா மயில்காள்! கண்ணபிரான் திருக்கோலம் போன்று
அணிமா நடம்பயின்(று) ஆடுகின்றீர்க்(கு) அடிவீழ் கின்றேன்;
பணமா (டு) அரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள்
மணவாளர் நமைவைத்த பரிசிது காண்மினே

(நா. தி. 10–5) என்று தாம் பித்தேறிப் பிச்சி ஆகிவிட்டதை மயில்களைக் கூவிக் காட்டுகின்றார்.

கொத்தலர் காவில் மணித்தடம் கண்படை கொள்ளும் இளங்குயிலே! என்
தத்துவனை வரக் கூகிற்றியாகில் தலையல்லால் கைம்மாறிலேனே' (5-1)

(நா. இ. 5–1) தலையல்லால் கைம்மாறிலேன் என்பதன் பொருள் தலை வணங்குவதைத் தவிர வேறேதும் செய்ய வல்லேன் அல்லேன்—என்பது தான். குயில் செய்த பேருபகாரத்திற்கு மாறு செய்ய வழியற்ற தம் கையறு நிலையை இங்கே ஆண்டாள் வெளியிடுகின்றார்.

விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துணிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மை ஈடழிக்கும் இதுதமக்கோர் பெருமையே

(நா. தி. 8-1) பெண் என்றால் பேயும் இரங்குமே என்று எடுத்துக்காட்டி ஏங்குகின்றார்.

மழையே! மழையே!!
அழகப்பிரானார் தம்மை என்நெஞ்சத(து) அகப்படத்
தழுவிநின்று என்னைத் ததர்த்திக்கொண்(டு)
ஊற்றவும் வல்லையே?

(நா. தி. 10-8) நெருக்கி கரைத்துக் கொண்டு போய்— என்ற பொருளில் 'ததர்த்திக் கொண்டு' என்று சொல்வதில் இவர்தம் உணர்ச்சியின் உறைப்பு எவ்வளவு வெளிப்படையாக உள்ளது!

கடலே! கடலே!! (என்னை)
உடலுள் புகுந்து நின்று ஊறல் அறுக்கின்ற மாயற்கென்
நடலை நோய்கள் எல்லாம் நாகணைக்கே சென்று
உரைத்தியே

(நா. தி. 11-9) கரையைத் தொட்டபின் அலை நீர் பின்வாங்கி கடலுக்குள்ளேயே போவதால், அங்கே உறங்கும் நாதனுக்குத் தூது செல்ல வேண்டுகிறார். இப்படிச் சுற்றுப் புறத்தில் உள்ள பொருட்களை யெல்லாம் கேட்டுக் கேட்டு பயனற்றுப் போனபின்,

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்(து) இருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்; சொல்ஆழி, வெண்சங்கே!

(நா. தி. 7-1) என்று பாஞ்சஜன்யத்திடமும் மாயன் செவ்வாயின் குணம் பற்றி வினவுகின்றார்.

அழிலும், தொழிலும் உருக்காட்டான்;
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்;
தழுவி முழுசிப் புகுந்தென்னைச் சுற்றிச்
சுழன்று போகானால்!

(நா. தி. 13-5) என்று ஆவி நைகின்றார்.

கொம்மை முலைகள் இடர்தீரக்
கோவிந்தர்க்கோர் குற்றேவல்
இம்மைப்பிறவி செய்யாதே
இனிப்போய்ச் செய்யும் தவந்தான் என்?

(நா. தி. 13-9) என்றும் சலித்துக்கொள்கின்றார்.

உள்ளுளே உருகி நைவேனை உளளோ? இலளோ?—
என்னாது
கொள்ளைகொள் இக் கள்வன் கோவர்த்தனனைக்
கண்டக்கால்
கொள்ளும் பயன் ஒன்று இல்லாவிக் கொங்கை
தம்மைக் கிழங்கொடும்
அள்ளிப் பறித்திட் (டு) அவன்மார்பில் எறிந்தென்
அழலை தீர்வேனே

(நா. தி. 13–8) என்றும் குமுறுகின்றார். பத்தினித் தெய்வம் ஆகிய கண்ணகியும், நமது குமரிக் கடவுள் போலவே கொந்தளித்து, நகில் குறைத்துத் தன் ஆவேசம் அடங்கினாள் என்பது இங்கே நினையத் தக்கது.

கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன்
கைகண்ட யோகம் தடவத் தீரும்

(நா. தி. 12–5) வேறு மருந்தில்லை தாம் கொண்ட நோய்க்கு என்று வெளிப்படையாகக் கூறுவதைப் பாருங்கள்.

மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின்
மாயவன் வந்துஉருக் காட்டுகின்றான்

(நா. தி. 12–3) என்று தம் ஆற்றாமையை எடுத்துரைத்து, சுற்றத்தாரை முடுக்கியும் விடுகின்றார்.

நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய்வாய் நேர்ந்து
பராவி வைத்தேன்;
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்;
ஏறு திருவுடையான் இன்று வந்து இவைகொள்
ளுங்கொலோ?

இன்றுவந் (து) இத்தனையும் அமுதுசெய்திடப்
பெறில்நான்
ஒன்று நூ றாயிரமாகக் கொடுத்துப் பின்னும் ஆளும்
செய்வென்;
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ் சோலை தன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தேவந்து நேர்படினே

(நா-தி 9-5 & 6) என்று தம் கோரிக்கை நிறைவேறிய பின்னரும் தாம் அடிமை செய்யக் காத்திருப்பதை எடுத்துரைக்கின்றார்.

குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மற்றேலோர் எம்பாவாய்!
(திருப்பாவை 29)

இப்படித் தம் அடிமைத்தனம் பல்பிறப்பிடை இனியும் தொடரக் கோரி தமது 17 அல்லது 18–ஆம் பிராயத்தில் திருவரங்கமுடையார் திருமுன்பில் தமது பூதவுடலை

நீத்து ஆவியாய் அரவணைமீதேறி அரங்கத்தம்மான் அடிப்பக்கலில் அடைந்தனர். இந்தத் திருப்பாவைத் திருவாக்கை,

இம்மை மாறி மறுமை ஆயினும்,
நீ ஆகியர் எங்கணவணை;
யானாகியர்-நின்நெஞ்சு நேர்பவளே (குறுந். 49)

என்ற குறுந்தொகைக் காதலியினுடையதோடு ஒப்பிட்டு, சங்கத் தமிழ், சமயத் தமிழ்களின் சக்திகளை உணர்ந்து கொள்ளுங்கள். கைக்கிளையேயான முத்தொளளாயிரப் பாடல்களின் அருமை எல்லாம் சொல்லும் விதத்தில் காணும் நயம் மட்டுமே; கவிதைக்கு உயிரான உணர்ச்சியின் உத்வேகம் நாச்சியார் திருமொழியிற் போல அவற்றில் இல்லை. கோதை என்ற கானமயிலின் முன் கவிச் சக்கரவர்த்தியான காளிதாசனுங்கூட ஒரு வான் கோழிதான். தமிழ் நாட்டில் பெரும்பாலும் நாலாயிரப் பாணியிலேயே திருவாசகம் செய்த சைவமணியாகிய மாணிக்கவாசகருங்கூட தமது திருவெம்பாவையிலும், குயில்பத்திலும் இன்ன பிற பாடல்களிலும் கவிதா சக்தியில் நமது நாச்சியாரை மிஞ்சிவிடவில்லை. மாணிக்கவாசகர் பாடலில் நல்ல தமிழ் மணப்பதை நாம் மறுக்கவில்லை. இனி, ஆழ்வார்களுள் நடுநாயகம் ஆகின்ற ஆண்டாளை நாம் நமக்கெல்லாம் அன்னையான சிரங்க நாச்சியாருக்கு இணையாக வணங்குகின்றேன்.

கோலச் சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும
சீலத்தனள், தென்திருமல்லி நாடி செழுங் குழல்மேல்
மாலைதொடை தென்னரங்கர்க்கு ஈயும மதிபபுடைய
சோலைக் கிளிஅவள் தூயநற் பாதம் துணைநமக்கே

என்றும் வாழ்த்துகிறேன். நீங்கள் எல்லாம்

''ஆண்டாள் திருவடிகளே சரணம்''

என்று உரத்த குரலில் முழங்கி ஆண்டு தோறும் மார்கழித் திங்களில் குறைந்தது திருப்பாவையை யாகிலும் நாளுக்கொரு பாடலாக அனுசந்திக்க வேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டான் உரையை முடித்தார். அவ்வளவில் கூட்டத்திலிருந்து ஒருவர் மேடையை நோக்கி வந்தார். வந்தவர் ஆண்டானைப் பாராட்டிவிட்டு ஆசார்யர் முன் தண்டனிட்டு, தம்மையும் ஒரு சீடராக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். ஆண்டாள் பாசுரப் பிரசாதமாக வந்த அந்த பக்தருக்கு ஆசார்யர் ஆண்டாள் பாசுரப் பதமான ''ஏறுதிருவுடையான்'' என்பதையே தாஸ்ய நாமமாக இட்டு ஏற்றுக் கொண்டார். ஏறு திருவுடையான் எவ்வூரினர் என்பது தெரியாததால், அவர் வில்லிபுத்தூரில் ஆசார்யரை ஆசிரயித்ததாக நாம் கதை புனைந்தோம்.

## அரசனின் நன்மதிப்பு

இசைப் போட்டி நடைபெற்ற நாளிலிருந்து நாதமுனிகளிடம் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார் அண்மையிலிருந்தஓர் அரசர். ஒருசமயம் ஆசார்யர் மனைக்குவருகை தந்தார். ஆசார்யரோடு அளவளாவி மீண்ட போது, தன் பணியாளை அமர வைத்து அவன் முடிமேல் அடிவைத்து ஏறி யானை மேல் அமர்ந்து சென்றார். அது கண்ட ஆசார்யர் வைகுந்த வாசனுக்கே போய்விட்டார். பின்னிட்ட சடையானும், பிரமனும், இந்திரனும் ஆகிய தேவாதி தேவர்கள் முடிமேல் அடிவைத்து ஆதியம் பகவன் கருடன் என்னும் வெற்றிக் கடும்பறவை மேலேறி போவதே போலக் கண்டார்! ''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்'' என்று

ஆழ்வார் பாடியதை திருவா. 4-5, 8 அவர் பயின்று அதில் தோய்ந்ததன் விளைவு இது.

இன்னொரு சமயம் அப்பக்கம் வந்த அவ்வரசர் அலுவல் முடிந்ததும் மீண்டும் ஆசார்யர் மனைக்கு எழுந்தருளினார். ஆனால், ஆசார்யர் அப்போது நிட்டையில் இருந்தார். அதனால் பிறகொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம் என்று அவர் திரும்பிவிட்டார்,

அந்த ஆரவாரத்தில் நிட்டை கலைந்தது. கண்ணைத் திறந்து பார்த்தார். அரசர் தன் அரசியர் கூட்டத்தின் நடுவே கோலாகலமாகத் தூரத்தில் போய்க் கொண்டிருந்தார். அவர் சிந்தனை விரிந்தது. கோவிகைகள் கூட்டமும் கண்ணபிரானுமாய் அந்த அரச கோஷ்டியினர் காட்சியளித்தனர். அந்தத் திசை நோக்கித் தொழுதார். உடன் எழுந்து அவர்களை நோக்கி விரைவாக நடந்தார்; அரண்மனை வரைக்குங் கூடப் போய் விட்டார்.

வேறிடம் சென்றிருந்த சீடர்கள் திரும்பி வந்து ஆசார்யரைக் காணாமல் தவித்தனர். குடும்பத்தினர் சொன்ன குறிப்புகளைக் கொண்டும், வழியில் எதிர்ப்பட்டவர்களை விசாரித்து அறிந்து கொண்டும் அரண்மனை வாயிலில் வந்து அவரைப் பிடித்தனர்.

''தேவரீர் இப்படிச் செய்யலாமோ? வந்து மீண்டவர்கள் அரசகுடும்பத்தினர் தாமே?''— அவர்கள் ஆதங்கப் பட்டனர்.

''மெய்தான். தம் பெண்டிரோடு வந்த அரசரை கோவிகைகளுடன் கூடி விளையாடிய கண்ணனாகக் கண்ட மனம் பேதலித்து விட்டது'' — பெருமூச்சுடன் கூறி அவர் வந்தவர்களுடன் வீடு திரும்பினார்.

## நாங்கூர் நாட்டில் நாதமுனி கோஷ்டி:

சிறிய நாட்டுப் பிரிவுகளில் நம்மாழ்வாரின் திருவழுதி வளநாட்டுக்கும், திருமங்கையாழ்வார் பிறந்த நாங்கூர்

நாட்டுக்கும் வைணவ வரலாற்றில் ஒரு தனிச்சிறப்புண்டு. நாட்டுப் பற்றால் இவர்கள் தங்கள் நாட்டுச் சிறு, சிறு கோயில்களையெல்லாம் ஒன்று விடாமல் பாடி வைத்ததால், இவ்விரண்டு பகுதிகளிலும் திருப்பதிகளின் (திவ்ய தேசங்களின்) தொகை மிக அதிகம். ஆனால், இத்தனை கோயில்கள் இச்சிறுநிலப் பகுதிகளுள் இருந்தன என்பதுதான் இதைவிடவும் சிறப்பான செய்தி.

திருவழுதி வளநாட்டின் மன்னரான நம்மாழ்வாரின் முன்னோர் எல்லாம் வைணவர்கள். இப்படியே நாங்கூர் நாடும் பரம்பரை வைணவர்களால் ஆளப்பட்ட ஒரு சோணாட்டுப் பிரிவே ஆகல் வேண்டும் என்னலாம் இங்கேயுங்கூட தெருவுக்கு ஒரு கோயிலாக நாங்கூர் ஊருக்குள்ளேயே ஆறு கோயில்கள் உண்டு. இது போன்ற சிறப்பு வேறு எங்குமேயில்லை. நம்மாழ்வாரால் பாடப்பட்ட திருவழுதி வளநாட்டுத் திருப்பதிகள் எட்டு மட்டுமே. அவ்வனைத்தையும் குருகூர் சென்றபோது நாதமுனிகள் சேவித்து விட்டே வந்தார். ஆனால், திருமங்கையால் பாடப்பட்ட நாங்கைப் பதிகள் பதினொன்றாயிருந்தும் அவற்றுள் ஒன்றிற்குக் கூட ஆசார்யர் இது வரை சென்றதில்லை. அந்தக் குறையைத் தீர்க்க இப்போது அவர்கள் நாங்கூர் போயினர்.

கரிகாலனுக்குப் பெண் கொடுத்த பெருமை படைத்தது நாங்கூர். இங்கு வாழ்ந்தவராகக் கருதப்படும் மதங்கர் இசை இலக்கணமான 'ப்ருகத்தேசி'யைச் செய்தவரே ஆகலாம். திருமங்கையாழ்வாராலும் பலபடப் பாடப்பட்டு இதுதனதுபழம் பெருமையைத்தக்கவைத்துக் கொண்டது நாங்கூர் ஊருக்குள்ளேயே ஆறு தலங்கள் இருந்தன; ஊரைச்சுற்றிலும் நாங்கூர் நாட்டுக்குள்ளாகவே வேறு ஐந்து இருந்தன. அவர் அன்னதானம் செய்த இடம் மங்கைமடம் என்ற பெயரில் இந்நாள் காணப்படும் ஊரிலேயே இருந்ததாம். இவையே அன்றி திருமங்கை மன்னர் அவதரித்த திருக்குறையலூம் (கொரளூர்) நாங்கூர்

நாட்டினது தான். குறையலை அடுத்தே அவர் ஆண்ட ஆலி நாட்டின் தலைநகரான திருமங்கை நகரும் (திருநகரி) இருந்தது. அவர் கொள்ளையிட்ட இடமான திருமணங்கொல்லை மங்கை நகருக்கு மிக அணித்தானதே. ஆலி நாட்டின் பண்டைத் தலைநகரான திருவாலி நாங்கூருக்கு மிகச் சமீபத்தியது. திருவாலியில் உள்ள (நரசிங்கப்) பெருமாள் கோயில் ஆழ்வார் கட்டியதாகவே நம்பப்படுகிறது. ஆழ்வார் நித்தமும் பூசித்தது நரசிங்கமூர்த்தமே (பள்ளிகொண்ட கோலத்தது அல்ல!)— என்பதுதான் வியப்பைத் தருகிறது. தமிழகத்து உலோகத் திருமால் படிமங்களுள் இப்பக்கத்திய பெருங்குளத்தில் உள்ளதே மிகப் பழமையானதென அறிஞர் சந்திரமூர்த்தி கருதுகிறார். திருமங்கைக் கோயிலில் ஆழ்வார் பிறந்த கார்த்திகைப் பவுர்ணமியோடு முடியும் 10 நாள் விழாவும், ஆழ்வார் கொள்ளையிட்டதன் நினைவாக கொண்டாடப்படுவதும், பங்குனி உத்தரத்தில் முடிவதுமான 10 நாள் விழாவும் நெடுங்காலமாகக் கொண்டாடப்பட்டு வருபவை.

திருமங்கையாழ்வார் விழாவில் கலந்து கொண்ட நாதமுனிகள் அங்கே ஒரு உபன்யாசமும் செய்தார்:

நாங்கூர்ப் பெருமக்களே!

ஆழ்வாரின் மகிமைகள் அத்தனையும் உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரிந்தவைதான். கொல்லன் தெருவில் ஊசி விற்கத் தேவையில்லை. ஆகவே, இவர் வரலாற்றில் அடியேன் கண்ட சிறப்பை மட்டும் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆழ்வார் திறத்தில் அடியேனைக் கவர்ந்தது உபதேச வரலாறுதான். இம்மாதிரியான உபதேசங்கள் இதற்கு முன்பு நடந்தவற்றுள் பெரிதும் குறிப்பிடத்தக்கவை இரண்டு. நாராயணர் நரருக்கு பத்ரிகாஸ்ரமத்தில் திருமந்திரோபதேசம் செய்தது இவற்றுள் முதலாவது.

ஆழ்வார் திருமணங்கொல்லையில் திருட்டுக் களத்தில் உபதேசம் பெற்றதில் களம், பாத்திரம் ஆகிய இரண்டுமே மட்டம். இருந்தும், இதுவே பத்ரிகாஸ்ர உபதேசத்தினும் அதிகப் பலன் தந்தது.

இரண்டாவது ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா குருக்ஷேத்ர ரண ரங்கத்தில் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசம். வில்லாளியாக நின்ற வீர விஜயனினும் உபதேச காலத்தில் திருடராக இருந்த திருமங்கை தாழ்ந்தவரே. இருந்தும், விஜயனுக்குக் கிடைத்தது கீதோபதேசம் மட்டுமே. மாறாக, திருமங்கைக்குக் கிடைத்ததோ திருமந்திர உபதேசம்! கீதை எவ்வளவு சிறந்ததாயினும், சகல மந்திர சாரமாகிய திருமந்திரத்துக்கு ஈடாக முடியாதல்லவா?

நரர் மற்றும் அர்ஜுனனுக்கு இறைவன் தனியாகவே உபதேசித்தது போலவின்றி, திருமங்கையாழ்வாருக்கு திருமகளோடே கூடி இவ்வாறு செய்தது இன்னொரு சிறப்பு. பொய்கை மற்றும் பூதத்தாழ்வார்களின் கண்களுக்குத் தோற்றாமல், பேயாழ்வார் கண்களுக்கு மட்டுமே பிராட்டி தென்பட்டு அவரை 'திருக்கண்டேன்' என்று பாட வைத்ததை இங்கே நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். திருமங்கைக்கு திருமந்திரோபதேசம் செய்ய அனைத்து உயிர்களுக்கும் புருஷகார்யையான மகாலட்சுமியோடும் எதிர்வந்தது த்வய சாட்சாத்காரமும் ஆகும்.

நான்காவது, நமது பாரம்பர்யம் முழுவதிலும் காலைக் கடிக்கும் அளவுக்கு திருமங்கையைப் போல ஈஸ்வரனுக்கு அணுக்கராயிருந்த இன்னொருவரைக் காண முடியவில்லை. ''கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன் கைகண்ட யோகம் தடவத் தீரும்'' நோயினால் வாதைப் பட்டு அதற்காகவே தவங்கிடந்த ஆண்டாளுக்குங்கூட இறைவன் திருமேனியைத் தீண்டலாவதோர் (ஸ்பரிச)

தீட்சை கிடைக்கவில்லை! ஆண்டாளுக்கே இந்த கதியென்றால், நரருக்கும் அர்ஜுனனுக்கும் இது கிடைக்கும் வாய்ப்பே இருக்க முடியாதல்லவா?

கடைசியாக ஒன்றும் சொல்லலாம். இது இறைவனின் அருளுக்கு நாம் பாத்திரமாகும் விதம் பற்றியது. பொதுவாக, இரண்டு வகைகள் சொல்லப்படுகின்றன— மர்க்கட நியாயம், மார்ச்சார நியாயம் என இவை முறையே குரங்கு வழி, பூனை வழி எனப் பொருள்படும் குரங்கு தன் குட்டிக்குத் தேவைப்படும்போதே உதவுவதை நாம் அறிவோம். இப்படியே இறைவனும் உயிர்கள் கோரும் போது அருள்புரிவான் என்பது கருத்து. அதாவது, நற்கதிக்குத் தன்முயற்தி வேண்டும்— என்பது மர்க்கட நியாயத்தின் நிலை. துருவன், கஜேந்திரன், திரவுபதி முதலியோருக்கு இவ்வகையிலேயே பகவான் உதவினான்.

'மார்ச்சார'— என்பது பூனை எனப் பொருள்படும். பூனை தன் குட்டியை அது கோராமலேயும், கண்ணை இமை போல, தானாகவே காக்கின்றது. இங்ஙனமே இறைவனும் தன் பக்தர்களை தானாகவே வந்து காப்பாற்றுவான்— என்கிறது மார்ச்சார நியாயம். இதற்கு உதாரணங்கள் மிகக் குறைவே. தொண்டரடிப்பொடிகள் தடுத்தாட்கொள்ளப்பட்டதை வேண்டுமானால் ஒன்றாகக் கொள்ளலாம். பெரியாழ்வார் கனவில் தோன்றி கோதை தொடுத்த மாலைகளே தனக்கு மிக உகந்தனவாகக் கூறி வடபெருங்கோயிலுடையான் அவர் வருத்தத்தைப் போக்கியதும் ஒருவகை மார்ச்சார நியாயம் தான். இங்ஙனமே திருமங்கைமன்னரும் இறைவனைத் தமக்கு உதவ லேண்டும் என்று கோரியதாகத் தெரியவில்லை. மேலும், அவர் மேற்கொண்டிருந்தது களவுத் தொழில். (இருந்தும்) வேண்டாரை வேண்டிடும் செல்வம் போல் பகவான் ஜகன் மாதாவோடும் வலிய வந்து ஆழ்வாரை ஆட்கொண்டான். திருவருள் வரலாற்றில் திருட்டுத் திருமங்கைக்குக் கிடைத்தது ஈடெடுப்பற்றபேறு;

—குளித்து மூன்றுஅனலை ஓம்பும் அந்தண் குலத்துத் தொண்டரடிப்பொடிகள், பெரியாழ்வார் உள்ளிட்ட பெரியார்கள் எவருக்கும் கிடைக்காதது!

இனி, இரண்டு நியாயங்களில் எது சரி? இரண்டிற்குமே உதாரணங்கள் இருப்பதால், ஒரு பிறவியில் மர்க்கட நியாயப்படி பெற வேண்டும் பயன் ஏதோ சில காரணங்களால் தடைபட்டுவிட்டால், அடுத்த பிறவியில் இறைவன் அந்தப்பயனை மார்ச்சார நியாப்படி அள்ளித் தந்து வலியவந்து அருள் புரிகிறார் என்னலாமா? 'கொடுக்கும் தெய்வம் கூப்பிட்டுக் கொடுக்கும்; ஏன், கூரையைப் பிய்த்துக்கொண்டு வந்து கூட கொடுக்கும்' என்று சொல்கிறார்களே — அது ஒருக்கால் மார்ச்சார நியாயத்தைப் பற்றியதே ஆகலாமோ என்பதுவும் ஆராயத் தக்கது.

அது என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். தானே வலிய வந்த இறைவனிடம் வாள்வலியால் மந்திரங் கொண்ட கள்ளாழ்வாரை மட்டும் நாம் மறவாமல் ''வாழிப் பரகாலன் வாழிக் கலிகன்றி'' என்று வாழ்த்தி விட்டு அவர் திருவடிகளையே துணையாகப் பற்றி இறைவனின் திருவருளுக்குப் பாத்திரர் ஆவோம்.

''திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்''

முழங்கி உரையை முடித்தார்; கூட்டமும் அதனை எதிரொலித்தது.

நாங்கூர் கோயில்கள் அத்தனையும் செங்கல் தளிகளே. அவை வெகுவாய்ப் பழுதுபட்டும் இருந்தன. நகருக்கு உள்ளே இருப்பனவற்றை சிறிய அளவிலாகிலும் கல் தளிகளாக மாற்ற வேண்டும் என்று ஆசார்யர் ஆசைப் பட்டார். அதற்காக மறுநாளே ஊர்ப்பெருமக்களைக்

---

திருநாங்கூர் (1993) பக்,

கூட்டி ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தார். நாங்கூர் கற்றளிகள் பலவும் கி. பி 10–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினவே ஆகக் கருதப்படுவதால், அவற்றின் அமைப்பிற்கு நாதமுனிகளே ஏற்பாடு செய்ததாகக் கொள்வது தக்கதே அல்லவா?

## நம்பி கருணாகரதாசரும், பிள்ளை கருணாகரதாசரும்

கல்வி கேள்விகளில் சிறந்திருந்த அநிருத்தர் சுந்தர சோழர் ஆட்சியில் அமைச்சரும் ஆனார்; அரசரின் அன்பையும் முழுக்க சம்பாதித்துக்கொண்டார். அவரிடம் கொண்டிருந்த அன்பினால் சுந்தரசோழர் அழுந்தூர் நாட்டில் பத்து வேலி நிலத்தை கருணாகரமங்கலம் எனப் பெயரிட்டுப் பிரமதேயமாக வழங்கினார். இந்த தானச் செய்தி பொறிக்கப்பட்ட ஆவணமே அன்பில் செப்பேடுகள். நாதமுனிகளின் சீடர்களாகக் கூறப்படும் நம்பி கருணாகரதாசரும், (இவர் மைந்தராகத் தோன்றும்) பிள்ளை கருணாகரதாசரும் இக்கருணாகர மங்கலத்தினர் ஆகலாமோ என்று ஒரு ஐயம் எழத்தான் செய்கின்றது. கருணாகரமங்கலத்தைத் தானம் பெற்ற அநிருத்தர் சிறந்த வைணவராதலால், அவ்வூரினர் சிலர் ஆசார்ய நாதமுனிகளைச் சரண் அடைந்திருத்தல் கூடியதே அல்லவா? பெரிய திருமுடி அடைவு குறிப்பிட்ட பிள்ளை கருணாகர தாசரை ஆறாயிரப்படி குறிப்பிடாததால் இப்பெயரை நாம் விலக்கிவிடலாம். எஞ்சி நிற்கும் நம்பி கருணாகரதாசர் பெயரில் நம்பி என்ற தொடர் இவர் பிராமணர் ஆதலைக் குறிப்பிடுகின்றது.

## இதர சிஷ்யர்கள் :

நாதமுனிகளின் சிஷ்யர்கள் எண்மர் என்பது ஆறாயிரப்படியின் கூற்று. மணவாள மாமுனிகள்

காலத்திய அஷ்ட திக் கஜங்களுக்கு இணையாக இவர்களைக் கருதலாம். உய்யக்கொண்டார், குருகைக் காவலப்பன், திருக்கண்ணமங்கை ஆண்டான், ஏறு திருவுடையான், நம்பி கருணாகரதாசர் ஆகிய ஐவர் பற்றி முன்னமே கண்டுள்ளோம். ஏனையோர் வானமாமலை ஆண்டான், உருப்புட்டூர் ஆச்சான்பிள்ளை மற்றும் சோகத்தூராழ்வான் என்னும் மூவர். வானமாமலை ஆண்டான் என்பதை வானவன் மாதேவி ஆண்டான் என வடிவழகிய நம்பிதாசர் மாற்றிக் கூறினார். ஆனால், பெரிய திருமுடி அடைவோ இந்த ஆண்டானை வானமாமலை தெய்வ நாயக ஆண்டான் எனக் கூறுகிறது. தெய்வநாயகன் என்பது வானமாமலையில் உற்சவரின் பெயராதலால், வானமாமலை ஆண்டான் என்ற பாடத்தையே நாம் ஒப்புக்கொள்ளலாம். ஏனை இருவரைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. பெரிய திருமுடி அடைவு மட்டும் கீழையகத் தாழ்வான், மேலையகத் தாழ்வான் என்ற (நாதமுனியின்) இருவர் மருமக்களையும், பிள்ளை கருணாகரதாசர் என இன்னொருவரையும் சேர்த்து நாதமுனியின் சிஷ்யர் தொகையைப் பதினொன்றாகவும் குறித்தது.

அன்பில் செப்பேடுகளில் அச்சாசனம் எழுதிய மாதவ பட்டரின் ஆசார்யராகக் கூறப்படும் ஸ்ரீநாதர் நாதமுனிகளே ஆகில், குருபரம்பரைகளில் நாதமுனிகளின் சிஷ்ய கோஷ்டியில் இப்பட்டரை ஏதோ ஒரு பெயரால் குறிப்பிட்டிருக்க வேண்டுமல்லவா? உருப்புட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்தூர் ஆழ்வார் ஆகிய இருவருள் ஒருவரே அன்பில் செப்பேடுகள் கூறும் மாதவ பட்டர் ஆகலாமோ என்பது ஆராயத்தக்கது.

## ஈஸ்வரமுனி பிறப்பு (கி.பி. 960)

நாதமுனிகள் தமது தந்தை ஈஸ்வரபட்டாழ்வாரோடும், மைந்தர் ஈஸ்வரமுனியோடும் வடநாட்டுக்கு

யாத்திரை போனார் என்று குருபரம்பரைகளிற் காணப் படுகிறது. மணவாள மாமுனிகள் 'அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்' என்ற தம் பெயரை தம் பேரனுக்கு இட்டிருந்தாலும், இது அழகிய வழக்கே. ஆதலால், தகப்பனார் உயிரோடு இருக்கும் போதே நாதமுனி தம் மக னுக்கு அவர் பெயரை சூட்டி இருக்கக்கூடியது கொஞ்சம் கடினந்தான். மேலும், நாதமுனிகளுக்குப் பிறகு ஆசார்ய பதம் வகித்த உய்யக்கொண்டார் ஆட்சிக் காலத்திலும் இல்லாமல் உய்யக் கொண்டாரின் சீடராகிய மணக்கால் நம்பிகளின் ஆட்சியிலேயே நாதமுனிகளின் பேரரான ஆளவந்தார் (கி. பி. 1000 அளவில்) பிறந்தாரென்பது தம் மகனான ஈஸ்வரமுனியை நாதமுனிகள் கொஞ்சகாலம் கழித்தே பெற்றெடுத்தார் எனக் காட்டுகிறது. இது பின்னர் விளக்கமாகக் கூறப்பெறும். இங்கே கி. பி. 1000 அளவில் பிறந்திருக்க வேண்டும் ஆளவந்தாரைப் பெற்றெடுத்த தாயின் கணவர் என்ற வகையில் ஈஸ்வர முனி சுமார் கி. பி. 960 அளவில் பிறந்தார் என்பது மட் டுமே நம் கவனத்திற்குரியது. அப்போது நாதமுனிகளுக்கு வயது நாற்பதுக்கு மேல் இருக்கும்.

ஈஸ்வரமுனி முறைப்படி கல்வி பயின்றான். திவ்வியப் பிரபந்தத்தோடு ஏனை மறைநூல்களையும் மந்திரங் களையும்நாதமுனிகள் தாமே போதித்தார். ஈஸ்வரமுனியும் தந்தையுடன் தல யாத்திரை செய்து கொண்டிருந்தான்.

## பகல் பத்தும், இயற்பா சாற்று மறையும் (கி. பி. 965)

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை வேதங்களுக்கு இணையாக நான்கு கூறாக்கியிருந்தும், திருவாய் மொழியை மட்டுமே மார்கழி விழாவில் வேதங்களோடு கூட அத்யயனம் செய்த நாதமுனிகளுக்கு உள்ளூர ஒரு குறை இருந்துவந்தது. தாமே ஏற்பாடு செய்த ஏனைய

மூன்று ஆயிரங்களின் ஏற்றத்திற்கும் ஏதாகிலும் செய்ய வேண்டும். அப்படிச் செய்தாலன்றி அவர் ஆவி நிம்மதியாகப் பிரிய வழியில்லை. அதனை மெல்ல மெல்ல உணர்ந்து வந்தார். என்ன செய்யலாம்? நெடுக யோசித்த போது திருவாய் மொழி இராப்பத்து ஆகவே ஓதப்பட்டு வந்தது-அவர் நினைவுக்கு வந்தது. ஏனையவற்றை இதற்கு முன் பத்துப் பகலில் ஓதினால் என்ன? உள்ளத்துள் தோன்றிய இந்தக் கேள்வி மிகவும் நியாயமானதாகத் தென்பட்டது. ஆனால், இயற்பாவோ ஒரு உரைப்பாட்டுப்பகுதி. இதற்கென்ன செய்வது? இசைப்பாக்களையெல்லாம் பகல் பத்திலும், இராப்பத்திலும் ஓதிய பிறகு, இயற்பாவை கடைசியாக ஒருநாள் ஓதி எல்லாவற்றையும் மங்கலமாக முடிக்கத் தீர்மானித்தார்.

அந்த ஆண்டு மார்கழிப் பெருவிழாவிற்கு நாதமுனி கோஷ்டி பத்து நாட்கள் முன் கூட்டியே வந்துவிட்டது. அவர்கள் ஒவ்வொரு நாளும் திருக்கோயிலில் முதலாயிரத்தையும், பெரிய திருமொழியையும் ஒருவர் துணையையும் கோராமல் தாங்களாகவே ஓதினர். அதற்குப்பின் திருவாய்மொழியை பத்து இரவுகளில் அத்யயனம் செய்தனர். கடைசியாக 21-ஆம் நாள் இரவில் இயற்பாவை இறைவன் திருச்செவி சார்த்தினர். இசையில்லாமல் பாடிய இத்திருக்கூட்டத்திற்கு 'அத்யாபக கோஷ்டி' என்று பெயராயிற்று.

## வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தில் குழப்பம் (கி. பி. 965)

சக்கரவர்த்தி பராந்தக சோழரின் மூன்றாம் மகன் உத்தமசீலியை வீரபாண்டியன் கி.பி 945-ல் கொன்றுவிட்டு 'சோழன் தலை கொண்ட கோ வீரபாண்டியன்' எனத் தருக்கித் திரிந்ததை முன்னம் கண்டோம் அல்லவா? உத்தம சீலியின் தமையனான அரிஞ்சய சோழரின் பேரனும்

சுந்தர சோழரின் மூத்த மகனுமான ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனை கி. பி.959-ல் கொன்று பழி தீர்த்துக் கொண்டான். அப்போது இருந்து 'வீரபாண்டியன் தலை கொண்ட' என்ற விருது ஆதித்த கரிகாலனுக்கு வழங்கலாயிற்று. இவனை கி. பி. 960 அளவில் சுந்தரசோழர் இளவரசு பட்டம் கட்டி வீரநாராயண சதுர்வேதி மங்கலப் படைவீட்டில் தளபதியாக இருத்தி வைத்தார். இவ் ஆதித்த கரிகாலன் கி. பி. 962-ல் வீரபாண்டியன் மகனான விக்கிரம பாண்டியனை சேவூர்ப்போரில் முறியடித்து துரத்திவிட்டதிலிருந்து சுந்தர சோழருக்கு 'பாண்டியனைச் சுரம் இறக்கிய பெருமாள்' மற்றும் 'மதுரை கொண்ட' என்ற பட்டங்களும் உளவாயின. ஆதித்த கரிகாலனின் கல்வெட்டுகள் 5-ஆம் ஆட்சி ஆண்டு வரை மட்டுமே கிடைத்துள்ளதால், இவன் கி. பி 965 வரை உயிரோடு இருந்திருக்க வேண்டும். நாதமுனிகளும், நம்பியாண்டார் நம்பிகளும் இவனோடு தொடர்பு கொண்டிருத்தல் கூடியதே.

பாண்டியன்பால் பற்றுக் கொண்ட பலர் அக்கால சோணாட்டுக்குள்ளேயே இருந்தனர். ஆதித்த கரிகாலன் மீது பழி தீர்த்துக் கொள்ள இவர்கள் நல்லதொரு சந்தர்ப்பத்தை நாடியிருந்தனர். கி. பி 965-இல் ஈழ நாட்டின் மேல் கொடும்பாளூர் சிறிய வேளார் தலைமையில் சென்ற பெரும்படை வேளாரை இழந்து தோல்வியுடன் திரும்பியதால் சோணாடே துயரத்தில் ஆழ்ந்திருந்த சமயம். கி. பி. 966-இல் ஒரு நாள் இவர்கள் எதிர்பார்த்த தருணமும் வந்தது. ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டான். சோழப் பேரரசு அதிர்ச்சி அடைந்தது. இந்தக் கொலையாளிகளில் சோமன், மலையனூரானான ரவிதாசன், கிரமவித்தன் ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராஜன் மற்றும் பரமேஸ்வரனான இருமுடிச் சோழ பிரயாதிராஜன் ஆகிய நால்வரை மட்டுந்தான் இராஜராஜனின் இரண்டாம் ஆட்சி ஆண்டு

உடையார்குடிக் கல்வெட்டில் [1] அறிய முடிகிறது. இவர்கள் அனைவரும் பிராமணர்களாய் இருப்பதுதான் வெகு ஆச்சரியமாக இருக்கிறது. அநிருத்த பிரமாதிராஜர் என்ற வைணவப் பிராமணரே சுந்தர சோழனுக்கு மிக நெருங்கிய அமைச்சராக இருந்தபடியால் இவர்கள் வைணவர் ஆதற்கில்லை. ஸ்மார்த்தராக வேண்டும் இவர்களுக்கு பாண்டியப் பற்று ஏற்பட்டது எப்படியென்று விளங்கவில்லை. இவர்களுள் ஒருவனான பஞ்சவன் பிரமாதிராஜனுக்கு மற்றையவர்கள் நெருங்கிய உறவினர் ஆகலாமோ என்பது ஆராயத் தக்கது.

இங்ஙனம் சோழ மண்டலம் முழுவதுமே மூன்றாம் முறையாக பேரதிர்ச்சிக்கு ஆளாய்விட்டிருந்தபோது நாதமுனிகள் தமது யாத்திரையையும், பிரச்சாரத்தையும் முடக்கி வைத்து விட்டு இதர விஷயங்களில் நாட்டம் செலுத்தினார். யோக ஆராய்ச்சி இப்போது அவர் கவனத்தைக் கவர்ந்தது.

## யோக ரகஸ்யம்

அஷ்டாங்க யோகத்தை ஆசார்ய பராங்குச தாசரிடம் பயின்று வந்த நாதமுனிகள் அதை விடாமல் பயிற்சி செய்து வந்தார். தமக்குப் பிறகு அதனை தமது சிஷ்யர்கள் வாயிலாக எதிர்காலத்தினருக்கு எட்டச் செய்ய வேண்டும் என்று அவர் மனம் அவாவிற்று அதற்காகச் சிஷ்யர்களை அழைத்தார். யோக ரகஸ்யத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறத் தொடங்கினார்.

சிஷ்யர்களே!

யோகம் என்ற சொல் உலகில் அதிகப் பயிற்சி உடையது. சாதாரண மக்கள் கூட யோகம் பற்றி அன்றாடம் பேசிவரக் காண்கிறோம். 'நல்ல யோகம்

1. ARE 577 / 1920.

அடித்தது அய்யா அவனுக்கு' — என்று அடிக்கடி சொல்கிறார்கள். அவர்கள் யோகம் என்று சொல்வது கிரகங்களின் சேர்க்கையால் உண்டாகும் விசேஷ நற்பலன்களைத்தான். எனவே, யோகம் என்றால் சேர்க்கை என்று புலனாகின்றதல்லவா?

பண்டிதர்களிடையே ராஜ யோகம், கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம் என்று ஒரு வழக்கு உண்டு. இங்கே யோகம் சேர்க்கை என்று பொருள்படுகின்றதா? — என்று நாம் பார்க்க வேண்டும். இதற்கு இவ்யோகங்களை நாம் ஏன் பின்பற்றுகிறோம் என்று அறிந்து கொள்வது அவசியம். வாழ்க்கைத் துன்பத்தில் மனம் சிக்கி சிதறிப் போகாமல் இருக்கவே இவை கையாளப்படுகின்றன. இதற்கு மனத்தை நாம் நமக்கு பிடித்தமான இடத்தில் செலுத்தி அதனோடு ஒன்றிவிடவேண்டும். ருசி உள்ள இடத்தில் ஒட்டிக் கொள்வது மனத்திற்கு இயல்பாகவே உண்டு. இப்படி மனத்தை அலைய விடாமல் ஒரு பற்றுக் கோட்டில் சேர்த்து வைப்பது பற்றிப் பேசுவதால் இம்முறைகளுக்கும் யோகம் என்று பெயர் அமைந்திருக்க வேண்டும். நடைமுறையில் ஒரு விஷயத்தில் மூழுக்க ஈடுபாடு கொண்டு, திறம்படச் செயல்படுதல் யோகமாகும். ஈடுபாடு என்பது எடுத்துக் கொண்ட பொருளோடு ஒன்றிவிடுவதே அல்லவா?

கர்ம, ஞான, பக்தி யோகங்களை மட்டுமே கீதை கூறிற்று. ஆயினும், இவற்றுக்கெல்லாம் மனத்தை அலைய விடாமல் தடுத்து நிறுத்தும் மனப்பயிற்சி ஒரு பீடிகை போன்றது. கீதை இதனை வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும், இது அனாதி காலமாக நம்நாட்டில் இருந்து வருவதுதான். சிவபெருமான் எப்போதுமே சமாதி நிலையில் உள்ள யோகீஸ்வரர் ஆவதை நாம் அறிவோம். ஸ்ரீமந் நாராயணன் பள்ளிகொண்ட கோலத்தில் இருப்பதும் ஒருவகை யோகம் தான்; 'யோக நித்திரை' என்று சொல்வார்கள். 'அறிதுயில்' என்று ஆழ்வார்கள் குறிப்

பிடுவது இந்த யோக நித்திரையைத்தான். நாராயணரை மகாபாரதம் ஒரு யோகீஸ்வர கோலத்தினர் போலவே காட்டுகின்றது. நாராயணரே யோக மார்க்கத்தை உபதேசித்தாக பாஞ்சராத்திரம் கூறுகின்றது. 'யோகஹ', 'யோகவதாம் நேதா', 'ஸர்யோக மகேஷ்வரஹ', 'ஸர்யோகீ', 'யோகீஸ' என்ற பெயர்கள் ஸ்ரீமந் நாராயணனுக்கு விஷ்ணு சகஸ்ர நாமத்திலேயே உண்டு.

யோகத்தைப் பற்றிய குறிப்புகள ரிக் வேதம், சுவேதாஸ்வர உபநிஷத், கடோபனிஷத் முண்டகோபனிஷத், விஷ்ணு ஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி மற்றும் மகாபாரதத்தின் மோட்ச தர்மப்பகுதி ஆகியவற்றுள்ளேயே காணப்படுகின்றன. திருமூலரின் திருமந்திரத்தில் மூன்றாவது தந்திரம் முழுவதும் யோகத்தைப் பற்றியது தான். எனினும், யோகத்தை அதன் எல்லா அம்சங்களோடேயும் கூறும் நூலகளில் நமக்குக் கிடைத்திருப்பது பதஞ்சலியின் 'யோக சூத்திரம்' மட்டுந்தான். இது 200 சூத்திரங்களைக் கொண்டது. சமாதி பாதம், சாதன பாதம், விபூதி பாதம், கைவல்ய பாதம் என நான்கு அங்கங்கள் இதில் உண்டு. இதைச் செய்த பதஞ்சலி முனிவர் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் (கி. பி. 4-ஆம் நூற்றாண்டு) வாழ்ந்தவர்; திருமூலர், ஏன், திருமழிசைப்பிரானுக்குங்கூட முற்பட்டவர். பாணினியின் அஷ்டாத்யாயிக்கு மகாபாஷ்யம் செய்த பதஞ்சலி வேறு; இவர் வேறு. யோக சூத்திர பதஞ்சலி பிற்பட்டவர் இவர் சிதம்பரப் பதஞ்சலி முனிவரினும் வேறானவரா என்பது விளங்கவில்லை.

பதஞ்சலி கூறும் யோகம் எட்டு படிநிலைகளைக் கொண்டிருப்பதால் 'அஷ்டாங்க யோகம்' எனப்படுகிறது. யமம், நியமம், பிராணாயாமம், ஆசனம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன இவற்றின்

பெயர்கள். இவற்றுள் யமம் என்பது கேடு பயக்கும் பொருட்களையும் பழக்கங்களையும் தவிர்ப்பது. மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் தொகுதி நியமம் ஆகும்.[2] இவ்விரண்டும் சாதகர்களின் தன்மைக்கு ஏற்ப மாறுபவை. பின் ஆறு மட்டும் எல்லோர்க்கும் ஒரே மாதிரியானவை தாம். எனவே. இந்த ஆறும் மைத்ரேயி யோகத்தில் தனியாக விளக்கப்படுகின்றன.[3] இவ் ஆறில் யமமும் நியமும் போல பிராணாயாமமும் ஆசனமும் மட்டுமே உடல் தொடர்புடையன. பிராணாயாமம் என்பது மூச்சுப் பயிற்சி. ஒரு மூக்குத் துளையின் வழியாக நல்ல காற்றை உள்ளுக்கிழுத்து சில நொடிகள் வைத்திருந்து இன்னொரு துளை வழியாக உள்ளிழுத்த அதே வேகத்திலேயோ அல்லது சற்று மெதுவாகவோ வெளிவி வேண்டும். ஆசனம் என்பது உடற்பயிற்சி. ஆனால், இங்கே மேற்கொள்ளப்படும் பயிற்சி உடல் வலிமைக்காக தசைகளை பலப்படுத்த வீரர்களால் செய்யப்படும் சாதாரண பயிற்சி அல்ல. யோகாசனத்தில் நாடி மண்டலத்தை பலப்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். நாடி என்று இங்கே குறிப்பிடப்படுவது வாயுக்கள் செல்லும் வழியை ஆகும். முத்திரைகள், பந்தங்கள் என்ற அங்கங்களையும் கொண்ட ஆசனத் தொகுதிக்கு 'ஹட யோகம்' என்ற தனிப் பெயரும் உண்டு.

உடம்பை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதே ஹட யோகத்தின் நோக்கமாக இருப்பதால், உயர்ந்த சமாதியை லட்சியமாகக் கொண்ட பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற பின் நான்கு அங்கங்களின் தொகுதி ராஜயோகம் எனப்படுகிறது. இனி, மனப் பயிற்சி தொடர்பான இந்நான்கு நிலைகளையும் பார்ப்

2. கலைக் களஞ்சியம் (1961) தொகுதி 8, பக். 624-6
3 பதஞ்சலி யோகம் (1992) முன்னுரை X

போம். யமம் முதலான முறைகளால் புலன்களைக் கிளர்ச்சி தரும் பொருட்களின்பால் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தினோம் அல்லவா? அது போல, இப்போது மனோ - சக்தியைத் திரட்ட அது புலன்களின் வழிச் சிதறாமல் தடுக்க வேண்டும். புலனொடுக்கத்தை யோக சாஸ்திரம் 'பிரத்யாகாரம்' என்று அழைக்கின்றது. ஒன்றை எண்ணிக் கொண்டிருக்கும் போதே நம்மையும் அறியாமல் நழுவி சின்னேரத்திற்குள் வேறொன்றின்பாற் சென்றுவிடும் இயல்பினதான மனக் குரங்கை இப்படி அலையவிடாமல் தடுத்து ஒருமுகப்படுத்துவது 'தாரணை' எனப்படும். இவ்விதம் திரட்டிய சிந்தனையை ஒரு பொருளின் மேல் செலுத்துதல் தியானம். தியானத்தின் போது அகங்காரத்தை (அதாவது, 'நான்' என்னும் உணர்ச்சியை) அறவே இழந்துவிடுதல் சமாதி யாகும். அகம்' என்ற வட சொல் 'நான்' என்ற பொருளின தாதலை நீங்கள் அறிவீர்கள். தன்னை மறந்துவிடும் சமாதி நிலை வெறும் மயக்கநிலை (coma) அல்ல. தூக்க நிலையை வேண்டுமானால் சமாதிக்கு நெருக்கமானதாகச் சொல்லலாம். ஆனால், சமாதியைத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் நிலை என்றலே பொருந்தும். தாரணை - தியானம் - சமாதிகளின் தொகுதியை சாம்யமம் என்பதும் வழக்கம். அதாவது, பிரத்யாகாரம் ராஜயோகத்திற்குப் பீடிகை மட்டுந்தான் என்பது கருத்து.

சாம்யமம் சற்றே விரிவான ஆராய்ச்சிக்கு உரியது. நம்மிலிருந்து மற்றொரு உயிரை உண்டாக்குவது ஜீவ சக்தி என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இதைக் கொண்டே இன்னொரு திசையில் நாம் நம் ஆற்றலையும், அறிவையுங்கூட உயர்த்திக் கொள்ளலாம். இந்த ஜீவ சக்தி இருக்குமிடம் 'மூலாதரம்' எனப்படும். மூலாதாரத்தில் பெட்டிப் பாம்பைப் போலச் சுருண்டு முடங்கிக் கிடப்பதால் இதற்கு யோக சாஸ்திரத்தில் 'குண்டலினி' என்று பெயர். இதனைக் கிளப்பி உச்சந் தலையில்

பொட்டுப் பகுதியான 'பிரம்ம ரந்திர'ப் (ரந்திரம்= துவாரம்) பக்கத்து 'சகஸ்ராரம்' என்ற ஆதார சக்கரத் திற்குக் கொண்டு போய் மூளையில் செலுத்தி அளப்பரிய பயன்களைப் பெறுவதே ராஜயோகத்தின் நோக்கம் ஆகும்.

உடம்பின் அனைத்து வகை இயக்கங்களுக்கும் கட்டுப் பாட்டு அறை மூளைதான். நம் இச்சைப்படிக் கின்றி தானாக நடைபெறும் இதயத் துடிப்பு, உணவுச் சீரணம் முதலிய தொழில்களுக்கும் இங்கேதான் ஆதாரம் இருக் கின்றது. இங்ஙனமே ஆராய்ச்சி எதுவும் இல்லாமலே பல உண்மைகளை நேரிடையாகக் காணும் ஆற்றல் படைத்த பகுதிகள் — இன்னமும் உபயோகத்திற்கு வராதவை — இதில் நிரம்ப உண்டு. தானாக நடை பெறும் இயக்கங்களை நம் ஆட்சிக்குக் கொண்டு வரும் ஆற்றலையும், புலன்களுக்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற் பட்ட, அதாவது நம் அனுபவத்தில் இல்லாத, புதிய உண்மைகளை நேரிடையாகக் காண்பதையும் குண்டலினி யைக் கொண்டு (இவற்றிற்கான மூளைப் பகுதிகளை மீட்டி) நாம் பெற முடியும். ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட புதிய உண்மைகளின் தரிசனத்தை 'யோகக் காட்சி' என்கிறார்கள். [4]

யோகக் காட்சி பற்றி விளக்கமாக அறிந்துகொள்ள மொழிப்பயிற்சி பற்றிய ஆராய்ச்சி பெரிதும் உதவ வல்லது. ஒரு மொழியைக் கற்கும்போது, அம்மொழிச் சொற்களோடு அவற்றின் பொருளுக்கு நம் மொழியிற் காணும் சொற்களை நேர்ப்படுத்தியே கற்கிறோம். ஆனால், நம் மொழிச் சொற்களை நாம் அறிந்ததெப்படி? நம் சொல்லை அது சுட்டும் பொருளையே நேரிற் கண்டல்லவா நாம் அறிந்து கொண்டோம்? முதலில் பெறப்படும் அடிப்படை ஞானத்திற்கு நாம் நேர்முகக்

4. குண்டலினி யோகம் (1988) பக். 58-85

கல்வியே பயில வேண்டியிருந்தது. இப்படியே ஒரு பொருளை இன்னொன்றின் துணையின்றி நேர்முகமாக யோகத்திற் காண்பதே யோகக் காட்சி ஆகும். நம் அனுபவத்திற்கு அப்பாற்பட்டிருப்பதால் ஆராய்ச்சி மூலம் காணக்கூடாத ஆன்மீகத் தொடர்பான விஷயங்களை அறிய ஒரே வழி யோகக் காட்சிதான். இப்படிக் கண்டு சொல்லப்பட்ட ஆன்மீக விஷயங்களே 'ஸ்ருதி' (scriptures) என்று சொல்லப்படுவன. வேதங்கள் இதற்கு நல்ல உதாரணம். மகாத்மாக்கள் சிலருக்கு யோகக் காட்சி, யோகத்தின் மூலமாகவின்றி, நேரிடையாகவே கிடைத்து விடுவதும் உண்டு

குண்டலினியைக் கிளப்பி யோகக் காட்சி பெறுவது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில், குண்டலினி செலுத்தப்பட வேண்டிய பாதை இடகலை, பிங்கலை எனப்படும் சாதாரண நாடிகளில் ஒன்றல்ல இது முதுகுத் தண்டின் நடுவில் இவ்விரு நாடி வகைகளுக்கும் இடையே இருப்பது; தமிழில் 'சுழுமுனை' என்று சொல்லப்படுவது. மேலும், குண்டலினியைச் சிறிது, சிறிதாகத்தான் உயர்த்த வேண்டும். இப்படி படிப்படியாக மேற்செலுத்தும் போது அதை நிறுத்துவதற்கு வசதியான ஆதார ஸ்தானங்கள் ஐந்து உண்டு— ஜனனேந்திரியங்களின் அடியிடமான ஸ்வதிஷ்டானம், நாபித் தலப் பக்கத்து 'மணி பூரகம்' (Adrenal gland), இதய ஸ்தானமான 'அனாகதம்' (Thymus gland), அடித் தொண்டைப் பக்கத்து 'விசுக்தி' (Thyroid), புருவமத்தியில் உள்ள 'ஆக்ஞா' (Pituitary) என. மூல தாரம் மற்றும் முடிவிடமான சகஸ்ராரம் (hypothalamus) ஆகிய இரண்டையும் சேர்த்தால் ஆதார ஸ்தானங்கள் மொத்தம் ஏழு ஆகின்றன. ஒவ்வொரு ஆதார ஸ்தானமும் பல நாடிகளின் சந்திப்பிடமும் ஆகும். அதாவது, ஒவ்வொன்றும் ஒரு நாடி முடிச்சு என்னலாம். இதனால், ஆதார ஸ்தானங்களைச் 'சக்கரங்கள்' என்பதும் உண்டு. இங்கே குண்டலினி நிற்கும்போது அவ்வவ் இடத்திற்குரிய

சக்திகள் சாதகனுக்கு உண்டாகும். மூலாதாரத்தில் குண்டலினி நிற்கும்போது காம வேட்கை உண்டாகி ஒருவனைப் படாதபாடு படுத்திவைப்பதை உயிர்கள் எல்லாம் அறியும்[4].

குண்டிலினி சுக்கிலமே யாவதால் இது, யோகத்திடை உயர்த்தப்படும் போது, பிறப்பிடமான மூலாதரத்தில் வற்றிவிடுகிறது. ஆகையால், ஒரு யோகி சிற்றின்பங் களில் ஈடுபாடு கொண்டு தனது வீரியத்தை இழந்துவிடக் கூடாது போகமே யோகம் எனச் சிலர் வாதிடுவது வெறும் மயக்கந்தான். போகமும், யோகமும் எதிரிடை யானவை என்பதே உண்மை. ஏனெனில், வீரியச் சுரப்பு குன்றிவிடும் முதுமைப் பருவத்தில் யோகம் அதிகம்பலன் தருவதில்லை. இதே காரணத்தால் இச் சுரப்பு மிக்க 20-40 வயதுகளுக்கிடைப்பட்ட காலமே யோகப் பயிற்சிக் குத் தகுந்த பருவமும் ஆகும்.

தன்னைத்தான் அறிதல்— என்பதற்கு நமது சக்தி முழுவதையும் பயன்படுத்தும் வழியை நாம் அறிதல் எனப் பொருள் செய்வோமானால், அது யோகத்தால் கைகூடக் கூடியதே. தானாக நடைபெறும் தொழில்களை நமது ஆட்சிக்குக் கொண்டு வர யோகம் துணை செய்வதைப் போல, நம்மிடம் மறைந்துள்ள ஆற்றல்களை வெளிக் கொணரவும் அது உதவுகின்றது. மனத்தின் (மூளையின்) ஒரு பாகத்தில் இருந்து கொண்டு அதன் மற்றைப் பாகங் கள் வேலை செய்யும் விதங்களையெல்லாமும் யோகதசை யில் கண்காணிக்க முடியும்.

அபூர்வ சக்திகள் என்று முன்னம் கூறப்பட்டவற்றிற் குச் 'சித்திகள்' என்று பெயர். இவை, சிலருக்குத் தானாகவே சித்திப்பது உண்டென்றாலும், யோகப் பயிற்சியின்போது ஏற்படுவதே பொதுவாக வழக்கம். இவற்றை அபரசித்தி, பரசித்தி என இரண்டாகவும், கர்ம சித்தி, யோக சித்தி, ஞானசித்தி என இன்னொரு வகை

யில் மூன்றாகவும் பிரிப்ப துண்டு. இவ் இருவகைப் பாகு பாடுகளுள் அபரசித்தியும், கர்ம சித்தியும் ஒன்றேதான்[5] சித்திகள் 64 என்று கூறுவோரும் உளர். பதஞ்சலி 30 சித்திகளை யோக சூத்திரத்தின் விபூதி பாதத்தில் குறிப் பிடுகிறார். இவற்றுள் 26வதாகிய பூத ஜெயத்தில் அடங்கும் அஷ்ட சித்திகளே முக்கியமானவை. இவை நாம் முன்னம் அபரசித்தி எனவும், கர்மசித்தி எனவும் குறிப்பிட்டவை. அணிமா, மகிமா, லகுமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், வசித்வம், ஈசத்துவம் என்று இவை சொல்லப்படும்.

அணிமா—என்பது அணுவைவிடச்சிறிதாகும் திறனுக் குப் பெயர். ஆயினும், பிறர் கண்ணுக்குத் தெரியாமல் போதலையே அது குறிப்பதாகல் வேண்டும். ஒரு பொரு ளின் நுணுக்கமான அம்சங்களையும் கூர்ந்து நோக்கும் திறனையும் அணிமாவிலேயே அடக்க வேண்டும்.*

மகிமா — மேருவை விடப் பெரிய உருக்கொளல் ஆகும். வாமன விஷ்ணுவின் திரிவிக்ரமாவதாரம் இதற்கு ஒரு நல்ல உதாரணம். கடல் தாண்டுமுன் அனுமார் பேருருக் கொண்டதும் இங்கே எண்ணத் தக்கது. மிகப் பெரிய பொருளை முழுமையாக பார்க்கும் திறனும் மகிமா படைத்தோர்க்கு உண்டு. அண்ட சராசரங்களில் நிகழ்வன வற்றையும் இவர்களால் அறிய முடியும்.

லகுமா — என்பது லேசான தன்மை. இஃது எய்தப்

---

5. சித்தர்கள் காட்டிய யோகநெறி (1994) பக். 33& 34.

* அணுவின் உள்ளமைப்பைக் கூட இந்த சக்தியால் காண முடியுமாம்.

பெற்றவர்கள் நீரில் நடக்கவும், மிதக்கவும்* வல்லவர்கள். ஆகாய வீதியில் சஞ்சரிப்பதையும் இது உட்கொண்டதே.

கரிமா — என்றால் கனத்தல். இது படைத்தோரால் பொன்னைவிட கனமாகவும் ஆக முடியும். பீமசேனனாலும் நகர்த்தமுடியாத அளவிற்கு அனுமார் தம் வாலை தரையில் அழுத்திக் கிடத்தியதையும் இதன் பாற் படுத்தலாம்.

பிராப்தி — எல்லாவற்றையும் ஆளுதலைக் குறிக்கும். ஒரே சமயத்தில் பல காரியங்களில் கவனம் செலுத்தி அவற்றை நல்ல முறையில் செய்யும் 'அவதானம்' பிராப்தியின்பாற்பட்டதே ஆகல் வேண்டும். கடந்த கால நிகழ்ச்சிகளையும், எதிர்கால நடப்புகளையும் அறிவதும் கூட பிராப்தியின் ஒரு வகையே. ஞான திருஷ்டியும் இவ் வகையினதே.

பிரகாமியம் — என்பது மற்றவர்களின் மனத்தை அறியும் திறன். விலங்கு மொழி அறிவையும் இஃது உட்கொண்டது. பரகாயப் பிரவேசமும இதில் அடங்கும். 'கூடு விட்டுக் கூடு பாய்தல்'—என்பது உலக வழக்கில் பரகாயப் பிரவேசத்தின் பெயர்.

வசித்துவம் — எல்லாவற்றையும் தன் வசப்படுத்துவதைக் குறிக்கும். இந்த வசியம் வசிய மருந்தில்லாமல் சாதிக்கப்படுவது.

ஈசத்துவம் — விரும்பியவற்றையெல்லாம் படைத்துத் துய்ப்பது. ரசவாதம் மற்றும் வேண்டியவற்றையெல்லாம் வருவித்துக் காட்டும் பலதரப்பட்ட சித்து விளையாட்டுக் களும் ஈசத்துவத்தின்பாற் பட்டனவே.

---

* ராயபுரத்தைச் சேர்ந்த ஒருவர் நீந்தாமலே நீரில் மிதந்தது சன் டி. வி. யில் 1994-இல் காட்டப்பட்டது.

சித்திகள் கைவரப் பெற்றோர் சித்தர்கள். ஆழ்வார்களில் திருமழிசைப் பிரான் ஒருவரே சித்தர். யோகப் பயிற்சியின் போது ஒருவனுக்கு உண்டாகும் சித்தித் திறன்கள் சமாதி என்ற இலக்கை எய்தவிடாமல் திசை திருப்பிவிடக் கூடும். சித்திகள் பேறாவது சமாதிக்குப் பின்னர்தான். சமாதியே ஒரு யோகியின் இலட்சியம் என்பது அழுத்தமாக உணரப்படல் வேண்டும். நமது நம்மாழ்வார் இப்படி சித்திகளின் மனம் பற்றாத ஒரு நல்ல யோகி. அவர் நாட்டம் பரசித்தியின் பக்கமே எப்போதும் இருந்தது.

மீண்டும் யோகத்திற்குத் திரும்புவோம். யோகப் பயிற்சியின் போது மனோசக்தியை ஒருமுகப் படுத்த வேண்டும் என்று கூறப்பட்ட தல்லவா? அதற்கு ஒரு இலக்கு தேவை இப்படித் தியானிக்கத் தேவைப்படும் பொருள் சுபாஸ்ரயம்[6] எனப்படுகிறது. ஈஸ்வரனை உடன்பட்ட வைஷ்ணவத்தில் சிந்தனையை ஒருமுகப்படுத்தித் தியானம் செய்யத் தேவைப்படும் சுபாஸ்ரயமாக ஈஸ்வரனே அமைகின்றது. அதாவது, தியானம் விக்ரஹம் இல்லாமல் செய்யும் மன வழிபாடு என்பது பொருள்.

விக்ரஹம் இல்லாமல் உருவத்தை மட்டும் நினைப்பது 'சகுணத் தியானம்' என்றும், ஈஸ்வரனை அரூபமாக நினைப்பது 'நிஷ்குணத் தியானம்' என்றும் சொல்லப்படும்.[6] இப்படி விவரமான வகை எதுவாயினும், இதுவும் ஒரு வகைப் பக்திதான் என்பதே முக்கியம்; ஆனால் மிகக் கடினமானது. கடினமானதானாலும், இது விக்ரஹ வழிபாட்டின் பகைவர்களாலும் கூட அழிக்க முடியாதது; தேங்காய், பழம், தட்சிணை முதலிய எதுவும் தேவைப்படாத எளிய வழியுமாகும். ஆகவே, கற்றுக் கொள்ளக் கடினமானதாயும் அனுஷ்டிக்க எளிமையானதாயும் இருப்பது யோக ரகஸ்யங்களில்

6. சித்தர் தத்துவம் (1990) பக். 157

ஒன்று. இதனை நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனி, யோகத்தின் இதர அம்சங்களைக் காண்போம்.[7] யோகம் என்ற பெயரில் ஒரு மதமும் உண்டு. இது சாங்கியத்தோடு நெருங்கிய தொடர்புடையது இதனால் சாங்கிய - யோகம் என இரண்டையும் இணைத்துக் கூறுவதும் வழக்கம்தான். ஜீவனைப் 'புருஷன்' என்ற பெயராலும், அசித்தை (இங்கே உடல்) 'பிரகிருதி' என்ற பெயராலும் சாங்கியமும், யோகமும் குறிப்பிடுகின்றன. இங்கே மோட்சம் என்பது உயிர் ஆகிய புருஷன் உடம்பாகிய பிரகிருதியில் இருந்து விடுபடுவதே. சாங்கிய —யோக முறையில் யோகம் பிரிவையே சுட்டுகின்றது. விடுதலையை ஜீவன் உடம்போடு கூடியிருக்கும் போதே யோகத்தின் மூலம் வேண்டும் போதெல்லாம் அப் போதைக்கப் போது பெற்று அனுபவிப்பதால், இந்த ஜீவனை 'ஜீவன் முக்தன்' என்றும் சொல்வார்கள். எனவே, சாங்கியக் கொள்கைக்கு யோகம் ஒரு அனுஷ் டான வழியை வகுத்துக் கொடுத்துவிட் டிருக்கின்றது. இதனாலேயே சாங்கியத்தை விடச் சிறந்த ஞானமும், யோகத்தை விடச் சிறந்த மார்க்கமும் இல்லையென்று மோட்ச தர்மப் பகுதியில் மகாபாரதம் கூறிற்று.

சாங்கிய மதத்திற்கும், யோக மதத்திற்கும் ஒரு முக்கியமான வேற்றுமையும் உண்டு. சாங்கியத்தில் ஈஸ்வரன் இல்லை; யோகத்தில் உண்டு. அதாவது, கபில மதம் நிரேஷ்வர சாங்கியமும், பதஞ்சலி மதம் ஈஸ்வர சாங்கியமும் ஆகும், ஆனால், யோக ஈஸ்வரனுக்கு நாம் சொல்லுகின்ற பல குணங்கள் இல்லை. என்றும் உள்ளவன், எல்லாம் அறிந்தவனுமே ஆனாலும், யோக

---

7 இந்திய தத்துவ ஞானம் (1988) பக். 215-222

ஈஸ்வரன் கர்மங்களுக்கு ஏற்ற பலன் கொடுப்பவனோ, காப்பவனோ, அழிப்பவனோ அல்ல. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொள்ளாமல் பிரகிருதியினின்றும் வேறாகி அதற்குத் துணைநின்று படைப்புகள் செய்வது மட்டுமே இவன் தொழில். சாங்கிய பாஷையில் கூறினால், இவன் இன்னொரு புருஷனே; ஆனால், விசேஷமானவன்; அவ்வளவே.

சக்தியற்ற ஈஸ்வரனை யோக மதம் கற்பித்ததன் விளைவு என்ன? சமாதியில் ஜீவன் தனித்திருப்பதாகக் கொள்வதே! ஆனால், நம்முடைய ஈஸ்வரன் விசேஷ கல்யாண குணங்கள் கொண்டவன் ஆகையால், நம் சமயத்தில் அவனோடே ஜீவன் இணைந்திருப்பதே சமாதி யாகும், எனவே, யோக மதமும், யோக மார்க்கமும் வேறு என்பது இன்னொரு யோக ரகஸ்யம். யோக மார்க்கத்தை வரையறை செய்த பதஞ்சலி அதோடு நின்று விடாமல், அதனைச் சாங்கியத்தோடு கலந்ததால்தான் இந்த வேற்றுமை.

ஹடயோகம் உடம்பை அடிப்படையாகக் கொண்டிருப்பது முன்னமே கூறப்பட்டது. கர்ம, ஞான, பக்தி யோகங்கள் மனப்பக்குவத்தைப் பொறுத்தன. ராஜயோகம் இவ்விருவகை யோகங்களையும் இணைக்கும் பாலம் ஆகும்.[8]

யோகப் பயிற்சியின் போது சில சக்திகள் அளவுக்கு அதிகமாகி, உயிருக்கே உலை வைத்து விடலாம். இதனால், அனுபவ மிக்க ஒரு ஆசிரியனை அடுத்து பயிற்சி பெற வேண்டும். இது இன்னொரு யோக ரகஸ்யம்.

நான் குறிப்பிட்ட பலவித யோக ரகஸ்யங்களையும் நன்றாக நினைவில் பதித்துக் கொண்டு நாளையிலிருந்து யோகப் பயிற்சிக்கு வாருங்கள்.'— நாதமுனி உரையை முடித்தார்.

---

8 Fullness of the Void p.22 (via) சித்தர் தத்துவம் பக். 137.

அடுத்த நாளிலிருந்து தொடங்கிய வகுப்புகளில் மாணாக்கர் சிலரே இருந்தனர். இவர்கள் தொகையும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. முதற் பெருஞ் சீடராகிய உய்யக்கொண்டார் 'பிணங்கிடக்க மனம் புணரலாமோ?' —என்று சொல்லி ஒதுங்கிக் கொண்டார். குருகைகாவலப்பன் ஒருவர் மட்டுமே தொடர்ந்து வந்து முழுப் பயிற்சியும் பெற்றவர்.

நாதமுனி தமதுமாணாக்கர்களுக்குப் புகட்டியவற்றை 'யோக ரகஸ்யம்' என ஒரு தனி நூலாகவும் வடித்தார் ஆனால், அது கிடைக்கவில்லை. அது பற்றிய நமது ஊகங்களே மேலே கூறப்பட்ட கருத்துக்கள்.

## தில்லைத் திருச்சித்ர கூடம்

நாதமுனிகளின் கோஷ்டி பிரபந்தப் பிரசாரத்திற்காக ஆண்டுக்கொரு திசையில் திவ்யதேச யாத்திரை செய்வது வழக்கம். இந்தத் தடவை அவர்கள் வடக்கு நோக்கிப் போயினர். அந்தப் பயணத்தில் முதலில் வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தின் வடக்கு வாயிலாகத் திகழ்ந்த தில்லைத் திருச்சித்ர கூடம் வந்தனர்.

சைவமும், வைணவமும் சரியாசனம் பெற்றிருப்பது மலைநாட்டில் வழக்கந்தான் என்றாலும், தமிழ்நாட்டில் இது காணப்படுவது அபூர்வமாக கோட்டியூர், கடன் மல்லையில் கடற்கரைக் கோயில், குறுங்குடி போன்ற ஒரு சில இடங்களில் தான்

பிணங்களிடு காடதனுள் நடமாடும் பிஞ்ஞகன்
தன்னோடு

இணங்குதிருச் சக்கரத்து எம்பெருமா னார்க்கிடம்
விசும்பில்

கணங்கள் இயங்கும் மல்லைக் கடன்மல்லைத்
தலசயனம் (பெ.தி.2-6, 9)

எனக் கடன்மல்லைப் பதிகத்திலும்,

அக்கும் புலியின் அதளும் உடையார் அவரொருவர்
பக்கம் நிற்க நின்ற பண்பரூர் போலும் (பெ.தி.9-6,1)

எனக் குறுங்குடிப் பதிகத்திலும் இருபெருந் தெய்வங்களின் இணை நிலையைச் சிறப்பாகக் குறித்தார் திருமங்கையாழ்வார். ஆயினும், இவ்விணை நிலை வெகு சிறப்புடன் காணப்படுவது தில்லையில்தான். சுந்தர மூர்த்திகளும், திருமங்கை மன்னரும், குலசேகரப் பெருமாளும் இந்த இணை நிலையைக் கண்டு கொள்ளாமல் தத்தம தெய்வங்களையே போற்றிப் போந்தனர். பின் வந்த மாணிக்கவாசகர் மட்டும் இந்தச் சன்மார்க்க நிலையிலிருந்து வழுவி,

புரங்கடந்தான் அடிகாண்பான்
புவிவிண்டு புக்கறியாது
இரங்கிடு, எந்தாய்! என்று இரப்ப — தன் ஈரடிக்(கு)
என் இரண்டு
கரங்கள் தந்தான் — ஒன்று காட்ட 'மற்றதுவும்
காட்'டென்று
வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலிலம்
மாயவனே (திரு. கோவை 86)

என்று சிற்றம்பல முன்றிலில் பெருமாளின் கிடந்த கோலத்தை ஒரு சாமான்யரைப் போல ஏளனம் செய்தார். இவரைப் பின்பற்றி பின்னாளில் கண்டராதித்தரும்,

ஒளிமால் முன்னே வரங்கிடக்க உன்னடியார்க்
கருளும்
தெளிவார் அமுதே (திருவிசை 20, 5)

என, ஏளனமாக இல்லாவிட்டாலும், குறைத்துக் கூறியே சென்றார். தில்லையில் இயற்றப்பட்ட திருக்கோவை

யாரும், திருவாசகமும், திருவிசைப் பாக்களும் தில்லைக்கு அணித்தான அவர் ஊரிலும் பரவியிருந்ததால், இவற்றை நன்கு அறிந்திருந்தார் நாதமுனிகள். வழிபாட்டின் போது அவை அவர் நினைவுக்கு வந்தன.

''பெருமாளே! மாணிக்கவாசகர் பரிகசித்த போது சூரிய சந்திரர்களுக்கும் மேலான இடத்தில் இருந்து நீ அவர்களைப் போலவே கண்டுகொள்ளமலே விட்டு விட்டாய். உன் உயர் நிலைக்கு அது தக்கதே. ஆனாலும், எங்களால் அப்படி இருக்க முடியவில்லை. உன் விஷயத்தில் உன்னை விடவும் எங்களுக்கே அதிகம் அக்கறை உண்டாய்விட்டிருக்கிறது; என்ன செய்வது? அது எப்படியோ போகட்டும். இந்தப் பூ மண்டலத்தில் உனக்கு வேறு இடமா இல்லை? நீ உண்டு, உமிழ்ந்து, அளந்த பூமியல்லவா இது? உன்னை இங்கிருந்து பெயர்த்து வேறிடம் சேர்க்க அடியேன் என்ன திருமழிசைப்பிரானா? உன்னைப் பற்றிய இழி சொற்களை நாங்கள் கேட்காமல் இருக்க நீ தான் ஒரு வழி செய்ய வேண்டும். நாங்கள் உயிர் தரிக்க நீ செய்ய வேண்டும் கடன் இது. எம்பெருமானே! திருவாசகம் (= திருவாய்மொழி) என்ற பெயரிலிருந்து அந்தாதித்தொடை, பள்ளியெழுச்சி, பாவை, சாழல், உந்திப்பாட்டு, திருக்கோவையார் (= திருவிருத்தம்) என்று இப்படி மிகப் பல அமிசங்களில் வைணவத்தின் பின்பற்றியே ஆன மாணிக்கவாசகர் செயல் 'படிப்பது இராமாயணம்; இடிப்பது பெருமாள் கோயில்' — என்ற வாசகத்திற்கு இணங்கவே உள்ளது. என் செய்வோம், எளியோம்?''

உள்ளுக்குள்ளேயே பேசி இறைவனிடம் தம் குறையை முறையிட்டுவிட்டு துணைவர்களுடன் திருவயிந்திரபுரம், திருக்கடன் மல்லை, திரு இடவெந்தை (திருவடந்தை) வழியாக மயிலை திருவல்லிக்கேணி சேர்ந்தார்.

## குருகை காவலப்பன்

அங்கே அப்போது பெரிய திருவிழாக் காலம். வழக்கம் போல பிரபந்தங்களை ஆலயத்தில் சேவித்துவிட்டு கருட சேவையன்று ஒரு இசைப்பொழிவும் (உபன்யாசம்) செய்ய விருந்தனர். கோஷ்டியில் குருகை காவலப்பர் மட்டும் கண்ணை மூடி, கற்பனையில் ஆழ்ந்திருந்தார். அவருக்கு யோகக் காட்சி கைவந்த சரக்கு. ஆசார்யரிடம் யோகப் பயிற்சி பெற்றவர் அவர் மட்டுமே அல்லவா? பொன்னின் சோதி ஒன்று கண்ணைப் பறிப்பது போல் மின்னக் கண்டார். அன்னை மகாலட்சுமியை அரவணைத்துக் கொண்டு ஸ்ரீமந் நாராயணன் தோன்றினான். பரவசக் கோலத்தில் சிஷ்யரைக் கண்ட நாதமுனி அவர்தம் உள்ளத்துள் நிகழ்வனவற்றை ஊகித்துக் கொண்டார். பாம்பின் கால் பாம்பறியும் அல்லவா? எழுப்பி, அவர் பெற்ற இன்பத்தைக் கூடியிருந்த மக்களோடும் பகிர்ந்து கொள்ள அழைத்தார். ஆசார்யர் ஆணை கடவாத அப்பர் பேசத் தொடங்கினார்.

மயிலை மாநகர் மகா ஜனங்களே!

தமிழ்நாட்டில் வடகோடி ஆகிய தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தது உங்களின் இந்த ஊர். அடியேனோ இத்தென்னகத்தின் தென் கோடியில் தென் பாண்டிநாட்டுக் குருகூரினன். அடியேனை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது எது? ஸ்ரீவைஷ்ணவமே என்பது உண்மைதான். ஆனால் ஸ்ரீவைஷ்ணவத்தின் இந்த சக்தி எங்கே புதைந்திருக்கிறது? — என்பதை மட்டும் நான் உங்களுக்கு விளக்கிச் சொல்லத்தான் வேண்டும். கவனமாய்க் கேளுங்கள்.

ஆழ்வார்கள் எல்லாம் ஸ்ரீவைஷ்ணவத்தை தமிழ் நாட்டில் உயிர்ப்பிக்கவே தோன்றினார்கள். இவர்கள்

அருளிச் செயல்களையெல்லாம் அரும்பாடுபட்டு எங்கள் ஆசார்யர் தொகுத்து முறைப்படுத்தினார். இவற்றை உலகெங்கும் பரப்புவதற்காகவும், ஆழ்வார்கள் பற்றிய தகவல்களை விசாரித்து அறிந்து திரட்டவுமே நாங்கள் புனித யாத்திரை செய்து வருகின்றோம். இந்த முயற்சியிலேயே எங்கள் கோஷ்டியும் நானும் இங்கு அடைந்தோம்.

இந்த பூமிக்கு ஒரு அளப்பரிய சிறப்புண்டு. ஆழ்வார்களுள் மிக முற்பட்ட காலத்திய மூவரையும், இவர்களின் சீட்ராகிய திருமழிசைப் பிரானையும் கூடத் தந்தது தொண்டை மண்டலம்தான். "தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து" என்பதன் பொருள் நம்மைப் பொறுத்தமட்டில் சான்றோர்களுள் முதல்வர்களைப் பெற்றது தொண்டை மண்டலம் என்பதே.

பழைய பல்லவ சாம்ராஜ்யத்தின் துறைமுகமும், பல்லவர் கலைக் கூடமும், வீரவைணவத் தந்தையாகிய பூதத்தாழ்வார் பிறந்தருளியதுமான கடன் மல்லையைச் சேவித்து விட்டு திருமங்கையாழ்வார் பாடிய திருவிட வெந்தை (திருவடந்தை)யும் சேவித்த பிறகே இங்கே வந்தோம். இருந்தும் ஏனோ இங்கே வந்ததும் ஒரு புதிய உற்சாகம் தென்படுகிறது. உலகின் அழகான கடற்கரையில் கம்பீரமாக இங்குள்ள ஆலயம் நிற்பதாலா? அல்லது வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்டதாலா? அல்லது முதலாழ்வார்களுள் ஆசார்யராகிய பேயாழ்வார் பிறந்ததாலா? இவற்றுள் எதுவும் இல்லை!

பேயாழ்வார் வாழ்ந்து கொண்டிருந்த காலம். அப்போது பல சமயங்களிலும் அலைந்து திரிந்த கடைசியில் சைவராகி, சிவவாக்கியர் என்ற பெயரோடு ஒரு பெரிய சித்தராகவும் திகழ்ந்த திருமழிசைப்பிரான் இங்கே

அடைந்தாராம். அவரை எப்படியும் வைணவத்திற்கு இழுக்கத் திருவுளங்கொண்ட பேயார், ஓட்டைக்குடத்தை துண்டுக் கயிறுகளால் கட்டி தண்ணீர் எடுத்து, செடிகளை தலைகீழாக நட்டு வைத்து அவற்றிற்கு ஊற்றினார். அது கண்டு கைகொட்டிச் சிரித்த அந்த சிவவாக்கியருக்கு, முடியிட்ட கயிறு சித்தரின் பல சமயத் தத்து ஞானத்தையும், ஓட்டைக் குடம் எத்தத்துவதை யும் பற்றிக் கொள்ளும் வலியற்ற அவர் மனத்தையும், தலைகீழாக உள்ள செடிகள் அவர்தம் மயக்க நிலையை யுமே ஒத்தனவாயிருக்க, சித்தர் சிரித்ததே தமக்கு வியப்பைத் தருவதாகக் கூறி. 'தன் முதுகு தனக்குத் தெரியாது' — என்பது அவர் (சித்தர்) திறத்தில் உண்மையாய்ப் போனதாகப் பேயாழ்வார் பதிலளித்தார். அது கேட்டு நாணிப் போன சித்தர் அக்கணமே ஆழ்வாரைப் பணிந்து வைணவ சமயக் கோட்பாடுகளை அவரிடம் பயின்று 'பக்தி சாரர்' ஆனாராம்.

இந்த வரலாற்றில் முதலாழ்வார்களுக்குப் பிறகு இவர்களில் ஒருவரான பேயாரிலிருந்து திருமழிசைப் பிரான் வழியாக நமது குருபரம்பரை தொடர்வதைக் காண்கிறோம். திருமழிசைப்பிரானிலிருந்து தொண்டரடிப் பொடிகள் — திருமங்கை மன்னர் — நம்மாழ்வார் — மதுரகவிகள் — பராங்குசதாசர் என்று இது தொடர்ந்து வந்திருக்கிறது. ஆகவே, திருமழிசைப் பிரானை ஆட்கொண்ட இந்தத் திருவல்லிக்கேணியே தென்னாட்டு வைஷ்ணவக் குருபரம்பரையின் பிறப்பிடம் ஆகும். இங்கேயே சிலகாலம் திருமழிசைப் பிரான் வாழ்ந்திருந்ததால் இதுவே முதலாவது குரு பீடமும் ஆகின்றது. நம்மாழ்வார் காலத் திலிருந்து வைணவத்தின் குருபீடமாகத் திகழ்ந்த குருகூரில் பிறந்ததோடு, முதல் குருபீடமாகிய இந்த அல்லிக்கேணியை இப்போது காணவும் நேரிட்டதெல் லாம் நான் பூர்வஜென்மங்களில் செய்த புண்ணியம் தான்.

நீங்களும் உங்கள் மண்ணின் பெருமையை உணர்ந்து பூரிப்படைய வேண்டும்.

நான் கண்மூடிக் கண்டதென்ன?— என்பதையும் இப்போது கடைசியாகச் சொல்லிவிடுகிறேன், கேளுங்கள். உங்கள் முன்னோராகிய பேயாழ்வார் யாத்திரை போய் பல தலங்களையும் சேவித்துக் கொண்டு திருக்கோவலூர் சேர்ந்தார். அப்போது மழைக் காலம். தூரத் தொடங்கி விட்டது; தூறல் பெருமழையாகக் கூடும் அறிகுறிகளும் தென்பட்டன. ஒரு வீட்டுத் திண்ணையில் ஓரமாக ஒருக்கணித்துப் படுத்திருந்தார். சின்னேரத்திற்கெல்லாம் இதே காரணத்திற்காக இன்னொருவர் வந்து இடம் கேட்டார். இருவருமாக அமர்ந்த நிலையில் அவ்விடத்தைப் பகிர்ந்து கொண்டனர். இன்னும் சில வினாடிகள் கழித்து மூன்றாமவர் வந்தார். மூவருமாக அங்கே நின்று கொண்டனர். பாகவதர்களாகையால் ஒருவர் மீது ஒருவர் படாமல் ஆசாரமாக அடக்கமோடு நின்றனர். ஆனால், மழை பலத்தது. அவர்கள் தொட்டுக் கொள்ளாமலும், பட்டுக் கொள்ளாமலும் இருக்க முயன்றது பலிக்கவில்லை. அவர்கள் நெருங்கி வந்ததுமே மழை ஓயத் தொடங்கி விட்டது. நிமிர்ந்து பார்த்தனர். பொய்கையாரும், பூதத்தாரும் கருடன் மீது பெருமாளை மட்டுமே கண்டனர். ஆனால், திருமயிலையில் பிறப்பெடுத்த பேயாழ்வாரோ ஜகன் மாதாவான மகாலட்சுமியையும் ஜகன்நாதனோடு கண்டார். கண்டதுமே

> திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும்
> அருக்கன் அணிநிறமும் கண்டேன்; — உருக்கிளரும்
> பொன்னாழி கண்டேன்; புரிசங்கம் கைக்கண்டேன்
> என்னாழி வண்ணன்பால் இன்று.

எனப் பரவசத்துடன் பாடினார். இன்றைய கருடசேவை அந்த அற்புதக் காட்சியை என் மனக்கண் முன் நிறுத்தி

விட்டது. அதனாலேயே என் புறக்கண்கள் மூடிக் கொண்டன.

சீராரும் மாடத் திருக்கோவலூர் அதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு—ஓராத்
திருக்கண்டேன் என்றுரைத்த சீரான் கழலே
உரைக் கண்டாய் நெஞ்சே! உகந்து.

நான் வாழ்த்தி விட்டேன். நீங்களும் ஒருமுறையாவது

பேயாழ்வார் திருவடிகளே சரணம்!

என்று மட்டுமாவது ஆழ்வாரை வாழ்த்திவிட்டு பகவானைச் சேவித்துச் செல்லுங்கள்.'' —சொல்லித் தமது உரையை முடித்துக் கொண்டார்.

மறுநாள் திருக்கூட்டம் நீர்மலை, நின்றவூர் (திண்ணனூர்), எவ்வுள் (திருவள்ளூர்) எல்லாம் சேவித்துக் கொண்டு தேனார்சோலைத் திருவேங்கடம் நோக்கி நடந்தது

## திருவேங்கடத்தில் திருக்கோஷ்டி

வடக்கே நடந்த கோஷ்டி களைப்படைந்த காலத்தில்

கொங்கலர்ந்த மலர்க்குருந்தம் ஒசித்த கோவலன் எம்பிரான்;
சங்குதங்கு தடங்கடல் துயில்கொண்ட தாமரைக் கண்ணினன்;
பொங்குபுள்ளினை வாய்பிளந்த புராணர்தம்மிடம் பொங்குநீர்
செங்கயல் திளைக்கும்சுனைத் திருவேங்கடம் அடை, நெஞ்சே!

என்று பல பிரபந்தப் பாடல்களை பாடிக் களைப்பாறிச் சென்றனர்.

வழியிற் கண்ட நாராயணவனம் தொண்டைமான் சக்கரவர்த்தி இருந்து ஆட்சி செய்த இடம். அங்கே இருந்த பெருமாளை சேவித்துவிட்டே தொண்டைமான் சர்க்கரவர்த்தியால் கட்டப்பெற்ற திருவேங்கடத்தான் திருக்கோயிலில் வழிபடுவது நல்லது, ஆசார்யர் தம் கோஷ்டியுடன் அங்கே போய் இறைவனை/ வழிபட்டார். உடனே அவர்கள் மேற்கொண்டு வடக்கே நடந்தனர்.

கொஞ்ச தூரம் சென்றதுமே வானத்தை முட்டிக் கொண்டிருந்ததோர் மாமலை கண்ணிற்பட்டது. அது திருவேங்கட மென்னும் திருமலையேதான். பச்சைக் கம்பளம் போர்த்திருந்த அந்த வீங்குநீர் வேலி வேங்கட மாமலையை உலகளந்த திருமாலேயாகக் கருதி நெடுங் கிடையாக வீழ்ந்தனர். எழுந்து தலைமேற் குவித்த கரங்களோடு,

"மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும்மேனகையும்

அன்னவர்தம் பாடலோடு ஆடலவை ஆதரியேன்"

ஆசார்யர் பாடினார். மலைச் சிகரக் காட்சியை கோபுர தரிசனமாக ஆசார்யர் பாவித்துக் கொண்டதை குலசேகரப் பெருமாளின் அந்தப் பாடலில் இருந்து ஊகித்துக் கொண்ட சிஷ்யர்கள்

"தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்

அன்னனைய பொற்குவடாம் அருத்தவத்தன் ஆவேனே"

அவரோடு கூடிப்பாடி மேலே நடந்தனர்.

ஏடு கொண்டலவாடா! வெங்கட்ரமனா! கோவிந்தோ கோவிந்தா! எனவானைப் பிளந்த கோஷங்கள் அவர்களை

எதிர் கொண்டு வரவேற்றன. அந்த இடம்தான் வடசொற்கும், தென் சொற்கும் வரம்பாகி நின்ற திருவேங்கடமென்னும் திருமலையாழ்வாரின் அடிவாரத்தில் மலையேறுமிடம் நிமிர்ந்து நோக்கினர், பத்ரிகாஸ்ரமத்தின்பின் நீலகண்ட பர்வதம் போன்று நின்ற அந்த மால்வரையை. அதன் மேலே வெட்டப்பட்டிருந்த படிகளும் சுவர்க்காரோகணத்திற்கு அமைக்கப்பட்ட ஏணியினுடையதாகவே தென்பட்டன. படியேறி கோவிந்தா! கோவிந்தா!!— என்று கோஷித்த வண்ணமே காட்டுப் பாதையில் நடந்து வேங்கடவாணன் கோயிலின் வாயிற்புறம் வந்து அடைந்தனர்.

இதற்குள்ளாகவே நாதமுனிகளின் புகழ் திருவேங்கடத்திலும் ஓரளவிற்குப் பரவியிருந்தது. அதுவும் சோழப் பேரரசிற்கு உட்பட்டதேயல்லவா? அரங்கத்துப் பெரிய பெருமாள் ஏற்றுக் கொண்ட ஆசார்யரை வேங்கடநாதன் மட்டும் எப்படி எதிர்கொள்ளாமல் இருக்க முடியும்? அவர் கோஷ்டிக்காக வென்று சிறப்புச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, சிறப்புக் கட்டணம் இல்லாமலே! ஆசார்யர் அல்லவா? அந்த சேவாகாலத்தில் சிஷ்யர்கள் பிரபந்த பாராயணம் செய்து கொண்டிருக்கும் ஆரவாரத்திற்கிடையில் ஆசார்யர் மட்டும் கண்ணை மூடி, அகக் கண்ணால் வேங்கடவாணனைக் கண்ட உகப்போடு ஏதோ தீராத பெருங்குறை ஒன்றை இறைவனிடம் முறையிட்டுக் கொள்வது போலவும் காணப்பட்டார்.

மவுனமாக மடம் சேர்ந்த கோஷ்டி மாலையில் கூடிற்று. ஆசார்யரின் கலக்கத்திற்கான காரணத்தை அறிய அவர்கள் ஒவ்வொருவரும் ஆசை கொண்டிருந்தனர். ஒருவர் துணிச்சலோடு, ஆயினும் வெகு பணிவாகவே, அதைக் கேட்டேவிட்டார். ஆசார்யர் அப்போது தம் கவலையை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வந்து பேசினார்.

''எனக்கு முந்திய தலைமுறையினர் கபிலதேவர். மாணிக்கவாசகரைப் போல அவர் அவ்வளவு வீரசைவர் அல்லர். பொய்கை ஆழ்வாரையும், பேயாழ்வரையும் போல ஒரு நல்ல சமரச நோக்கினர்தாம். தாம் செய்த சிவபெருமான் திருவாந்தாதியில் 'மாலை ஒருபால் மகிழ்ந்தானை' (எண். 2) என முதலாழ்வார்களைப் போல ஒரு சங்கரநாராயணக் கனவு கண்டிருக்கிறார். இதே பிரபந்தத்தில்,

அரியாரும் பூம்பொழில்சூழ் ஆமாத்தூர் அம்மான்
அரியாரும் பாகந் தமுதன் — அரியாரும்
வேங்கடத்து மேயானை மேவா உயிரெல்லாம்
வேங்கடத்து நோயால் வியந்து

என்ற (16-ஆம்) பாடலுள் வேங்கடத்தைச் சிவபெருமானுடையதாகவே கூட குறிப்பிட்டிருக்கிறார், ஆனால். இதுவேதான் என் கவலைக்கிடம். கபிலதேவரின் நல்லெண்ணத்தை நாம் ஒப்புக் கொண்டாலும், இவற்றைக் காட்டி, தீவிரவாதிகள் வேங்கடத்தின் மீது எதிர்காலத்தில் உரிமை கொண்டாடக் கூடுமல்லவா? குமாரசுவாமியே குறிஞ்சிக் கடவுள் என்ற ஒரு பழைய வழக்கைக் காட்டி, வேங்கடத்திறைவனும் குமரனே என வாதித்து வெங்கடசுப்பிரமணியன் என்ற பெயரையும் கூட உண்டாக்கி நடமாட விட்டிருப்பதே இவ்வச்சத்திற்குக் காரணம் திருப்பித் திருப்பிச் சொல்லப்பட்ட பொய்யே உண்மையாகிவிடுதல் உலகியற்கை அல்லவா?'' முல்லைக் கடவுளான மாயோன் மட்டுமேயல்ல நம் வேங்கடநாதன். அவன் ஐந்து நிலங்களுக்கும் பொதுவான பெருந்தெய்வம். இம்மட்டோ? அண்ட சராசரங்களுக்கெல்லாம் ஆதியானவன்; அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் – என்பதை இவர்கள் மறந்து விடுவதேனோ? பிடிவாதத்திற்கு மருந்தில்லையே!–

வருத்தத்துடன் சென்ன ஆசார்யர் வாடிய முகத்தோடு, ''நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.'' எச்சரித்து விட்டு இதர வேலைகளை கவனிக்கப் போய் விட்டார்.*

திருமலையிலிருந்து இறங்கியதுமே அலர்மேல்-மங்கைத் தாயாரை சேவித்து விட்டு, தெற்கு நோக்கி நடந்தனர்; வழியில் திருக்கடிகையிலும், பிறகு திருப்புட்குழியிலும் வழிபட்டனர்.

## காஞ்சியில் திருக்கூட்டம்

கல்வியிற் கரையிலாதது; பண்டு பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகர்; 'நகரேஷு காஞ்சி'-என்று காளிதாசனால் கொண்டாடப்படும் அளவுக்கு அந்நாளைய நகரங்களுக்குள்ளே நாயகமாய்க் கொலுவிருந்தது; முக்தி தரும் நகரங்கள் ஏழனுள் ஒரே தென்னாட்டுப் பிரதிநிதி; திருமால் திருப்பதிகளுள் பதினான்கை உட்கொண்டது; நின்ற திருக் கோலம், இருந்ததிருக்கோலம், நடந்ததிருக்கோலம், கிடந்த திருக்கோலம் —ஆகிய அனைத்துக் கோலங்களுக்கும் இடனாயது; மூவர் முதலிகளில் பொய்கையாழ்வார் பிறந்தருளிய புண்ணியபூமி; திருமழிசைப் பிரான் தங்கியிருந்து குணபரப் பல்லவ மகேந்திரனின் சைவ மோகத்தை எதிர்த்துப் போரிட்ட ரணரங்கம்; இரண்டாம் குரு பீடமும் ஆயது கச்சி எனவும்பட்ட அந்தக் காஞ்சி மாநகரம். மேற்கு வாயில் வழியாக நகருள் புகுந்தது நாதமுனிகள் கோஷ்டி,

சங்கப் பழங்காலத்திலிருந்தே பெரும்பாணாற்றுப் படை குறித்தது போல வெஃகாவில் பாம்பணைப்பள்ளி யாங்கண் அறிதுயில் அமர்ந்து, (திருமழிசைப்பிரான்)

---

* வேங்கடத்தின் மீது சைவர்கள் உரிமை கொண்டாடி இராமாநுஜரை வம்புக்கிழுத்ததாய் குருபரம்பரைகள் கூறுவதன் காரணமாக, சில சான்றுகளின் அடிப்படையில் இக் கற்பனை செய்யப்பட்டது.

சொன்னவண்ணம் செய்த யதோக்தகாரியை முதலில் சேவித்தனர்.

வையம் தகளியா, வார்கடலே நெய்யாக,
செய்ய கதிரான் விளக்காக — செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று

எனப் பொய்கையாழ்வார் மொழிவிளக் கேற்றி அந்தாதி பாடியதை ஆசார்யர் நினைந்தார். சைவம் வைணவத்திடமிருந்து பெற்ற கடன்களுள் அதுவும் ஒன்று எனத் தம்மைச் சுற்றி இருந்த சீடர்களை நோக்கிச் சொன்னார் 'யாரால்? எங்கே?'—கேட்டனர் சீடர்கள்.

சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா,
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாக — சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகற் கேற்றினேன் பெற்று

என்று 'கயிலை பாதி, காளத்தி பாதி அந்தாதி'யில் நக்கீர தேவர் பாடியதை எடுத்துக் காட்டினார் ஆசார்யர். அதனைப் பின்னர் பொய்கை மற்றும் பூதத்தார் பாடல்களோடு ஒப்பிட்டு ஆழ்வார்களின் அருளிச் செயல்களே எளிமையிலும், அழகிலும் சிறந்திருப்பதைக் காட்டி உள்ளம் தடித்தார்.

வெஃகாவிற்கு எதிரே இருந்தது அட்டபுயக்கரம். அதன் பதிகத்தில் ''செந்தமிழ் பாடுவார் தாம் விளங்கும் தேவர் இவர்கொல்? தெரியமாட்டேன்'' எனத் திருமங்கை மன்னர் குறிப்பிட்டபடி செந்தமிழ் பாடுவாரான முதலாழ்வார்களால் பாடப்பட்ட தேவர் இவரே'— என அங்கே வெகு அதிசயமாய் எட்டுக் கரங்களோடு காட்சி

தரும் எம்பெருமானை ஆசார்யர் தம் சிஷ்யர்களுக்கு அறிமுகம்செய்து வைத்தார்.

காஞ்சியின் மற்றைத் திருப்பதிகளில் குறிப்பிடத்தக்க பரமேச்சுர விண்ணகரத்தோடு எஞ்சிய 11 திவ்ய தேசங்களிலும் சேவித்து விட்டு கோஷ்டி கோவலூர் வழியாக ஊர் திரும்பிற்று.

# 4. எதிர்காலம் எடுத்தது

## நியாய தத்துவம்

நாதமுனிகள் பிரபந்தப் பிரச்சாரத்தோடு நின்றுவிடவில்லை. ஓய்வு நேரங்களில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தினுள் புதைந்து கிடக்கும் தத்துவத்தையும் பராங்குசதாசர் காட்டிய வழியில் ஆராய்ந்து வந்தார்.

மக்களின் இக வாழ்விற்கு அரசும், ஆன்மாவின் பர வாழ்வுக்கு மதங்களும் உண்டாயின. ஆன்மாவின் வீடு பேறு அதாவது மோட்சமே மதங்களின் குறிக்கோள். இந்த குறிக்கோளை எய்தும் அளவுக்கு ஆன்மாக்களைப் பக்குவப்படுத்துவன மதங்களின் சடங்குகளும், சம்பிரதாயங்களும் ஆகும்.

ஆனால், ஆன்மா என்றால் என்ன? மோட்சம் என்றால் என்ன? இறைவன் என்றால் என்ன? — இம் மாதிரியான கேள்விகள் தத்துவத்தின்பாற்படும். தத்துவமே உலகின் அமைப்பையும், இயக்கத்தையும் பற்றிப் பேசுவது. அந்த ஞானத்தோடேயே சமயச் சடங்குகள் வகுக்கப்படவேண்டும். சடங்குகள் உடம்பு மட்டுமே. தத்துவமே ஒரு சமயத்தின் உயிர் என்பது கருத்து. தத்துவம் என்பது தாது அதாவது அடிப் பொருள்களும் அவற்றிடையே உள்ள தொடர்பும் பற்றிய சாத்திரமாகும்.

---

1. இந்திய தத்துவ ஞானம் (198ı) பக். 237-61.
2. Concepts of Indian Philosophy (1976) p-186.

தத்துவ விசாரணை உட்பட அனைத்துவலக ஆராய்ச்சிகளுக்கும் பிரமாணங்கள் (= சான்றுகள்) தேவை. பிரமாண சாஸ்திரத்தில் (Epistomology) பிரத்தியட்சம் ( = காட்சி), அனுமானம் (ஊகம்), ஆப்த வாக்கியம் ( = நம்பத் தக்கவர்களின் சொல்), உபமானம் ( = உவலம), அருத்தாபத்தி, அனுபலப்தி என ஆறு வகை உண்டு. கடைசி இரண்டும் புதிதாக மேற்கொள்ளப்பட்டவை; புரிந்து கொள்ளக் கொஞ்சம் கடினமானவை. அவற்றிற்குக் கொஞ்சம் விளக்கம் தேவை.

ஒருவன் பகலில் உண்பதில்லை; ஆனால் பருத்திருக்கிறான் — என்று வைத்துக் கொள்வோம். எனில், இவன் இராக்காலங்களில் உண்டிருக்க வேண்டும் — என ஊகிக்கலாம். இந்த ஊகத்திற்கே அருத்தாபத்தி என்று பெயர். இது ஊகமாய் இருந்தும் அனுமானம் என்ற பிரமாணமாக கொள்ளப்படாததற்கு ஒரு காரணம் உண்டு. ஊகத்திற்கு உதவும் பொருட்களுக்கிடையே வியாப்தி இருந்தால் மட்டுமே அவ்வூகத்தை அனுமானம் என்கிறோம்.

ஆனால், வியாப்தி என்றால் என்ன? 'புகை உள்ள இடத்தில் நெருப்பு உண்டு'—என்ற ஊகத்தில் புகைக்கும் நெருப்பிற்கும் ஒரு நெருக்கமான தொடர்பு உள்ளதல்லவா? இந்த இணை பிரியாத தொடர்பே வியாப்தி ஆகும். இந்த வியாப்தி 'பகலில் உண்ணாமலே பருத்திருப்பவன் இரவில் உண்பவன் ஆகல் வேண்டும்' — என்ற ஊகத்தில் சம்பந்தப்பட்ட 'பருத்தல்', இரவில் உண்டல்' —என்ற பொருட்களுக்கிடையே இல்லை. ஏனெனில், உடல் பருப்பது இராக்காலத்தில் உண்பதால் மட்டுமே நிகழ்வதல்ல. இங்ஙனம் இரண்டு தொடர்பற்ற செய்திகளுக்கு நாம் காணும் விளக்கமாய் இருப்பதால் இந்த உத்திக்கு அருத்தாபத்தி எள்ற பெயர் ஆயிற்று. 'அருத்தா' என்றால் உண்மை, 'அபத்தி' என்றால் விளக்கம் கொள்ளுதல்'.

இனி, அனுபலப்தி — என்பது என்ன? ''கோயிலுள் தெய்வம் இல்லை'' — என்று ஒருவன் சொன்னால் அதை நாம் விளங்கிக் கொள்கிறோம். ஆனால், எப்படி? கோயிலுள் தெய்வம் இருந்த காட்சியை அது இல்லாத போது உள்ள காட்சியோடு ஒப்பிட்டு இரண்டுக்கும் உள்ள வேற்றுமையைக் கொண்டே உணர்கிறோம் அல்லவா? இப்படி இல்லாமையை உணரும் திறமையை மற்ற ஐந்து பிரமாணங்களுக்குள் அடக்க முடியாது. இதனால்தான் இத்திறனை 'அனுபலப்தி' என்று தனிப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

தத்துவ ஆராய்ச்சிகளில் பிரத்தியட்சம் என்ற பிரமாணம் மட்டும் ஒரு தனி வகை; ஏனைய ஐந்தும் ஒருவகை.

பிரத்தியட்சத்தை மட்டுமே பிரமாணமாகக் கொண்டவர்கள் உலோகாயதர். பிரத்தியட்சம், அனுமானம் ஆகிய இரண்டை ஒப்புக் கொள்பவர்கள் சமணரும் பவுத்தரும். உலோகாயதம், சமணம், பவுத்தம் ஆகிய மூன்றும் வேதங்களை ஒத்துக் கொள்ளாததால் அவைதீக சமயங்களாகும்.

பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம் என்னும் மூன்று பிரமாணங்களின் அடிப்படையில் அமைந்தன வைஷ்ணம், சைவம் பரிணாமவாதம் படைத்த சாங்கியம் மற்றும் அணுவாதக் கொள்கை கொண்ட வைசேஷிகம் ஆகியனவெல்லாம்.

மேலே கூறிய மூன்றோடு உபமானத்தையும் ஒப்புக் கொண்ட முக்கிய தர்சனம் கவுதமரின் நையாயிகம். நியாய சாஸ்திரப் படைப்பில் நையாயிகரே முன்னணியில் நின்றவராயினும், நையாயிக தர்சனமும் நியாய சாத்திரமும் வெவ்வேறாகப் பிரித்தறியப்பட வேண்டும்.

பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம், உபமானங்களோடு அருத்தாபத்தியும் மீமாம்சகர்

கொண்ட பிரமாணங்கள். ஆறு பிராமணங்களையும் ஒப்புக் கொண்டவர் அத்வைதிகள்.

வைணவம், சைவம், சாங்கியம், நியாயம் வைசேஷிகம், மீமாம்சை, அத்வைதம் ஆகிய ஏழும் வேதங்களை ஒப்புக் கொள்வதால் வைதீக சமயங்கள் ஆகின்றன. வைதீக சமயங்களுக்குள்ளேயே இறைவனை ஒப்புக் கொள்ளாதவை சாங்கியம், நியாயம், சைசேஷிகம் ஆகிய மூன்றும். ஆகவே, இவற்றை நாத்திக தர்சனங்கள் என்கிறோம். ஆயினும், மீமாம்சையில் யோக தர்சனத் திற்போல இறைவன் சக்தி அற்றவனே. உத்தர மீமாம்சை யாகிய வேதாந்தம் மட்டுமே ஆஸ்தீக வைதீக தர்சனம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீவைஷ்ணவம் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம் ஆகிய மூன்று பிரமாணங்களை ஒப்புக் கொண்ட வைதீக மதமென்று கூறினோம். அது இந்த பிரமாணங்களின் அடிப்படையில் சித், அசித், ஈஸ்வரம்— என்று மூன்று தாதுப் பொருட்களைக் கொண்டுள்ளது. அசித்தை 24 வேறு தத்துவங்களாகப் பிரிப்பதும் உண்டு. ஈஸ்வரனை சாங்கியம் ஒப்புக் கொள்ளாததால், வைண வத்தின் 'சித்' — ஏ சாங்கியத்தில் 'புருஷன்' ஆகின்றது. எனவே, சாங்கியத்தின் தத்துவ எண்ணிக்கை இருபத்தைந்தேயாக வைணவத்திலோ இது இருபத்தாறு ஆகும்.

நியாய தத்துவம் என்ற பெயரால் நாதமுனிகள் ஒரு நூல் செய்ததாக பெரிய திருமுடி அடைவு கூறுகின்றது. அது,

யோ வேத்தி யுகபத் ச்ர்வம்,
ப்ரத்யக்ஷேண ஸதாஸ்வத ஹா
தம் ப்ரணம்ய ஹ்ருஷீகேசம்
நியாய தத்வம் ப்ரசக்ஷ்மஹே''

என்ற சுலோகத்துடன் தொடங்கியதாகத் தெரிகிறது. நூல் முழுவதும் கிடைக்கவில்லை யாயினும், இது வைஷ்ணவத்தின் நியாயம் மற்றும் தத்துவங்களையே பேசியிருக்கக்கூடும். கவுதம நியாய சூத்திரங்களின் சில பாகங்கள் மிகக் கடினமான விருத்தமாய் இருப்பதால்[8], இதனைத் தமது சிஷ்யர்கள் எளிதில் கற்பதற்காகவே நாத முனிகள் செய்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை, இதன் சில பகுதிகளை இராமானுஜரும், ஸ்ருதபிரகாசிகா பட்டரும், வேதாந்த தேசிகரும் (19 இடங்களில்) எடுத்துக் காட்டியுள்ளனராம்.[5] இவர்கள் வாக்கினால் இந்நூலுள் பாதம் என்ற பெரும் பிரிவும், பாதத்துள் அதிகரணம் என்ற உட்பிரிவும்[4] இருந்ததை அறிகிறோம். ஞான பாதம், பரமாத்ருபாதம், கரண (பிரமாண) பாதம், ப்ரமேய பாதம் ஆகியன இருந்ததாகத் தெரிகின்றது.[5] நாம் மேலே பிரமாணம் பற்றிச் சொன்ன விஷயங்களெல்லாம் பிரமாண பாதத்தில் இருந்திருக்கக் கூடும் அதிகரணங்களின் வாக்கியங்கள் கத்தியங்கள் (சூத்திரங்கள்) போன்றனவாம்- நாதமுனிகளின் நியாய தத்துவமே ஆளவந்தாரின் சித்தித் திரயத்திற்கு மூலமாகக் கருதப்படுகிறது[7] பட்டரின் 'தத்வ ரத்னாகரம் 2-ம் இதன் வழி வந்ததே எனத் தேசிகர் கூற்றால் அறிகிறோம்[6].

---

3. ஸ்ரீமந் நாத யாமுந வைபவப் பிரகாசிகை (1973) பக். 45
4. ஸ்ரீமந் நாத யாமுந வைபவப் பிரகாசிகை (1993) பக். 38.
5. ஆசார்ய வைபவ மஞ்சரி (1992) பக். 6.
6. ஆசாச்ய வைபவ மஞ்சரி
7. ஆசார்ய வைபவ மஞ்சரி பக், 42.
8. ஆசார்ய வைபவ மஞ்சரி பக். 41

## ஆழ்வார்கள் அவதாரிகை

பிரபந்த குல முதல்வர் என்ற வகையில் அதன் பிரச்சாரத்திலும் போதனையிலும் தமது காலத்தின் பெரும் பாகத்தை நாத முனிகள் செலவிட்டார். கூடவே, ஆழ்வார்களின் வரலாறு, காலம், முதலியவற்றை அவர் ஆராந்ய்தார். குறிப்பாக அவர்கள் போக்கெல்லாம் ஒரு மாதிரியாக இல்லாதது அவர் கவனத்தைக் கவர்ந்திருந்தது. சிலர் பிரபததி வகைப் பக்தி செய்தனர். சிலர் தம் உடல், பொருள், ஆவி அத்தனையையும் தியாகம் செய்தனர். சிலர் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தனர்; இன்னும் சிலர் கடுமையாகப் போரிட்டனர். இந்த வேற்றுமைக்கு இவர்கள் வாழ்ந்த சூழ்நிலை மட்டுமே காரணமாக முடியாது. இவர்களுக்குள்ளேயே இவ்விதப் போக்கிற்கான கிளர்ச்சி இருந்திருக்க வேண்டும். பயிரொன்று செழிக்க மண் வளமும், நீரும் சககாரி (துணைக்) காரணங்களே அல்லவா? முதற் காரணமான விதையின் வேற்றுமையே இன்ன பயிர் இப்படி வளரும் என்று நிர்ணயிப்பது. நெடுங்காலம் சிந்தித்தார்; சிந்தனைக்கிடையே கண் வளர்ந்து பல கனவுகளும் கண்டார் அந்த மானசீகக் காட்சிகளையும் தமது மாணாக்கருக்குப் போதித்தார்.

சிஷ்யர்களே!— எம்பெருமான் துஷ்ட நிக்ரஷ சிஷ்ட பரிபாலன நிமித்தமாக உலகிடைப் பல பிறப்புகள் எடுத்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றுள் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக சில காலமே தொழிற்பட்டு சாதனைகள் புரிந்த பிறப்புக்கள் 'ஆவேசம்' எனப்படும். பரசுராம அவதாரம் இதற்குச் சிறந்த உதாரணமாகச் சொல்லப்படுகிறது. மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம அவதாரங்கள் கூட இத்தகையனவே. இராமகிருஷ்ணாவதாரங்கள் மட்டுமே பூரணமான அவதாரங்கள் என்னலாம்.

ஆழ்வார்கள் 'அபிநய அவதாரம்' என்று நான் முன்னமே பலமுறை கூறி இருக்கிறேன். அவதாரங்களுள் பலவகை இருப்பது போலவே ஆழ்வார்களுள்ளும் பல வகையினர் உண்டு. பொய்கை, பேய், பாண்பெருமாள், பெரியாழ்வார் மற்றும் நம்மாழ்வார் ஆகிய ஐவரும் சாத்வீகர்கள். மாறாக, பூதத்தார், திருமழிசைப்பிரான், தொண்டரடிப் பொடிகள், திருமங்கை மன்னர் மற்றும் குலசேகரப் பெருமாள் ஆகிய ஐவரும் ரஜோ குணத்தவ ராகக் காணப்படுகின்றனர். இவர்கள் பக்தியும் ஒரு வகையின அல்ல. பெரியாழ்வாரும்; குலசேகரப் பெருமாளும் வாத்சல்ய பக்தி மிக்கவர்கள். தொண்டரடிப் பொடிகளுடையது தாஸ்ய பக்தி. ஆண்டாள் அனுராகத்தின் அவதாரம். இவ்வேற்றுமைகளுக்கெல்லாம் காரணம் அடிப்படையிலேயே இருக்க வேண்டும். இதுபற்றிய சிந்தனைகள் உறக்கத்திலே கனவும், விழிப்பின் போது கற்பனையும் ஆக முகிழ்த்து என் வாழ்க்கையில் பகலிலே இரவையும், இரவிலே பகலையும் உண்டாக்கின. கனவும், கற்பனையும் எனக்கு காட்டிக்கொடுத்தெல்லாம் ஈஸ்வரப் பிரசாதம்தான். எனவேயே, அதை உங்களுக்கு இப்போது வெளியிடுகிறேன். ஆழ்வார்கள் எல்லாம் அம்சாவதாரம் என்பதே பகவான் எனக்கு வெளியிட்ட அந்தப் பரம ரகசியம். அம்சாவதாரம் என்றால் ஸ்ரீமந் நாராயணனின் பாகமாய் அவனோடே உறைகின்ற வற்றின் பிறப்பு — என்பதை நீங்கள் ஊகித்துவிட்டிருப்பீர்கள்.

ஆனால், யார் எந்த அம்சம்? — என்பதில்தான் சிக்கல் எல்லாம் இங்குதான் எனது மானசீகக் காட்சியை உங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது; கேளுங்கள்;

| | | |
|---|---|---|
| பொய்கையார் | ... | சங்காம்சர் |
| பூதத்தார் | ... | கதாம்சர் |
| பேயார் | ... | நந்த காம்சர் |

| | | |
|---|---|---|
| திருமழிசைப்பிரான் | ... | சுதர்சனாம்சர் |
| திருமங்கை மன்னர் | ... | கார்முகாம்சர் |

என்னலாம். முதலாழ்வார்களில் சத்துவ குணம் படைத்த பொய்கையாரும், பேயாருங்கூட ஆயுதங்களின் அவதார மாவது இவர்களே வைஷ்ணவைப் புரட்சிக்கு வித்திட்ட வர்கள் ஆலதால்தான். திருமழிசையும், திருமங்கையும் கண்ணபிரான் கையில் திகழ்ந்த ஆழிப்படையும் (சுதர் சனம்), ராமபிரான் பிடித்த வெற்றி வில்லும் (கோதண்டம்/ சார்ங்கம்/கார்முகம்) ஆகக் கூடுவதில் உங்களுக்கு அபிப்ராய பேதம் இருக்க முடியாது. ஏனெனில், இவர்களே வைஷ்ணவத்திற்காக அல்லும், பகலும் போராடிய முன்னணி வீரர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏனையவருள்

| | | |
|---|---|---|
| பாணர் | ... | ஸ்ரீவத்சாம்சர் |
| தொண்டரடிப் பொடிகள் | ... | வைஜயந்தி என்ற வனமாலாம்சர் |
| குலசேகரர் | ... | கவுஸ்துவாம்சர் |

பெரியாழ்வாரும், நம்மாழ்வாரும் மட்டுமே சற்றே மாறுபட்ட வகையினராகத் தோற்று கின்றனர். இவர்கள் அணிகள், ஆயுதங்களின் அவதாரங் கள் அல்லர். நரஞும் எம்பெருமானின் பக்கலிலேயே இருந்து பாதுகாத்துவரும் கருடாழ்வாராக பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரையும், நித்தியசூரிகளுக்குத் தலைவ ரான சேனை முதலியாரின் அம்சமாக நகக்கெல்லாம் ஆசார்யரான நம்மாழ்வாரையும் நாம் கருத வேண்டும், ஆழ்வார்கள் ஆகாமல் திருவரங்கனை மணந்துகொண்ட கோதையாரையும், உறையூர் நாச்சியாரையும் பூதேவி நீளாதேவி அம்சங்களாகக் கருதலாம். கோதை நாச்சியார் துளசிச் செடியின் அருகில் மண்ணிலே பெரியாழ்வாரின் கண்ணுக்குத் தென்பட்டதால் அவர் பூதேவி அம்சர்

ஆகிறார். ஆசார்யர் ஒருவழியாக ஆழ்வார்கள் அவதாரிகை பற்றிய பிரச்சினையை முடித்தார்.

## பவிஷ்யத் ஆசார்யன்

இந்தக் கூட்டம் முடிந்தபின் திருக்கண்ணமங்கை ஆண்டானுக்கு, வந்தவருக்கெல்லாம் திருவாய்மொழி வேதத்தை கடைசியாக போதிப்பதை வழக்கமாக கொண்டிருந்தபடி நாதமுனிகள் அதனைப் போதனை செய்தார். ஆனால், ''பொலிக! பொலிக! போயிற்று வல்லுயிர்ச் சாபம்''— என்று திருவாய்மொழிப் பதிகம் (5—2) மட்டும் அவர் உள்ளத்தில் சில ஐயப்பாடுகளை அப்போது தோற்றுவித்துவிட்டது. இதற்கு முன் திருவாய்மொழியைப் பல சமயங்களில் போதித்திருந்தும் இந்த ஐயம் உண்டானதில்லை. எனவே, இப்போது இது தோற்றியது திருவருட் பயன் என்றே அவருக்கு தோன்றிற்று. இந்த பதிகத்திற்கு முன்னும் பின்னும் எம்பெருமான் பெருமை பேசி, அவனை அடைவதெப்போ? — எனப் புலம்பிய ஆழ்வார் இடையில் ஏதோ புதையல் கண்டெடுத்தாற் போல வியப்பு மேலிட்டுப் போய் ஓலமிட்டு வாழ்த்துகிறார். இந்தத் திடீர்த் திருப்பத்திற்குக் காரணம் என்ன? ஆழ்வார் மனக்கண் முன் அதுசமயம் தோன்றியது என்ன? அதிகம் சிரமப்பட்டு ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தார். அதற்குள் திருவாய்மொழிப் போதனை முழுக்க முடிந்து விட்டது. கடைசியில், தாம் கண்டுபிடித்த இரகசியத்தை ஆண்டானோடு மட்டும் இரகசியமாகப் பகிர்ந்து கொண்டார்.

''ஆண்டான்! சீராகப் போய்க் கொண்டிருந்த திருவாய்மொழியின் இடையில் 'பொலிக பொலிக' என்று ஆழ்வார் திடீரென வாழ்த்தக் கண்டீர் அல்லவா? அது ஏன்?— என்று நீர் கேட்கவும் இல்லை; நான் சொல்லவுமி

இல்லை. ஆனாலும், அவர் 'கலியுகம் கெடும்' — என்று சொல்லிப் பின்பு 'பெரிய கி(ரு)தயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருகும்' — என்றும் சொல்லியது பற்றிச் சிந்தித்தேன். எனக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. ஆழ்வார் மனத்தில் ஏதோ ஒரு காட்சி பளிச்சிட்டிருக்கிறது. அந்த பரவசத்தில்தான் அவர் இப்படி வாய்விட்டு வாழ்த்தி இருக்கிறார்.

நாம் தசாவதாரங்கள் பற்றி அறிவோம். இதில் கடைசியான கலிகாவதாரம் இனிமேல்தான் நிகழ வேண்டும். இப்படியே ஆழ்வார்களுள்ளும் இன்னொருவர் வருகைக்கு வாய்ப்பு இருக்கலாம் அல்லவா? பல்லவச் சக்கரவர்த்தி நிருபதுங்க வர்மருக்குப்பின் வைஷ்ணவம் இறங்கு முகம் கண்டுவிட்டது. இப்போதுள்ள சோழர்கள் ஆட்சி சைவ சமயத்திற்கே பேராதரவு காட்டி வருகிறது. இந்த ஆட்சியில் நாம் மாற்றாந்தாய் மக்களாகவே உள்ளோம். இந்த அடிமை நிலையில் இருந்து விடுபட வேண்டிய கட்டாயம் இப்போது நமக்கு இருக்கிறது. இந்தக் கலியை முடித்து வைணவத்திற்கு ஒரு நல்ல கிரேதாயுகம் படைக்க இன்னொரு ஆசார்யன் வர வேண்டும் — என்று எனக்குத் திட்ட வட்டமாகத் தெரிகின்றது. 'இப்படி வருவான்' — என்று மானசீகமாகக் கண்டுதான் ஆழ்வார் அந்த பவிஷ்யத் (எதிர்கால) ஆசார்யனை வாழ்த்துகிறாப் போலே ஒரு கனவு கண்டேன். ஆகவே, ஆசார்ய அவதாரம் ஆழ்வார்களோடே முடிந்து விடவில்லை. அது தொடரும் என நாம் நம்புவோமாக''

உரையை முடித்த நாதமுனி தமது கனவு பற்றி ஆண்டானை யாரிடம் பிரஸ்தாபிக்க வேண்டாம் என்றும் கூறிவிட்டுத் தமது பாடத்தை முடித்துக் கொண்டார். ஆயினும், அவர் தமது அன்புக்குரிய உய்யக்கொண்டாரிடம் மட்டும் தனியாக அதைச் சொல்லி வைத்தார்

சரமோபாய நிர்ணயத்தில் நாயனாராச்சான் பிள்ளை திருக்கண்ணமங்கை ஆண்டானுக்கு நாதமுனிகள் பவிஷ்யத் (எதிர்கால) ஆசார்யத் தோற்றம் பற்றி இரகசியமாக சொன்னதாகக் கூறப்பட்டிருப்பதிலிருந்து மேலைக் கதை ஊகிக்கப்பட்டது. நெடுங்காலமாக இருந்து வரும் ஆழ்வார்கள் அம்சாவதாரக் கருத்து நாதமுனிகள் காலத்திலேயே தொடங்கியிருக்க வேண்டுமாதலால் இந்த அவதாரிகையையும், பவிஷ்யதாசார்யன் பற்றிய செய்தியையும் இங்கே நாம் ஒன்றாக இணைத்துக் கதை புனைந்தோம்.

## வீமன் குந்தவை, ஆதித்தன் கோதைப் பிராட்டிகளின் வருகை (கி. பி. 969)

(சுந்தர சோழரின் தாயான) வீமன் குந்தவையும் ஆதித்தன் கோதைப் பிராட்டியும் அரிஞ்சய சோழரின் அரசியர்கள். செம்பியன் மாதேவியாரைப் போல இவர்களும் அரிஞ்யர் தளபதியாய் இருந்த போது அவராலும், தம்மாலும் வழிபடப்பட்ட அனந்தீச்சுரரை வணங்க சுந்தர சோழரின் 12-ஆம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 969) உடையார்குடி வந்தனர். அனந்தீச்சுரப் பரமசுவாமிக்கு திங்கள் தோறும் சங்கராந்தி நாளில் 1000 குட நீரால் முழுக்காட்ட வீமன் குந்தவையும்,[8] சித்திரை விஷுவில் மட்டும் 108 குடநீர் கொண்டு அவ்வாறு செய்ய ஆதித்தன் கோதைப் பிராட்டியும்[9] நிலம் வழங்கினர் இவர்களும் தமது மன்னனாருக்கு ஏதும் செய்யாததால் நாதமுனி மனம் நொந்து போனார்.

இப்படித் தானங்கள் செய்தவர்கள் இன்னும் எத்துணையோ பேர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்

8. S. I. I. Vol 13, no 224 9. SI.I. Vol 13 no. 225

நாதமுனியின் சொட்டைக் குடியையே சேர்ந்த ஐய நம்பி பட்டர்தான்.[10] ஏனெனில், இவர் நாதமுனியின் உறவினாராய் இருந்தும் வயிற்றுப் பிழைப்பிற்காக் சோழர்களின் தயவை நாடிச் சைவம் சார்ந்திருந்தார்.

இன்னொரு சிறப்பும் உண்டு. வீரநாராயண சதுர்வேதி மங்கலம் அன்று எய்தியிருந்த பெருஞ்சிறப்பை எதிர்காலத்தில் ஒரு நாள் இழக்கும்படி நேரிட்டாலும் பழம்பெருமையை இவ் எதிர்காலத்தாருக்கு எடுத்து உணர்த்தும் வகையில் இவை எல்லாமும் அனந்தீச் சுரத்தில் கல்மேல் பொறித்து வைக்கப்பட்டன. மன்னனார் கோயில் மட்டும் செங்கல் தளியாகவே இருந்ததால், அனந்தீச்சுரத்திலும் மூத்த தன் பெருமையை இது இவ்வாறு எடுத்துக்கூற இயலாமலே திகைத்து நின்று விட்டது!

## உத்தம சோழர் பட்டம் (971)

கி. பி. 949-ஐய தக்கோலப் போரில் ராஜாதித்தன் கொல்லயுண்ட நாளிலிருந்து தென்பெண்ணை வரை யிருந்த பேரரசின் வடபகுதி இராஷ்டிரகூடர் கைப் பட்டது. ஆயினும், சுந்தர சோழரின் தாயான கல்யாணி வடவெல் வைதும்பர் மகள். உடன்பிறந்தாளான அரிஞ்சிகைப் பிராட்டியோ வாணருக்கு மணமுடிக்கப் பட்டிருந்தாள். இவ் உறவுகளின் வலிமையால் சுந்தர சோழரின் ஐந்தாம் ஆட்சி ஆண்டிலிருந்து (கி. பி. 962) இப்பக்கத்தே சோழர்கள் செல்வாக்கு மீண்டும் தலை தூக்க ஆரம்பித்தது. கி. பி. 967–ல் இராஷ்டரகூட மூன்றாம் கிருஷ்ணன் மறைந்ததுமே தொண்டை மண்டலம் முழுவதும் சோழர் அதிகாரத்திற்குத் திரும்பி விட்டது; சற்று முன்னர் கி.பி. 966–இல் ஆதித்தகரிகாலன் கொலை செய்யப்பட்டது கூட இதனைப் பாதிக்கவில்லை.

---

10. S. I. I. Vol 19, no 119

அடுத்து பட்டத்திற் குரியவனைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. சுந்தர சோழரின் இரண்டாவது மகனும், பின்னாளில் ராஜராஜன் எனப்புகழ் பெற்றவருமான அருண்மொழித் தேவருக்கே அது கிடைக்க வேண்டும். ஆயினும், அரசு துறந்து மேற்கெழுந்தருளி விட்ட மாமன்னர் கண்டராதித்தரின் மகனும், அருண்மொழிக்குச் சிற்றப்பன் முறையினருமான மதுராந்தகரும் அதற்கு ஆசைப்பட்டார். அந்த நியாயமான விருப்பத்தை ஒப்புக்கொண்டு, அருமொழித் தேவர் விட்டுக் கொடுத்தார். இதன்பேரில் சுந்தர சோழர் மதுராந்தகருக்கு 'உத்தம சோழர்' என்ற பெயரோடு கி. பி. 971-ல் இளவரசுப் பட்டம் கட்டினார். சுந்தர சோழர் மறைவிற்குப் பிறகு பட்டப் போட்டி ஏற்பட்டது எனவும், அதில் அருமொழித் தேவர் விட்டுக் கொடுத்ததால், மதுராந்தகர் முடிசூடிக் கொண்டார் - எனவும் இதுகாறும் நம்பப்பட்டுவந்ததை அறிஞர் N. சேதுராமன் மறுக்கிறார்.

## வடநாட்டு யாத்திரை (கி. பி. 970-975)

நாதமுனிகள் சுமார் 20 பிராயத்தளவில் ஒரு முறை வடநாட்டிற்குச் சென்றதை முன்பே கண்டோம். ஆனால், அப்போது ஆழ்வார்களைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே, ஆழ்வார்களால் பாடப்பட்ட தலங்களுள் கண்டங்கடி நகர் போலும் இரண்டொரு இடங்களை விட்டுவிட்டும் இருக்கலாம். நாலாயிர திவ்யப் பிரபந்தம் முழுவதும் அறிந்துள்ள இப்போது ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டு, ஆனால், தாம் சேவிக்கத் தவறிவிட்ட திருப்பதிகளையும் சென்று சேவிக்க வேண்டும் – என்று ஒரு அரிப்பு அவர் உள்ளத்தில் இருந்திருக்கும் என நாம் எதிர் பார்க்கலாம். இதை எப்போது தீர்த்துக்கொண்டார் என அறிய வேண்டியது அவசியம்.

நாதமுனிகள் தமது மகனான ஈஸ்வரமுனியோடு வட நாட்டுக்குப் போய் வந்ததாக நூல்கள் கூறுகின்றன. யாத்திரையிலிருந்து திரும்பி வந்ததுமே தமது பேரனுக்கு 'யமுனைத் துறைவன்' என்று பெயரிட வேண்டுமென்று ஈஸ்வரமுனிக்குக் கட்டளை இட்டாராம். இந்தப் பேரன் நாதமுனிகள் மறைந்து நெடுங்காலம் (சுமார் 20 ஆண்டுகள்) கழித்தே பிறந்தார். எனில், இவர் தம் பேரனைப் பற்றி எண்ணியதும், இதற்கு முன் வடநாட்டுக்கு யாத்திரை போனதும் மறைவுக்குச் சற்று முன்பே ஆகல் வேண்டும். மறைவுக்கு 33 ஆண்டுகளுக்கு முன் குருகூருக்குப் போகக் காரணமாயிருந்த ஆராவமுதப் பதிகத்தை யாத்திரையிலிருந்து திரும்பி வந்த பிறகே கேட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்த யாத்திரை பேரனுக்குப் பெயரிடக் காரணமாயிருந்த யாத்திரையினும் நிச்சயமாக வேறானதே ஆகல் வேண்டும்.

நாதமுனி யாத்திரைக்குச் சென்ற நாளில் திருவரங்கத்தில் மார்கழி விழாவின் போது அத்யயனம் மற்றும் அத்யாபக விழாக்களை நடத்தும் பொறுப்பை தமது முதல் மாணாக்கராகிய உய்யக் கொண்டாரிடமே விட்டுச் சென்றிருக்க வேண்டும்.

## நாதமுனிகள் அடிச் சுவட்டில் நம்பியாண்டார் நம்பிகளின் தேவாரத் தொகுப்பு (கி. பி. 970)

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைச் செம்மை செய்த நாதமுனிகளைப் போலவே நம்பியாண்டார் நம்பிகள் சைவ உலகில் திருப்பதியங்களைத் தொகுத்தும், வகுத்தும் அரும்பணி ஆற்றியவர். நம்பியாண்டார் நம்பிகளின் நாரையூர் நாதமுனிகளின் ஊருக்கு ஆறு அல்லது ஏழு கிலோ மீட்டர் தொலைவே உள்ளது. மேலும், இது வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தின் பிடாகையாகவும் அந்நாளில் இருந்தது. இங்ஙனம் ஓரிடத்தவர்களான

இவர்கள் காலத்தாலும் நெருக்கமானவர்களேயா என்பது தமிழ் மற்றும் சமய வரலாறுகளுக்கு மிகவும் இன்றியமையாதது.

நம்பியாண்டார் நம்பிகளின் நூல்கள் பத்தும் பதினோராம் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையாரின் நூல்கள் ஐந்திற்கும் பின்னதாக வைக்கப்பட்டுள்ளன. பட்டினத்தார் கி. பி. 830–885க்கு இடைப்பட்ட மாணிக்க வாசகருக்கு சற்றே பிற்பட்டவராதலை திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் மாணிக்கவாசகராகிய திருப் பெருந்துறைப் பிள்ளையை குறித்துச் சேறலான் உணர லாம். இவ்வகையில் கி. பி. 10-ஆம் நூற்றாண்டினராகத் தோன்றும் பட்டினத்தாரை, 'சிவபாத்தியர்'–என்ற பெய ரால் மாணிக்கவாசகரைக் குறித்த நம்பியாண்டார் நம்பிகள் தமது அருளிச் செயல்களுள் எங்குமே குறிப்பிட வில்லை. எனவே, நம்பிகள் பட்டினத்தாருக்குச் சற்றே இளைய சமகாலத்தவரே ஆகல் வேண்டும். சோழியப் பேரரசர்களான ராஜராஜன், ராஜேந்திரன் ஆகியோரால் அமைக்கப்பட்டனவும், அக்கால அடியார்களான கருவூர்த் தேவர், திருமாளிகைத் தேவர் ஆகியோரால் பாடப் பட்டனவுமான தஞ்சை ராஜராஜேச்சுரம் (கி.பி. 1010), கங்கைகொண்ட சோழீச்சுரம் (கி. பி. 1025 ?) ஆகிய கோயில்களை நம்பிகள் பாடவில்லை. எனவே நம்பி களின் காலத்தை கி.பி. 900–1000 ஆகக் கொள்வதே பொருத்தம்.

நம்பியாண்டார் நம்பிகள் ராஜராஜ அபய குலசேகர னின் ஆணையை மேற்கொண்டே தில்லைப் பெருங் கோயிலுள் சிதைந்திருந்த தேவாரப் பாடல்களின் ஏடு களை எடுத்து, உருக்குலையாமல் இருந்தவற்றை மட்டும் ஏழு திருமுறைகளாக வகுத்தார் என உமாபதி சிவத்தின் திருமுறைகண்ட புராணம் கூறுகின்றது. தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரம் ஓதுவதற்கு ராஜராஜன் ஏற்பாடு செய்ததாக அங்கே உள்ள கல்வெட்டுகள் கூறுவதாலும்,

இராஜராஜனுக்கே 'சிவபாத சேகரன்' என்ற விருதுப் பெயர் இருப்பதாலும் உமாபதி சிவம் கூறும் ராஜராஜ அபய குலசேகரன் ராஜகேசரி முதலாம் ராஜராஜனாகவே கருதப்படுகிறான். ஆயினும், சமயப் பணிகளுள் எல்லாம் தலைமை சான்ற இவ் அரும்பணி ராஜராஜனின் மெய்க் கீர்த்திகளில் இல்லை; வேறு தனிக் கல்வெட்டு எதிலும் கூட இல்லை. தில்லை கோவிந்தராஜப் பெருமாளை இரண்டாம் குலோத்துங்கன் கடலில் எறிந்தது போன்ற வன்முறைகளையெல்லாம் பெருமிதத்தோடு கூறும் சிறந்த சிவநேயச் செல்வரான ஒட்டக்கூத்தர் பெருமானும் கூட தேவாரம் வெளிப்படுத்தப்பட்ட அரும் பணியை சோழர் களின் பெருமை பேசிய பகுதிகள் பலவற்றில் ஒன்றிற் கூட குறிக்கவில்லை. அதுபற்றி திருமுறைகண்ட ராஜ ராஜ அபய குலசேகரனை கூத்தர் பெருமான் காலத்தும், அவருக்குப் பின்னும் வாழ்ந்த இரண்டாம் ராஜராஜனாக சைவப் பேரறிஞர் ஆன டி. வி. சதாசிவ பண்டாரத்தார் கொள்வர். இவற்றைவிடவும் தேவாரத் தொகுப்பு நம்பியாண்டார் நம்பிகளின் தனிப்பட்ட பணியே, நாத முனிகள் நாலாயிரம் கண்டதைப் போல-என்றலே பொருத்தம். ஞானசம்பந்தர் பாடல்களைச் சீர்காழி யிலும், சுந்தரர் பாடல்களைத் திருவாரூரிலும், அப்பர் பெருமானின் அருளிச் செயல்களை அவர் இறுதி எய்திய திருப்புகலூர் மடத்திலும் ஆக நம்பிகள் தேடிப் பிடித் திருக்க வேண்டுமென்றே நமக்குத் தோன்றுகிறது. நம்பியாண்டார் நம்பிகளால் தில்லையில் அடக்கம் செய்யப்பட்ட திருமுறைகளே கோயிலைப் புதுப்பிக்க வீக்கிரமசோழன் காலத்தில் வெளியில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இதுவே பின்னாளில் உமாபதி சிவம் கூறு மாறு போல மாறியிருக்க வேண்டும்.

முதலாம் குலோத்துங்கன் ஆட்சியில் (கி.பி. 1100) நரலோக வீரன் என்பவன் மூவர் தேவாரங்

களையும் செப்பேடு செய்து தில்லையில் அடக்கம் செய்த தாகத் தெரிவதால்[11] இதற்குச் சற்று முன்னரே நம்பி களால் முன்னம் அடக்கம் செய்யப்பட்டிருந்வை வெளி யில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நம்பிகள் தமது திருத்தொண்டர் திருவந்தாதியை கி. பி. 974-க்குப் பிறகே செய்திருக்க வேண்டும் என்பதற் கான குறிப்புகள் சில பின்னர்க் காட்டப்படும். எனவே, இந்த கி. பி 974-க்கு முன் தேவாரத் தொகுப்பு முடிந் திருக்க வேண்டும். இக்காலம் இவ்வகையில் கி பி. 970 ஆகலாம். நாலாயிரம் இதே வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து நாதமுனிகளால் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு 'ஆராவமுதே' எனத் தொடங்கும் பதிகத்தை நாதமுனிகள் கேட்டதிலிருந்து தொடங்குவதால், நம்பியாண்டார் நம்பிகள் நாதமுனிகள் அடிச்சுவட்டிலேயே சென்றிருக் கிறார் என்பது வெளிப்படை. இருவரும் ஒரே ஊரினர் அல்லவா? சைவ-வைணவப் போட்டியில் வைணவத் திற்கு இது ஒரு 'ப்ளஸ் பாயிண்ட்' (Plus point).

## கண்டராதித்தர் மறைவும் (கி. பி. 974), சுந்தர சோழர் மறைவும் (கி. பி. 975)

மேற்கெழுந்தருளிய கண்டராதித்தர் கன்னடநாட்டு நந்தியூரில் வதிந்திருக்கலாம் போலத் தெரிகிறது, ஏனெனில், திருநல்லூரான கோனேரிராஜபுரத்தில் செம்பியன் மாதேவியாரால் நிறுத்தப்பட்ட கண்ட ராதித்தர் சிலையைப் போன்றதும், நந்தியூர் மக்களால் சோழனுடையதாகக் கூறப்படுவதுமான சிலை ஒன்று நந்தியூரில் காணப்படுகிறது. சென்னப்பட்டணக் கல்வெட்டு ஒன்றில் 'சிவஞான கண்டராதித்தர்' என்ற

11. பாண்டியர் வரலாறு, சேதுராமன். N. (1980) பக் 93

தொடரும் பயில்கின்றது. கண்டராதித்தர் தம் மகனின் ஆட்சிக் காலத்தே சுமார் கி. பி. 974–ல் சிவலோகம் சேர்ந்திருக்கலாம் என்பர் அறிஞர் என். சேதுராமன் அவர்கள்.[12]

இவ் அறிஞர் கருத்துப்படி சுந்தர சோழர் மறைவு கி பி. 975–இல் ஆகும். இவர் காஞ்சிப் பொன் மாளிகையில் தங்கியிருந்தபோது துஞ்சினார் எனப் பட்டயங்கள் கூறுகின்றன. அருண்மொழியின் தாயும் பட்டத்தரசியுமான வானவன் மாதேவியாரும் அப்போது உடன்கட்டை ஏறினார்.

''செந்திரு மடந்தைமன் ஸ்ரீராஜராஜன்
இந்திர சமானன் இராஜ சர்வக்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான், கலியைக்
கரவாக் காரிகை சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறும்
தூண்டா விளக்கு..................
.............. மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தர
திருப்புய முயங்கும் தேவி''
எனத் திருக்கோவலலூர்க் கல்வெட்டு [13] ஒன்று
மிக உருக்கமாக வருணித்துள்ளது.

---

12. Early Cholas (1980) p. 40–41
13. S. I. I. Vol VII, no 863

## நம்பியாண்டாரின் திருத்தொண்டர் திருவந்தாதியும், பிற நூல்களும்

நம்பியாண்டார் நம்பிகளால்,

''புலமன்னிய மன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன்னிய மன்னைக் கோகனநாதன் குலமுதலோன்.''
(திருத்தொண் திரு, 50)

என புகழ்ச் சோழ நாயனாரைப் பற்றிய செய்யுளில் குறிப்பிடப்படுவது பரகேசரி முதலாம் பராந்தகன் ஈழம் கொண்ட செய்தியே. இங்ஙனமே,

''சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் குலமுதலோன்''
(''திருத்தொண். திரு. 105)

என இடங்கழி நாயனாரைப் பற்றிய செய்யுளில் குறிப்பிடப்பட்ட சிற்றம்பலம் பொன் வேய்ந்த நிகழ்ச்சியும் பராந்தகனுடையதே ஆகும். ஆயினும், இப்பணி இங்கு ஆதித்தன் எனப் பெயரிய இன்னொருவன்மேல் ஏற்றி உரைக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. இவன் பராந்தகனின் தந்தை ஆகிய ஆதித்த சோழனே என்பர் ஆசிரியர் சதாசிவப் பண்டாரத்தார் [14] அவர்கள். பராந்தகனின் மூத்த மகனாகிய ராஜாதித்தனாக இவனைக் கொள்ள வேண்டும் என்பர் பேராசிரியர் மு. ராகவையங்கார் [15] அவர்கள்.

---

14. இலக்கியச் சாசன வழக்காறுகள் (1973) பக் 166
15. இலக்கியமும் கல்வெட்டுக்களும் (1977) பக். 29-31

''செம்பொன் அணிந்து சிற்றம்பலத்தை,
சிவலோகம் எய்தி
நம்பன் அடிக்கீழ் இருந்தோன் குலமுதலோன்''
(திருத்தொண். திரு. 82)

எனச் செங்கட் சோழ நாயனாரைப் பற்றிய செய்யுளில் சிற்றம்பலம் பொன் வேய்ந்தவனாக கூறப்பட்ட ஆதித்தன் இறந்துபோய் சிவலோகம் சேர்ந்து சிவ பெருமான் திருவடி நீழலில் இருந்ததாகக் கூறப்படுதல் ஐயங்கார் கொண்ட கருத்தை அரண் செய்கின்றது. ஆயினும், திருவிசைப்பாவில் கோயில் பதிகம் பாடி ஏனை யோரையும் இப்படி பாடச் செய்திருக்கக் கூடிய கண்டராதித்தரே சிற்றம்பலத்தை பொன் வேய்ந்திருக்கக் கூடும். கண்டராதித்தருக்காக செம்பியன் மாதேவியார் உடையார்குடி வந்து வழிபாடு செய்திருப்பதிலிருந்து கண்டராதித்தரே அங்கிருந்த படை வீட்டில் தளபதியாய் இருந்திருக்கக்கூடுதலும் முன்னம் கண்டோம். ஆகலின், உடையார்குடிக்கு அணித்தானதும், வீர நாராயண சதுர்வேதி மங்கலத்தின் இன்னொரு பிடாகையேயுமான நாரையூரில் வதிந்த நம்பியாண்டார் நம்பிகளால் குறிப்பிடப்பட்ட ஆதித்தர் கண்டராதித்த ராகவே இருக்கமுடியும் என்பதே நம் துணிபு. கண்டராதித்தர் இறைவன் திருவடி நீழல் புக்கது கி. பி. 974-ல் என்பர் அறிஞர் என். சேதுராமன் அவர்கள்.[12] எனில், திருத்தொண்டர் திருவந்தாதி கி. பி, 975 அளவில் செய்யப்பட்டதாகக் கொள்ளலாம்.

நம்பியாண்டார் நம்பிகள் செய்த நூல்கள் பத்து — திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய

பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதசமாலை என. இவற்றுள் முதல் இரண்டும் இவர் வாழ்க்கையின் முற்பகுதியிலேயே அருளப்பட்டிருத்தல் கூடியதே. ஏனைய எட்டும் தேவாரம் தொகுக்கப்பட்ட பின்னரே செய்யப்பட்டிருக்க வேண்டும். இவற்றுள்ளும் தேவாரத்துட் காணும் திருத்தொண்டத் தொகையையே பின்பற்றிச் செய்யப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதியே முற்பட்டதாகல் வேண்டும். எனவே, பதினொன்றாம் திருமுறையின் இறுதியில் இவை கால முறையிலேயே வைக்கப்பட்டுள்ளன என்னலாம். நம்பிகளின் நூல்களுள் ஆறு சம்பந்தப் பிள்ளையாரைப் பற்றியன வாதல் குறிப்பிடத்தக்கது. இவரின் சம்பந்தப் பக்தியே அப்பர் — சம்பந்தர் — சுந்தரர் — மாணிக்கவாசகர் என்ற இயற்கையான கால வரன் முறையை சம்பந்தர் — அப்பர் — சுந்தரர் — மாணிக்கவாசகர் என்ற இக்கால முறைக்கு மாற்றி வைத்து விட்டது!

## ஊர் நோக்கி (கி. பி. 975)

இனி, நாதமுனிகளைப் பின் தொடர்வோம். வடநாட்டுத் திருப்பதிகள் பலவற்றிலும் சுற்றி வந்த இவர் கடைசியாக யமுனைக் கரையிலிருந்த கோவர்த்தனத்திற்கு வந்தார். அமைதியான சூழலில் அழகாய் இருந்த அது முன் யாத்திரையின் போதேஅவர் உள்ளத்தைக் கவர்ந்தது தான். அதனால், அவ்விடத்தில் சிலகாலம் தம் மகனோடும் தங்கி கண்ண பிரானின் திருவிளையாடல்களை எல்லாம் பெரியாழ்வார் பாடல்களோடும் சேர்த்து எண்ணிப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தார். அந்த அழுத்தமான கண்ண பக்தியுங்கூட மன்னனார் பக்தியை அப்படி ஒன்றும் மிஞ்சிவிடுவதாக இல்லை. சன்மத்தோடு பிறந்ததல்லவா? சுந்தரமூர்த்திகள் சங்கிலி நாச்சியாரோடு ஒற்றி

யூரில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்த போதும் திருவாரூர் நினைப்பெடுத்து இரங்கினாற் போல, நாத முனிகளின் மனத்திலும் மன்னனாரின் நினைப்பு ஒருபக்கம் அரித்துக்கொண்டே யிருந்தது. ஒருநாள் "என்னை மறந்தாயோ?" —என மன்னனார் அவரைக் கேட்டே விட்டார்! கனவில்தான் என்றாலும், அந்த அழைப்பை அவரால் தட்ட முடியவில்லை. கோவர்த்தனப் பெருமானிடம் விடை கொண்டு தம்முடைய துவராபதிக்கு விரைந்தார்.

## ஈஸ்வரமுனியின் திருமணம் (கி. பி. 976)

ஊர் திரும்பி மன்னனாரை சேவித்தபின் தம் மகனின் திருமணம் பற்றிய எண்ணம் அவர் உள்ளத்தில் ஊன்றியது. ஆளவந்தாரின் தாயை 'சீரங்க நாயகி' எனப் பெரிய திருமுடி அடைவு கூறுவதால், ஈஸ்வர முனியை மணந்த பெண்ணின் பெயர் இதுவாதல் காண்கிறோம். வடநாட்டு யாத்திரையில் கண்ணைக் கவர்ந்த யமுனைத் துறையினுடையவும், அங்கே குடிகொண்ட பெருமானுடையவும் நினைவாக தம் பேரனுக்கு 'யமுனைத் துறைவன்' என்று பெயரிட அத்தம்பதிகளுக்கு அவர் ஆணையிட்டார். யமுனைத் துறைவர் பிறந்து ஆளாகியபின் அவருக்கு யோகாப்பியாசம் செய்து வைக்கும்படி குருகைகாவலப்பனுக்கும், ஏனையவற்றைப் போதிக்கும்படி உய்யக் கொண்டாருக்கும் உரைத்தார்.

## கலக்கம் (கி. பி. 976)

வடநாட்டு யாத்திரையிலிருந்து தமிழகத்துள் புகுந்த உடனேயே அங்கு ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டார் ஆசார்யர். வழிநெடுக அனேகமாக ஒவ்வொரு ஊரிலும் சிவபெருமானைப் பற்றிய பாடல்கள் பக்திப் பரவசத்துடன் ஓதப்பட்டன. இந்தப் பதிகங்கள் திடீரென்று

எவ்வாறு உயிர் பெற்றன? முப்பது ஆண்டுகளுக்கு முன் நாலாயிரத்தை வெளிப்படுத்தி ஆலய நிர்வாகத்தோடெல்லாம் போரிட்டு பிரசாரம் செய்து வந்திருந்தும் அது ஊர் தோறும் ஆலயந் தோறும் ஓதப்படவில்லையே! இப்போது எதிர்ச் சமயத்தின் திறத்தில் கண்ட மாபெரும் மாற்றம் அவருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஊர் திரும்பியதுமே எல்லாம் நன்றாக விளங்கி விட்டது. திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரை முன்னிட்டுக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகள் தாம் வடநாடு சென்றிருந்த சமயத்தில் சைவ முதலிகள் மூவரின் அருளிச் செயல்களையும் திரட்டி உலகெங்கும் பரப்பிவிட்டிருந்தார். அதுவேயு மன்றி, நக்கீரதேவர் (கி. பி. 850 - 930), கல்லாட தேவர் (கி. பி. 850 – 930) மற்றும் பரண தேவர் (கி. பி. 850 - 930), இளம்பெருமானடிகள் (கி. பி. 860-940), அதிராவடிகள (கி. பி. 860-940) ஆகிய மெய்யடியார்கள் பாடலியற்றி சைவத்தைத் தழைக்கச் செய்து மறைந்த பின்னரும் வாழையடி வாழை போல பட்டினத்தார் (கி. பி. 880 – 960), சேந்தனார் (கி.பி. 880-960), கருவூர்த் தேவர் (கி.பி. 900-1030), பூந்துருத்தி காடநம்பி (கி. பி.910–980), வேணாட்டடிகள் (920-980), திருவாலி அமுதனார் (கி. பி. 910-980), புருடோத்தம நம்பி (கி. பி. 930-1000) ஆகியோர் தோன்றி அப்போது சைவத்தை தழைக்கச் செய்து வாழ்ந்தும் வந்தனர். மாறாக, மதுரகவிகளுக்குப் பிறகு பெரியவர்கள் யாரும் வைணவத்தில் தோன்றவே இல்லை. மக்களுள்ளும் பெரும்பான்மையினர் சைவர்களே. இந்த மெஜாரிட்டி அடித்தளமோ, பெரும் புலவர்களின் நடமாட்டமோ வாய்த்திராத வைணவத்திற்கு ஓய்வொழிச்சலற்ற பிரச்சாரம் ஒன்றே வழி. அதைச் சிரமம் பாராமல் எவ்வளவெல்லாமோ செய்திருந்தும், ஒரு பயனும் இல்லை. பாடு ஒருபுறம்; பலன் இன்னொரு புறம்!

ஆதித்த சோழன் காவிரி உற்பத்தியாகும் இடத்திலிருந்து கடலிற் புகுமிடம் வரை நெடுக அதன் இருமருங்கிலும் பல சிவாலயங்களை எடுத்தான். இவற்றுள் திருவிசைப்பா பெற்ற களந்தை ஆதித்தேச்சுரமும் ஒன்று. பரகேசரி முதலாம் பராந்தகன் காலத்தும் திருவிடைமருதூர், திருச்செந்துறை, உறையூர், திருநாவலூரில் ராசாதித்தேச்சுரம், முடியூரில் ஆற்றுத்தளி, அவருடைய வீரநாராயண சதுர்வேதி மங்கலத்திலேயே அனந்தீச்சுரம் ஆகிய பல சிவாலயங்கள் அவருக்குத் தெரிந்தே கட்டப்பெற்றிருந்தன. திருமால்புரத்தில் உள்ள பெருமாள் கோயில், (புதுவை மாநிலத்து) பாகூர் திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்து வீரநாராயண விண்ணகரம், வீரநாராயண சதுர்வேதி மங்கலத்திலேயே அமைந்த வீரநாராயண விண்ணகரம் ஆகிய மூன்று மட்டுமே பராந்கன் அமைத்த திருமால் கோயில்கள். கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்தை (திருமழபாடிக்கு அருகில் மேற்கே உள்ள கண்டி ராஜ்யம்) அமைத்து அங்கே தன் பெயரால் கண்டராதித்தன், சிறந்த சிவனடியாராக இருந்தும் கட்டிய விண்ணகரம் இன்னொரு திருமால் கோயில். தமது சிஷ்யரான மாதவ பட்டரின் நண்பரும், சிறந்த வைணவரும் ஆன அநிருத்தப் பிரமாதிராஜரே பின்வந்த சுந்தர சோழருக்கு அமைச்சராக இருந்தும், சுந்தர சோழர் காலத்தே செய்யப்பட்டது எண்ணாயிரத்துச் சுந்தர சோழ விண்ணகரம் மட்டுமே. போதாக் குறைக்கு 'ஆ' என்பதற்குப் பதிலாக 'அரகர' என்று மட்டுமே ஒலித்ததாக சுந்தர சோழர் காலக் கல்வெட்டுகள் பெருமை அடித்துக் கொண்டன. சோழர்கள் ஆட்சி வெளிப்படையாக சைவ சமயத்திற்கே பேராதரவு காட்டி வந்தது! ஏன், திருமாலுக்கு சக்தி இல்லையா? அப்படிக்கூற அவருக்கு மனம் வரவில்லை. அவர் சோழர்களின் ஓரவஞ்சனையை எண்ணியே பெருமூச்செறிந்தார் தானும் இரண்டொரு ஏழைச் சிஷ்யர்களும் மட்டும் தனியாக என்ன செய்துவிட முடியும்?

மன்னன் எவ்வழி குடிகளும் அவ்வழியே அல்லவா? மயிலாடுதுறையைச் சேர்ந்த திருவாலி அமுதனார் மற்றும் புருடோத்தம நம்பி என்ற வைணவப் பிராமணர்களே கண்டராதித்தரிடம் கூலி பெற்றுக்கொண்டு சைவர்களாக மாறி, தில்லை கூத்தப்பெருமாள் மேல் பதிகம் பாடியது அவர் நெஞ்சை வெகுவாய்ப் பாதித்து விட்டது. காலம் கனியும்வரை இன்னும் சில நூற்றாண்டுகள்கூட வைணவம் காத்து நிற்கவே வேண்டுமென்று* தொலைநோக்கு மிகுந்த அவர் உள்ளத்திற்கு நன்றாகத் தெரிந்தது. அப்படி ஒன்றும் அதிகம் வயதாகிவிடவில்லை என்றாலும், உள்ளம் தளர்ந்து விட்டதால், உடலமும் சோர்ந்து விட்டது.

அவர் பணியின்எதிர்காலம் அவர் நெஞ்சம் முழுவதையும் அகப்படுததிக்கொண்டு விட்டது. அடிக்கடி அவர் தனிமையை நாடினார். அப்பொழுதெலலாம் அந்த எதிர் காலம் எதிர் வந்து நின்றது. ஏதோதோ மூளையில் முளைத்தன. எதிலும் பிடிப்பின்றிக் கலங்கினார். கலங்கிய நெஞ்சம் மெல்ல மெல்லத் தேறி இறுதியில் எப்படியோ அதில் அலைகள் ஓய்ந்து அமைதி படர்ந்தது. அப்போது சில எண்ணங்கள் பளிச்சிட்டன. ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி எடுத்த முத்துக்களை காட்டிக் கொடுக்க வேண்டி ஆசிரமவாசிகளை யெல்லாம் அழைத்தார் அவர்களும் ஆசார்யர் பேச்சைக் கேட்க விரைந்தோடி வந்தனர்.

---

*பல்லவர் காலத்திற்குப் பிறகு செல்வாக்கு இழந்து விட்ட வைணவம் கி. பி. 1216 லிருந்து தலை தூக்கி பிறகு விஜயநகரப் பேரரசின் காலததில்தான் அரசின் ஆதரவு பெற்ற பெருஞ்சமயமாய்த் திகழ்ந்ததால் இவ்வாறு எழுதலாயிற்று.

''யத்கோஸ சகஸ்ரம் அபகந்தி தமாம்ஸி பும்ஸாம்

நாராயணோ வஸதி யத்தர சசங்க சக்ர ஹ:

யந்மண்டலம் ஸ்ருதிகதம் ப்ரணமந்தி விப்ராணே ந;

தஸ்மை நமோ வகுள பூஷண பாஸ்கராய!

(எவருடைய 1000 கோசங்கள் (=திருவாய்மொழிப் பாடல்கள்) ஆகிய ஒளிக்கதிர்கள் உயிர்களுடைய அக விருளை அகற்றுகின்றனவோ, எந்த (நம்மாழ்வாரான) சூரியனுக்குள் சங்கு சக்கரங்களோடு கூடிய நாராயணன் வாழ்கின்றானோ, முத்திரைக் கவியில் மீண்டும் மீண்டும் வரும் எவருடைய ஊரும், பேரும் கேட்ட மாத்திரத்தில் வேதியர்கள் (வேதம் கூறும் சூரிய மண்டலத்தைப் போல) வணங்குகின்றார்களோ, அந்த மகிழ மாலை தரித்த சூரியனை வணங்குகிறேன்.)

நம்மாழ்வார் துதி பாடிவிட்டு ஆசார்யர் பேசினார்.

## மூன்று கட்டளை மரண சாசனம் (கி.பி. 977)

எனது அருமைச் சிஷ்யர்களே!

இன்றைய கூட்டம் வழக்கமானதல்ல. இங்கே சில முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆலோசித்து முடி வெடுக்க இருக்கிறோம். ஆகவே, நீங்கள் கவனமாகக் கேட்கவேண்டும்.

விதி என ஒன்று இருப்பதை வெறும் கேள்வி மூலமாக மட்டுமல்லாமல் அனுபவத்தாலேயே நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன் மரணம் என்பது விதி களுக்குள் எல்லாம் பெரியவிதி. மகாத்மாக்கள் கூட இதைக் கடந்ததில்லை. இதனை நான் ஏன் கூறுகிறேன் என்றால், இப்போது எனக்கு மாரக திசை தொடங்கி விட்டது. என் மறைவு எந்த நேரத்திலும் ஏற்படலாம். ஆகவே

இப்போது நான் கணக்கு பார்க்க வேண்டிய நேரம். எனது லட்சியங்களையும், சாதனைகளையும் நேருக்கு நேராக வைத்து ஒப்பிட்டு எதிர்காலத்தார்க்கு எனது மரண சாசனத்தைச் சித்தம் செய்து தர வேண்டும். இது பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்தேன். மூன்று விஷயங்கள் தெளிவாயின. இவற்றை என் சந்ததிகளாகிய உங்களோடு பகிர்ந்து கொள்ளவே இப்போது உங்களை எல்லாம் அழைத்திருக்கிறேன்.

ஸ்ரீவைஷ்ணவத்திற்கு ஏதாவது சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற பேராசை என் கூடப் பிறந்தது. இதற்குத் திருவாய்மொழியும், இதன் மூலமாக நாலாயிரமும் ஒரு நல்ல சாதனமாக அமைந்தன. திவ்விய தேசங்கள் எல்லாவற்றிலும் இல்லாவிட்டாலும் பெரும்பாலனவற்றுள் ஆகிலும் நாலாயிர முழக்கம் கேட்க வேண்டும் என நான் ஆசைப்பட்டேன். நீங்கள் எல்லோரும் ஒரு மனமோடு முழு மூச்சுடன் இதற்குத் துணை நின்றீர்கள். ஆனால், நம் நோக்கம் திருவரங்கத்திலும் இந்த மன்னனார் கோயிலும் இன்னும் இரண்டொரு இடங்களிலும் மாத்திரந்தான் ஓரளவிற்குக் கைகூடியிருக்கிறது. இந்த எண்ணம் முழுக்கக் கைகூடும் காலம் இன்னமும் அதிக தூரத்த தாகவே எனக்குத் தென்படுகிறது.

நாம் செய்திருப்பதெல்லாம் மேல் மண்ணைக் கிளறி விட்டிருப்பது மட்டுந்தான் என்பதை நீங்கள் உணர வேண்டும். நாலாயிரப் பயிர் தழைக்கவும், ஞாலமெல்லாம் நம் நாரணன் புகழே சிறக்கவும் நாம் இன்னமும் ஆழமாக உழ வேண்டும்; உழைக்க வேண்டும்- என்கிறேன். எனக்குப் பிறகு மட்டுமேயன்றி உங்களுக்குப் பிறகும்கூட இந்த முயற்சி தொடர வேண்டும். இன்னொரு முறையும் அழுத்தமாகச் சொல்கிறேன்.–' இந்த முயற்சியை நாம் தளர விடக் கூடாது'. ஏனெனில், நமக்கு சோழப் பேரரசின் ஆதரவு ஒரு நாளும் கிடைக்

காது என எனக்கு நிச்சயமாய்த் தெரிகின்றது. நமக் கென்று ஒரு நல்ல காலம் கனியுமட்டும் நாம் காத்திருக்க வேண்டும். அதுவரை மக்கள கண் முன் இருந்து கொண்டே இருக்க வேண்டும் இப்படி மக்களால் மறக்கப் படாமல் இருக்க நாம் செய்ய வேண்டிய தென்ன? நீள நெடுக நினைந்தேன். பாண்டியர்கள் சங்கம் வைத்தே தமிழை வளர்த்தனராம். சமண பவுத்தர் களும் இப்படிச் சங்க மூலமாகவே தங்கள் சமயப் பணி யைத் தொடர்ந்தனர். 'சங்கம சரணம் கச்சாமி'-என்பது பவுத்தர்களின் முழக்கங்களில் ஒன்று. சமீபத்தில் சங்கரரும் அத்வைதப் பிரச்சாரத்திற்காக நாட்டின் நான்கு மூலைக ளில்மடங்களை நிறுவினார். முக்கியமாக சங்கர மடங்களே என் சிந்தனையைத் தூண்டின. நாமும் பெரிய அளவில் இப்படி ஒரு ஸ்தாபனத்தைத் தொடங்க வேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? '' —நாதமுனி கேட்டார்.

'ஆம். அதுதான் நல்லது!' சிஷ்யர்களின் கூட்டம் ஒரு மனதாகக் குரல் கொடுத்தது.

''எனில், இந்த ஆசிரமத்தையே அந்த மத்திய குரு மடமாக ஆக்கி விடுவோம். இது அப்படி ஒன்றும் புதிய தும் அல்ல. நம்மாழ்வாரின் சிஷ்யர் மதுரகவிகள். இவரின் சிஷ்யரே பராங்குசதாசர். இவர் அஸ்மதாசார்யர் (= எனது ஆசார்யர்). இந்தக் குரு பரம்பரையின் அடுத்த பட்டத்திற்கு உரியவரை தெரிந்தெடுப்பதே இப்போது நாம் செய்ய வேண்டியது. இதற்கு நம் சிஷ்யக் கோஷ்டி யில் மூத்தவரும், முதல்வருமான உய்யக்கொண்டாரை நான் நியமிக்கிறேன். இந்த முடிவால் நாம் எதிர்காலத் தில் அடியெடுத்து வைக்கிறோம் என்பதை மனத்தில் இருத்தி, இப்போது உங்கள் அபிப்ராயத்தைச் சொல்லுங் கள்'' —நாதமுனிகள் அவர்களைப் பார்த்தார்,

''ஆசார்யர் சித்தம் எங்கள் பாக்கியம்''. ஆசிரமம் முழுவதும் எதிரொலித்தது.

''உய்யக் கொண்டாரே! இப்படி வாரும். இந்த சபையின் தீர்மானப்படி இந்த ஆஸ்ரமத்தினுடையவும், நமது தர்சனத்தினுடையவும் நிர்வாகப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன்,

சிஷ்யர்களே! என்னைப் போலவே இவரையும் எண்ணி உங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுத்து நமது தர்சன மேன்மைக்காக நமது ஆசிரமத்தைப் பலப்படுத்துங்கள்.

சிஷ்யர்களே! இன்னொரு முக்கிய விஷயமும் உண்டு. காரிய சித்திக்கு இடங் 'கால' ஏவல் துணையாக இருக்க வேண்டும் அல்லவா! இதில் இடம் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது திருவரங்கமே ஸ்ரீவைஷ்ணவத்தின் உயிர்நிலை என்பதை நீங்கள் அறிவீர்கள். இதுவரை நாம்விசேஷ காலங்களில் மட்டுமே அங்கு போய்த் தங்கியிருந்து கைங்கர்யங்கள் செய்து கொண்டு வந்தோம். மன்னனாரிடம் கொண்டிருந்த ஈடுபாட்டாலேயே நான் திருவரங்கத்தையே எனது வாழ் விடமாகக் கொள்ள முடியாமற் போய்விட்டது.* அந்த நிர்ப்பந்தம் உங்களுக்கு இல்லை. எனக்குப் பிறகு நமது ஆசிரமத்தை நீங்கள் திருவரங்கத்திலேயே நிரந்தரமாக அமைத்துக்கொள்ள வேண்டும். இது நம் ஆணை.'' -நாத முனிகள் கட்டளையிட்டு அவர்களை முகம் பார்த்தார்.

'சிரமேற்கொள்ளுகிறோம்' — சொல்லிக் கூட்டத்தினர் பணிந்து நின்றனர்.

---

* திருவரங்கத்திலேயே நாதமுனிகள் வதிந்ததாகப் பெரிய திருமுடி அடைவு கூறினாலும், அவர் வரலாற்றில் தொட்ட தொட்ட இடத்திலெல்லாம் வீரநாராயண புரமே காணப்படுகிறது. எனவே, அவர் ஆசிரமம் சொந்த ஊரிலேயே இருந்திருக்க வேண்டும் என்பதும் விசேஷ காலங்களில் மட்டுமே அவர் திருவரங்கம் சென்றவர் என்பதும் திண்ணம்.

''கடைசியாக ஒன்று சொல்லவும் ஆசைப்படுகிறேன்" சரக்கைக் காட்டிலும் செட்டியார் முடுக்காக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆயினும், முடுக்கான செட்டியார் இருந்துங்கூட வியாபாரம் விருத்தி ஆகாமற் போனதை நான் கண்டிருக்கிறேன். அதிர்ஷ்டம் என ஒன்று எந்தக் காரியத்திற்கும் தேவை. 'தவமும் தவமுடையார்க்கே ஆகும்'-என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு ஆசார்யரைக் கண்டுபிடிப்பதில்தான் நமது ஸ்தாபன வெற்றியின் ரகசியம் அடங்கிக் கிடக்கிறது. உய்யக் கொண்டாருக்குப் பிறகு வரவேண்டும் பவிஷ்யதாசர்யார்கள் விஷயத்தில் நாம் இதனை நன்கு கவனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு பவிஷ்ய தாசர்யனை மட்டும் நான் இப்போதே காண்கிறேன். ஈஸ்வர முனியினுடையவும், எனது மருமகளினுடையவும் ஜாதங்களைப் பார்த்த போதே எனக்குத் தெரிந்து விட்டது - இவர்களுக்கு எப்படியும் ஆன்மீக உலகத்தையோ அல்லது இந்த பூமண்டலத்தையோ .ஆளவல்ல ஒரு நன்மகன் அவதரிக்க போகிறான் என்று. அவனை லவுகீகப் பக்கம் போகவிடாமல், அப்படியே போனாலும் திசை மாற்றி, நம் தரிசனத்துக்கு இழுக்க வேண்டும். புத்தர் விஷயத்தில் இப்படி ஒரு கனவு பலித்திருக்கிறது. என்னுடைய ஆரூடமும் பலிக்கும் என்பது என் அழுத்தமான நம்பிக்கை எனக்குப் பெயரன் ஆவதால், தனக்குக் குலதனம் ஆகின்ற என் பணியை இவன் அதிக ஆர்வமோடு செய்வான் - என நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இந்த உறுதிமொழியின் பேரில், இவனையே நம் தர்சனத்துக்கு உய்யக்கொண்டாருக்கு அடுத்த பட்டமாக பரிந்துரை செய்கிறேன். ஆசார்ய உய்யக்கொண்டாரே! ஆசிரம வாசிகளே!! இதனை முழுமனதோடு அங்கீகரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.''

உரையை முடித்துக் கொண்டு நாதமுனிகள் ஆசார்ய உய்யக்கொண்டாரின் முகம் பார்த்தார்.

உய்யக்கொண்டார் உடன் எழுந்து சுற்று முற்றும் பார்த்து, சகாக்களின் இசைவை முகக் குறிப்பால் அறிந்து, எல்லோர் சார்பாகவும் இந்த உறுதியை பரமாச்சார்யரான நாதமுனிக்கு அளித்தார். நிரந்தர மான ஸ்ரீவைஷ்ணவக் குருபரம்பரைக்கு பலமான அடிக்கல் நாட்டியது அந்தக் கூட்டம்.

## தூதுவில் பரமபதம் (978)

பரமாச்சார்யரான நாதமுனி தாம் ஓய்வு கொண்டு உய்யக் கொண்டாரை ஆசிரம நிர்வாகத்துக்கு நியமித் திருப்பதை அறிவித்து ஆசிரமத்தில் அக்கரை கொண்ட பேர்க்கெல்லாம் ஓலை போயிற்று. திருவரங்கத்திற்கும் இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. இப்போது நிச்சிந்தை யாக இருந்து குடும்ப காரியங்களைச் சரி செய்வதில் ஈடுபட்டிருந்தார், பரமாச்சார்யார்.

அந்த நாளில் ஒரு வேடன் தன் மனைவியோடு ஒரு குரங்கையும் கூட்டிக் கொண்டு ஆசார்யரைத் தேடி வந்தான். ஆயர்குலப் பெருமக்கள் எல்லாம் கிருஷ்ண பக்தராய் இருப்பது போல, வேடுவன் என்ற வகையில் அவன் ஒரு அழுத்தமான ராம பக்தன், குகாழ்வாரைப் போல. ஆசார்ய நாதமுனியின் பெரும்புகழ் கேட்டு அவரைச் சேவித்துச் செல்ல விரும்பி அவர் மாளிகைக்கு வந்தான். ஆனால், நாதமுனிகள் அப்போது ஊரில் இல்லை. பாவம்! ஏமாற்றத்துடன் வேடத் தம்பதிகள் மேற்குப் பக்கமாய்ப் போய்விட்டனர்.

அவர்கள் பிரிந்த சின் னேரத்திற்கெல்லாம் நாதமுனிகள் வீடு திரும்பினார். அப்போது அவர் மகள், சுமார் 10 வயதே நிரம்பிய சிறுமி, வேடுவத் தம்பதிகள் வந்து போன செய்தியை உடனே தகப்பனாருக்குத் தெரிவித்தாள். கேட்டதும் வந்தவன் தொல்லிலங்கை கட்டழித்த சேவகன் சீராமனே எனத் துணிந்தார்; துணுக்குற்றார்; ஓடினார் பொன்பரப்பி* வாசல் வரைக்கும் கூட போய் விட்டார். களைப்பு மேலிட்டது. ஆனால், அத்தம்பதிகளை அந்தப் பக்கம் பார்த்ததாக மட்டும் யாருமே கூறவில்லை. 'கண்டிலேம்' - என்ற பதிலே எங்கும் கிடைத்தது. வழி நடந்த களைப்பாலும், முடிவிற்கொண்ட ஏமாற்றத்தாலும் மயங்கிப் போய் நாதமுனி மண்மேல் தடாலென விழுந்தார். வயோதிகரானபடியால் தலையில் பலமாக அடிபட்டுவிட்டது. அவர் 'கோமா' (Coma)–என்ற பெரு மயக்கத்தில் அமிழ்ந்தார்

இதற்குள் உய்யக்கொண்டாரும், குருகை காவலப்பனும் உள்ளிட்ட சீடர் குழாமெல்லாம் ஆசார்யரைத் தேடிக்கொண்டு பொன்பரப்பி வரை வந்து விட்டனர். ஆனால், அங்கே அவர்கள் கண்டது ஆசார்யரை மூர்ச்சித்த நிலையில்தான். மயக்கம் தெளியவே இல்லை இரண்டொரு நாள் அங்கேயே காத்திருந்தனர். ஆனால், அவர் ஆவி அந்த வளர்பிறைக் காலத்திய (சுக்கில) ஏகாதசி அன்று பிரிந்து விட்டது. அங்கேயே பள்ளிப்படுத்து எல்லோருமாக வீரநாராயண சதுர்வேதி மங்கலம் திரும்பினர். குருகை காவலப்பன் மட்டும் ஆசார்யரின் பள்ளிப்படையிலேயே யோகத்தில் அமர்ந்

---

* நாதமுனிகளின் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் இல்லை. இவ்வூர் பொன்பரப்பி பற்றினதாகவே சொல்லப்படுவதால், அதுவே முன்னாளில் சிறப்புடன் இருந்திருக்க வேண்டும்.

திருந்தார். அது ஒரு தாது ஆண்டு என்று பெரிய திருமுடி அடைவு மேலும் கூறுகிறது.

## நாதப் பிரம்மம் - பண்பு நலன் :

நாதமுனியைக் கஜாஸ்யரின் அம்சம் என்று பெரிய திருமுடி அடைவு கூறுகின்றது. கஜாஸ்யர் வைகுந்தத்தில் சேனை முதலியாரான விஷ்வக் சேனரின் துணைவராம். நம்மாழ்வாரைச் சேனை முதலியாரின் அம்சமாகக் கற்பித்துக் கொண்டவர்கள் நம்மாழ்வாரை மானசீகக் குருவாய்க் கொண்டு வழிபட்ட நாதமுனியை கஜாஸ்யரின் அம்சம் என்று கூறிவிட்டிருக்கின்றனர் என்பது வெளிப்படை. ஏனெனில், சிலகாலம் ஆகிலும் ஆட்சி செய்தது பற்றி ஆளவந்தாரை சிம்மாசன அமிசராக பெரிய திருமுடி அடைவே குறித்துள்ளது. நாதமுனியை கஜாம்ஸர் என்பதைக் காட்டிலும், யானையைப் போல பருத்த உடம்பு உடையவராக இருந்தார் எனக் கொள்வதே பொருத்தம். நாதமுனிகளின் சிலைகள் நாடெங்கிலும் இப்படியே உள்ளன.

பிராம்மணர் என்ற வகையில் நாதமுனியின் நினைவாற்றல் சிறப்பானதே. பல்கலையும் பயின்றிருந்ததால் இவர் நூலறிவும் நிரம்பி நின்றார். வடமொழியிலும், ஓரளவிற்குத் தமிழிலும் இருந்தபுலமையையும், வடநாட்டு இசை, தமிழிசைகளில் அவருக்கிருந்த பயிற்சியையும், நியாயம் மற்றும் வேதாந்தம் முதலிய தத்துவ தரிசனங்களில் இருந்த தேர்ச்சியையும், சோதிடக் கலையில் பெற்றிருந்த முதிர்ந்த ஞானத்தையும் அவர்தம் அறிவின் அடித்தளங்களாகக் கொண்டே அவரைப் பற்றிய இவ்வரலாறு பின்னப்பட்டிருப்பது இங்கே எண்ணத்தக்கது. ஆயினும், அவரோடு தொடர்பு கொண்டிருந்த அரசன் ஒருவன் வந்து போன போதெல்லாம் கண்ணனையும், வைகுந்தநாதனையும் நினைந்து, உலகை மறந்து விட்ட இவர் உணர்ச்சிபூர்வமான வாழ்கை வாழ்ந்தவர் என்றே

கூறவேண்டும். இவர் செய்தனவாகக் கூறப்படும் நியாதத்துவமும், யோக ரகசியமும், மகா புருஷ நிர்ணயமும் கிடைக்காததால் இவருடைய ஆராய்ச்சித் திறன் பற்றி ஒன்றும் கூறுவதற் கில்லை.

பன்னீராயிரம் முறை 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பதிகத்தை உருச் செய்ய உடனே இவர் முன் வந்ததும், ஓய்ந்து கிடந்த அத்யயன விழாக்களை வடமொழிப் பற்று மிக்க திருவரங்கத்துப் பிராம்மணர்களின் அழுத்தமான எதிர்ப்பைச் சமாளித்து சரிக்கட்டி மீண்டும் தொடங்கியதும் போன்ற அருஞ்செயல்கள் இவரது எண்ணியது முடிக்கும் திண்ணிய திறத்தை நமக்கு அறிவிக்கின்றன. இவரது சீடர்களில் பிராம்மணரல்லாதார் பற்றி ஒன்றும் தெரியாததால், இவரது முற்போக்குத் தன்மை பற்றி ஏதும் கூற முடியவில்லை.

# 5. நாதப் புது யுகம் எது ?

## முதல் கொள்கை (கி.பி. 823—918)

நாதமுனிகள் பிறந்த ஆண்டாக கோயிலொழுகு கூறும் கலி 3924 கி பி 822–23 ஆகும். நாதமுனிகள் மற்றும் ஆளவந்தார் பிறப்புக் காலம் பற்றி பெரிய திருமுடி அடைவு தரும் விவரங்களிலிருந்து திவான் பகதூர் சாமிக்கண்ணு பிள்ளை[1] அவர்கள் இவற்றை முறையே 27-5-கி.பி. 823 எனவும், 26-1-கி.பி. 918 ஆகவும் குறித்தனர். நாதமுனிகள் மறைந்ததுவும், ஆளவந்தார் பிறந்ததுவும் தாது ஆண்டிலேயே எனப் பெரிய திருமுடிவு அடைவு கூறுவதால், ஆசிரியர் மு. ராகவையங்கார்[2,3] அவர்கள் நாதமுனிகள் மறைவையும் கி.பி. 918-இல் ஆகவே கொண்டார்.

ராகவையங்கார் கொள்கைக்குத் துணையாகச் சில சான்றுகளும் உண்டு. திருமாளிகைத் தேவரும் (910-1000) திருவாலி அமுதனாரும் (920-1000) சிலபெருமான்மேல் ஆளுக்கொன்றாகப் பாடிய பாதாதி-கேசப் பதிகங்கள் இரண்டும், செப்புறைச் சேந்தனார். தில்லையில் பாடிய திருப்பல்லாண்டும், ஒன்பதாம் சைவத் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகின்றன. இவை முறையே பாண்பெருமாள் செய்த அமலனாதிபிரானி னுடையவும்

---

1. An Indian Ephimeris (1922) Vol I, pt I Appendix vi
2. ஆழ்வார்கள் கால நிலை, ராகவையங்கார் மு. (1981) பக். 31
3. இலக்கியச் சாசன வழக்காறுகள் (1973) பக். 281–2.

பெரியாழ்வார் செய்த திருப்பல்லாண்டி னுடையவும், பிரதிகளே என்பதற்கு ஐயமில்லை. இப்படி நாட்டில் நாலாயிர திவ்யப் பிரபந்தம் பரவியது நாதமுனிகளுக்குப் பின்னர்தான். எனவே, நாதமுனிகள் பத்தாம் நூற்றாண் டினரான திருவிசைப்பா ஆசிரியர்களுக்குச் சம காலத் தவரோ (அல்லது) முற்பட்டவரோ ஆகல் வேண்டு மல்லவா?

இரண்டாவதாக சுந்தர சோழனிடமிருந்து (கி. பி. 957–970) கருணாகரமங்கலத்தை அன்பில் அனிருத்தப் பிரமதிராஜர் பெற்றதைக் கூறும் அன்பில் செப்பேடு களிலும்[4] ஒரு குறிப்பு உண்டு. இவை அநிருத்தரை பரம்பரைப் பரம வைணவர் ஆகவும், சாசனம் எழுதிய மாதவ பட்டரை ஸ்ரீநாதர் என்ற ஆசார்யரின் சிஷ்ய ராகவும் கூறுகின்றன. இங்ஙனம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதி, 10-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிகளில் வாழ்ந்தவராகத் தோன்றும் ஆசார்ய ஸ்ரீநாதரை ஆசார்ய நாதமுனிகளாகக் கொள்ளலாம் என்பது அறிஞர் கோபிநாத ராவ்[5] அவர்களின் கருத்து. இது பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாருக்கும்[6] உடன் பாடே.

ஆயினும், ஸ்ரீநாதன் என்பதும், நாதமுனி என்பதும் ஒன்றே அல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மேலும், நாதமுனிகளுக்கு மாதவ பட்டர் சிஷ்யராகில், அது குருபரம்பரையில் நிச்சயமாக இடம் பெற்றிருக்கும். காட்டாக, ரங்க சோழாளின் ராஜபத்தினியான திருவரங்கத்தம்மனை பெரிய திருமுடி அடைவு ஆளவந்தாரின் சிஷ்யையாகக் குறித்துள்ளது. எனவே, ஸ்ரீநாதரை நாதமுனிகளினும் மூத்த இன்னொரு ஆசார்ய

4. E. I Vol XV No. 5
5. History of Sri Vaishnavam (1923) p.20
6. Colar, K. A.N., (1987) Vol II p. 477

ராகவும், அன்பிலை அடுத்த திருவரங்கத்தில் வதிந்தவராக வும் கொள்வதே தக்கது. ஸ்ரீநாதன் - நாதமுனி என்ற தொடர்களால் நாம் அறிய வேண்டுவது கி.பி 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் நாதப் பெயர் நாட்டில் வெகுவாய் வழங்கிற்று என்பது மட்டுமே. ஸ்ரீநாதுடு என்றொரு பெரிய கவி தெலுங்க தேயத்தில் இருந்ததும் உண்டு.

நாதமுனிகளுக்கு கி. பி. 824-918 என்ற காலத்தையே அண்மையில் (1972) ஆராய்ச்சி செய்த அறிஞர் பி.வி. ராமனுஜம்[7] ஆதரித்துள்ளனர். ராமானுஜர் காலம் கி.பி. 1017-1137 என்பதை ஒப்புக்கொண்டால், இவருக்கு முன் ஆசார்ய பதம் வகித்த ஆளவந்தார், மணக்கால் நம்பி, உய்யக்கொண்டார் ஆகிய மூவரின் காலம், தலைமுறைக்கு 30 ஆண்டுகள் கொள்ளும் வழக்கப் படி, சுமார் 90 ஆண்டுகள் ஆகலாமென்றும், இது சுமார் கி. பி. 927 என்றும், இதனையே நாதமுனிகளின் இறுதிக்காலமாகக் கொண்டால் நாதமுனிகளின் ஆயுட் காலம் கி. பி, 824-918 என்பது ஏறத்தாழ சரியானதே என்பதும இவர் வாதம்.

அறிஞர் ராமானுஜத்தின் கணக்கில் ஒரு குற்றம் உண்டு. ராமானுஜர் தமக்கு 25-ஆம் வயதில் திருவரங்கம் சென்றபோது ஆளவந்தார் பரமபதித்து விட்டனர் — எனக் குருபரம்பரைகள் கூறுகின்றன. ராமானுஜர் பிறந்தது கி. பி. 1017-ஐய பிங்களவில் என்பது உண்மை யாகில், இவர் திருவரங்கம் சென்றதும், ஆளவந்தார் மறைந்ததும் கி. பி. 1042-இல் ஆகல் வேண்டும். மணக்கால் நம்பி, உய்யக்கொண்டார் மற்றும் ஆள வந்தார் ஆகிய மூவரின் மொத்த ஆட்சிக் காலமாகக் கொண்ட 90 ஆண்டுகளை இந்த கி. பி. 1042-இல்

7. History of Vaishnawism in S, India upto Ramanuja. (1973) p. 30231

இருந்தே கழிக்க வேண்டும். இப்படிச் செய்யும் போது நாதமுனிகளின் மறைவுக் காலம் சுமார் கி. பி. 952 ஆகிறது. எனில், நாதமுனிகளின் பிறப்புக் காலம் கி. பி. 852-க்கு முன் போவதற்கில்லை. அதாவது, நாதமுனிகளின் காலம் 852-952 என்று ஏற்படுகிறது.

கி. பி. 823-918 கொள்கைக்கு முக்கியமான தடை நாதமுனிகளுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த உய்யக் கொண்டார் ஆட்சிக் காலத்திலுங்கூட ஆளவந்தார் பிறக்கவில்லை எனப் பெரும்பான்மை குருபரம்பரைகளில் காணப்படுவதே. நாதமுனிகள் இருந்தபோதே ஆளவந்தார் பிறந்து விட்டதாகக் கூறியவர் வேதாந்த தேசிகர்[8] ஒருவர் மட்டுமே. தேசிகர் பல இடங்களில் பொதுக் கருத்துக்கு மாறுபடுவதால், இவரின் தனிக் கூற்றை நாம் ஏற்பதற்கில்லை. எனவே, நாதமுனிகள் இயற்கை எய்தியது கி.பி 858-ஐய தாதுவிலோ (அல்லது) ஆளவந்தார் பிறந்தது கி. பி. 978-ஐய தாதுவிலோ ஆகல் வேண்டும்.

நாதமுனிகள் கி. பி. 823-இல் பிறந்து கி.பி. 868-இல் மறைந்தவர் ஆகில், அவருக்கு 34 வயது நிரம்பியிருக்க வேண்டும். நாதமுனிகள் 330/340 ஆண்டுகள் யோகத்தில் எழுந்தருளியிருந்தார் என்ற கணக்கில் உயர்வு நவிற்சிப் பகுதியை ஒதுக்கி விட்டால், எஞ்சி நிற்கும் 33/34 நாம் இவருக்கு மேலே காட்டிய 34 வயதோடு ஒன்றியிருத்தல் நோக்கத்தக்கது. ஆனால், மறைவதற்குச் சற்று முன்னர் தமக்குப் பிறக்கவிருக்கும் பேரனுக்கு 'யமுனைத் துறைவன்' எனப் பெயரிட்டு சில அரிய பொருள்களை அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் முறையே தமது மகனுக்கும், அருமை மாணாக்கருக்கும் நாதமுனிகள்

8. சம்பிரதாய பரிசுத்தி (வழி) ஆசார்ய வைபவ மஞ்சரி (1992) பக். 8

ஆணையிட்டதாகவும் குருபரம்பரைகள் கூறுகின்றன. இங்ஙனம் ஆணையிட்ட போது இவர் மகனாகிய ஈஸ்வரமுனிக்கு மணமாகிவிட்டிருக்க வேண்டும். எனில், ஈஸ்வரமுனிக்கு 17 பிராயமும் இவர், மனைவிக்கு குறைந்தது 12 பிராயமும் ஆகியிருக்க வேண்டும். கி. பி. 858-இல் சுமார் 12 பிராயமே நிரம்பியிருந்த நாதமுனி களின் மருமகள் கி. பி. 918-இல் தமக்குச் சுமார் 73 பிராயத்தில் ஆளவந்தார் ஆகிய யமுனைத் துறைவரைப் பெற்றிருக்க முடியாது. ஏனெனில், அந்தப் பருவம் கருத்தரிக்க ஏற்றதல்ல. இரண்டாவதாக, நாதமுனிகளின் சாதனைகளுக்கு கி. பி. 823-858க்கு இடைப்பட்ட 34 ஆண்டு குறுகிய ஆயுட்காலம் போதியதும் அல்ல.

இனி, நாதமுனிகள் காலத்தை கி. பி. 823-918 ஆக வும், ஆளவந்தாரின் பிறப்புக் காலத்தை கி. பி. 978-ஆக வும் கொண்டு நோக்குவோம். கி. பி. 823-918-க்கு இடைப்பட்ட நாதமுனிகளின் ஆயுட் காலம் 93 ஆண்டு கள் ஆவதைப் பேராசிரியர் ராகவயயங்கார்[3] அவர்களே கூறியுள்ளனர். எனில், ஈஸ்வரமுனிக்கு கி. பி. 918-இல் சுமார் 70 பிராயமும், கி. பி. 978-இல் 130 பிராயமும் எதிர்பார்க்கலாம். ஈஸ்வரமுனிக்கு 130-ஆம் வயதில் இவருக்கோ அல்லது இவர் மனைவிக்கோ மகப்பேற்றிற் கான சக்தி இருந்திருக்க முடியாது. நாதமுனிகளுக்கு ஈஸ்வரமுனி மிகவும் வயதேறப்பெற்ற நிலையில் பிறந்தவர் எனக் கொண்டால், ஈஸ்வரமுனியின் பிறப்புக் காலம் கி. பி. 880-க்கு முந்திச் செல்ல முடியாது. ஏனெனில், கி. பி. 880-இல் நாதமுனியின் துணைவியார் கருத் தரிக்கும் பருவத்தைக் கடந்தவராய் விடுகிறார். இப்படி கி. பி. 880 அளவில் பிறந்த ஈஸ்வரமுனிக்கு கி. பி. 978-இல் வயது 98 ஆகின்றது. இதுவும் மகப்பேற்றிற்கான காலம் அன்று. கர்னல் மெக்கன்ஸியின் குறிப்புகளின்படி[9]

---

9. **South Indian Temple Inscriptions, Vol III pt p. 224**

ஆளவந்தார் பிறந்த ஆண்டை கி. பி. 966-க்குச் சமமான குரோதன ஆகவே கொண்டாலும் ஈஸ்வரமுனிக்குப் பெறப்படும் வயது 86 ஆவதால், அதுவும் மகப்பேற்றிற்கு ஏற்றதா யில்லை. நாதமுனிகள் பிறந்த சோபகிருது கி. பி. 823-ஐயச் சோபகிருது அன்று என்பதே இதன் பொருள். கி. பி. 788-833-க்கு இடைப்பட்ட நம்மாழ்வார் பற்றி இவர் ஏதும் அறியாதிருந்ததும் ''ஆழ்வார்கள் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளி நெடுங்காலம் கழிந்த'' பின்னர் நாதமுனிகள் தோன்றியதாக ஆறாயிரப்படி குருபரம்பரை கூறுவதும் நாதமுனிகளின் பிறப்புக் காலம் கி. பி. 823 அன்று என்பதை உறுதிப்படுத்துகின்றன.

நாதமுனிகளின் பிறப்புக் காலம் கி. பி. 823 அன்று என்பதற்கு வேறு காரணங்களும் உண்டு. நாதமுனிகளின் வாழ்க்கை நாள் மட்டிலும் அவர் பெயராகிய ஆளவந்தார் பிறக்கவில்லை என்பது ஈஸ்வரமுனிக்குப் பிள்ளைப் பேறு மெதுவாகத் தான் வாய்த்தது என்பதோடுகூட, நாதமுனிகளும் அதிகநாள் வாழ்ந்தவர் அல்ல என்பதையும் குறிப்பாகச் சுட்டுகின்றது. நாதமுனிகளுக்குப் பின் ஆசார்யராகிய உய்யக்கொண்டாரிட மணக்கால்நம்பிகள் 12 ஆண்டுகள் தொண்டு செய்து வாழ்ந்ததால் உய்யக்கொண்டாரின் ஆட்சிக்காலம் இந்தப் 12 ஆண்டுகளுக்குக் குறைய முடியாது. இதுவரை ஆளவந்தார் பிறக்கவில்லை. மணக்கால் நம்பிகள் பட்டத்திற்கு வந்தவுடனேயே ஆளவந்தார் பிறந்து விட்டதாகக் கொள்வதும் உசித மல்ல. சுமார் 8 ஆண்டுகளுக்குப் பின் ஆளவந்தார் பிறந்ததாகக் கொள்ளலாம். எனில், நாதமுனிகளின் மறைவுக்குப் பின் சுமார் 20 ஆண்டுகள் கழித்தே ஆளவந்தார் பிறந்திருக்கக் கூடுதல் காண்கிறோம். இனி, நாதமுனிகளுக்கு 50 வயதில் ஈஸ்வரமுனியும், ஈஸ்வரமுனிக்கு 50 வயதில் ஆளவந்தாரும் பிறந்ததாகக் கொண்டால், ஆளவந்தார் பிறப்பின் போது நாதமுனிகளுக்குச் சுமார் 90 வயதை எதிர்பார்க்கலாம்.

எனில், ஆளவந்தார் பிறப்பிற்கு 20 ஆண்டுகளுக்குமுன் நாதமுனிகள் பரமபதித்தபோது அவருக்குச் சுமார் 65–70 பிராயமே இருக்க முடியும் அல்லவா?

நாதமுனிகளின் ஆயுட்காலம் சுமார் 65 ஆண்டுகள் மட்டுமே என்பதை வேறு வகையிலுங்கூட நிறுவலாம். அவர் மறைவுக்குச் சிறிது முன்னர் அவர் முடிவுக்கே வழிகோலிய வேட்டுவத் தம்பதிகளின் வருகையை நாதமுனிகளின் மகளே அவருக்குக் கூறியதாகச் சொல்லப்படுவதால், அப்போது அவருக்கு மணமாகாத மகள் ஒருத்தியும் இருந்ததை ஊகிக்கலாம். இந்த மகளுக்கு மணமாகியிருந்தால், அந்த மாப்பிள்ளையும் இரண்டு மருமக்களைப்போல நாதமுனிகளின் இயக்கத்தில் முக்கிய பங்கேற்றிருப்பார். அப்படி குருபரம்பரைகள் கூறாததால், சுமார் பத்து வயதுப் பெண்ணை வீட்டில் உடைத்தாயிருந்த நாதமுனிகளின் மனைவிக்கு 60 பிராயத்துக்குமேல் எதிர்பார்க்க முடியாது. இவ்வகையில் நாதமுனிகளின் வயதும் 65-க்கு மேற்பட முடியாது. இவரை யோகி என்பதாலேயே அதிக நாள் வாழ்ந்தவராக நாம் கருதி வருவது சரியல்ல. இவர் 330 ஆண்டுகள் யோகத்தில் எழுந்தருளி யிருந்தார் என்பதன் மெய்ப்பொருள் குருகூரில் பராங்குசதாசரிடம் அஷ்டாங்க யோகம் பயின்றதிலிருந்து அதனைச் சாதனை செய்து கொண்டு 33 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார் என்பதே ஆகல் வேண்டும். ஏனெனில், தாதுவிலிருந்து 330 ஆண்டுகள் பின்னோக்கிப் போனால் பெறப்படும் பிறபபுக் கால ஆணடு குருபரம்பரைகள் கூறியது போல சோபகிருது அல்ல. மாறாக, தாதுவிலிருந்து 33 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றால் சோபகிருதுவே பெறப்படுகின்றது.

இப்படிச் சுமார் 65 ஆண்டளவே வாழ்ந்த நாதமுனிகள் கி.பி. 823-இல் பிறந்தவராகில், இவர் மறைவுக் காலம்

கி.பி. 888 அளவிலும் இதற்கு 33 ஆண்டுகளுக்குமுன் இவர் குருகூர் சென்றது கி.பி. 855 அளவிலும் ஆகல்வேண்டும். எனில், கி. பி. 833-இல் நம்மாழ்வார் மறைந்த பின் 50 ஆண்டுகள் வாழ்ந்து கி.பி. 883-லேயே மறைந்த மதுரகவிகளிடமிருந்தே இவர் திருவாய்மொழி உள்ளிட்ட நாலாயிரத்தையும் பெற்றிருக்க வேண்டும். திவ்வியசூரி இவ்வாறே கூறினாலும், அஃதொரு காவியம்; காலக்கண் இல்லாதது; மேலும், கி. பி. 16-ஆம் நூற்றாண்டைய நூலுங்கூட[10]. இதற்கு மிக முற்பட்ட ஆறாயிரப்படியில் நாதமுனிகள் நாலாயிரத்தை மதுரகவியின் சிஷ்யரான பராங்குசதாசரிடமிருந்தே பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. ஆறாயிரப்படி செய்த பின்பழகிய பெருமாள் ஜீயரின் ஆசார்ய ராகிய நம்பிள்ளை ''மதுரகவிகளுக்கும், அவர் வமிசத்தவராகிய பராங்குசதாசருக்கும் இடையிலுள்ள மதுரகவிகள் வமிசத்தவர்கள் அனைவரையும் பெயர் சொல்லிப் போற்ற வேண்டாமோ?'' — என்று கேட்ட போது ''அவர்கள் பலராகையாலும் நெடுங்காலத்துக்கு முற்பட்டவர்களாகையாலும் அவர்கள பெயர் அறியப் பெறவில்லை''—என்று நஞ்சீயர் கூறினாராம்.[11] இவற்றாலெல்லாம் நாம் அறிய வேண்டுவது நாதமுனிகள் கி. பி. 798-833-க்குரிய நம்மாழ்வாருக்கு இறப்பவும் பிற்பட்டவர் என்பதே.

''குளப்படியில் (தண்ணீர்) தேங்கினால் குருவி குடித்துப்போம் — வீராணத்தேரியில் தேங்கினால் நாடு விளையும்'' — என நாதமுனிகள் தம் சிஷ்யர்களுக்கு அடிக்கடி கூறுவதுண்டென வார்த்தாமாலை கூறுகிறது. வீரநாராயணப் பெயர் பரகேசரி முதலாம் பராந்தகருக்கு

10. J. Ind. His. Vol 13 pt III & I. A. Vol 40 p. 152.
11. வார்த்தா மாலை (1983) பக். 237–8.

அவரது 14–ஆம் ஆண்டைய உத்திரமேரூர்க் கல்வெட்டிலேயே[12] முதன் முதல் பயில்கின்றது. இது கி. பி. 920–க்குச் சமம். இனி, இப்பெயரால் அமைந்ததும் தமிழகத்திலேயே மிகப் பெரியதுமான வீராணத் தேரியை சுமார் கி.பி. 925-இல் தொடங்கி கட்டி முடிக்க சுமார் 10 ஆண்டு காலமாவது ஆகியிருக்கக் கூடும். ஆகையால், இப்பணி நிறைவெய்தியதை கி. பி. 935 அளவிலாகக் கொள்வதே தக்கது. இப்படி கி. பி. 935–ல் நிறைவுற்ற இந்த ஏரிப் பாசனத்தால் நாடு வளம் கொழிப்பதைக் கண்ட பின்னரே நாதமுனிகள் வாக்கு எழுந்திருக்க வேண்டும். இதற்கு எப்படியும் 20/30 ஆண்டுகளாவது கொள்ளத்தான் வேண்டும். அதாவது, கி. பி. 960 அளவிலோ அல்லது அதற்கும் பின்னரோ தான் நாதமுனிகள் இப்படிக் கூறியிருக்க முடியும். இக்காலம் யாதாயினும், இவர் பிறந்தது கி. பி. 823-ஐய சோபகிருது ஆக முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

## இரண்டாம் கொள்கை (கி. பி 925-1025)

இனி, நாதமுனிகளுக்கு அறிஞர் சீனிவாசய்யங்கார்[14] (1914-ல்) குறித்த காலமோ கி. பி 925-1025. 'வீரநாராயணபுரம் என்பதே நாதமுனிகள் பிறந்த ஊராகவும், அவர் மறைந்த இடம் கங்கை கொண்ட சோழபுரம் எனவும் கூறப்படுவதே இதற்குக் காரணம். வீரராஜேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டு[15] வீரநாராயணனாகிய

---

12. A. R E no 1 of 1898 (உத்தர மேரூர்) Studies Vl

13. S. I. I. Vol V no 134 (மாறன் சடையன் 9ஆம் ஆண்டு உத்தம சீலி வீரநாராயணன் ஏரி)

14. Tamil Studies (1982) p. 336

15. S. I I. Vol III (கன்னியாகுமரி, வீரராஜேந்திரனின் ஆம் ஆண்டு)

பரகேசரி முதலாம் பராந்தகர் தம் பெயரால் அனேகம் அக்ரகாரங்கள் அமைத்தார் எனக் கூறுகின்றது காவேரிக் கரையில் வீரநாராயணபுரம் முதலாம் பராந்தக சோழர் பெயரால் அமைந்ததெனை கொங்குதேச ராசாக்கள்[16] என்ற நூல் கூறுகின்றது. இந்தப் பரகேசரி வீரநாராயண ரின் காலம் கி. பி 907-954. இனி, பரகேசரி முதலாம் ராஜேந்திரன் கி. பி 1023–க்கு முன்பே வடநாடு சென்றதால், கங்கை கொண்ட சோழபுரம் கி. பி 1025-இல் அமைக்கப்பட்டதாகக் கொள்ளலாம். இங்கே நாதமுனிகள் பரமபதித்தது உண்மையாகில், அது கி. பி 1025க்கு முற்பட முடியாது இவர் நூறு ஆண்டுகள் வாழ்ந்திருக்கக் கூடுமாகையால், இவரை கி பி 925 அளவில் பிறந்தவராக அறிஞர் சீனிவாசயங்கார் கருதுகிறார் போலத் தெரிகிறது.

இனி அண்மைக் காலத்திய சான்றுகளைக் காண்போம். கி.பி. 1023–க்குச் சமமான ராஜேந்திரனின் 11–ஆம் ஆண்டைய் கல்வெட்டுக்களிலேயே[17] முதன் முதல் வடநாட்டு வெற்றிச் செய்திகள் கூறப்படுகின்றன. எப்படியும் அவற்றிற்கு இரண்டு ஆண்டுகளாகிலும் பிடித்திருக்கவேண்டும். நாட்டைக் கங்கை நீரால் புனிதப்படுத்தவே வடநாட்டு யாத்திரை மேற்கொள்ளப் பட்டதாக செப்பேடுகள் கூறுவதால், கி.பி. 1021-க்கும் இரண்டொரு ஆண்டுகள் முன்பே கங்கைகொண்ட சோழபுரம் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும்.[18] எனில், நாதமுனிகள் கி.பி. 1025-இல் இங்கே மறைந்திருத்தல் கூடுவதேயல்லவா?

---

16. கொங்குதேச ராசாக்கள் (1950) பக்–10.

18. The Metropolis of Medieual Cholas, Kasinathan, N., (1992) p. 4.

ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணனை வல்லத்துப் போரில் முறியடித்தபோது வீரசோழன் என்றொரு பெயரை பராந்தகர் மேற்கொண்டதாக வீரராஜேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டு கூறுகிறது. வீரநாராயணன் என்ற பெயர் முன்னமே இருந்திருந்தால் ''வீரசோழன்'' என்ற பெயருக்குத் தேவை இருந்திருக்காது. எனவே, முதலாம் பராந்தகரின் வீரநாராயணப் பெயர் வல்லத்துப்போர் நிகழ்ந்த கி. 910-911-க்குப் பிறகே ஏற்பட்டதென்னலாம், எப்படியும் கி.பி. 920-க்குச் சமமான 14-ஆம் ஆண்டு உத்திமேரூர் கல்வெட்டில் இவருக்கு வீரநாராயணன் என்ற பெயர் வழங்கியிருப்பதால், வீரநாராயணபுரம்,[19] வீரநாராயண நல்லூர்[20], வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்ற ஊர்ப் பெயர்கள் எல்லாம் இந்த கி.பி. 920-க்கு சற்று முன் பின்னதாக ஏற்பட்டிருக்கவேண்டும். எனவே, வீரநாராயணபுரத்தில் பிறந்தவராகக் கருதப்படும் நாதமுனிகளின் பிறப்புக் காலத்தை உத்தேசமாக கி.பி. 925 ஆக அறிஞர் சீனிவாசய்யங்கார் கொண்டது பொருத்தமே. பராந்தகருக்கு வீரநாராயணப் பெயர் தொடக்கத்திலேயே வழங்கத் தலைப்பட்டுவிட்டதாகக் கொண்டு அறிஞர் ஆர். ஆர்[20] அவர்கள் வீரநாராயணபுரத்தில் பிறந்த நாதமுனிகளை பராந்தகர் முடிசூடிக் கொண்ட கி.பி. 907-க்கு அடுத்த கி.பி. 908-லேயே பிறந்ததாக குறித்ததைக் காட்டிலும் சீனிவாசய்யங்கார் கருத்து சிறப்புடையதே ஆகும். ஆயினும், நாதமுனிகள் பிறந்தது சோபகிருதுவில் எனப்படுவதால், இவர்

---

19. ARE 101 of 1921 (வீரநாராயணபுரம்)

20. ARE 406 of 1908 (வீரநாராயண நல்லூர்)
ARE no 530 of 19208 & S.I.I. Vol 12, no, 179

21. Indian Express, 7-2-93

பிறப்புக் காலத்தை கி.பி. 943-ஆகக் கொள்வதே தக்கது. ஏனெனில், இப்படிக்கொண்டால் மட்டுமே 943-1025-க்கு இடைப்பட்ட நாதமுனிகளின் ஆயுட்காலம் நம்பக்கூடிய அளவான 82 ஆண்டுகளுக்குள் அடங்கி வருகின்றது.

ஆனால், 'வீரநாராயணபுரம்', 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற பெயர்களைக் கொண்டு காலநிர்ணயம் செய்வதைப் பேராசிரியர் ராகவய்யங்காரும், அறிஞர் கோபிநாத ராவும் ஒப்புக்கொள்ளவில்லை. குருபரம்பரைகள் நாதமுனிகளின் காலத்தே எழுதப்பட்டன அல்ல. அவை குறிப்பிடுவன வெல்லாம் தாம் எழுந்த காலத்தே உலகில் வழக்குற்றிருந்த பெயர்களே. ஊர்ப் பெயர்கள் காலப்போக்கில் மாறிவந் திருக்கின்றன. காட்டுமன்னார் கோயிலைச் சேர்ந்த உடையார்குடிக் கல்வெட்டிலேயே கூறப்படும் பிடாகைகள் பலவற்றை இன்று காணக்கூடவில்லை; அவை பெயர் மாறிவிட்டிருக்கின்றன. நாதமுனிகளின் பிறப்பிடத்தை காட்டுமன்னார் கோயிலாகக் கருதும் இவ்விரு அறிஞர்களும் மன்னார் கோயிலின் அந்தப் பெயர் குருபரம்பரைகள் 'வீரநாராயணபுரம்' எனக் குறிப்பிட்ட ஊரின் பழம்பெயரே என்றும் இங்ஙனமே கங்கைகொண்ட சோழபுரத்தின் பழம்பெயர் இவ்வூருக்கு அருகில் குருகைகாவலப்பன் கோயில் என்று காணப்படும் ஊர்ப்பெயரே என்றும் கொண்டு, இவற்றையே பராந்தகனும், ராஜேந்திரனும் முறையே வீரநாராயணபுரம் எனவும், கங்கைகொண்ட சோழபுரம் எனவும் மாற்றியிருக்கவேண்டும் என்றும் வாதிக்கின்றனர்.

வீரநாராயணபுரம் என்ற பெயரே பராந்தக சோழனுக்கு முற்பட்ட நாளிலிருந்தே ஏன் வழங்கியிருக்கக் கூடாது? — என்பதும் ஆராயத்தக்கதே. ஏனெனில், சோணாட்டில் பல இடங்களில் இரண்டாம் வரகுணனின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. லால்குடிக்கு அருகிலுள்ள சென்னி வாய்க்கால் கல்வெட்டு[22] ஒன்றில் பராந்தகபுரத்து அரிந்தகை ஈச்சுரம் ஒன்று பேசப்படுகிறது. இங்கே குறிப்பிடப்பட்ட அரிந்தகை முத்தரையன் சாத்தன் பூதியின் மகளான அரிந்தகை ஆகவும், பராந்தகன் பாண்டிய பராந்தகனாகவும் கருதப்படுகின்றனர்.[23] இங்ஙனமே காட்டுமன்னார் கோயிலுக்கு 'வீரநாராயண புரம்' என்ற பெயர் பாண்டிய பராந்தக வீரநாராயணனால் ஏற்பட்டிருக்கவும் கூடும் அல்லவா? ஆயினும், நாதமுனிகள் பணிபுரிந்த கோயில் கல்வெட்டுகளில்[24, 25]

---

22. S. I. I. Vol. no 56. (சென்னி வாய்க்கால்)

23. Kancheepuram in the Early History of S. India (1969) p. 197

24. S. I. I. Vol 19, no 400 (உடையார்குடி, உத்தம சோழனின் 16 ஆம் ஆண்டு)

25 ARE no 349 of 1958-59 (கா. ம. கோயில், கிருஷ்ண தேவ ராயர் காலம்)

துவராபதி மன்னனார் கோவில்[26] என்று குறிப்பிடப் படலால் இக்கோயில் இருந்த இடத்தின் பழம் பெயரை மன்னனார் கோயில் என்பதற்குப் பதிலாக துவராபதி என்று கோடலே பொருத்தம்

கங்கைகொண்ட சோழபுரத்தின் பழம் பெயர் குருகைகாவல் என்பதே யாக ஆசிரியர் அய்யங்கார் கொண்டதும் சரியல்ல. குருகைகாவலப்பரை குருகூரின ராகப் பெரிய திருமுடி அடைவு கூறுகின்றது. குருகை காவல் அப்பன் யோகத்தில் இருந்து உயிர் நீத்த இடமாத லால், அவ்விடம் 'குருகைகாவல் அப்பன் கோயில்' எனப் பெயர் பெற்றதாக ஆறாயிரப்படி கூறுகின்றது. ஆயினும் இவ்விடத்தில் அண்மையில் செய்யப்பட்ட அகழ்வாராய்சி கள் இங்கே பரகேசரி முதலாம் ராஜேந்திரன் காலத்திற்கு முன்னும் ஒரு நகரம் இருந்ததாகக் காட்டி யுள்ளன.[27] முதலாம் பராந்தகனின் 22-ஆம் ஆண்டைய (கி பி 929) கல்வெட்டு[28] ஒன்று இங்கே கிடைத்தது. இது தஞ்சையில் வளஞ்சியர் ஐம்பதின்மர் தொழிற்பேட்டை அமைத்துக் கொள்ள நிலம் பெற்ற செய்தியை குறிப்பிடுவதால் இங்கே ஒரு நகரம் இருந்ததைக் குறிப்பாய்ச் சுட்டுவதாகக் கருதப் படுகின்றது. வளஞ்சியருள் ஒருவனாகிலும் இந்நகரத்தவ

---

26. ARE no 535 of 1920 & para 140 (ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 10-ஆம் ஆண்டு)

27. The Metropolis of Medieval Cholas, Kasinathan, N., (1992) p.9

28. கல்வெட்டு, 34, மே 1992, பக். 8.

னாதலும் அவன் இச்செய்தியை குறித்திருத்தலும் கூடுவதே அல்லவா?

## மூன்றாம் கொள்கை (கி. பி. 883-950)

இனி, இன்றைய காட்டுமன்னார் கோயிலில் காணும் கல்வெட்டுகள் சொல்வதைக் காண்போம். இவ்வூரின் வடபாகமாகத் திகழும் உடையார்குடியின் அனந்தீச்சுரத்தில் உள்ள கல்வெட்டுகளே காட்டுமன்னார் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் மிகப் பழமையானவை. இந்த அனந்தீச்சுரத்தில் ஒரு பரகேசரியின் 33, 37 மற்றும் 38 ஆம் ஆண்டு கல்வெட்டுகளும்[29-31] உள்ளன. இவ்வளவு நீண்ட ஆட்சிக் கால முடைய பரகேசரி முதலாம் பராந்தகர் (கி.பி.907-955) ஒருவரே. எனவே, இத்திருக்கோயில் கி பி.940-லோ (33ஆம் ஆண்டு அல்லது அதற்குச் சற்று முன்னரோதான் கட்டப்பட்டிருக்கக் கூடும்.* இவ்வூர், கல்வெட்டுகளில் 'வடகரை பிரமதேயம் வீரநாராயண சதுர்வேதி மங்கலம்' என்றே குறிப்பிடப்படுவதால் இவ்வாலயத்தை நிர்மாணித்த

---

29, 30, 31, ARE no 539, 5532597, 54708-1920

* பராந்தக முத்தரையனின் மனைவி பஞ்சவன் மாதேவி செய்த தானத்தைக் குறிப்பிடும் உடையார்குடி அனந்தீச்சுரத்து பரகேசரி 3-ம் ஆண்டைய கல் வெட்டை பரகேசரி முதலாம் பராந்தகர் காலத்த தாக (கி.பி.910) பேராசிரியர் T. V. மகாலிங்கம்1 குறித்தது தவறு. அது அரிஞ்சயன் காலத்தது. இவ்வாண்டு S. I. I. Vol 19. no 58-இன் காலமாகிய கி. பி. 956-ஏ தான்.

பராந்தகரே பிராமணர்களுக்கு விடுதிகள் அமைத்து நிலங்களையும் விட்டு, ஊரைத் தன் பெயரால் வீர நாராயண சதுர்வேதி மங்கலம் எனப் பெயரிட்டு பிரமதேயம் ஆக்கியிருக்க வேண்டும். இந்த நாளில் தெற்கில் அண்மையிலிருந்த மன்னனார் குடிகொண்ட துவராபதியும் வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தின் பாகமாகியிருக்க வேண்டும். ஏனெனில், கண்டராதித்தரின் 4-ஆம் ஆண்டு (கி. பி. 952)-க் கல்வெட்டில்[32] வீரநாராயண விண்ணகர்ப் பெருமாளுக்கு அளிக்கப்பட்ட தானத்தை வீரநாராயண சதுர்வேதி மங்கலத்துச் சபையினரே ஏற்றனர் என்று காணப்படுகிறது. மேலும், இச்செய்தி அனந்தீச்சுரத்திலேயே பொறிக்கப்பட்டுள்ளது-தக்கோலப் போரில் ராஜாதித்தன் கொலையுண்டு, முனைப்பாடி நாட்டு நாவலூரில் இருந்த சோழர்களின் படை வீடும் ராஷ்டிரகூடக் கிருஷ்ணனால் அழிபட்டதாக வரலாறு கூறுகிறது. வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து (உடையார் குடி) அனந்தீச்சுரத்திலுள்ள கல்வெட்டுக்கள் தளபதிகள் மிகப் பலர் செய்த தானங்களைக் குறிக்கின்றன, எனவே, நாவலூருக்குப் பிறகு வீரநாராயண சதுர்வேதி மங்கலமே சோழர்களின் புதிய படை வீடாகக் கொள்ளப்பட்டது தெளிவாகிறது. இங்கேயே பரகேசரி ஆதித்தகரிகாலனும் கொலை செய்யப்பட்டிருப்பதால்[33] அவன் இவ்விடத்தில் ஒரு

32. S.I.I. Vol 13, no. 92 (உடையார் குடி, கண்டரா 4-ஆம் ஆண்டு)

33. E. I. Vol. 21. no 27 (உடையார்குடி, ராஜராஜனின் 2-ஆம் ஆண்டு)

பெரும் படையோடு தங்கியிருந்ததை ஊகிக்கலாம். ''உடையார்'' என்பது சோழர்களையும், தெய்வத்தையும் குறித்த சொல்லாகையால் 'உடையார்குடி' என்ற பெயரும் இங்கு சோழ அரசிளங்குமரர் வசித்ததை உறுதி செய்கிறது. உடையார்குடியின் வடக்கேயுள்ள புஞ்சை மேட்டுப் பகுதி இன்றைக்கும் ''கோட்டைமேடு'' எனப் படுவது இங்கே சோழர் படைவீடு ஒன்று இருந்ததை உறுதியாகக் காட்டுகின்றது. இப்படியெல்லாம் இருந்தும் இங்கே படையுடன் தங்கியிருந்த சோழ அரசிளங்குமரர்களுக்கும் நாதமுனிகளுக்கும் குருபரம்பரைகளில் எந்த விதத் தொடர்பும் காட்டப்படவில்லை. மாறாக, 'வீரநாராயணபுரம்' என இந்நூல்கள் எழுந்த நாளில் வழங்கியிருக்கக் கூடிய துவராபதி, 'கங்கைகொண்ட சோழபுரம்' என்று பிற்காலத்தில் பெயர் பெற்ற இடத்தில் அரசனின் ஆட்சியில் இருந்தது போலவே இந்த நூல்களில் பேசப்படுகின்றது. இந்த நிலை கி. பி. 950 க்கு முன்னரே நிலவியிருக்க முடியும். எனில், சுமார் 65 ஆண்டளவே வாழ்ந்தவராகத் தோன்றும் நாதமுனி பிறந்தது கி. பி 883-ஐய சோபகிருதுவிலேயே ஆதல் கூடுவதே. அன்பில் செப்பேடுகளில் ஆசார்யராகக் குறிக்கப்படும் ஸ்ரீநாதரை நாதமுனிகளாகக் கருதவும் இந்த மூன்றாம் கொள்கை மிக ஏற்றதாக உள்ளது.

வீரநாராயணபுரமான வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தில் இவர் பிறந்ததாகக் குருபரம்பரைகள் கூறுவது இந்தக் கொள்கைக்கான ஒரு தடை. ஆயினும், வேறிடத்தில் பிறந்த இவர் வீரநாராயணபுரத்திற்கு பராந்தகன் காலத்தே ஈஸ்வர பட்டாழ்வார் குடியேற்றப்

பட்டபோது வந்துசேர்ந்தார் என்று கொண்டால் இடர்ப்பாடுகளை ஒருவாறு சரிக்கட்டலாம். நாதமுனிகள் வளர்ந்து ஆளாகிய இடத்தை பிறப்பிடமாகக் குரு பரம்பரைகள் மயங்கி உரைத்திருத்தல் கூடியதே. காட்டுமன்னார்கோயிற் பகுதிமுழுவதுமே பராந்தகரின் பழைய கல்வெட்டுகளிலேயே 'வடகரைப் பிரமதேயம்' எனப்படுவதால், பராந்தகரே பாசன வசதி செய்து மிகப்பல பிராமணர்களை இப்பகுதியில் குடியேற்றினார் எனலாம். ஆயினும், பெருமாள் கோயில் பகுதி துவராபதி அல்லது மன்னனார் கோயில் என்ற பெயரோடு முன்னமே இருந்ததுதான் என்று நாம் முன்னம் காட்டியதே பொருத்தமானது.

## நான்காம் கொள்கை (கி. பி 918-978)

'வீர நாராயணத்தேரியில் நீர் தேங்கினால் நாடு செழிக்கும்' — என்று நாதமுனிகள் தமது சீடர்களிடம் சொல்லிவந்ததாக வார்த்தாமாலையில் கூறப்பட்டிருப்பது இவர் காலத்தை கி. பி. 910-க்கு மேல் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பின்னுக்கு இழுக்கத் தூண்டுகிறது. இவர் சிஷ்யர்களால் சூழப்பட்டிருந்தது வாழ்க்கையின் பிற்பகுதியிலேயே ஆகல் வேண்டும். இந்த நிலையில் இவர் மறைந்தது ஒரு தாது ஆண்டில் எனப் பெரிய திருமுடி அடைவு கூறுவதை ஒப்புக் கொள்வோமானால், இது கி. பி. 978-ஐய தாதுவாகக் காணலாம். எனில், சுமார் 65 ஆண்டு அளவே வாழ்ந்திருக்கக் கூடியவராக நம்மால் காட்டப்பட்ட நாதமுனிகள் சுமார் கி. பி. 913 அளவில் பிறந்தவராகக் காண்கிறோம், பாண்டியன்

பராந்தக வீரநாராயணனை தனது மூன்றாம் ஆட்சி ஆண்டிற்குச் சமமான கி. பி 910-ல் தோற்கடித்து மதுரை கொண்ட கோப்பரகேசரி என்ற விருதுப்பெயர் தரித்துக் கொண்ட பராந்தக சோழருக்கு வீரநாராயணப் பெயர் இந்த கி. பி 910 அளவில் ஏற்பட்டிருத்தல் கூடியதே யாகையால், வீரநாராயணபுரம் கூட கி. பி 910 அளவிலேயே ஏற்பட்டதாகக் கொள்ளவும் இடமுண்டு. எனில், நாதமுனி வீரநாராயணபுரத்தில் பிறந்தவராகக் கூறப்படுவது ஒரு விளக்கம் பெறவும் காண்கிறோம். நாதமுனிகள் கி. பி. 913 — அளவில் பிறந்தவராகில், அன்பில் செப்பேடுகளில் கூறப்படும் ஆசார்ய ஸ்ரீநாதர் நம் நாதமுனியே யாதலும் கூடுவதே. ஆளவந்தார் காலத்தை கி. பி. 1000-1102 ஆகக் கொள்ளக் காரணம் இருப்பதால், இதற்குச் சுமார் 15-20 ஆண்டுகளே முற்பட வேண்டும் நாதமுனிகளின் காலம் கி. பி. 913-978 ஆதலே பொருந்தும். அதாவது, தொடர்ச்சியான ஆசார்ய வைணவ வரலாறு நாதமுனிகளுக்கு இந்தக் காலத்தையே வேண்டுகின்றது என்பது கருத்து.

# பிற்சேர்க்கை

## 1. வீரநாராயண சதுர்வேதி மங்கலம் பற்றி கல்வெட்டுகளிற் கண்ட விவரங்கள்

### 1. பீடாகைகள் 3

1. கீழ்ப் பிடாகை, S.I.I. Vol 13 no 140, 224, 249
2. மீ பிடாகை, S I.I. Vol 13 no 225, 249
3. வட பிடாகை S.I.I. Vol. 19, 304 &
   Vol. 13, no 146.

குறிப்பு :- தெற்குப் பிடாகை பற்றி ஏதும் செய்தி இல்லை. பிடாகை என்பது ஒரு பேரூரின் ஆட்சிக்கு (Municipality) உட்பட்டு, ஆனால் முக்கிய பகுதிக்கப்பால், இருந்த தனிப்பகுதி.

### 2. சேரிகள் 7

1. வீரநாராயணச் சேரி S.I.I. Vol 19 no. 67 & 305
2. கோதண்டராமச் சேரி Vol 13 no. 17
3. ஸ்ரீதர நாராயணச்சேரி Vol 13 no. 119
4. ஸ்ரீவர ஸ்ரீகாமுகச் சேரி Vol 19 no. 304
5. ஸ்ரீ ராசகேசரிச் சேரி Vol 13 no. 276
6. பண்டித வத்சலச் சேரி Vol 13 no. 57 &
   Vol 19 no. 55
7. புவனசூளாமணிச் சேரி Vol 113 no. 34

குறிப்பு :- சேரிகள் பிடாகையின் பகுதிகளாகத் தெரிகின்றன முதல் நான்கு சேரிகளைத் தவிர மற்றவற்றின் இடங்களை ஊகிக்கக்கூட முடியவில்லை.

## 3. வதி (சாலை)கள் 8

1. திருநாராயண வதி (வட பிடாகை)
   S.I.I. Vol 19 no 305
2. ராமதேவ வதி (வட பிடாகை)
   S.I.I. Vol 19 no 304
3. விஷ்ணு வதி (வட பிடாகை)
   S.I.I. Vol 19 no 305
4. வீரநாரயண வதி (வட பிடாகை)
   S.I.I. Vol 249; 524 & 146.
5. ஸ்ரீதரவதி (கீழ்ப் பிடாகை)
   S.I.I. Vol 146/34; 249
6. கோதண்டராம வதி (கீழ்ப் பிடாகை)
   S.I.I. Vol no 224/4
7. சந்திரசேகர வதி (கீழ்ப் பிடாகை)
   S.I.I. Vol 224/2, 219
8. கண்டாருள் கண்ட வதி (மீ பிடாகை)
   S.I.I. Vol 13, no. 249

குறிப்பு :-

அ.) வதிகள் எல்லாமும் நிலங்களின் கீழ், மேல் எல்லைகளாகக் கூறப்பட்டுள்ளன. எனவே, இவை வடக்கு, தெற்கில் நீண்டனவாகல் வேண்டும்.

கல்வெட்டு ARE no. 240 / 1913இல் 'வதி' சாலை என்ற பொருளிலேயே பயின்றுள்ளது.

ஆ.) சேரிப் பெயர்களுட் பல வதிகளுக்கும் பயில்வதால், சேரிப் பெயரே கொண்ட வதிகள் அவ்வச் சேரிகளின் முக்கிய தெருக்கள் ஆகலாமோ என்று ஐயுறத் தோற்றுகின்றது.

## 4. வாய்க்கால்கள்—8

1. இருமுடிச் சோழ வாய்க்கால் Vol 13 no. 224
2. வீரநாராயண வாய்க்கால் Vol 13 no. 160
3. மானவல்லி வாய்க்கால் Vol 13 no. 146
4. சந்திரசேகர வாய்க்கால் Vol 19 no 304
5. பராந்தக வாய்க்கால் Vol 13 no. 256
6. கணபதி வாய்க்கால் Vol 13 no. 146
7. சோழ மாதேவி வாய்க்கால் Vol 13 no. 225
8. வானவன் மாதேவி வாய்க்கால் Vol 13 no. 249

குறிப்பு : வாய்க்கால்கள் எல்லாமும் நிலங்களின் வட, தென் எல்லைகளாகவே கூறப்பட்டுள்ளன. எனவே, இவை மேற்கேயிருந்து கிழக்கே பாய்ந்தனவாகல் வேண்டும்.

## 2. நாதமுனிகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்

1 ஊர் : வீரநாராயணபுரம்/மன்னனார் கோயில்

2. பொதுவான காலம்; ஆழ்வார்களுக்கு நெடுங் காலம் பிற்பட்டது.

3. பிறந்த காலம் : சோபகிருது, ஆனி, அனுஷம், புதன்கிழமை, கலி 3924.

4. தந்தை : ஈஸ்வர பட்டாழ்வார்.

5. மருமக்கள் : கீழையகத்தாழ்வானும், மேலையகத் தாழ்வானும்.

6. மனைவி : வங்கிபுரத் தாச்சியின் மகள் அரவிந்தப் பாவை;

7. மகன் : ஈஸ்வரமுனி.

8. மகள் : நாதமுனிகளுக்குச் சுமார் 65 வயதில் சுமார் 10 வயதுச் சிறுமி

9. வடநாட்டு யாத்திரை : தந்தையோடும் மகனோடும் கோவர்த்தனத்தில் தங்கியிருந்தார். மன்னனார் அழைத்தபோது ஊர் திரும்பினர்.

10. குருகூர் யாத்திரை : ஆராவமுதப பதிகம் கேட்டு திருவாய்மொழியைத் தேடிச் சென்றார்.

11. தவம் : 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பதிகத்தை 12000 முறை உருச் செய்தார்.

12. ஆசார்யர் : பராங்குசதாசர், நாலாயிரம் தந்து யோகமும் பயிற்றுவித்தார்.

13. நாலாயிரப் பணி : பாகுபாடு செய்து, மருமக்களைக் கொண்டு இசை அமைத்தார்.

14. அதயயனப் பணி : திருவரங்கத்தில் திருவாய் மொழி அத்யயன விழாவைத் தொடங்கி வைத்தார்.

15. இசை ஞானம் : தேவகானம், மனுஷ்ய கானங் களைக் கேட்டு தேவகானப் பாடகிக்கு அரசனிட மிருந்து பரிசு பெற்றுத் தந்தார்.

16. பணியாள்மேல் அடிவைத்து ஏறிய அரசனைப் கண்டு பெருமாளை நினைந்தார்.

17. தேவிமார்களோடு சென்ற அரசனைப் பார்த்து கோபிகைகளுடன் இருந்த கண்ணனாக எண்ணி மோகித்தார்.

18. தேடி வந்து போனதாக மகள் சொன்ன வேடத் தம்பதிகளைத் தேடி கங்கைகொண்ட சோழபுரம் போய் விழுந்து மூர்ச்சித்து பரமபதித்தார்.

19. பரமபதம் : தாது ஆண்டு மாக சுக்ல ஏகாதசியில்

20. ஆயுள் : 330/340 ஆண்டுகள் யோகத்தில் எழுந்தருளி யிருந்தார்.

21. செய்த நூல்கள் : நியாய தத்வம், யோக ரகஸ்யம், மகா புருஷ நிர்ணயம்.

22. செய்த தனியன்கள் : அவிதித விஷயாந், பக்தாம்ருதம், யத்கோஸ சகஸ்ரம், குருமுக அனதீத்ய, வேறொன்றும் நானறியேன்—எனத் தொடங்கும் நான்கு செய்யுட்கள்.

23. முதல் மாணாக்கர் உய்யக்கொண்டார் யோகம் வேண்டா மென்றார்.

24. திருக்கண்ணமங்கை ஆண்டானுக்கு பவிஷ்ய தாசார்யன் பற்றிச் சொன்னார்.

25. பேரனுக்கு யமுனைத் துறைவன் எனப் பெயரிட ஈஸ்வரமுனி யிடமும், சமய சம்பந்தமான விஷயங்களை உபதேசிக்க உய்யக்கொண்டாரி டமும், யோகம் பயிற்றுவிக்க குருகை காவலப் பனிடமும் சொன்னார்.

26. வீராணத்தேரி பாசனத்தால் நாடு செழிப்பது பற்றித் தமது சிஷ்யர்களிடம் கூறினார்.

27. சிஷ்யர்கள் எண்மர் : உய்யக்கொண்டார், குருகைகாவலப்பன், திருக்கண்ண மங்கை ஆண்டான், ஏறுதிருவுடையான், நம்பி கருணா கர தாசர், வானமாமலை (தெய்வ நாயக) ஆண்டான், உருப்புட்டூர் ஆச்சான்பிள்ளை, சோகத்தூர் ஆழ்வான்—என.

# 3. சோழர் குடிவழி

பரகேசரி விஜயாலயன்
|
ராசகேசரி ஆதித்தன் (கி.பி. 871–?)
|
X … பரகேசரி பராந்தகன் I (எ) வீரநாரயணன் (கி.பி. 907—954)

X இளங்கோப் பிச்சி
|
கன்னரதேவன்

பராந்தகன் I இன் மக்கள்:

- ராசாதித்தன் (?—949)
- ராசகேசரி கண்டராதித்தன் (950-957) X செம்பியன் மாதேவி
  |
  பர. உத்தம சோழன் (எ). மதுராந்தகன் (971–988)
- பரகேசரி அரிஞ்சயன் X பூதி ஆதித்த பிடாரி, வீமன் குந்தவை, ஆதித்தன் கோதைப் பிராட்டி (சேரன் மகள்), கல்யாணி (வைதும்பர் மகள்)
- உத்தம சீலி (?—945)
- வீரமாதேவி X ராஷ்டிரகூட கோவிந்தன் IV

பர. அரிஞ்சயன் X கல்யாணி

வாண அரசன் X அரிஞ்சிகைப் பிராட்டி

சுந்தர சோழன் (எ)<br>ராசகேசரி பராந்தகன் - II<br>(957—975)

X<br>வானவன் மாதேவி<br>(மலையமான் மகள்)

X<br>பராந்தகன்<br>தேவி அம்மன்<br>(சேரன் மகள்)

?

வல்லவரையன் X குந்தவை I<br>வந்தியத் தேவன்

பர. ஆதித்த<br>கரிகாலன்

ராச. ராஜராஜன் I (எ)<br>அருமொழித்தேவன்<br>(985-1014)

## 4. பாண்டியர் குடிவழி

1. சடை. பராந்தக வீரநாராயணன்

2. மாற. ராஜசிம்மன் III கி.பி. 911-?

சுந்தர பாண்டியன்

3. சடை. வீரபாண்டியன் (938-959)

4. மாற. விக்கிரம பாண்டியன்

# 5. ராஷ்டிரகூடர் குடிவழி

அமோக வர்ஷ நிருப துங்கன் I (814-880)

X
லட்சுமி

X
கோவிந்தாம்பா

கிருஷ்ணன் II (880–915)

இந்திரன் III (915-917)

அமோக வர்ஷன் II (917-918)

கோவிந்தன் IV
X (918-935)
வீரமாதேவி
(பர. பராந்தகனின் மகள்)

அமோக வர்ஷன் III (935-939)

கிருஷ்ணன் -III
939-968

கொட்டகன்
968-972

நிருபகாமன்

(எ) ஜகதுங்கன்

கர்க்கன் II
[972-73]

ஆட்சி சாளுக்கிய
தைலபனால் கைப்
பற்றப்பட்டது.

# 6. கீழைச் சாளுக்கியர் குடிவழி

- விஷ்ணு வர்த்தனன் V
  - விஜயாதித்தன் III
  - விக்ரமாதித்தன் I
    - பீமன் I [888-918]
      - விஜயாதித்தன் IV [918]
      - விக்ரமாதித்தன் -II [935-940]
  - யுத்த மல்லன் I
    - தாடபன் [930-935
      - யுத்த மல்லன் II [945-947]
        - பாடபன் 956
        - தாடபன் II
          - யுத்தமல்லன் III

விஜயாதித்தன் IV (918)

அம்மா II [எ] விஷ்ணுவர்த்தனன்
[எ] ராஜமகேந்திரன்
[918-925]

விஜயாதித்தன் V
(925-930)

பீமன் II (942-945)

அம்மா II [எ]
[945-956]

பீமன்-III
(940-945)

தானார்ணவன் [970-973]

சக்தி வர்மன் (999-1011)

விமலாதித்தன் X குந்தவை
(1011-1018)

ராஜராஜ விஷ்ணுவர்த்தனன்
(1018-1060)

சச்திவர்மன் II (1061-62)

விஜயாதித்தன் VII (1061-1076)

## 7. கால மாலை

907. பரகேசரி முதலாம் பராந்தகர் பட்டம்.

910. வல்லத்துப் போரில் ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணனை வென்று 'வீர சோழன்' — என்று விருதைப் பராந்தக சோழர் புனைதல்.

911. மூன்றாம் ஆட்சி ஆண்டில் பாண்டியன் பராந்தக வீரநாராயணனை வென்று 'மதுரை கொண்ட' மற்றும் 'வீரநாராயணன்' என்ற விருதுகளைச் சோழ பராந்தகர் ஏற்றல்.

911- 916. பாண்டியனார் பராந்தகனார் மானாபரணர் (ராஜசிம்மன்-III) தேவியாரின் கிழவனான தேசப் புகழ் சோணாட்டில் தானம் செய்தல்: 5-ஆம் ஆண்டில் (கி. பி. 911) திருச் சாத்துறை; 8-ஆம் ஆண்டில் (கி. பி. 914) தில்லை ஸ்தானம்; 9-ஆம் ஆண்டில் (கி.பி 915) திருப் பழனம்.

912. வாணர்களைக் கங்க பிரதிவிபதி-II வீழ்த்தி 'செம்பியன்' என்ற பட்டத்தையும், வாணகப்பாடி நாட்டையும் பெறுதல். (பராந்தகனின் 6-ஆம் ஆண்டு புள்ள மங்கைக் கல்வெட்டு)

913. நாதமுனிகள் பிறப்பு
ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணன் மரணம்; இந்திரன் III பட்டம்.

915 வைதும்பரைப் பராந்தகர் வென்று விரட்டுதல்.

915. பாண்டிய ராஜசிம்மன் வஞ்சியைக் கொளுத்தி பராந்தகரை நெய்ப்பூர், கொடும்பாளூர், நாவலூர்ப் போர்களில் முறியடித்தல்.

919. இலங்கைக் கஸ்ஸபன் அனுப்பிய சக்க சேனாபதியும், பாண்டிய மூன்றாம் ராஜசிம்மனும் வெள்ளூர்ப் போரில் தோற்றல், இரண்டாம் போரில் சக்க சேனாபதி படைகளும் நோய்வாய்ப் பட்டதால், கஸ்ஸபன் படைகளை மீட்டுக் கொள்ளுதல்.

920. உத்திரமேரூர்க் கல்வெட்டில் (14–ஆம் ஆண்டு) 'வீரநாராயணன்' என்ற விருதுப் பெயர் சோழ பராந்தகருக்குக் காணப்படல்.

922. பராந்தகர் 'மதுரையும், ஈழமும் கொண்ட-'என்ற' என்ற விருதைக் கொள்ளுதல்

925. வீராணத்தேரி வேலை தொடக்கம்.

926. மூன்றாம் ராஜசிம்மன் சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளை வெளியிடுதல்.

927. ராஜசிம்மன் இலங்கை அரசன் தப்புலனிடம் சரண்; பாண்டி நாட்டில் பராந்தகரின் கல்வெட்டுகள் (20-ஆம் ஆண்டு) தொடக்கம்.

927. ராஷ்டிரகூட இந்திரன் III மறைவும், கோவிந்தன் IV பட்டமும்.

930. மணக்கால் நம்பிகள் பிறப்பு.

935. வீராணத்தேரி கட்டி முடிக்கப்படல்.

935. பராந்தகரின் ஈழப்படையெடுப்பு. இலங்கை அரசன் நான்காம் உதயன் பாண்டியனால் அடைக் கலப்படுத்தப்பட்டிருந்த முடியோடு ரோகணத் திற்கு ஓட்டம்.

935. ராஷ்டிரகூட கோவிந்தன் IV கிருஷ்ணன்–IIIஆல் விரட்டப்பட்டு மாமனார் பராந்தகரிடம் சரண்புகு தலும், அமோகவர்ஷன் ராஷ்டிரகூடப் பேரரசன் ஆதலும்.

936. நாவலூரில் படைவீடு அமைத்து அங்கே மூத்த மகன் ராசாதித்தனையும், மூன் றாம் மகன் அரிகுல கேசரியையும் மலைநாட்டு வெள்ளங் குமரனோடு நிறுத்துதல்.

938. மூன் றாம் ராஜசிம்மன் மரணமும், வீரபாண்டியன் பட்டமும்.

939. ராஷ்டிரகூட அமோக வர்ஷன் மறைவும் மூன் றாம் கிருஷ்ணன் பட்டமும், மருகன் கோவிந்தன் IV சார்பாக பராந்தகன் கிருஷ்ணன்–III ஓடு போரிட்டுத் தோற்றலும்.

940. கங்க பிருதிவிபதி IIஇன் மறைவும், பூதுகன் II பட்டத்தைக் கவர்ந்து கொள்ளுதலும்.

940. உடையார்குடியில் பராந்தகனின் 33–ஆம் ஆண்டைய முதல் கல்வெட்டு; நாதமுனிகள் வடநாட்டுக்கு யாத்திரை போதல்.

941. கீழைச் சாளுக்கிய இரண்டாம் வீமனின் படைத் தலைவன் சீட்புலி நெல்லூர்ப் போரில் தோற்றலும் வீமன்மகள் குந்தவை அருஞ்சயனுக்கு மணமுடிக் கப்படலும்

944. பராந்தகனின் 37ஆம் ஆண்டு உடையாரக்குடிக் கல்வெட்டு,

945. பராந்தகனின் 38-ஆம் ஆண்டு உடையார்குடிக் கல்வெட்டு; நாதமுனிகளின் குருகூர் யாத்திரை.

945. உத்தம சீலயைக் கொன்று பாண்டி நாட்டை மீட்டு 'சோழன் தலைகொண்ட' என்ற விருதையும் வீரபாண்டியன் புனைந்து கோடல் (6ஆம் ஆண்டு)

949. தக்கோலப் போரில் ஆனை மேலிருந்த ராசாதித் தனை கங்க பூதுகன் II கொல்லுதலும், தென் பெண்ணை வரை இருந்த சோழப் பேரரசின் வட–

பாகம் முழுவதும் ராஷ்டிரகூடர் வசப்படலும், கண்டராதித்தன் இளவரசப் பட்டமும்.

950. வீரநாராயண சதுர்வேதி மங்கலம் புதிய படை வீடு ஆதல்.

951. கண்டராதித்தனின் 3-ஆம் ஆண்டு உடையார் குடிக் கல்வெட்டு (5-7-951).

952. கண்டராதித்தனின் 4-ஆம் ஆண்டு உடையார்குடிக் கல்வெட்டு.

953. அரிஞ்சயன் இளவரசப் பட்டம்.

954. பரகேசரி பராந்தகனின் 48-ஆம் ஆண்டுக் கல்வெட்டு.

955. பராந்தன் மறைவும், கண்டராதித்தன் பட்டமும்.

956. பராந்தக முத்தரையன் தானம் (உடையார்குடி, பரகேசரி 3ஆம் ஆண்டு)

955-966. வடபகுதி ராஷ்டிரகூட கிருஷ்ணன்-III இன் ஆட்சியில் இருத்தல்.

957. கண்டராதித்தன் மேற்கெழுந்தருளலும், சுந்தர சோழன் பட்டமும்.

957. அரிஞ்சயனின் 2-ஆம் ஆண்டில் செம்பியன் மாதேவியார் உடையார்குடிக்கு எழுந்தருளலும், இரண்டாம் பராந்தகரான சுந்தர சோழர் பட்டமும்.

958. திருவரங்கம் பெரிய கோயிலில் திருவாய்மொழி அத்யயன விழா தொடக்கம்.

959. மூன்றாம் கிருஷ்ணனின் தென்னாட்டுப் படையெடுப்பு; இலங்கையும், பாண்டியும் வீழ்த்தப்படல்; பார்த்திவேந்திரன் தொண்டை மண்டலத்தில் நிறுத்தப்படல்.

960. உத்தமசீலியின் தலைகொண்ட வீர பாண்டியன் தலையை ஆதித்த கரிகாலன் அரிந்து பழி தீர்த்துக் கொள்ளுதல்.

ஆற்றூரில் அரிஞ்சயன் மறைவு.

960. ஆதித்த கரிகாலனின் இளவரசுப் பட்டமும்.

960. ஈஸ்வர முனியின் பிறப்பு.

960. சுந்தர சோழனின் 4-ஆம் ஆண்டில் அன்பில் செப்பேடுகள்.

962. சேவூர்ப் போரில் மாறவர்மன் விக்கிரம பாண்டியனை ஆதித்த கரிகாலன் முறியடித்து காட்டிற் கோட்டுதலும், சுந்தர சோழர் 'பாண்டியனைச் சுரம் இறக்கிய பெருமாள்'—என்ற விருது கோடலும்.

963. தொண்டை மண்டலத்தில் சுந்தர சோழனின் கல்வெட்டுகள் தோற்றம்,

965. ஈழப் படையெடுப்பில் கொடும்பாளூர் சிறிய வேளாளர் உயிரிழத்தலும், சோழர் படை தோல்வி யுற்று மீளுதலும்

966. ஆதித்த கரிகாலன் உடையார்குடியில் கொலை

966. ராஷ்டிரகூட மூன்றாம் கிருஷ்ணனின் மரணமும் தொண்டை மண்டல முழுவதும் சோழர் ஆட்சிக்குத் திரும்புதலும்.

969. வீமன் குந்தவையும், ஆதித்தன் கோதைப் பிராட்டி யும் உடையார்குடியில் வழிபாடு.

970. நாதமுனிகளின் வடநாட்டு யாத்திரை; தேவாரம் தொகுக்ப்படுதல்.

973. சுந்தர சோழர் காஞ்சிப் பொன்மாளிகையில் துஞ்சுதல்.

971. உத்தம சோழன் இளவரசுப் பட்டம்.

972. செம்பியன் மாதேவி உடையார்குடியில் வழிபாடு (பரகேசரி 2-ஆம் ஆண்டு)

972. உத்தம சோழனின் 3-ஆம் ஆண்டு உடையார்குடிக் கல்வெட்டு (8-1-72)

973. கோனேரி ராஜபுரத்தில் செம்பியன் , மாதேவி கண்டராதித்தேச்சுரம் அமைத்தல்.

974. கண்டராதித்தர் மறைவு.

975 நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி; நாதமுனிகள் ஊர் திரும்புதல்.

976. ஈஸ்வரமுனியின் திருமணம்.

977. உய்யக்கொண்டார் பட்டம்.

978. நாதமுனிகள் பரம பதம்.

## 8. மேற்கோள் நூல்கள் (தமிழ்)

ஸ்ரீமத் நாத யாமுந வைபவப் பிரகாசிகை,
C P S. புக் ஸ்டால் அண்ணாமலை நகர் (1973).

அபிதான சிந்தாமணி, AES பப்ளிகேஷன்ஸ்,

ஆசார்ய வைபவ மஞ்சரி, கிருஷ்ணசாமி அய்யங்கார் S.
3-B புத்தூர் அக்கிரகாரம், திருச்சி-17 (1992)

ஆழ்வார்கள் காலநிலை, ராகவையங்கார், மு.
மணிவாசகர் நூலகம்' சென்னை- (1981)

இந்திய தத்துவ ஞானம், லஷ்மணன், கி.,பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-41, நான்காம் பதிப்பு (1987)

இலக்கியச் சாசன வழக்காறுகள், ராகவையங்கார், மு, தமிழ் நாடு எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-2 (1973)

இலக்கிய வரலாறு 10ஆம் நூற், அருணாசலம், மு., காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம், மாயூரம் (1972)

கலைக் களஞ்சியம், தொகுதி 8, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை-5 (1960)

குண்டலினி யோகம்-சுவாமி சிவானந்தர், தமிழாக்கம், K. ரங்கநாதராவ், சிவானந்த ஆஸிரமம் ராசிபுரம் சேலம் மாவட்டம்,(1588).

சோழர் கலைப் பணி, பாலசுப்ரமணியன்,S.R., பாரி நிலையம், சென்னை-1 (1956).

சோழர் வரலாறு, ராசமாணிக்கனார். மா., எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை (1947)

திருநாங்கூர். நெடுஞ்செழியன், கா., அருண் பதிப்பகம், ஜெயங்கொண்ட சோழபுரம், (1994).

தென்னக இசையியல், செல்லத்துரை, செ. சு., வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல் (1984).

நல்ல உடல், நல்ல மனம், பொற்கோ, தமிழ் நூலகம், சென்னை-18(1982)

தொண்டை நாடும் வைணவமும், கமலக்கண்ணன் இரா. வ, திருவேங்கடவன் பதிப்பகம், கீழப்புத்தூர் திருவண்ணாமலை மாவட்டம் (1994)

பஞ்ச மரபு, வீ. ப. கா. சுந்தரம் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், வெளியீடு எண் 1903, சென்னை (1992).

பதஞ்சலி யோகம், சுவாமி சச்சிதானந்தர் உரை வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை-17 (1992)

பாண்டியர் வரலாறு, சேதுராமன், N., ராமன் & ராமன் பிரைவேட் லிமிடெட், நாகேஸ்வரன் வடக்குவீதி, கும்பகோணம் (1989)

பிற்காலச் சோழர் வரலாறு, முதற் பாகம் பண்டாரத்தார், T V.S., அண்ணாமலைப் பல்கலை' கழகம்.

வடமொழி இலக்கிய வரலாறு, கைலாசநாத குருக்கள், கா., கலா நிலையம், செட்டியார் தெரு, கொழும்பு (1962)

வாச்சிய மரபு, பெருமாள் அ. நா., உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை-113 (1987).

வார்த்தாமாலை, கிருஷ்ணசாமி அய்யங்கார்,S, 3-B, புத்தூர் அக்கிரகாரம் திருச்சி-17 (1983).

வைணவத்தின் ஆழ்வார்கள் காலநிலை, குலசேகரன்,S., திருமகள் E113, 16-வது குறுக்குத் தெரு, பெசன்ட் நகர், சென்னை-90 (1983)

## 10. References (English)


ARE Archaeological Reports of Epigraphy An Indian Ephimeris A.D. 700-A.D 1799, Swamickannu Pillai, L D , Govt. Press. Govt. of Madras, (1922) Vol I, pt I, appendix VI.

Cholas, Sastry, K.AN., University of Madras. Vol I & II (1937)

Concepts of Indian Philosophy, Saraswathy Chenna Kesavan, Orient Longmans, Madras (1976)

Early Cholas, Sethuraman N , Raman & Raman Pvt Ltd., 179, Nageswaran north St., Kumbakonam (1980)

E. C. Epigraphica Carnatica E. I. Epigraphica Indica. History of Sri Vaishnawas, Gopinatha Rao, T. A., Madras univ., Madras (1923)

History of Vaishnawism in S India upto Ramanuja, Ramanujam, B V , Annamalai univ. (1973).

Political Geography of Cholamandalam Sublarayalu, N., State eDpt. of Archaeology Madras-4 (1973)

Rashtrakutas and their Times. Altekar, H.S., Oriental Book Agency. Poona, (1934)

S.I I South Indian Inscriptions.

S.I T I South Indian Temple Inscriptions Vol. II., Subramanian, T. N., Oriental manuscript Library. Madras-5.

Tamil Studies, Srinivasa Iyengar, M , AES, New Delhi-1 The Eastarn Chalukyar, Ganguly D. R-, author bublisher, Benares, 1937.

A Topographicai List of Inscriptions in Tamil nadu and Kerala States. Vol II, Mahalingam, T. V., (ed) S. Chand & Co, New Delhi-1 (1988)

Siddhis in yoga Sutra and Soundarya Lahari Sharma, R.K., in Surabi, Sri Krishna Sarma Eelicitation Volume, Dept of Sanskrit S. V. Univ., Tirupathi, (1983) p 55 - 61

The Four Yogas of Swami Vivekananda, Swami Tapasyananda (1987) Advaita Ashrama, 5, Delhi Enlatly Rd. Calcutte.